# சிறுவர் இலக்கிய வரலாறு

பூவண்ணன்

(பேராசிரியர் வே. தா. கோபாலகிருஷ்ணன்)

வானதி பதிப்பகம்
தி. நகர், சென்னை-17

முதற்பதிப்பு : நவம்பர் 1980

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 7-50

அச்சிட்டோர் : லிப்ஸிக் பிரிண்டர்ஸ் சென்னை-14

# சிறுவர் இலக்கிய வரலாறு

பூவண்ணன்

வானதி பதிப்பகம்
சென்னை - 17

"A child is a person who is going to carry on what you have started. ......... He will assume control of your cities, states and nations. He is going to move in and take over your churches, schools, universities and corporations... All your books are going to be judged, praised or condemned by him."

—*Abraham Lincoln.*

# முன்னுரை

1949 ஆம் ஆண்டு என் வாழ்வில் மறக்கமுடியாத ஆண்டு. அந்த ஆண்டுதான் நான் எழுத்தாளன் ஆனேன். அன்று முதல் தொடர்ந்து சிறுவர் இலக்கியம் படைத்து வந்தேன். வாய்ப்புக் கிடைத்தபோது சிறுவர் இலக்கியத்தைப் பற்றிச் சில கட்டுரைகள் எழுதினேன். அவற்றை ஒரு சேரப் பார்த்த போது சிறுவர் இலக்கிய வரலாறு எழுத வேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது. எழுதினேன். 1960-இல் அது, 'குழந்தை இலக்கிய வரலாறு' என்னும் தலைப்பில் 122 பக்க நூலாக வெளிவந்தது.

அந்நூலுக்குச் சிறுவர் இலக்கிய முன்னோடியும் பழம் பெரும் எழுத்தாளருமான தி. ஜ. ர. அவர்கள் ஓர் அரிய முன்னுரை வழங்கினார். அந்த நீண்ட முன்னுரையின் ஒரு பகுதியை இங்கே யளிக்க விரும்புகிறேன்.

"இந்த அரிய நூலுக்கு முன்னுரை எழுதக் கிடைத்த வாய்ப்பைச் சிறந்த பாக்கியமாக நான் மதிக்கிறேன். பல வகையில் இது ஓர் அரிய நூல். இலக்கிய வரலாறுகள் தமிழிலே மிகமிகக் குறைவு. அதிலும் புதிய இலக்கியங்கள் குறித்த நல்ல வரலாறு அபூர்வம் என்றே சொல்ல வேண்டும். பெரியவருக்கான புதிய சிறுகதை, கட்டுரை, நாவல் பற்றிய சில இலக்கிய வரலாறுகள் வந்ததுண்டு. அவற்றில் தனிப் பட்ட விருப்பு வெறுப்புகள் இடம் பெறாமல் இல்லை. இது குழந்தைகளுக்கான இலக்கிய வரலாறு.

பூவண்ணனுக்கு உறுதியான சொந்தக் கொள்கைகள் இருக்கத்தான் இருக்கின்றன, ஆயினும் சொந்த விருப்பு வெறுப்பற்றுப் பாரபட்சமற்ற முறையில் இந்த வரலாற்றை அவர் எழுதியிருக்கிறார்......இந்தக் குழந்தை இலக்கிய வரலாற்றைப் பூவண்ணன் மிகச் சிறந்த முறையில் எழுதி யிருக்கிறார். இவ்வளவு நல்ல இலக்கிய வரலாறு. பெரியவர்

இலக்கியம் பற்றி இன்னும்கூட நானறிந்தவரை வரவில்லை. எனவே இது குழந்தை இலக்கியச் சிற்பிகளின் பெரிய அதிருஷ்டம்... குழந்தைகளிடம் பற்றுள்ள எவரும், குழந்தை இலக்கியத்தைப் படைக்கும் - படைக்க விரும்பும் எவரும், இந்த நூலைப் படிப்பது அவசியம். அது குழந்தை இலக்கியம் வளம் பெற உதவும்.''

தி. ஜ ர. அரிய முன்னுரையை அளித்ததுடன், நூலின் பெரும்பகுதியை அப்போது தாம் ஆசிரியராக இருந்த 'நவமணி' தினசரியின் வாரமலரில் தொடர்ந்து வெளியிட்டார். பின்னர் 'மஞ்சரி'யில் நூலின் சுருக்கத்தை வெளியிட்டார்.

'இந்திய மொழிகளில் வெளிவந்த, குழந்தை இலக்கியம் பற்றிய முதல்நூல் அது' என்று பலரும் பாராட்டினர். அதன்பின் சிறுவர் இலக்கியம் பற்றி எழுதுவோரும் பேசுவோரும் அந்த நூலின் துணைகொண்டே எழுதினர்; பேசினர்.

ஆண்டுகள் சென்றன. நண்பர்களும் எனது நலன்விரும்பிகளும் அந்நூலின் மறுபதிப்பைப் புதிய விவரங்களுடன் வெளியிடுமாறு கூறிக்கொண்டேயிருந்தனர். சிறுவர் இலக்கிய வரலாறு பற்றிய புதிய குறிப்புகளைச் சேகரித்துக் கொண்டே வந்தாலும், நூலின் புதிய பதிப்பை வெளியிடவில்லை.

சென்ற ஆண்டு 'அனைத்துலகச் சிறுவராண்டு'. அதனால் அந்த ஆண்டிலாவது பழைய நூலுக்கு ஒரு பதிப்புக் கொணரவேண்டும் என்று மீண்டும் நண்பர்கள் வற்புறுத்தினர். அனைத்துலகச் சிறுவராண்டில், சென்னை ஜவகர் வானொலி சிறுவர் சங்கம் எனக்கு 'மழலைக் கவிஞர்' பட்டமளித்தது. சென்னை பாலர் பண்பாட்டுக் கழகம், ''பாலர் இலக்கிய ஜோதி'' என்னும் பட்டம் வழங்கியது. குழந்தை எழுத்தாளர் சங்கம் எனக்குக் கேடயம் வழங்கிக் கௌரவித்தது. மூன்று அமைப்புகள் சிறுவர் இலக்கியத்துக்கு நான்

செய்த சேவையைப் பாராட்டிச் சிறப்புச் செய்த சிறுவர் ஆண்டில், சிறுவர் இலக்கியத்துக்கு நானும் குறிப்பிடத்தக்க சிறந்த நூல் எழுத வேண்டும் என்று விரும்பினேன். உடனே பழைய குழந்தை இலக்கிய வரலாற்றைப் புதுப்பிக்க நினைத்தேன்.

இருபதாண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த நூலில் இணைக்க வேண்டியது பெரும்பகுதியாக இருந்தது. அதனால் பழைய நூலில் இங்கும் அங்கும் சில விவரங்களைச் சேர்த்து வெளியிடாமல், புதிதாகவே ஓர் இலக்கிய வரலாறு எழுத வேண்டும் என்று முடிவு செய்தேன். அதன் விளைவே உங்கள் கரத்திலிருக்கும் இச் 'சிறுவர் இலக்கிய வரலாறு'.

பழைய குழந்தை இலக்கிய வரலாற்றின் விவரங்களை மட்டுமே எடுத்துக்கொண்டு இந்நூலைப் புதிதாக எழுதி யிருக்கிறேன். இதற்கு முன் வெளிப்படுத்தப்படாத பல அரிய உண்மைகளை, மிகவும் முயன்று, கண்டு, சேர்த் துள்ளேன். இந் நூலைச் சற்றே புரட்டிப் பார்ப்பவர்களும் நான் மேற்கொண்ட உழைப்பின் சிறப்பை உணர முடியும்.

'குழந்தை இலக்கியம்' என்னும் பெயரைவிடச் 'சிறுவர் இலக்கியம்' என்னும் பெயரே பொருத்தமாக இருக்கிறது என்பது என் முடிவு. அதனால் இந்நூலுக்குச் 'சிறுவர் இலக்கிய வரலாறு' என்னும் தலைப்பு வழங்கினேன். இந் நூல் அனைத் துலகச் சிறுவராண்டிற்கு எனது எளிய காணிக்கை. அதே யாண்டில் வெளிவர வேண்டிய இந்நூல் கொஞ்சம் தாமத மாக, இந்த ஆண்டு வெளிவருகிறது.

'குழந்தை இலக்கிய வரலாறு' நூலில் என்னைப் பற்றிய விவரம் எதையும் தரவில்லை. சிறுவர் இலக்கியத்தின் பிரிவு களான சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, கவிதை போன்ற எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுப் புகழீட்டிய நான் என்னைப் பற்றிய விவரங்களை விட்டுவிட்டு இலக்கிய வரலாறு எழுதினால் அது முழுமையுடையதாகாது எனப் பலரும் வற்புறுத்தியதால், இந்த நூலில் எனது சிறுவர்

இலக்கியப் பணியைப் பற்றிய குறிப்புகளைப் படர்க்கையில் வெளியிட்டுள்ளேன்.

வானதி திருநாவுக்கரசு அவர்கள் தமது பதிப்புத் தொழிலையும் எழுத்தாற்றலையும் சிறுவர் இலக்கியத்தில் தொடங்கியவர். இன்று வையமறிந்த வானதி பதிப்பக்கத்தில் நாடறிந்த சான்றோர்களின் நூல்களையெல்லாம் வெளியிட்டாலும், மறவாமல் சிறுவர் நூல்களைத் தொடர்ந்து வெளியிடுபவர்; இன்றும் சிறுவர்க்காக எழுதுபவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தொடக்கக் காலத்தில் அதன் செயலாளராகத் தொண்டாற்றியவர். நான் எழுதத் தொடங்கிய நாள் முதல் என்னிடம் தனியன்பு செலுத்தி வரும் தகைமையாளர். எனது எழுத்தாற்றலையும் சொல்லாற்றலையும் வாயாரப் பாராட்டும் பண்பாளர். சிறுவர் கவிதைகளின் முதல் திறனாய்வு நூலான 'சிறுவர் இலக்கியச் செல்வர்கள்' உட்பட நான் எழுதிய பல நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்த செம்மல். அவரிடம் இந்தச் 'சிறுவர் இலக்கிய வரலாறு' நூலை வெளியிடவேண்டும் என்று வேண்டிய போது, மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, ஏற்றமுற வெளியிட்டுள்ளார். வானதியாரின் அன்பு வெள்ளத்தில் மூழ்கும் என் இதயம் நன்றிப் பெருக்கோடு அவரைப் போற்றுகிறது.

எந்தத் தகவலும் விடுபடாத வகையில் மிக விழிப்போடும் உழைப்போடும் இந்நூலை உருவாக்கியுள்ளேன். அப்படியும் இதில் விடுபட்ட விவரங்கள் உண்டென்று கருதுவோர், அவற்றை எனக்குத் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்கிறேன், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*சிறுவர் இலக்கியம் செழித்து வளர்க!*

அமுதநிலையம்
9, அரங்கராசுலு தெரு
சென்னை—600 029

அன்பன்
பூவண்ணன்

# 1

# சிறுவர் இலக்கியத்தின் தேவை

"அப்பா" என்று வயதான தன் தந்தையை அழைத்த சிறுவன், "உங்களால் செய்ய முடியாத ஒன்றை என்னால் செய்யமுடியும்" என்று சொன்னான். தந்தை வியப்புற்றார். "என்னடா அது," என்று ஆவலுடன் கேட்டார். சிறுவன் மிக அமைதியாக "வளர்தல்" என்று சொன்னான்.

ஓடி விளையாடும் சிறுவர்களுக்கும் ஓய்வு பெற்ற பெரியவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு, வளர்ச்சி! பெரியவர்கள் வளர்ந்துவிட்டவர்கள்; இனி, மேற்கொண்டும் வளர்ச்சி பெற முடியாதவர்கள்; தளர்ச்சிதான் அவர்களை எதிர்நோக்கியிருக்கும், ஆனால், சிறுவர்கள் வளர்பவர்கள்.

வளர்ந்துவிட்டதைக் காட்டிலும் வளர்வதைத்தான் அக்கறையுடன் கவனிக்கவேண்டி யிருக்கிறது. மாமரம் செடியாக இருக்கும்போது, அதனை எவ்வளவு அக்கறையுடன் வளர்க்கிறார்கள்! அதற்குத் தினமும் நீர் ஊற்றுகிறார்கள் மண்ணை நன்கு கிளறி விடுகிறார்கள்; எரு இடுகிறார்கள்; ஆடு மாடுகள் கடித்து விடாதவாறு வேலி போடுகிறார்கள். இவை யெல்லாம் இல்லை யெனில், செடிகள் பெரும்பாலும் நல்ல மரங்களாக—பயன்தரும் மரங்களாகத் திகழ்வதில்லை.

சிறுவர்களும் இத்தகையவர்களே! சிறுவர்களுக்கு நல்ல உணவு அளித்து, உடையளித்து, ஒழுக்கங்களைக் கற்பித்து

நல்லறிவு பெறச் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் அக்கறையுடன் கவனித்துச் செய்யாவிட்டால், சிறுவர்கள் மனிதர்களாகலாம்; ஆனல், நல்ல குடிமக்களாக, வருங்கால உலகை வாழ்விக்கும் சான்றோர்களாகத் திகழ முடியாது.

எதைக் கற்கவும் ஏற்ற பருவம் இளமையே! மொழியைப் பொறுத்த வரையில் ஒருவன் சிறுவனுக இருக்கும்போது கற்கும் அறிவே பெரிது என்று மொழி நூல் அறிஞர்கள் கூறுகின்றனர். இளமையில் கற்பது எளிதில் மனத்தில் பதியும்; பெரியவர்களாக மாறிய பிறகும் மறக்காமல் இருப்பவை இளமையில் கற்றவையே.

இதனுல்தான், 'இளமையில் கல்' என்று புலவர்கள் கூறிச் சென்றனர். இளமையில் கற்கத் தவறுபவன் முதுமையில் கற்பது அரிது. கற்றல் என்பது வெறும் எழுத்தறிவை மட்டும் குறிக்கவில்லை; அது நற்பண்பையும் குறிக்கிறது.

படிப்பையும் பண்பையும் இளமையில் பெறவில்லையேல் வாழ்க்கை பயனற்றதாகும். நல்லொழுக்கத்தை இளமையில் பயின்ருல் அது இறக்கும் வரை இருக்கும். இதைத்தான், 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழி குறிக்கிறது. இளமை கழிந்த பிறகு முதுமையில் அவற்றைக் கற்றல் அரிது என்பதைத்தான் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்னும் முதுமொழி எடுத்து இயம்புகிறது.

படிப்பை ஆசிரியர் கற்றுத் தருகிருர். பண்பை யார் கற்றுத் தருவது? பெற்ருேரையும் மற்ருேரையும் பார்த்து ஓரளவு கற்றுக் கொள்ளலாம். ஆனல், அது மட்டும் போதுமா?

நற்குணங்களையும், வீரத்தையும், விவேகத்தையும் இளமையில் சிறுவர்களுக்கு எளிதாகக் கற்றுத் தருவது ஒன்று உண்டு. அதுதான் நல்ல முறையில் உருவாகும். **சிறுவர் இலக்கியம்.**

தவழும் குழந்தை தளர் நடை கற்கிறது; குதலை பேசும் குழந்தை மழலை பயில்கிறது. உடனே அதன் நாக்கு எதையும் பேசத் தொடங்குகிறது; அதன் செவிகள் எதையும் கேட்கத் துடிக்கின்றன.

சிறுவரின் நாக்குச் சிறியது; அவர் செவிகள் சின்னஞ் சிறியவை. இப்படி நாம் நினைக்கிறோம். இது தவறு. சிறுவருக்கு நமக்கிருப்பதைக் காட்டிலும் நீண்ட நாக்குகள் உள்ளனவாம்; நமக்கு இருப்பதைக் காட்டிலும் அகன்ற செவிகள் உள்ளனவாம். இப்படி ஒரு பிற நாட்டுப் பழமொழி கூறுகிறது.[1]

இந்தப் பழமொழி, நாக்கின் அளவையும், செவியின் அளவையும் கூறவில்லை; மாறாக அவற்றின் தன்மையைப் பற்றிக் கூறுகிறது.

சிறுவர்களைப் பாருங்கள்! அவர்களுக்கு எத்தனை கதைகள் சொன்னாலும், 'போதும்' என்று சொல்வதில்லை. 'இன்னும் ஒரே ஒரு கதை சொல்லு பாட்டி' என்று கெஞ்சுவார்கள். உண்ணும் நேரம் வந்ததை அறியாமல் உவகையோடு கதை கேட்பார்கள்; பசி அப்போது அவர்களைப் பாதிப்பதில்லை. இப்படிச் சளைக்காமல் கதை கேட்கும் சிறுவர்கள் உண்மையில் அகன்ற செவியினரே!

சிறுவர் பேசத் துவங்கினால் ஓய்வதில்லை; எதைப் பற்றியாவது கேட்பார்கள். எதைப் பற்றியாவது தமக்குத் தெரிந்ததை எடுத்துக் கூறிக்கொண்டே இருப்பார்கள். அந்த மழலை மொழியைக் கேட்பவர்கள்கூடச் சில சமயம் சலிப்படைவார்கள்; ஆனால், கூறும் சிறுவரோ குதூகலத்தைத் தவிர, வேறு ஒன்றையும் அடைவதில்லை. இந்தத் தன்மை வாய்ந்த சிறுவர்கள் உண்மையில் நீண்ட நாக்கினரே!

---

1 'Children have wide ears and long tongues.'

சிறுவர்கள் கேட்க விரும்புகின்றனர்; பேச விரும்புகின்றனர். அவர்களுடைய செவிக்கும் நாக்குக்கும் நல்ல விருந்து அளிக்க வேண்டும். இல்லையென்றால் எதை எதையோ கேட்டு, எதை எதையோ பேசி இளம் உள்ளங்கள் மாசுறும். செவிக்கும் நாக்குக்கும் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்ல விருந்தளிப்பது சிறுவர் இலக்கியமே!

பெரிய பெரிய இலக்கியங்களையெல்லாம் பிற்காலத்தில் குழந்தைகள் கற்றுக் களிப்படைய வேண்டுமானால், அவர்கள் சிறுவர் இலக்கியத்தைப் படித்துப் பயனடையப் பழகிக் கொள்ளவேண்டும். சுருங்கச் சொன்னால் இருக்கின்ற இலக்கியங்கள் அனைத்திற்கும் அடிப்படையானது, ஆணிவேரை ஒத்தது சிறுவர் இலக்கியம்.

கதையோ கவிதையோ படிக்கும் பழக்கம் இளமை தொட்டே இருந்தால்தான், பெரியோரானதும் பழைய காவியங்களைக் கற்கலாம்; புதிய நாவல்களைப் படித்து மகிழலாம். இளமையில் கதை - பாடல் போன்றவற்றைப் படிக்கும் பழக்கமே இல்லையென்றால், பின்னர் அவர்கள் பழைய காவியங்களையும், புதிய இலக்கியங்களையும் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

சிறுவர் புத்தகங்கள் இன்று அதிகமாக விற்பனையானால், வருங் காலத்தில் பெரியோர்களின் புத்தகங்கள் மிக அதிகமாக விற்பனையாகும். சிறுவர் பத்திரிகைகள் இன்று அதிகமாக விற்பனையானால் எதிர்காலத்தில் பெரியோர் பத்திரிகைள் அதிகமாக விற்பனையாகும். இது உறுதி! எனவேதான் சிறுவர் இலக்கியம் பிற இலக்கியங்களைக் காட்டிலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

குழந்தை இலக்கியத்தைப் புறக்கணித்தால், வருங் காலத்தில் பிற இலக்கியங்கள் புறக்கணிக்கப்படும். இன்றைய சிறுவர்கள் நாளைய பெரியோர்கள்! வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கும் வன்மை பெற்றவர்கள். இதைத் தான் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவும் கூறுகிறார்!

**ஏடு தூக்கிப் பள்ளியில்**
**இன்று பயிலும் சிறுவரே,**
**நாடு காக்கும் தலைவராய்**
**நாளை விளங்கப் போகிறார்!**

நாடு காக்கும் நாளைய தலைவர்கள் நற்பண்புகளைப் பெற்றிருக்கவேண்டுமானால் இன்றைய சிறுவர்களின் மனம் பண்படவேண்டும்! அதைச் செய்ய வல்லது சிறுவர் இலக்கியம்!

"சொர்க்க லோகத்தின் திறவுகோல் சிறுவர்களே"[1] என்று கூறுகின்றனர். அந்தத் திறவுகோலைச் செம்மையாக வைத்திருப்பது, பழுதடையாமல் பாதுகாப்பது சிறுவர் இலக்கியமே!

சிறுவர் இலக்கியம் எங்கே வளர்ந்துள்ளதோ, அங்கே மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும். ஆம், சிறுவர் இலக்கியம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் சக்தி வாய்ந்தது!

---

1. Children are the Keys of Paradise.

2

# சிறுவர் இலக்கியத்தின் தொன்மை

சக்தி வாய்ந்த சிறந்த இலக்கியம், சிறுவர் இலக்கியம். இது என்று தோன்றியது என அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆனால், இதுவும் மிகப் பழமையானது; தொன்று தொட்டு இருந்து வருவது என்று கூறலாம்.

சிறுவர்களும் பாட்டிகளும் சிறுவர் இலக்கியத்தை என்றோ உண்டாக்கிவிட்டனர்; பரம்பரை பரம்பரையாக அதனை மற்றவர்கள் வளர்த்து வருகின்றனர்.

இது தொடக்கத்தில் ஏட்டில் எழுதப்படாமல் வாய்மொழி இலக்கியமாக வாழ்ந்து வளர்ந்து வந்தது. எல்லா நாடுகளிலும் இது, வாய்மொழி இலக்கியமாகவே பிறந்து வளர்ந்து வந்துள்ளது.

நாடோடிப் பாடல்களும் நாடோடிக் கதைகளும் இதையே நமக்கு உணர்த்துகின்றன. சிறுவர் இலக்கியத்தில் பழமையானது இந்த நாடோடி இலக்கியமே. நாடோடிக் கதைகளை எழுதியவர் யார்? பாடல்களைப் புனைந்தவர் யார்? சொல்ல முடியாது! ஆனால், அவை பல நூற்றாண்டுகளாகப்

பலகோடி மக்களின் நாவில் பயின்று வழங்கிப் பண்பட்டு, இன்று ஒரு செம்மையான வடிவம் பெற்றுள்ளன எனலாம்.

சங்க காலத்தில் சிறுவர் இலக்கியம் இருந்ததா? சங்க காலத்தில் சிறுவர்களைப் பற்றிய இலக்கியம் இருந்தது. குழந்தை இன்பத்தைப் பற்றிப் பல புலவர் பெருமக்கள் அழியாத பாடல்களைப் பாடிச் சென்றுள்ளனர். ஆனால், சிறுவர் பாடல்களை நாம் அங்கே காண முடியவில்லை.

அந்தக் காலத்துச் சிறுவர் பாடல்கள் நமக்குக் கிடைக்காத காரணத்தால், அன்று சிறுவர் இலக்கியமே இல்லை என்று சொல்லவும் முடியாது.

'அகநானூறு' என்னும் தொகை நூல் ஒன்றில் ஒரு குறிப்பு வருகிறது. மாற்றூர்க்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் என்னும் புலவர் பாடியது 54-வது பாடல். அதில் தாய் ஒருத்தி தன் மகனுக்கு உணவு ஊட்டுகிறாள்; வானத்தில் பவனி வரும் வண்ண நிலாவைக் காட்டி உணவு ஊட்டுகிறாள். "நிலவு விளங்கும் இளம் சந்திரனே! பொன்னாலான ஐம்படைத் தாலியை உடைய என் மகனை நினைத்து (அவனுடன் விளையாட) நீ இங்கே வந்தால், உனக்கும் பால் தருவேன்" என்று இனிய மொழிகள் பல கூறி உணவை ஊட்டுகிறாள்.

> "முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
> பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
> வருகுவை யாயின் தருகுவென் பால்."

தாய் மகனுக்கு நிலவைக் காட்டிச் சோறு ஊட்டுகிறாள்; "நிலாவே, நீ வந்தால் உனக்கும் இந்தப் பாலைத் தருவேன்" என்று கூறி ஊட்டுகிறாள். இவ்வாறு அவள் உரைநடையில் கூறியிருப்பாள் என்று கொள்வதைவிட இந்தக் கருத்தமைந்த பாடலைப் பாடியிருப்பாள் என்று கொள்ளலாம்.

"நிலா நிலா வா வா" என்ற பாடலைப் போன்று சிறுவர் பாடல்களாகப் பல பாடல்கள் இருந்திருக்கும். தாய்மார்கள்,

இப்படிப் பாட்டுப் பாடிச் சோறு ஊட்டுவது இன்று நேற்றல்ல; தொன்று தொட்டு வருவது. அத்தகைய பாடல்கள் அன்றும் இருந்திருக்கும். அதைத்தான் அந்த அக நானூற்றுத் தாயும் பாடியிருக்க வேண்டும்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'தொல்காப்பியம்', 'பிசி' என்ற ஒன்றைப் பற்றிக் கூறுகிறது.

ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணி வி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே

(தொல், பொருள் : 488)

தன்கண் உள்ள ஒப்புமைக் குணத்தோடு பொருந்தி வருவதை உவமப் பொருளாகவும், ஒன்று சொல்ல ஒன்று தோன்றும் துணிவினதாகவும் 'பிசி' இருவகைப்படும் என்கிறது தொல்காப்பியம்

'பிசி' என்பது விடுகதையே. இதனைப் பற்றிய குறிப்பு மணிமேகலையிலும் காணப்படுகிறது. விடுகதை யாருக்குரியது? அது சிறுவர்களுக்கே பெரும்பாலும் உரியது என்று ஐயமின்றிக் கூறலாம். சிறுவர்கள் விடுகதைகளை விரும்பிக் கேட்பர். பாட்டிகளும் விதவிதமான விடுகதைகளைப் போட்டு அவர்களை விழிக்கச் செய்வர். சிறுவர்கள் பத்திரிகைகள் வெளிவரத் துவங்கிய பொழுது, அவையும் விடுகதைகளுக்கு முக்கியத்துவம் அளித்தன.

எனவே, தொல்காப்பியர் கூறும் பிசி, சிறுவர் இலக்கியத்தின் ஒரு கூறு என்று கொள்ளலாம். விடுகதையை அம்மா அல்லது பாட்டி சொல்லுவார்கள்; அதற்குச் சிறுவர் விடை கூற முயல்வர். 'பிசி' என்னும் இது செவிலியர்க்கு உரியதாகும்.

**"மற்றும் என்றதனன் அவையன்றி வருகின்ற பிசியும் செவிலியர்க்கு உரித்தென்பது கொள்க"**

(தொல், பொருள்: 487 உரை)

**"வகை நிலை என்ற மிகையான், இவையும் (பிசியின் இருவகைகளும்) செவிலிக்குரித் தென்பது கொள்க"**

(தொல், பொருள்: 488 உரை)

என்று கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினரான பேராசிரியர் தம் உரையில் குறித்துள்ளார்.

செவிலியர் சிறுவர்களைத் தாய் போலப் பேணி வளர்ப்பவர்; தாயாரின் தோழியர். அவர்கள் சிறுவர்களை மகிழ்வித்துப் பொழுது போக்குவதற்காக இத்தகைய விடுகதைகளைக் கூறி வந்தனர்.

பேராசிரியர் தம் உரையில் 'பிசி'க்கு உதாரணங்கள் தந்துள்ளார். அவற்றிற்கும் இன்றுள்ள விடுகதைகளுக்கும் வேறுபாடே இல்லை.

"பிறை கவ்வி மலை நடக்கும்" என்பது ஓர் உதாரணம். இது யானையைக் குறிக்கிறது. யானை மலை போல உள்ளது; அது பிறை போன்ற தந்தங்களை ஏந்திச் செல்கிறது. இதைக் கேட்டதும் 'யானை' என்று அந்தக் காலக் குழந்தைகள் நிச்சயம் கூறியிருப்பர்.

**"நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
ஊராடு நீரில்காக் கை"**

என்பது மற்றோர் உதாரணம். குளிக்காத பார்ப்பானும்; ஆனல் அவனது நிறம் சிவப்பு. அவன் குளித்தாலோ, ஊரார் குளிக்கும் நீரில் காக்கை குளித்தெழுந்தால் எப்படி இருக்குமோ அப்படிக் கறுப்பாக மாறிவிடுவானும்! இது நெருப்பைக் குறிக்கிறது.

'பிசி' சிறுவர்களை மகிழ்விப்பதற்காக அவர்களை வளர்க்கும் செவிலியர் கூறியதாகும். இது சிறுவர் இலக்கியத்தின்பாற்பட்டதே எனலாம்.

இனி செவியர்க்கு உரிய மற்றொன்று, "பொருள் மரபில்லாப் பொய் மொழி" (தொல், பொருள். 485) என்று தொல்காப்பியம் கூறுகிறது. இது உரை நடையின் வகைகளுள் ஒன்று. இதனைப் பேராசிரியர் விளக்குவதைப் பாருங்கள்.

> 'பொருள் மரபில்லாப் பொய்ம் மொழியானும்' என்பது ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை: ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக் கியையாப் பொருள்படத் தொடர் நிலையான் ஒருவனுழை ஒருவன் கற்று வரலாற்று முறையான் வருகின்றன.
>
> (தொல், பொருள்: 485 உரை.)

செவிலியர் தலைமகளை நகுவித்துப் பொழுது போக்குவதற்காகக் கூறினராம். பேராசிரியர்காட்டிய உதராணத்தை ஒருமுறை படியுங்கள். யானையும் குருவியும் நண்பர்களாகத் திகழ்ந்து அவை இங்கிங்குச் சென்று இவை யெல்லாம் செய்தன என்று கூறுவதாம். இத்தகைய கதைகளை யார் கேட்பார்கள்? ஐயமேன்? சிறுவர்களே! சிறுவர்களுக்கே இத்தகைய கதைகள் கூறப்பட்டன. இவற்றை ஒருவரிட மிருந்து மற்றவர் கற்றனராம். அதாவது இவை கர்ண பரம்பரைக் கதைகள்! இவையே நாடோடி இலக்கியத்தின் விதைகள்!

தொல்காப்பியம், சிறுவர் இலக்கியம் என்று தனியாகக் கூறுவிடினும், அதன் பகுதிகளைத் தனித்தனியே குறித்துள்ளது. அதனால் தொல்காப்பியர் காலத்திலேயே சிறுவர்களுக்கான விடுகதை, கதை முதலியன வாய்மொழி இலக்

கியமாக வாழ்ந்தன. எனவே முன்னர் காட்டிய அக நானூற்றுத் தாய், 'முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத்திங்கள், பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி, வருகுவை யாயின் தருகுவென் பால்', எனக் கூறியது அவள் கூற்றன்று; ஒரு சிறுவர் பாடலையே அவள் கூறினாள் என்று கொள்வது ஏற் புடைத்தாகும்.

சிறுவர் இலக்கியம் தொன்று தொட்டு இருந்து வருவது. அது வாய்மொழி இலக்கியமாக வாழ்ந்து, பின்னர் எழுதப் பட்டு ஏட்டில் வாழ்கிறது. அது, தன் பிற்கால வளர்ச்சிக் கேற்ப, பாடல், கதை, கட்டுரை, நாடகம், திரைப்படம், பத்திரிகை முதலிய பல பகுதிகளாகப் பல்கிப் பெருகியுள்ளது. அவற்றின் நிலையைத் தனித்தனியாகக் காண்போம்.

3

# சிறுவர் பாடல்கள்

சிறுவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். எப்போதும் துள்ளிக் குதிப்பார்கள்; ஏதாவது முணு முணுத்துக் கொண்டே இருப்பார்கள். தொட்டிலில் கிடக்கும் சிறு குழந்தையும் இதற்கு விதி விலக்கு அன்று. அதுவும் தன் நாக்கை அசைத்து ஏதாவது ஓசைசெய்யும்; அந்த ஓசைக்கு ஏற்பக் கைகளையும் கால்களையும் அசைக்கும். குழந்தை ஏன் இவ்வாறு ஏதேனும் ஒருவித ஒலியை எழுப்புகின்றது?

குழந்தைகள் விளையாட நாம் பலவிதமான விளையாட்டுச் சாமான்களை வாங்கித் தருகிறோம். அவற்றுள் முக்கியமானது கிலுகிலுப்பை. அசைத்ததும், 'கிலுகிலு' என்னும் சப்தத்தை உண்டாக்குகிறது கிலுகிலுப்பை. அந்த ஒலியைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்த குழந்தை அதை மேலும் மேலும் அசைத்து ஒலியெழச் செய்கிறது.

இந்தக் கிலுகிலுப்பை குழந்தைக்குப் பிடித்த விளையாட்டுக் கருவி. ஆனால், உண்மையில் குழந்தையின் மிகச் சிறந்த விளையாட்டுக் கருவி அது அன்று. பின் எது? 'நாக்குத் தான் குழந்தைக்கு மிகவும் பிடித்த விளையாட்டுக் கருவி'

என்று மொழிநூல் வல்லுநர் ஆட்டோ யெஸ்பர்சன் கூறுகிறார்.[1]

யெஸ்பர்சன் கூறுவது எவ்வளவு உண்மை என்பதைத் தொட்டிலில் விழித்துக்கொண்டு கிடக்கும் குழந்தையைச் சில நிமிடங்கள் உற்றுப் பார்ப்பவர்கள்கூட அறிந்து கொள்ளலாம். தனியே விடப்பட்ட குழந்தைகள் தன் நாவை அசைத்து, 'குளுகுளு' என்றோ, 'லலலு' என்றோ வேறு விதமாகவோ ஒலி எழுப்பி மகிழும். கிலுகிலுப்பை எழுப்பும் ஒலியைக் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கேட்கின்றனர். ஆனால், அதைவிடத் தம் சொந்த நாக்கு எழுப்பும் ஒலியையே பெரிதும் விரும்புகின்றனர்.

நாக்கு எத்துணை எளிமையான விளையாட்டுக் கருவி! கிலுகிலுப்பை வாங்க முடியாத ஏழைக் குழந்தைகள்கூட இந்தச் சிறந்த விளையாட்டுக் கருவியால் மகிழ்கின்றனர்.

நாக்கு ஒலி எழுப்புகிறது. அதனால்தான் அது மிகச் சிறந்த விளையாட்டுக் கருவியாகிறது. ஒலி எழுப்பும் கிலுகிலுப்பை போன்றவைகளும் விளையாட்டுக் கருவிகளாகின்றன.

குழந்தை அழுகிறது. ஏன் அழுகிறது, என்று தெரியவில்லை. அப்பா புட்டியில் இருந்த பாலைக் கொடுக்கிறார். அது குடிக்கவில்லை, அழுகிறது. அண்ணன் "இதோ பார்! பொம்மை" என்று வேடிக்கை காட்டுகிறான். குழந்தை அழுவதை நிறுத்தவில்லை. அக்காள் குழந்தையை எடுத்துத் தோள்மேல் போட்டுத் தட்டிக்கொடுத்துக் கொண்டே உலாவுகிறாள். அப்போதாவது அது அழுகையை நிறுத்தியதா? இல்லை.

---

1. It has been well said that for a long time, a child's dearest toy is its tongue. – *Otto Jesperson*. LANGUAGE-ITS ORIGIN AND DEVELOPMENT.

அம்மா அடுக்களையிலிருந்து வந்தாள்; குழந்தையை வாங்கினாள்; தொட்டிலில் படுக்கவைத்தாள். குழந்தை அப்போதும் அழுதுகொண்டுதான் இருந்தது. ஆனால், அடுத்த விநாடி, "ஆராரோ ஆரிவரோ, கண்ணே, யாரடித்தார்? ஏன் அழுதாய்?" என்று பாடத் தொடங்கினாள்.

மகுடிக்கு மயங்கும் பாம்பைப் போலக் குழந்தை மயங்குகிறது; அழுகையை நிறுத்திவிடுகிறது. அம்மா பாடும் பாட்டின் பொருளை உணர்வதுபோல் அதை உற்றுக் கேட்கிறது.

குழந்தை குலுகிலுப்பையை ஏன் விரும்புகிறது? வெறும் தாக்கை அசைத்து என்ன இன்பத்தைக் காண்கிறது? பாலில் இல்லாத எந்தச் சுவையைத் தாலாட்டுப் பாட்டில் கண்டது?

விடை எளிது! குழந்தை கண்ட இன்பம் ஓசை இன்பம்! பாடலின் முதற்குணமே ஓசை நயந்தானே! அந்த ஓசை நயத்தை—ஒலி இன்பத்தை—பிறந்தவுடனேயே குழந்தை உணர்ந்துகொள்கிறது அதனால்தான் அது விதம் விதமான ஒலி எழுப்புகிறது; கேட்கும் பாடலை அபிநயத்தோடு திருப்பிக் கூறுகிறது.

இதனை அறிந்துதான் பண்டைக்காலம் முதலே தாய்மார்கள் தாலாட்டு முதலிய பாடல்களைப் பாடினர். குழந்தைக்கு விளையாட்டுக் காட்ட வேண்டுமா? "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" என்றோ, "கைவீசம்மா கைவீசு" என்றோ பாட்டுப் பாடினர். குழந்தைக்குச் சோறு ஊட்ட வேண்டுமா?

'வெள்ளிக் கிண்ணத்தில் பாலுஞ் சோறும்
அள்ளி அள்ளி அப்பன் வாயில் ஊட்டு'

என்று அதற்கும் பாட்டுப் பாடினர். இந்தப் பணியை மொழிக்குச் செய்யும் மிகச் சிறந்த தொண்டு என்று அறிஞர் ஆட்டோ யெஸ்பர்சன் பாராட்டுகிறார்.

தாய்மாரும் பாட்டிகளும் குழந்தைகளுக்குப் பாட்டின் மீதுள்ள பற்றை வளர்த்துவிட்டனர். அதனால்தான் அவர்கள் வளர்ந்து சிறுவர்களாகும் போதும், 'பாட்டு, பாட்டு' என்று விருப்பமுடன் கேட்கின்றனர்.

பாட்டு சிறுவர்க்குப் பல நன்மைகள் செய்கிறது. பாட்டு எதையும் வசப்படுத்தும்; எவரையும் வசப்படுத்தும். பாட்டு பாடுபவருக்கும் இன்பம் தருகிறது; கேட்பவருக்கும் இன்பம் தருகிறது. துன்பமான பாட்டானாலும், அதைக் கேட்கும் போது ஒருவித இன்பம் உண்டாகிறது.

நல்ல கருத்துகளை எடுத்து விளக்கப் பாட்டே மிகவும் பயன்படுகிறது. கட்டுரையை ஒருமுறை படிக்கலாம். படித்ததை அப்படியே நினைவில் வைத்துக்கொள்ளுதல் முடியாது. அவ்விதமே படித்ததைப் பிறருக்கு எடுத்துக் கூறவும் முடியாது, கதை, சிறந்ததாக இருந்தால் ஒரு முறைக்கு இருமுறை படிப்போம். அவ்வளவுதான்; அதற்கு மேல் மீண்டும் படிப்பது முடியாது. ஆனால் பாட்டு அப்படிப் பட்டதன்று.

பாட்டை ஒருமுறை இருமுறை அல்ல; பலமுறை பாட லாம். மௌனமாக மனத்திற்குள் பாடினாலும் திருப்தியிருப்ப தில்லை. இசையோடு வாய்விட்டுப் பாட விரும்புகிறோம். அவ்வாறு பாடும்போது ஏற்படும் இன்பம் எல்லையற்றது. ஒரே பாட்டைப் பலமுறை படித்தாலும் பாடினாலும் அலுப்போ, சலிப்போ ஏற்படுவதில்லை

பாட்டைப் பாடும் சிறுவர்க்கு இன்பம் ஏற்படுகிறது. பாட்டைச் சிறுவர் வாய்விட்டுமட்டும் பாடுவதில்லை; கை கால்களைப் பாட்டுக் கேற்றவாறு அசைத்து, ஓரளவு அபிநயத்தோடும் பாடுகிறார்கள்.

**"தோ...! தோ...! நாய்க்குட்டி**
**துள்ளி வா வா நாய்க்குட்டி"**

என்று பாடும் சிறுவர் உண்மையில் தம் எதிரே ஒரு நாய் இருப்பதுபோலவும், அதை அன்போடு அழைப்பது போலவும் நினைத்துத் துள்ளிக் குதிக்கின்றார்கள். இவ்வாறு காலும் கையும் அசையப் பாடுவது ஒருசிறந்த தேகப்பயிற்சி. இதனால் உடலுக்கு நன்மை ஏற்படுகிறது.

பாட்டால் மனத்திற்கு மகிழ்ச்சி உண்டாகிறது; உடலுக்கு உறுதி ஏற்படுகிறது. இவை இரண்டிற்கும் மேலாகப் பாட்டில் உள்ள உயர்ந்த நீதிகளால், உள்ளம் வளர்ந்து அறிவு விரிவடைகிறது. பாடல்களில் உள்ள கருத்துக்கள் சிறுவர்களின் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிடுகின்றன. அவை என்றுமே நீங்காத தன்மையை நிலையாகப் பெற்று விடுகின்றன.

எனவேதான் சிறுவர்களுக்குப் பாடல்கள் தேவை என்று யாவரும் கூறுகின்றனர். தேவையை அறிந்தே பல சிறந்த கவிஞர்கள் சிறுவர்களுக் கேற்ற பாடல்களை இயற்றித் தந்துள்ளனர்.

சிறுவர் பாடல் தொல்காப்பியக் காலந் தொட்டுப் பல வகையாக வளர்ந்து வருகிறது. அதன் வளர்ச்சியை இங்கு முறையாக காணலாம்.

பிசி அல்லது விடுகதை என்பதே சிறுவர் பாடலின் தோற்றம். இதுவே சிறுவர் பாடல் வளர்ச்சியில் முதல்நிலை. விடுகதை அன்று முதல் இன்று வரை சிறுவர் இலக்கியத்தின் ஒரு கூறாக அமைந்து சிறுவரை மகிழ்வித்து வருவதுடன் அவர்தம் சிந்தனைக்குப் பயிற்சியளித்து வருகிறது. விடுகதை என்பதற்கு 'விடுவிக்கப்பட வேண்டிய கதை' என்பது பொருள். கதை என்ற சொல்லிருப்பினும் இதன் வடிவம் பாடலே.

ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு
—இது என்ன?

விடை : நிலா

**பெட்டியைத் திறந்தால் கிருஷ்ணன் பிறப்பான்**
**—இது என்ன ?**

*விடை : வேர்க்கடலை*

**உயரக் கிளையில்**
**உரல் கட்டித் தொங்குது —இது என்ன?**

*விடை : பலாமரத்தில் பலாப்பழம்*

**பொரி பொரித்தேன்**
**பெட்டியில் வைத்தேன்**
**பொழுது விடிந்தால்**
**காணவில்லை —இது என்ன?**

*விடை : நட்சத்திரங்கள்*

**கழுத்து உண்டு தலைஇல்லை**
**கை உண்டு விரல் இல்லை**
**உடல் உண்டு உயிர் இல்லை. —இது என்ன?**

*விடை : சட்டை*

*காலஞ் செல்லச் செல்லப் புதிய பொருள்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. உடனே அப்பொருள்களைப் பற்றியும் புதிய விடுகதைகளை மக்கள் உண்டாக்கி விடுகிறார்கள். கடிகாரம், குடை, திரைப்படம், இசைத்தட்டு ஆகிய புதிய பொருள்களைப் பற்றிய புதிய விடுகதைகளைப் பின்னே காண்க.*

**வயிற்றிலே ஆயிரம் பல்**
**முகத்திலே பன்னிரண்டுகண் —இது என்ன?**

*விடை : கடிகாரம்*

உலர்ந்த கொம்பிலே
மலர்ந்த பூ— —இது என்ன?

விடை : குடை

வெளிச்சத்திலே பிறந்ததை
இருட்டிலே பார்க்கிறோம் —இது என்ன?

விடை : திரைப்படம்

ஊசி முனையில் ஒய்யாரச் சங்கீதம்
—இது என்ன?

விடை : இசைத்தட்டு

இன்றும் சிறுவர்க்குப் பாடல் புனையும் குழந்தைக் கவிஞர்கள், விடுகதைப் பாடல்களை எழுதி வருகிறார்கள். அண்மைக் காலத்து விடுகதைப் பாடல் ஒன்று இங்கே தரப் படுகிறது.

கோடைக் காலம் கிடைக்கும்; ஆனால்
கோவா மாம்பழம் அல்ல!
ஓடைக் குளிர்நீர் உள்ளே உண்டு
உண்மை! இளநீர் அல்ல!
வெட்டித் தள்ள வெளியில் தோன்றும்
கொட்டும் ரத்தம் அல்ல!
தொட்டுப் பார்த்தால் வழ வழப்பு
பட்டுத் துணியும் அல்ல!
விந்தைப் பொருளோ? அல்ல! நீங்கள்
விரும்பி உண்ணும் பொருளாம்
அந்தப் பொருளை அறிந்து கொள்க!
அருமை நுங்கு அதுவே!

(நூல் : பாட்டுத் தோட்டம்)

பழங்காலத்து விடுகதைகளும் பிற்காலத்து விடுகதைகளும் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளி வந்துள்ளன.

விடுகதைப் பாடலுக்கு அடுத்துத் தோன்றியது நாடோடிப் பாடல்கள். சிறுவர் பாடல் வளர்ச்சியில் இரண்டாவது நிலை இந்த நாடோடிப் பாடல்களே. 'நிலா, நிலா வா வா' முதலிய பாடல்கள் மிகப் பழமையான நாடோடிப் பாடல்களாகும். நிலாவை அழைக்கும் நாடோடிப் பாடலின் மறுவடிவந்தான், பிள்ளைத் தமிழில் வரும் 'அம்புலிப் பருவம்.' குழந்தைகளுக்கான நாடோடிப் பாடல்களைப் பெரும்பாலும் அன்னையரும் பாட்டிமாருமே இயற்றியிருக்க வேண்டும். அவை வழிவழியாகப் பாடப் பட்டுச் செம்மையான வடிவத்தைப் பெற்று விட்டன.

**காக்கா காக்கா**
**கண்ணுக்கு மை கொண்டு வா!**
**குருவி, குருவி**
**கொண்டைக்குப் பூக்கொண்டு வா!**
**கொக்கே, கொக்கே**
**குழந்தைக்குப் பால் கொண்டு வா!**

என்று பறவைகளை அழைக்கும் பாடலும்,

**சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு!**
**சாயக் கிளியே சாய்ந்தாடு!**
**தங்கச் சிலம்பே சாய்ந்தாடு!**
**தாமரைப் பூவே சாய்ந்தாடு!**

என்று குழந்தையைச் சாய்ந்தாடச் சொல்லும் பாடலும்

**கை வீசம்மா கைவீசு**
**கடைக்குப் போகலாம் கைவீசு**
**மிட்டாய் வாங்கலாம் கைவீசு**
**மெதுவாய்த் தின்னலாம் கைவீசு**

என்று குழந்தைக்கு விளையாட்டுக் காட்டும் பாடலும்,

ஆனை ஆனை அழகர் ஆனை
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை
காட்டுக் கரும்பை முறிக்கும் ஆனை
காவேரித் தண்ணீரைக் கலக்கும் ஆனை
செல்லக் கரும்பைப் பறிக்கும் ஆனை
தெருவெல்லாம் சுற்றி ஓடும் ஆனை
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைச்சதாம்
பட்டண மெல்லாம் பறந்தோடிப் போச்சுதாம்

என்னும் ஆனைப்பாடலும் சிறுவர்களுக்கான நாடோடிப் பாடல்களில் புகழ் பெற்றவையாகும். தமிழிலுள்ள நாடோடிப் பாடல்களைத் தொகுத்துப் பலர் வெளியிட்டுள்ளனர். அத்தொகுதிகளில் சிறுவர்களுக்கான நாடோடிப் பாடல்களைக் காணலாம். சிறுவர் நாடோடிப் பாடல்களில் சிலவற்றைத் தொகுத்து, 'குழந்தைகளுக்கான நாடோடிப் பாடல்கள்' என்னும் பெயரில் முதன் முதலில் வெளியிட்ட பெருமை, ர. அய்யாசாமிக்குக் குரியது.

நாடோடிப் பாடல்களை அடுத்து வருவது நீதிப் பாடல்கள். சிறுவர் பாடல் வளர்ச்சியின் மூன்றுவது நிலை 'ஆத்திசூடி' போன்ற நீதிப் பாடல்களே! சிறுவர்கள், இவற்றைச் செய்ய வேண்டும், இவற்றைச் செய்யக் கூடாது என்று கூறுவன இந்த நீதிப் பாடல்கள்.

அதிகமான் காலத்தில் வாழ்ந்த ஔவையார் சங்க காலத்தைச் சேர்ந்தவர். இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு. கம்பர் காலத்தில் வாழ்ந்த ஔவையார் கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்தவர். ஆத்திசூடி முதலிய சிறுவர் நூல்களை வழங்கிய ஔவையார் கி. பி. பதினும் நூற்றுண்டைச் சேர்ந்தவர். 'மூதுரை' என்னும் நீதி நூலில் 'கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி' என்னும் வரி வருகிறது. ஐரோப்பியா இந்தியாவுக்கு வந்த பிறகே வான்கோழி நம் நாட்டுக்கு வந்தது. அதனல் வான் கோழியைப் பற்றிப் பாடிய ஆத்திசூடி தந்த ஔவையார்

கி. பி. பதினாறும் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பது உறுதி யாகிறது. இந்த ஔவையார் அந்தக் காலத்துச் சிறுவர் களுக்குப் புரியும்படி எளிய சொற்களால், சிறிய அடிகளால் ஆத்திசூடியையும் கொன்றை வேந்தனையும் அருளினார்.

அறஞ் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்

என்று, சிறுவர்களுக்கு அகர வரிசையில் அரிய நீதிகளை ஆத்திசூடியில் வழங்கினார், ஔவையார்.

ஔவையார் வாழ்ந்த அதே நூற்றாண்டில் வாழ்ந்தவர் அதிவீரராம பாண்டியர். அரசராக இருந்தும் புலவராகத் திகழ்ந்தவர். பெரியோர்க்கேற்ற அரிய நூல்கள் எழுதும் ஆற்றல் பெற்ற இவர் சிறியோர்க்கும் நீதிநூல் இயற்றினார். நமக்குத் தெரிந்தவரை சிறுவர்களுக்காக எழுதிய முதல் ஆண்பாற் கவிஞர் இவரே. இவர் 'வெற்றி வேற்கை' என்னும் நீதி நூலை அளித்தார்.

'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்'
'கல்விக்கு அழகு கசடற மொழிதல்'
'கற்கை நன்றே, கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

இவை வெற்றிவேற்கை விளம்பும் நீதிகளில் சில. வெற்றி வேற்கைக்கு 'நூல்தொகை' என்னும் பெயருமுண்டு.

அதிவீரராம பாண்டியருக்குப் பின் வந்த உலக நாதர், 'உலக நீதி' என்னும் நீதி நூலைச் சிறார்க்கு வழங்கினார்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்

இவ்வாறு செய்யக் கூடாத செயல்களை மனத்திலே பதியும் வண்ணம் இனிமையாக எடுத்துரைக்கிறது உலகநீதி.

ஒளவையாரின் ஆத்திசூடி முதலிய நீதி நூல்களில் சிறுவரின் வயதுக்குப் பொருந்தாத அறிவுரைகள் இருப்பதால், இவை சிறுவர் நூல்கள் ஆகா என்றும், ஒளவையார் முதலிய புலவர்கள் இவற்றைச் சிறுவரை நினைத்து எழுதியிருக்க மாட்டார்கள் என்றும் கூறுவோர் உண்டு.

**தையல் சொல் கேளேல்**
**மெல்லினல்லாள் தோள் சேர்**
**மைவிழியார் மனை அகல்**

—ஆத்திசூடி

**துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு**
**பிறன்மனை புகாமை அறம் எனத்தகும்**

—கொன்றை வேந்தன்

**கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்**
**வாழாமல் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்**
**இருதாரம் ஒருகாலும் தேடவேண்டாம்**

—உலகநீதி

**குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்**
**தன் மனையாளைத் தாய்மனைக்கு அகற்றி**
**பின்பு அவன் பாராப் பேதையும் பதரே**

—வெற்றிவேற்கை

மேற்கண்டவற்றைப் போன்ற சில, நீதிகளைக் காட்டி, இந்நூல்களை எழுதிய புலவர்கள் சிறுவர்களை நினைத்துப் பாடவேயில்லை என்று வாதிடுகின்றனர், சிலர். இக்கருத்தை சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களில் சிலரும் ஆதரிப்பது வியப்பாக இருக்கிறது.

'தாலாட்டு' என்பது யாருக்குரியது? தாய்மார்களுக் குரியது; அவர்கள் சின்னக்குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடுவார்கள். அதைக் கேட்கும் குழந்தை ஓசை யில் மயங்கும்; நாவை அசைக்கப் பழகும். அவ்வளவுதான்! தாலாட்டு குழந்தையைப் பற்றியதே தவிர, எந்த வகையில் பார்த்தாலும் குழந்தைக் குரியதன்று. மேலே குறிப்பிடப் பட்ட 'தையல் சொல்கேளேல்', எப்படிப் பெரியவர்க் குரியதோ, அப்படி இத்தாலாட்டும் பெரியவர்க்கு- தாய்மார்க்கு உரியது. பாரதிதாசன் தாம் எழுதிய இரண்டு தாலாட்டு பாடல்களைப் பெரியோர்க்குரிய தம் கவிதைத் தொகுப்பிலே சேர்த்தார் என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

கவிமணி 'மழலை மொழி' என்னும் பகுதியில் 'தாலாட்டு'ப் பாடல் அமைத்துச் சிறுவர் பாடலாகத் தரு கிறார்.

**கொன்றை யணிந் தம்பலத்தில்**
**கூத்தாடும் ஐயனுக்கு**
**வன்றொண்ட னாக**
**வளர்ந்தவனும் நீதானோ?**

**கல்லைப் பிசைந்து**
**கனியாக்குஞ் செந்தமிழின்**
**சொல்லை மணியாகத்**
**தொடுத்தவனும் நீதானோ?**

**பூவில் அயனும் இந்தப்**
**பூமீது வள்ளுவர்தம்**
**பாவின் நயம் உணரப்**
**பாலகனாய் வந்தானோ?**

என்று பாடுகிறார் கவிமணி. இந்தத் தாலாட்டு தாய்மார்க்கே உரியது. இப்பாடலின் சொல்லும் பொருளும் கூடப் பெரியோர்க்கே புரியத் தக்கவை. என்றாலும் 'குழந்தைச் செல்வம்' என்னும் கவிமணியின் நூலில் இந்தப்

பாடல் இருப்பதை யாரும் குறை கூறுவதில்லை. இருந்து விட்டுப் போகட்டும் என்று விட்டுவிடுகிறோம்.

சிறுவர்களுக்காகவே பாடும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவும், தன் 'மலரும் உள்ளம்' முதல் தொகுதியில் தாய்மாருக்குரிய தாலாட்டுப் பாடல் ஒன்றைத் 'தாலாட்டு' என்னும் தலைப்பிலே தருகிறார்.

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
சூடா மணியே
துலக்கமாய் நின்றொளிரும்
வாடா மலரே, என்
மரகதமே கண்வளராய்

கற்கண்டு சீனி
கனி வகைகள் எல்லாம்உன்
சொற்களால் நானடையும்
சுகத்தினுக்கே ஈடாமோ?

கால்களை நீட்டி நன்கு
கையைத் தலைக்குவைத்துப்
பாற்கடலிற் பள்ளிகொண்ட
பத்மநாபன் நீதானோ?

'தர்மம் குறைகையிலே
தாரணியில் நானுதித்தல்
கர்மம்' எனஉரைத்த
கண்ணபிரான் நீதானோ?

சிறுவர் இலக்கிய வுலகின் பெரும்புகழ் பெற்ற வள்ளியப்பாவின் 'மலரும் உள்ளம்' தொகுதியில் தாய்மார்க்குரிய இத்தாலாட்டு இடம் பெற்றதைத் தவறு என்று யாரும் கூறவில்லை. இருந்து விட்டுப் போகட்டும் என்று அனுமதிக்கிறோம். அதே போல மலரும் உள்ளம் நூலில் வரும்

"பெண்ணுக் கழகு கற்பு' என்பதும் சிறுவர்க்கு ஏற்றதன்று. எனினும் இதுவரை யாரும் அதைக் குறை கூறவில்லையே!

ஆனல், சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த ஔவையாரும் அதிவீரராமரும் பெரிய வயதில் தேவையான சில, ஒருசில நீதிகளைச் சிறிய வயதினர்க்கான நூலில் சேர்த்து விட்டதால், அந்நூல்கள் சிறுவர் நூல்களல்ல, சிறுவரை நினைத்து அவை எழுதப்பட்டவையல்ல என்று கூறுதல் சற்றும் பொருந்தாது.

பதினும் நூற்றுண்டில், தோன்றிய அரிச்சந்திர புராணம், திருவிளையாடற் புராணம், மாறனலங்காரம் முதலிய நூல்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, அதே நூற்றுண்டில் இயற்றப்பட்ட ஆத்திசூடியையும் புரட்டிப் பாருங்கள். பிறகு கூறுங்கள், ஔவையார் யாரை நினைத்து ஆத்திசூடியை எழுதினர் என்பதை. ஔவையார் அருந்தமிழ்வல்ல ஆன்றேர். அவர் பெரியோர்க்கு எழுதுவதானல் இன்னும் செறிவோடு, அரிய சொற்களைக் கையாண்டு புலவர்கள் வியக்கும் யாப்பிலே பாடியிருப்பார். அவர் சிறுவர்க்குப் பாடுவதற்காகவே எளிய சொற்களைக் கொண்டு, சின்னஞ்சிறு சொற்றொடரால் அகர வரிசையில் பாடினர்.

அதிவீரராம பாண்டியர் செந்தமிழ்ச் செம்மல். பாவலர் வியக்கும் கவித்திறம் பெற்ற காவலர். கூர்மபுராணம், காசிக் காண்டம், இலிங்க புராணம், நைடதம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களை இயற்றியவர். பெரியவர்கள்கூட இந்நூல்களை உரையின் உதவியில்லாமல், அகராதி அருகேயில்லாமல் படித்துப் புரிந்து கொள்ள முடியாது. இவருடைய நைடதத்தைப் பற்றிய 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்னும் பழமொழி அதன் சிறப்பை யுணர்த்தும். இத்தகைய அரிய நூல்களை எழுதியவர் எளிய நடையில் 'வெற்றி வேற்கை' என்னும் நறுந் தொகையை யாருக்காக எழுதியிருப்பார்? ஐயமேன்? சின்னஞ் சிறுவர்க்காகத்தான்! பெரும்புலவர்கள் சிறுரிடம் கொண்ட பேரன்பி

ஞல் அவர்களுக்கான எளிய நடைக்கு இறங்கி வந்து, அரிய நீதிகளை அருளினுர்கள்! அதை மறுப்பதோ மறைப்பதோ அறமாகாது!

சிறுவர்களுக்கான நூல்களில் இப் புலவர்கள் ஏன் பெரியவர்களுக்கான நீதிகளை எழுதினுர்கள்! மனைவி எப்படி நடக்க வேண்டும், மணுளன் கடமை என்ன என்பன போன்றவற்றைச் சிறுவர் நூலில் ஏன் புகுத்தினர்?—இப்படிச் சிலர் கேட்கலாம்.

சிறுவர்க்கு நீதி போதனை செய்வது வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்வது போல வீட்டுத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகளில் சில விதைகள் சில வாரங்களில் பயன் தரும்! சில விதைகள் சில மாதங்களில் பயன் தரும்! சில விதைகள் சில ஆண்டுகளில் பயன் தரும்! கீரை சில வாரங்களிலும், கத்தரி வெண்டை முதலியன சில மாதங்களிலும், தென்னை, பனை, மா முதலியன சில வருடங்களிலும் பயன் தரும்! இந்த விதைகளைப் போலவே, சிறுவராக இருக்கும் போது பயன் படும் நீதிகளையும், இளைஞராக மாறும் போது பயன்படும் நீதிகளையும், சிறுவர் பெரியவராக—இல்லத் தலைவராக மாறும் போது பயன்படும் நீதிகளையும் ஔவையும் அதிவீரராமரும் கொடுத்திருக்கிருர்கள். வீட்டுத் தோட்டத்தில் கீரையும் காய்கறிகளும் அதிகமாக இருக்க வேண்டும்; தோட்டத்தின் மூலையில் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில மரங்கள் மட்டுமே இருக்கலாம். அப்போது தான் அது வீட்டுத் தோட்டம்; இல்லையேல் தோப்பாகி விடும். அது போலவே தான் சிறுவர் நூலில் ஒரு சில பெரியோர் நீதிகளை ஔவையாரும் அதிவீரராமரும் சேர்த்துக் கொடுத்துள்ளனர். அந்நீதிகள் இருப்பினும் அவைகள் சிறுவர் நூல்களே! அவற்றை எழுதிய புலவர்களும் குழந்தைக் கவிஞர்களே! இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

இவ்வாறு கூறுவதனால் இன்று சிறுவர் இலக்கியம் படைப்போரும் இப்படியே நூல்கள் எழுத வேண்டும் என்று கூறுவதாகக் கொள்ளக் கூடாது. கி. பி. பதினாறும் நூற்றாண்டில், சிறுவர்களுக்கான நூல்களே இல்லாத நேரத்தில், முன்னோடிகளாக இருந்து எழுதுவோர் ஒன்றிரண்டு பெரியோர் நீதிகளை நூலில் சேர்த்துவிட்டதால் அவை பெரியோர் நூலாகா என்று எடுத்துக் காட்டுவதே இவ் விளக்கத்தின் நோக்கம்.

ஔவையாரின் ஆத்திசூடி பெற்ற வரவேற்பைக் கண்டே, பின்னர் வந்த பாரதியாரும், பாரதிதாசனும் புதிய ஆத்திசூடிகள் இயற்றினர்; இவர்களுக்குப் பின்னே, நாரா. நாச்சியப்பன், ந சஞ்சீவி, ச. மெய்யப்பன், சோம. இளவரசு முதலிய புலவர் பெருமக்களும் ஆத்திசூடி இயற்றியுள்ளனர். குழந்தைக் கவிஞர்களில் சிலரும் தம் கவிதைத் தொகுதியில் ஆத்திசூடி பாணியில் சில நீதிகளைப் பாடிச் சேர்த்துள்ளனர். சுகவனம் சிவப்பிரகாசர், ஆத்திசூடி பாணியில் 'உடலோம்பல்' என்னும் நூலை எழுதியிருக்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். H. A. கிருஷ்ணப் பிள்ளை (1827-1900)—இவரே சின்னஞ் சிறுவர்க்கு என்று வயது குறிப்பிட்டுப் பாடல் எழுதிய முதல் கவிஞர். இவரது 'இரச்சண்ய மனோகரம்' என்னும் நூலின் தொடக்கத்தில் 184 வரிகள் கொண்ட 'பால்ய பிரார்த்தனை'யை எழுதியுள்ளார். "இந்தச் சிறு பாடல்கள் ஐந்து வயதுள்ள சிறு குழந்தைகள் உள்ளத்திலும் பதியத்தக்க இயற் சொற்களால் தெளிவான பொருளுள்ளதாகச் சிறுகவிகளால் இயற்றப்பட்டுள்ளன" என்று குறிப்பிடுகிறார் புலவர். இவை கிருத்துவ சமயத் தெய்வப் பாடல்கள். ஆகையால் அச் சமயத்துக்குரிய சொற்கள் அப்பாடல்களில் நிறைந்துள்ளன. அவற்றில் இரண்டு பாடல்களை எடுத்துக் காட்டுக்காகப் பார்ப்போம்.

**பக்தியாய்ச் செபம்பண்ணவே**
**சுத்தமாய்த் தெரியாதய்யா**

புத்தியோ டுமைப்போற்றநற்
சித்தமீங் திடும்ஜேசுவே
தீங்கெனக் கெவன்செய்யினும்
தாங்கிநன் மைதனைச்செய
ஒங்குநல் மனம்உதவுவாய்,
வீங்குபே ரருள்வித்தகா

இது சிறுவர் தாமே பாடும் முறையில் அமைந்தாலும் நீதிப்பாடல்கள் வகையைச் சார்ந்தவையாகவே அமைந்துள்ளது.

பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதியில் தோன்றினர் சி. சுப்பிரமணிய பாரதியார். இவர் சிறுவர்களுக்காகப் 'பாப்பாப் பாட்டு'ப் பாடினர். பாரதியாரும் ஒளவையாரின் பாணியிலே பாப்பாவுக்கு 'இதைச் செய்—இதைச் செய்யாதே' என்று அறிவுரை கூறினர். பாப்பாப் பாட்டும் நீதிப்பாடல் வகையைச் சார்ந்ததே என்றாலும், சிறுவர் கவிதைக்குத் தேவையான எளிய சொற்கள்—இனிய சந்தம்—படிக்கும் உள்ளத்தில் கருத்தைப் பதிய வைக்கும் பாங்கு—ஆகியவற்றுடன் பாப்பாப் பாட்டைப் பாடினர், பாரதியார்.

'அச்சந் தவிர்' என்பது பாரதியாரின் புதிய ஆத்தி சூடியின் முதல்வரி.

பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

என்பது பாப்பாப் பாட்டில் வரும் ஒரு பகுதி. இரண்டும் ஒரே கருத்தைத்தான் கூறுகிறது. 'அச்சந்தவிர்' என்பது வெறும் நீதி. இது மருந்து போன்றது. 'பாதகம் செய்பவரைக் கண்டால்' என்பதும் நீதிதான் மருந்துதான் ஆனல் இந்த நீதி இனிய சந்தத்தில்—இசையில் மறைந்து நின்று

மகிழ்விக்கிறது. இது மருந்து சர்க்கரைப் பூச்சுக்குள்ளே மறைந்து கிடப்பது போன்றது.

'பாதகம் செய்பவரைக் கண்டால்' பாட்டைப் பாடும் சிறுவர், பாரதியாரே நேரிலே நின்று தம் முதுகைத் தட்டிக் கொடுத்து, தம்மைத் தழுவி நின்று தம் செவியில் பாடுவது போன்ற உணர்வு பெறுவர். பாரதியார் பாப்பாவைப் பார்த்துப் பாடினாலும், தம்மையும் பாப்பாவையும் ஒரே உருவாக்கி, ஒன்றில் ஒன்றை ஒன்றச் செய்யும் அற்புதம் நிகழப் பாடினார். அதனால் அவரும் குழந்தைக் கவிஞர் என்னும் பெருமை பெறுகிறார்.

சிறுவர் பாடல் என்பது சிறுவரை நோக்கிப் பாடுவதாக அமையாமல், சிறுவர் தாமே பாடுவதாக அமையவேண்டும். இந்த உண்மையை அறிந்தவர்களும், இதைப் பிறருக்கு அறிவிப்பவர்களும்கூடத் தம்மை மறந்து சிறுவரைப் பார்த்துப் பாடிவிடுகிறார்கள். பாரதியாருக்குப் பின்னே பாடிய எல்லாக் குழந்தைக் கவிஞர்களுமே இந்த முறையை மேற்கொண்டு பாடியுள்ளார்கள். இதற்குக் காரணம், பாரதியாரின் பாப்பாப் பாட்டுக்கு இருக்கும் செல்வாக்கே. பாப்பாப் பாட்டைப் படிக்கும் குழந்தைக் கவிஞன் அதைப் போல ஒரு பாட்டுப் பாடினால்தான் தன்பணி நிறைவேறிய தாக நினைக்கிறான்.

1901ல் இருபதாம் நூற்றாண்டு பிறந்தது. அந்த வருடம் சிறுவர் இலக்கிய வரலாற்றில் மிகவும் முக்கியமானது. அதைப் பற்றி அறிவதற்கு முன்னர் இரண்டு சிறப்புமிக்க குறிப்புகளை இங்கே காண்போம்.

1886 ஆம் ஆண்டில் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் 'பாலியக்கும்மி' என்று ஒரு கவிதை நூலை, தம்பி முத்துப் பிள்ளை என்பவர் எழுதி வெளியிட்டுள்ளார். 1900 வரையில் அச்சான புத்தகங்களைப் பற்றிய பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையின் புத்தகப் பட்டியலில் இக்குறிப்பு இருக்கிறது.

இப்பட்டியலை, டாக்டர் எல். டி. பார்னட்டும் டாக்டர் ஜி. யூ. போப்பும் தொகுத்தளித்துள்ளனர்.

ஜான் முர்டாக் என்பவர், தொகுத்த 'அச்சிட்ட தமிழ்ப் புத்தகங்களின் வகைபடுத்தப்பட்ட விவரப்பட்டியல்' வேறோர் அரிய குறிப்பு வழங்குகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அய்யாசாமி பிள்ளை என்பவர், 'பால ராமாயணம்' என்னும் கவிதை நூலை அச்சிட்டிருக்கிறார். இது 16 பக்கம் கொண்டது. விலை 6 தம்படி (அரையணா இப்போது 3 காசு) இது ராமாயணம் முழுவதையும் சுருக்கித் தரவில்லை. ராமனின் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறுகிறது. (Story of Rama's childhood) என்று முர்டாக் கூறுகிறார். ஏறத்தாழ நூறாண்டுகளுக்குப் பின்னர் 'பால ராமாயணம்' என்னும் இதே பெயரில் முழு ராமாயணத்தை யும் கொடுத்தவர் பெயரும் ர. அய்யாசாமி என்பது எண்ணி வியந்து இன்புறத்தக்கது.

இனி இருபதாம் நூற்றாண்டுக்கு வருவோம்.

இருபதாம் நூற்றாண்டில் சிறுவர் பாடல்கள் செழித்தன; சிறுவர் பாடல் எழுதுவோர் புதுப் பொலிவும் வலிவும் பெற்றுப் புகழடைந்தனர். அவர்கள் மூன்று வகையினர்.

பெரியவர்க்கு எழுதிப் புகழ் பெற்ற பிறகு, சிறுவர்க்கும் எழுதியவர் முதல் வகையினர். பாரதி, கவிமணி காலத்தில் மட்டுமன்றி, இன்றும் பெரியோர்க்கு எழுதிப் புகழ் பெற்ற கவிஞர்களில் மிகப்பலர், சிறுவர்க்காக ஒரு கவிதை நூலை அல்லது சில பாடல்களை எழுதுகின்றனர். பிற துறையினர்க்கு இல்லாத ஒரு பெருஞ்சிறப்பு இது. பெரியவர்க்கு நாவல்கள் எழுதிப் புகழ் பெற்றவரில் பெரும்பாலோர் சிறுவர்க்கும் நாவல் எழுத முன் வருவதில்லை; பெரியவர்க்கு நாடகங்கள் எழுதிப் பெயர் பெற்றவர்கள் சிறுவர்க்கு நாடகம் எழுத முன் வருவதில்லை; பெரியவர்க்குக் கட்டுரைகள் எழுதிப் பிரபல மானவர்கள் சிறுவர்க்குக் கட்டுரை எழுத முன் வருவதில்லை.

ஆனால், பெரியவர்க்குக் கவிதை எழுதிப் புகழ் பெற்றவர்களில் பெரும்பாலோர் சிறுவர்க்கும் கவிதை எழுத முன் வருகின்றனர்; வந்தபின் சிலர் சிறுவர் இலக்கியத்திலேயே தங்கிவிடுவதும் உண்டு. இப்படித் தொண்டு செய்யும் தனித் தன்மை பெற்ற கவிஞர்களுக்குச் சிறுவர் இலக்கியம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

முதல் வகையினர் பாரதியார், கவிமணி, பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, வாணிதாசன், தமிழ் ஒளி போன்றவர்கள். இவர்களில் பெரும்புகழைச் சிறுவர் இலக்கியத்தில் பெற்றவர் கவிமணி.

தமிழைப் பயிற்றுவிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்களும், தமிழ்ப் பாட நூல்களை எழுதியவர்களும் சிறுவர் கவிதைகள் எழுதினர். கா. நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து, அ. சி. பரந்தாமனார் போன்றோர் இத்தகையினர். இவர்கள் இரண்டாம் வகையினர். இவர்களுள் பெரும்புகழ் பெற்றவர் மயிலை சிவமுத்து.

சிறுவர் இலக்கியத்தில் கொண்ட ஈடுபாட்டினால் சிறுவர்க்குப் பாடல் எழுதுவதையே தம் முதல் குறிக் கோளாகக் கொண்டு பாடல் எழுதியவர்கள் மூன்றாம் வகையினர். வள்ளியப்பா, எ. ந. கணபதி, திருச்சி பாரதன், தமிழ்முடி, புவனை கலைச்செழியன், லெமன் போன்றோர் இவ்வகையினர். இவர்களுள் பெரும்புகழ் பெற்றவர் வள்ளியப்பா.

இனி, இம்மூவகையினர் சிறுவர் பாடலுக்குச் செய்த சேவையினையும், சிறுவர் பாடல் பெற்ற வளர்ச்சியினையும், அதிலே பிறந்த வகையினையும் ஆராய்வோம்.

இருபதாம் நூற்றாண்டில் சிறுவர் பாடல்கள் எழுதும் பணியைத் தொடங்கி வைத்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் பாரதியைப் பார்த்து, அவரைப் பின்பற்றிச்

சிறுவர் பாடல்கள் எழுதினார் என்று சிலர் கூறுவர்.[1] இக்கூற்று உண்மையன்று. பாரதியார் 1882-இல் பிறந்தார். கவிமணி 1876-இல் பிறந்தார். கவிமணி, காலத்தால் முற்பட்டவர். பாரதியார் பாப்பாப் பாட்டை 1915-இல் எழுதி 'ஞானபானு' என்னும் இதழில் வெளியிட்டார். 'புதிய ஆத்தி சூடி'யை அதற்கு ஓராண்டுக்கு முன்னர்தான் வெளியிட்டார். ஆனால், கவிமணி 1901ஆம் ஆண்டே சிறுவர் பாடல்களை எழுதத் தொடங்கிவிட்டார். இது, 'மலரும் மாலையும்' நூலில் உள்ள, மு. சண்முகம் பிள்ளை எழுதிய 'கவிமணி வாழ்க்கை நிகழ்ச்சிகள்' என்னும் குறிப்பால் தெரிகிறது.

எனவே, பாரதியார் பாப்பாப் பாட்டைப் பாடுவதற்குச் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னரே கவிமணி சிறுவர் பாடல்கள் எழுதிவிட்டார். என்றாலும், பாரதியார், சிறுவர் பாடல்களில் மூன்றும் நிலையான நீதிப்பாடல்களையே எழுதியதாலும், பாரதியார் மறைவு, முன்னரே (1921-இல்) நேர்ந்துவிட்டதாலும் பாரதியைப் பற்றிய குறிப்பு இந்நூலில் முதலில் தரப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டு பிறந்த போதே, 1901-லேயே சிறுவர் இலக்கியத்தின் பொற்காலம் பிறந்துவிட்டது. கவிமணி சிறுவர் பாடல்களை எழுதிப் புதுமையைப் புகுத்தினார். இப்பாடல்களே அசல் சிறுவர் பாடல்கள். இவை சிறுவர் தாமே பாடி மகிழுவனவாகவும், சிறுவர்கள் விரும்பும் பொருள்களை—காட்சிகளை—விளையாட்டுகளைப் பற்றியனவாகவும், சிறுவர்களின் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்ற சொற்களையும், கருத்துகளையும், சந்தங்களையும் பெற்றனவாகவும் அமைந்தன. இந்த அசல் சிறுவர் பாடல்களே, சிறுவர் பாடல் வளர்ச்சியின் நான்காம் நிலை—உயர்ந்த நிலை. சரி. அசல்

---

1 டாக்டர் இரா. இளவரசு, 'புலமை' ஜூலை-செப்டம்பர் 1974 இதழில் எழுதிய 'பாரதியின் பாப்பாப் பாட்டு' கட்டுரையைப் பார்க்க.

சிறுவர் பாடல்கள் அல்லது உண்மையான சிறுவர் பாடல்கள் என்றால் என்ன என்று கேட்கக்கூடும். சிறுவர்களுக்காகச் சிறுவர் உள்ளத்தோடு சிறுவரின் மொழியில் சிறுவர் உலகத்தை விளக்கும் பாடல்களே உண்மையான சிறுவர் பாடல் என்பது நான் கொடுக்கும் விடையாகும். கவிமணியே இப்பகுதியைத் தொடங்கியவர்.

கவிமணியின் பெரியவர்க்குரிய பாடல்களும் எளிமையானவை. அதனால்தான் அவர் தம் 'மலரும் மாலையும்' என்னும் நூலைக் குழந்தைகள் படித்துப் புரிந்துகொள்வார்கள் என்று கருதி, நூல் முழுவதையுமே 'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு' உரிமையாக்கினார். அப்படிப்பட்டவரின் சிறுவர் பாடல்கள் எவ்வளவு எளிமையானவை என்று சொல்லவும் வேண்டுமோ?

கவிமணி 1901 முதல் அவ்வப்போது இயற்றிய சிறுவர் பாடல்கள் 1941ல் 'இளந்தென்றல்' என்னும் பெயரில் தனி நூலாக வந்தன. இப்பாடல்களே கவிமணியின் கவிதைத் தொகுதியான 'மலரும் மாலையும்' நூலில் இடம் பெற்றன. அதில், மழலை மொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம், கதைப் பாட்டு, உள்ளமும் உணர்வும் என்னும் ஐந்து பகுதிகளாகச் சிறுவர் பாடல்கள் இடம்பெற்றன. ஐந்து பகுதிகளில் மொத்தம் 46 பாடல்கள் இருந்தன. இவ்வைந்து பகுதிகளும் 'குழந்தைச் செல்வம்' என்னும் தனி நூலாக வெளிவந்தன. இந்நூலில் 'உள்ளமும் உணர்வும்' என்னும் பகுதி 'பஞ்சாமிர்தம்' என்னும் புதிய தலைப்புப் பெற்றது. கவிமணியியற்றிய வேறு 12 பாடல்கள் சேர்க்கப் பெற்று மொத்தம் 58 பாடல்களுடன் வெளிவந்த இக் 'குழந்தைச் செல்வம்' 1957ல் தமிழ்நாடு அரசினரின் சிறுவர் இலக்கியப் பரிசைப் பெற்றது.

தமிழ்ப் புலமை பெற்றவர்களுக்குச் 'சிறுவர் இலக்கியம்' என்றவுடன் 'பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கிய நினைவே எழும். பிள்ளையைப் பற்றிய பிள்ளைத் தமிழ் சிறுவர் பாட

லாகாது. என்றாலும் பிள்ளைத் தமிழில் தோய்ந்து சுகம் பெற்ற காரணத்தால் கவிமணி இப்பிள்ளைத் தமிழின் சாயலைக் கொண்ட பாடல்களையும் சிறுவர்க்காக எழுதினார். 'மழலை மொழி'யின் முதற்பாடல் 'முத்தந்தா' என்னும் பாடல். இது பிள்ளைத் தமிழின் முத்தப் பருவப்பாடலைப் போன்றது. 'தாலாட்டு' என்னும் பாடல் தாய்மார்களுக்கு உரியது. இறைவனைத் துயிலெழுப்பும். 'திருப்பள்ளியெழுச்சி' யின் பெயரிலே கவிமணி

**அப்பா எழுந்திரையா!**
**அரசே எழுந்திரையா!**
**கொக் கொக்கோ என்று**
**கோழி அதோ கூவுது பார்**

என்று பாடியுள்ளார்.

சந்தச்சுவை கொஞ்சும் நூல் 'குற்றாலக் குறவஞ்சி' அதிலே, வசந்தவல்லியின் கைச் சிறப்பினைக் குறத்தி விரித்துரைக்கும் பகுதியுண்டு. கவிமணி அதைப் பின்பற்றி,

**'வெயில் வரினும் மழைவரினும் விரிகுடையாம் கையே!**
**வெயர்வைவரின் ஆற்றுசிறு விசிறியதாம் கையே!'**

என்று தொடங்கிக் 'கைத்திறன்' பாடலைப் பாடியுள்ளார்.

மேலும் நாடோடிப் பாடல்களின் தாக்கம் காரணமாய் காக்காய், கோழி ஆகிய பாடல்களை இயற்றியுள்ளார்.

கவிமணி மொழி பெயர்ப்புப் பாடல்கள் எழுதியுள்ளார். அவர் கரத்தையடையும் பிறமொழிப் பாடல்கள் தமிழ்ப் பாடல்கள் போலவே தங்குதடையின்றிச் செல்லும். வில்லியம் பிளேக்கின் புலியைப் பற்றிய பாடல், குட்ரிச்சின் 'ஆறு' பாடல், மாக்டோனால்டின் 'குழந்தை' பாடல் ஆகியவை கவிமணியின் மொழிபெயர்ப்புப் பாடல்களில் சில. சிறுவர் பாடல் வளர்ச்சியில் ஐந்தாம்நிலை இந்த மொழிபெயர்ப்புப் பாடலே. இதைத் தொடங்கி வைத்தவரும் கவிமணியே.

கவிமணி தம் மொழிபெயர்ப்புப் பாடலை வெளியிடும் போது, மூலப் பாடலாசிரியனின் பெயரை மறக்காமல் குறிப்

பிடுவார். கவிமணியைப் பின்பற்றிப் பிறமொழிப் பாடல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர்கள் பலருண்டு. அவர்களில் சிலரே கவிமணியின் நேர்மைபெற்று மூலக் கவிஞரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர். பெரும் புகழ்பெற்ற கவிஞர்கள் பலர் மொழி பெயர்ப்புப் பாடல்களில் மூலக் கவிஞனின் பெயரை மறைத்துத் தம் சொந்தப்பாடல் போல் வெளியிட்டு வருகின்றனர். இது கண்டிக்கத் தக்க செயலாகும்.

கவிமணியின் சிறுவர் பாடல்களில் தலைசிறந்த பாடல், 'பசுவும் கன்றும்' என்பதாகும். அப்பாடல் இதுவே:

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி

அம்மா என்குது
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி

நாவால் நக்குது
வெள்ளைப்பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி

முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக்குட்டி

எளிமை—இனிமை—தெளிவு ஆகிய முக்கூறுகளையும் முழுமையாகப் பெற்ற எட்டு வரிப்பாடல் இது. இதில் வெள்ளைப்பசு என்னும் தொடர் நான்கு முறையும், கன்றுக் குட்டி என்னும் தொடர் நான்கு முறையும் திரும்பத் திரும்ப

வருகின்றன. பிறசொற்கள் சீர் சீராக அமைந்துள்ளன. ஒரே ஒரு சொல்கூடச் சீருக்காகச் சிதைந்து பிரிபடவில்லை. கடினமான சொல் ஒன்றுகூட இல்லை. தொடக்கமும் முடிவும் அற்புதமாக அமைந்துள்ளன. எல்லா வரிகளுமே இனிய ஓசை நயத்தைப் பெற்றவை. இப்பாடல், சிறுவர் பாடல் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழத்தக்கது. இது கவிமணியின் பாடல்களில் தலை சிறந்தது மட்டுமன்று, பின்னே வந்த நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைக் கவிஞர்கள் எழுதிய ஆயிரக்கணக்கான சிறுவர் பாடல்களைத் திரட்டி ஒப்பிட்டு ஆய்ந்து பார்த்தாலும், அப்போதும் இப் 'பசுவும் கன்றும்' பாடலே தலைசிறந்ததாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

கவிமணி நான்கு கதைப் பாடல்களையும் மிகச்சிறந்த முறையில் இயற்றியுள்ளார். அவற்றுள் 'நெற்பானையும் எலியும்', 'அப்பம் திருடின எலி' ஆகிய இரண்டும் சிறப்பு மிக்கன.

சிறுவர் பாடல் வளர்ச்சியில் கதைப்பாடல் ஆரம்பநிலையாக அமைகிறது. இதைத் தொடங்கி வைத்த பெருமையை கவிமணிக்கும் முற்பட்டவரான வீரமார்த்தாண்ட தேவர் பெறுகிறார்.

சிறுவர்க்குரிய கதைப் பாடலில் மிகப் பழமையானது 'பஞ்ச தந்திரப் பாடல்கள்'. வீரமார்த்தாண்ட தேவர் என்பவர் இப் பாடல்களை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றினார்.[1] பஞ்ச தந்திரம் என்பது

---

1 1826 ஆம் ஆண்டில் வித்துவான் தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரத்தை உரைநடையில் இயற்றினார் என்றும் இவ்வுரைநடை நூலுக்குப் பல்லாண்டுகள் முன்னரே வீரமார்த்தாண்ட தேவர் பஞ்சதந்திரப் பாடல்கள் இயற்றினார் என்றும் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை குறிப்பிடுகிறார்.
பார்க்க : முன்னுரை -பஞ்சதந்திரப் பாடல்கள். மே. வீ. வே. பதிப்பு.

பாடலிபுரத்து மன்னன் சுதரிசனன் என்பானின் புதல்வர்களான மூடர்களைப் புத்திமான்களாக்க சோமசன்மா சொன்ன கதைகளாகும். வீரமார்த்தாண்ட தேவர் இப்பாடல்களை ஓரளவு எளிய நடையில் இயற்றியுள்ளார். "இந்நூல் எளிய நடையில் இயற்றப்பட்டிருப்பதால், தமிழ்ச் சிறுவர் சிறுமியர் விரும்பிக் கற்றற்குரியதாய்த் திகழ்கின்றது. ஆதலின், சிறுவர்க்கான தமிழ்ப் பாட நூல்களில் இப்பஞ்ச தந்திரப் பாடற் பகுதிகள் இடம் பெற்று வருவதைக் காணலாம்" என்று மே வீ. வேணுகோபாலப் பிள்ளை கூறுவதும் இந்நூல் சிறுவர் நூலெனக் கொள்ளத் தக்கது என்பதை வலியுறுத்துகிறது. பஞ்ச தந்திரப் பாடல்களின் தன்மையை அறிய, 'காகம் நாகத்தைக் கொன்ற கதை'யைக் கீழே காண்க.

கோடுறு சினையிற் காகம்
கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே

ஆடியல் கரும்பாம் பொன்றங்கு
அதுபெறும் முட்டை எல்லாம்
காடியே குடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி

தன்னுயிர்ப் பாங்க னான
சம்புகன் அருகு போய், 'இங்கு
என்னசெய் குவன்நான்?' என்ன
'இதைக் கொலல் அரிதோ! நீபோய்

மன்னவன் தேவி ஆடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
போடுக பொந்தில் என்ன'

காகம்அப் படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகி, மா மரத்தின் பொக்கை
ஈர்ந்தனர்; ஈரும் போதில்

நாகம், அங் கிருந்து சீற
நறுக்கினர் இருதுண் டாக;
ஆகையால் உபாயத் தாகா—
தில்லை என அறையும் பின்னும்

(சம்புகன்—நரி)

வீரமார்த்தாண்டர் ஓரளவு கடினமான சொற்களுடன் கதைப் பாடல் தந்தார். கவிமணி முற்றிலும் எளிமையான சொற்களில் கதைப் பாடல் இயற்றினார். இன்று வெளி வந்துள்ள சிறுவர் பாடல் தொகுதிகளில் பெரும்பாலான வற்றுள் கதைப்பாடல் ஒரு பகுதியாக அமைந்திருப்பதைக் காணலாம். அவ்வாறு தனிப் பகுதியில்லையாயினும் ஒன் றிரண்டு கதைப் பாடல்களையாவது பாடல் தொகுதியில் காணலாம். சுருங்கச் சொன்னால் கதைப் பாடல் எழுதாத குழந்தைக் கவிஞரைக் காண்பது அரிது. வெறும் கதைப் பாடல்களை மட்டுமே தனிக் கவிதை நூலாகப் பலர் தொகுத்து வெளியிட்டுள்ளனர். பெ. நா. அப்புஸ்வாமியின் ‘சித்திரக்கதைப் பாடல்கள்’ இரண்டு தொகுதிகள் மிகப் பழமையானவை. நாக. முத்தையாவின் ‘பாட்டும் கதையும்’ தனிக்கவிஞரின் கதைப் பாடல் தொகுயில் மிகவும் பெரியது. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் வெளியிட்ட, அழ. வள்ளியப்பா தொகுத்த ‘சிறுவர் கதைப் பாடல்கள்’ 60 கவிஞர் இயற்றிய 60 சிறுவர் கதைப் பாடல்கள் கொண்ட தொகை நூலாகும்.

சிறுவர் பாடல்களில் புதிய புதிய சந்தங்களைப் புகுத்தியவர் பாவேந்தர் பாரதிதாசன். கவிமணியின் பாடற் சந்தத்தை அழகு மயிலின் ஆடலுக்கு ஒப்பிடலாம்; பாரதிதாஸின் பாடற்சந்தத்தை புள்ளிமானின் ஓட்டத்துக்கு ஒப்பிடலாம்.

பூனை வந்தது பூனை—உடன்
போனது தயிர்ப் பானை

o ● o

என்றன் நாயின்பேர் அப்பாய்—அது
முன்றில் காக்கும் சிப்பாய்

o o o

எண்ணிஞல் நூறிருக்கும் எங்கள் வீட்டு
எலிகள்—அவை
இரவுபகல் பண்டங்களை உருட்டுவதில் புலிகள்

இந்தப் பாடல்களின் சந்தங்கள் குழந்தையைக் குதித்துக் கைகொட்டிப் பாடவைக்கும் ஆற்றல் பெற்றவை. இனி, பாரதிதாசன் மற்ெருரு புதுமையையும் தமிழில் புகுத்திஞர். தமிழ்ப் பாடல்களில் அடிதோறும் முதலில் உள்ள சொற்களிலே எதுகையும் மோனையும் அமையும். ஆனுல் ஆங்கிலப் பாடல்களில் வரிகளின் ஈற்றுச் சொல்லிலே எதுகை அமையும். இந்த ஈற்றெதுகை முறையைச் சிறுவர் இலக்கியத்தில், தமிழ் நாட்டில் முதலில் புகுத்தியவர் பாரதிதாசனே. மேலே காட்டிய எடுத்துக் காட்டுகளிலும், இந்த ஈற்றெதுகைச் சிறப்பு இருப்பதைக் காண்க.

பாரதிதாசன் சிறுவர் பாடல் வளர்ச்சியில் ஏழாம் நிலையை ஆரம்பித்து வைத்தார். வெண்பா, ஆசிரியப்பா முதலிய எல்லாப் பாக்களையும் இசையோடு பாடலாம் என்பது உண்மையாஞலும், இப்பாக்களை இன்ன ராகத்தில் பாடவேண்டும் என்னும் பாகுபாடு இருந்தது என்பதும் உண்மையாஞலும் இவை இயற்றமிழில்தான் அடங்கும். இசைக்கான சொல்லும் உருவும் இணைய அமையும் கீர்த்தனைகளையே இசைப்பாடல்கள் என்றும் இசைத்தமிழ் என்றும் வழங்குகிருேம். பாரதிதாசனே, சிறுவர்களுக்குக் கீர்த்தனை போன்ற இசைப்பாடல்களை அமைத்துத் தந்த முதல்வர்.

1. 'பசிஎன்று வந்தால் ஒருபிடி சோறு
புசிஎன்று தந்துபார் அப்பா''

2. ''தலைவாரி பூச்சூடி உன்னை—பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள்உன் அன்னை''

3. ''அம்மாஎன் காதுக்கொரு தோடு—நீ
அவசியம் வாங்கிவந்து போடு''

எடுப்பு

4. ''நோயிலே ப் போய் அழிப்பாய்
நூறாண்டு வாழ் வாய்

உடனெடுப்பு

ஆயநன் னெஞ்சில் வேண்டும்நல் வீரம்
தேயத்தில் தேகத்தில் வேண்டும் சுகா தாரம்( நோயி)

இவை சிறுவர் இசைப் பாடல்கள்; இசை இன்பம் வழங்கும் கீர்த்தனைகள். இந்தக் கீர்த்தனைகளாகிய இசைப் பாடல்களே குழந்தைப் பாடல் வளர்ச்சியின் ஏழாம்நிலை யாகும்.

பாரதிதாசன் இசைப் பாடல்கள் அமைத்தமையாலே அவற்றைக் கவிமணி போலே, தம் கவிதைத் தொகுதியின் ஒரு பகுதி யாக்காமல், தம் இசைப்பாடல் தொகுதியான 'இசையமுது' நூலில் ஒரு பகுதியாக்கினார். இசையமுது இரண்டு தொகுதிகளாய் வந்துள்ளது. 'குடும்ப விளக்கு' என்னும் நூலில் நான்காம் பகுதியான 'மக்கட் பேறு' என்னும் பகுதியில் சில சிறுவர் பாடல்களைக் காணலாம். 134 சிறுவர் பாடல்கள் கொண்ட 'இளைஞர் இலக்கியம்' என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இத்தலைப்பை ஒட்டியே பின்னே வந்தவர்கள் தம் சிறுவர் கவிதைத் தொகுதிக்கு குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் எனப் பெய ரிட்டனர்.

பாரதிதாசன் வடமொழிச் சொற்களும், கொச்சைச் சொற்களும் கலவாமல், கூடியவரையில் செந்தமிழ்ச்

சொற்களைக் கொண்டே சிறுவர் பாடல்களை இயற்றினர். இதுவும் குறிப்பிடத்தக்க தனிப் பண்பாகும்.

சிறுவர் கவிதை இலக்கியத்தில் இயல், இசை ஆகியன வற்றைக் கூறினேன். சிறுவர் பாடலில் நாடகமும் உண்டு. இதுவே சிறுவர் கவிதை நாடகம். இக்கவிதை நாடகமே, சிறுவர் பாடல் வளர்ச்சியின் எட்டாம் நிலை. இதனைப் பின்னர் விளக்குகிறேன்.

சிறுவர் இலக்கியத்தில் சந்தங்களைத் துள்ளச் செய்த மற்றொரு கவிஞர் தமிழ்ஒளி. இவருடைய பாடல் தொகுதி யான 'பாடு பாப்பா'வில் புதிய புதிய சந்தங்களில் சிறுவர் பின்னர் பாடல்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

''பாடம் படியா ஒருபையன்
பள்ளி செல்லா ஒருபையன்
மூடன் ஆனான் முன்னாலே
மூட்டை சுமந்தான் பின்னாலே

எனத்தொடங்கும் 'முன்னும் பின்னும்' பாடல், கல்வியின் சிறப்பையும், கல்லாமையின் இழிவையும் எடுத்துக் காட்டும் தலைசிறந்த பாடல்.

வழிந்து வருங் காவிரி
வாசந்தரும் பூவிரி
பொழிந்து தமிழ்ப் பாடலாம் வா வா வா—மலர்ப்
பூங்காவில் ஆடலாம் வா வா வா!

எனத் தொடங்கும் 'காவிரியே வா' என்னும் பாடலும்.

படகு மிதக்க ஓடிவந்த காவிரி
பாட்டுப் பாடி ஆடிவந்த காவிரி
குடகு மலையில் குதித்து வந்த காவிரி
கொண்டு வந்த பொருளும் எங்கே? கைவிரி

எனத் தொடங்கும் 'காவிரி' என்னும் பாடலும் தமிழ் ஒளியின் புகழ் ஒளியைக் குன்றின் மேலிட்ட தீபமாய் நின்று ஒளிரச் செய்வனவாம்.

யோகி சுத்தானந்த பாரதியார் (பாப்பாப் பாட்டு), தே. ப. பெருமாள் (பிள்ளைக் கவிஅமுது), வாணிதாசன் (குழந்தை இலக்கியம்), தமிழழகன் (மழலை அமுதம்), புத்தனேரி ரா. சுப்பிரமணியம் (அம்புலிப் பாட்டுப் பாடாதே), ச. பாலசுந்தரம் (மழலைத்தேன்), மின்னூர் சீனுவாசன் (வண்ண வண்ண மீன்கள்), ஆலந்தூர் மோகனரங்கன் (பள்ளிப் பறவைகள்), ம. லெ. தங்கப்பா (எங்கள் வீட்டுச் சேய்கள்), கம்பதாசன் (குழந்தைச் செல்வம்), பொன்னி வளவன், பொன்னடியான், மதி சீனிவாசன், சிற்பி பாலசுப்பிரமணியன், நா. ரா. நாச்சியப்பன் (சிறுவர்பாட்டு) முதலியோரும் பெரியவர்க்காகக் கவிதை எழுதியதுடன் சிறுவர்க்காகவும் கவிதைகள் இயற்றியுள்ளனர்.

இனி, பள்ளி ஆசிரியர்களாகவும் பாடநூல் ஆசிரியர்களாகவும் திகழ்ந்து, சிறுவர் பாடல்களை எழுதிச் சிறந்த இரண்டாம் வகையினரான கவிஞர்களைப் பற்றி ஆராய்வோம்.

இவ்வகையினருள் முதல்வர் கா. நமச்சிவாய முதலியார்-

"அ இதுவோர் அத்திப் பழம்"
"சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப் போல நானுமே
உழைத்திடவும் வேணுமே"

என்னும் பாடல்களும், 'கயவன் கல்வி அருமை அறிந்தது' என்னும் கதைப்பாடலும் இவர் பெருமைக்குச் சான்றாக நிற்பவை. இவர் பாடல்கள் நூலாக வரவில்லை. இவர் காலத்திலே வாழ்ந்த மணி திருநாவுக்கரசு முதலியாரும்,

"பூவே, உன்னைப் படைத்தவர் ஆர்?
புதுமணம் உள்ளே நுழைத்தவர் ஆர்?
பலபல நிறங்கள் பண்ணவர் ஆர்?
பார்க்க அழகு தந்தவர் ஆர்?

**உன்னைச் செய்தோன் வல்லவனே!**
**உலகுக் கெல்லாம் நல்லவனே!''**

எனும் புகழ் பெற்ற பாடல் உட்பட பல பாடல்களை எழுதினர். இவர்கள் வழியிலே நின்று, சிறுவர் பாடல்களை எழுதி இவர்களையும் வென்று, சிறுவர் இலக்கிய வரலாற்றில் நிலையாக நின்றுவிட்டவர் மயிலை சிவமுத்து.

குழந்தைமனக் கற்பனையையும், குழந்தைக்கு வியப் பூட்டும் மனநிலைகளையும் அற்புதமாகப் பாடியவர் சிவமுத்து. இவருடைய 'மாமி சுட்ட பிட்டு'ப் பாடலும் 'அப்பாவைப் போல் நான் ஆனுல்' பாடலும், 'பொய் சொல்ல மாட் டோம்' பாடலும், காலத்தால் அழியாமல் நிலைக்கக்கூடியன. இவர் பாடல்களின் 'தாக்கம்' (influence) பின்னே வந்த குழந்தைக் கவிஞர்கள் பலர் பாடலில் பார்க்கலாம். இவர் பாடல் தொகுதிக்கு 'முத்துப் பாடல்கள்' என்று பெயர். இந்நூல் இந்திய அரசினர் பரிசு பெற்றது.

புலவர் தணிகை உலகநாதன் இந்த இரண்டாம் வகை யினர் வழி வந்து, மூன்றும் வகையினருள் நிலைத்துவிட்டார். இவருடைய பாடல்கள் 'பாடும் பாப்பா' எனும் நூலாக வந்துள்ளன.

'சித்திர வாசகம்' மூலம் சிறுவர் பாடல்களைத் தந்தவர் பெ. நா. அப்புஸ்வாமி. இவருடைய கதைப்பாடல்கள் 'சித்திரக் கதைப் பாடல்கள்' எனும் பெயரில் இரண்டு தொகுதிகளாக வந்துள்ளன. ஆங்கிலக் கதைப்பாடல்களின் தமிழ்ப் பாக்கள் பலவற்றை இவற்றில் காணலாம்.

அ. கி. பரந்தாமனுரின் பாடல் தொகுதி 'எங்கள் தோட்டம். இதுவும் இந்திய அரசினர் பரிசு பெற்றது. இதில் ரஷ்ய மொழிப் பாடலின் தழுவலாக அமைந்த 'மேலே மேலே போவோமே' எனும் நல்லபாடல் இடம்பெற்றுள்ளது. டாக்டர் மு. வரதராசனுர் (குழந்தைப்பாட்டுக்கள்), டாக்டர் மா. இராசமாணிக்கனுர் (குழந்தைப் பாடல்கள்), பண்டித நடேசனுர் (மலர் மணம்) முதலியோரும் இவ்வகையினர்.

அடுத்து, மூன்றும் வகையினரான. குழந்தைக்கே எழுதிய குழந்தைக் கவிஞர்கள், பெரியோர்க்கு எழுதத் தொடங்கிப் பின் சிறுவர் இலக்கியத்தோடு இரண்டற இணைந்து விட்டவர்கள் ஆகியவர்களைப்பற்றி அறிவோம். இவர்கள் வரிசையில்தான் மூன்றும் வகையினர், தரத்திலே அல்ல!

இவ்வகையினருக்கு முன்னேடியாய்த் திகழ்பவர்—எந்தத் தகுதியை வைத்துப் பார்த்தாலும் இவ்வகையினருள் முதலிடம் பெற்றுச் சிறப்புற்று இருப்பவர் அழ. வள்ளியப்பாவே ஆவார். வள்ளியப்பாவின் பெருமை, சிறுவர் பாடல்கள் இயற்றியதால் மட்டும் ஏற்பட்டுவிட வில்லை. இவர் குழந்தைக் கவிஞர்களை உருவாக்கினர்; குழந்தை இலக்கியத்தை வளர்த்து, அதன் பெருமையைப் பிறர் உணரச் செய்தார்; தமிழ் உலகம் முழுதும் போற்றும் பெருமையைப் பெற்றார். இவர் பாடலை அறியாத குழந்தை இல்லை; இவர் பாடல் இடம் பெருத பாட நூல் இல்லை.

வள்ளியப்பாவின் பாடல்கள் நூற்றுக்கு நூறு சிறுவர் பாடல்கள். இவர் முதலில் சிறு சிறு நூல்களாகத் தம் பாடல்களை வெளியிட்டார். பின்னர், 'மலரும் உள்ளம்' (முதல் தொகுதி) என்னும் பெரிய தொகுதியாக வெளியிட்டார். இன்று வரை அதிக பாடல்களைப் பெற்ற பெரிய, சிறுவர் பாடல் தொகுதி இதுவே! அதிக பதிப்புகள் (ஒன்பது பதிப்பு) வெளி வந்து, அதிக அளவு விற்ற (முப்பதாயிரம் பிரதிகள்) தொதியும் இதுவே! அரசினரின் பரிசுகளை மூன்று முறை பெற்ற ஒரே தமிழ்நூலும் இதுவே! '(மலரும் உள்ளம்'–முதல் தொகுதி, இந்திய அரசினர் பரிசையும் தமிழ்நாடு அரசின் பரிசையும் பெற்றது. பின்னர், இத்தொகுதியின் ஒருபகுதி 'பாப்பாவுக்குப் பாட்டு' எனும் தனி நூலாக வந்து, தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது ) பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட (ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு) சிறுவர் பாடல்களைக் கொண்ட தொகுதியும் இதுவே! இதில் உள்ள 'கண்ணன் எங்கள் கண்ணனும்' பாடலும், 'வட்டமான தட்டு' எனும் பாடலும் குழந்தைக் கவிஞர்களுக்குக்

கலங்கரை விளக்கமாகவும், சிறுவர்களுக்குக் கற்கண்டுக் குன்றமாகவும் திகழும் அழியாத பாடல்கள். குழந்தை இலக்கியத்தின் பிற்கால வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வழி செய்த தொகுதியும் இதுவே.

இந்நூலின் இலக்கிய வெற்றியும், விற்பனை வெற்றியும் கண்டே, குழந்தைக் கவிஞர்கள் துணிந்து தம் பாடல்களை நூல்களாக வெளியிட்டனர்.

"மலரும் உள்ளம்" நூலின் பெயர்—பாடற்பொருள்—பாடற்சந்தம்—பாட்டிற்குப் படம் அமைக்கும் முறை ஆகியவற்றை, பின்னே வந்த பலரும் பின்பற்றியமை, இந்நூலின் சிறப்பையும் செல்வாக்கையும் காட்டும்.

'மலரும் உள்ளம்' இரண்டாம் தொகுதி பின்னர் வெளி வந்தது. ஈசாப் கதைகளைச் சிறுவர் பாடல்களாக்கி இரு தொகுதிகளாக வெளியிட்டதும் இவரது அருஞ்சாதனையாகும். வெளிநாட்டுப் பழமொழிகளைக் குட்டிப் பாடல்களாக்கி வெளியிட்ட பெருமையும் இவரைச் சாரும். 'பாட்டிலே காந்தி கதை' என்பது இவர் படைத்த சிறுவர் காவியம். இதுவும் இந்திய அரசினர் பரிசு பெற்றது. இது 'கரும்பு' சிறுவர் வார இதழில் தொடர் கதைப் பாடலாக வெளிவந்தது.

இவர் 'குழந்தைக் கவிஞர்' எனும் பட்டம் பெற்றவர். இவரை ஒட்டி ஒரு 'குழந்தைக் கவிஞர் பரம்பரை' நாட்டிலே உருவாகியுள்ளது. இது, குழந்தைக் கவிஞர்களில் இவர் மட்டுமே பெற்ற பெறற்கரும் சிறப்பு. வள்ளியப்பாவின் முன்னுரையோடு வந்த சிறுவர் கவிதை நூல்கள் முப்பதுக்கும் மேற்பட்டவை. பிற குழந்தைக் கவிஞர் தம் நூலில் வள்ளியப்பாவைப் பாடற்பொருளாகக் கொண்டு பாடல்கள் எழுதியுள்ளமை, இவரைப் பற்றி ஒரு கவியரங்கம் நடந்தமை, அக்கவியரங்கப் பாக்கள் தனி நூலாக வெளிவந்தமை—வள்ளியப்பாவின் தனிச் சிறப்புகளாகும். இவை வாழும்

குழந்தைக் கவிஞர்களில் வேறுயாரும் பெறாத சிறப்புகள் இவர் பாடல்களில் இரண்டு பாடல்களைப் பின்னே காண்க.

லட்டும் தட்டும்

வட்ட மான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதம் கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்த தெட்டு
மீதம் காலித் தட்டு

மகிமை

சோலை மகிமை பெறுவதே
சுகந்த முள்ள மலர்களால்
நாடு மகிமை பெறுவதே
நன்கு பெருகும் வளத்தினால்

நூல்கள் மகிமை பெறுவதே
நுட்ப மான கருத்தினால்
மனிதன் மகிமை பெறுவதே
மாண்பு மிக்க அறிவினால்.

'மலரும் மாலையும்' நூலுக்குப் பின் 30-க்கு மேற்பட்ட குழந்தைப் பாடல்களை ஒரு பகுதியாகக்கொண்டு வெளிவந்த பெரியதோர் கவிதைத் தொகுதி 'இதயச்சுவடி.' இதன்

ஆசிரியர் 'வானொலி அண்ணா' ர. அய்யாசாமி. இவர் சிறுவர் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பெருமை பெற்றவர். வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்றதன் மூலம் குழந்தை இலக்கியத்தை வளப்படுத்தியவர். நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைக் கவிஞர்கள் உள்ளனர் என்பதைத் தமிழுலகுக்கு அறிவித்தவர். அக்குழந்தைக் கவிஞர்களின் பாடல்களை இசையமைப்போடு வானொலியில் ஒலி பரப்பியவர். படிப்பவர்களாக இருந்த சிறுவர்களைப் பாடுபவர்களாக மாற்றியவர்.

அய்யாசாமி குழந்தை இலக்கியத்தில் செய்த சாதனை சிறுவர் காவியம் இயற்றியதே. 'பால ராமாயணம்' என்னும் சிறுவர் காவியம் வானொலியில்—நடன அரங்கில்—புத்தக உலகில் இடம் பெற்று, உன்னதப் புகழ் அடைந்தது.

அதுவரை சிறுவர் இலக்கியத்தில் தனிப்பாடல்களும் கதைப் பாடல்களுமே இருந்தன. 'பூஞ்சோலை' இதழில் கே. கண்ணுசாமியும், எ. ந. கணபதியும், 'கரும்பு' இதழில் த. கோவேந்தனும் எழுதிய தொடர்கதைப் பாடல்கள் அளவிலே சிறியனவாக, நீண்ட கதைப்பாடல்களாக அமைந்தன. 'கரும்பு' இதழிலே வள்ளியப்பா 'காந்தி கதைப் பாடல்கள்' தொடர்ந்து எழுதி வந்தார். ஆனால் அம்முயற்சி இடையில் தடைப்பட்டது. அதனால், சிறுவர் இலக்கியத்திற்குக் காவியம் கிடைக்கும் வாய்ப்புத் தள்ளிப் போய் விட்டது. முதல் சிறுவர் காவியம் படைத்த பெருமையைப் பால ராமாயணத்தின் மூலம் அய்யாசாமி அடைந்தார். சிறுவர் பாடல் வளர்ச்சியில் இது ஒன்பதாம் நிலையாகும். இப் பால ராமாயணம் இந்திய அரசினர் பரிசிலையும் பெற்றது.

அய்யாசாமி, 'சிறுவர் சிலம்பு', 'மோகன காந்தி' ஆகிய சிறுவர் காவியங்களையும் எழுதியுள்ளார். தெலுங்கு, மலையாள நாடோடிப் பாடல்களைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். இவரும் பூவண்ணனும் சேர்ந்து தொகுத்து வெளியிட்ட 'முத்துக் குவியல்' நூலே தமிழ் நாட்டில் வெளியான

குழந்தைக் கவிஞர் மிகப் பலர் எழுதிய பாடல்களின் முதல் தொகுப்பு நூலாகும். சிறுவர் கவிதைகளின் முதல் தொகை நூலாகும்.

சிறுவர் பாடல் வளர்ச்சியில் சிறந்த பங்கேற்ற மற்றொரு கவிஞர் பெ. தூரன். பெரிய அளவில் (கிரௌன் $\frac{1}{4}$), வண்ணப் படங்களுடன் வெளிவந்த முதல் சிறுவர் பாடல் நூல், இவர் எழுதிய 'ஆனையும் பூனையும்' ஆகும். இவருடைய சிறுவர் பாடல்கள் நூல் வடிவம் பெற்று வெளிவரும் முன்பே. எண்ணற்ற பாட நூல்களில் இடம் பெற்றுப் புகழ் பெற்றன. இவர் ஆங்கில மொழிக் குழந்தைப் பாடல்கள் (Nursery Rhyms) பலவற்றைத் தழுவித் தமிழில் இனிய பாடல்களும் புனைந்துள்ளார். 'நல்ல நல்ல பாட்டு' என்னும் இவருடைய சிறுவர் பாடல் தொகுதி தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது.

சுப்பு ஆறுமுகம் குழந்தைகளுக்கான தனிப் பாடல்கள் பல எழுதியிருக்கிறார். என்றாலும், வில்லுப் பாட்டு எனும் புதிய பாடல் வகையைச் சிறுவர் இலக்கியத்திற்குத் தந்தவர் இவர். இவரது வில்லுப் பாட்டை வானொலியில், சிறுவர் நிகழ்ச்சியில் புகுத்தியவர் அய்யாசாமி என்பதையும் மறத்தலாகாது. பெரிய பானையை ஒட்டிய நீண்ட வில்லின் நாணைத் தட்டிச் செவியைக் குளிர்வித்துச் சிந்தையைச் சிலிர்க்கச் செய்யும் வில்லுப் பாட்டின் இசையைச் சிறுவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். வில்லுப்பாட்டு, சிறுவர் இலக்கியத்திற்குப் புதியது. இதுவே சிறுவர் பாடல் வளர்ச்சியில் பத்தாம் நிலையாகும். இந்நிலைப் பாடலை முதலில் எழுதியவர் சுப்பு ஆறுமுகம். அதை முதன் முதலில் சிறுவர்களுக்காகத் தம் தேன் குரலில் பாடியவர், நூற்றுக்கணக்கான சிறுவர் பாடல்களைப் பாடிப் புகழ் பெற்ற க. ஜெயஸ்ரீ ஆவர்.

சுப்பு ஆறுமுகத்தின் வில்லுப் பாடல்கள், 'காந்தி வந்தார்', 'விடுதலை வேள்வி' எனும் இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன.

நகைச்சுவை நிரம்பிய சிறுவர் பாடல்கள் எழுதிப் புகழ் பெற்றவர் இருவர். ஒருவர், சசிதேவன் (கிருஷ்ணன் நம்பி) மற்றொருவர், லெமன். சசிதேவன் பாடல்கள் 'யானை என்ன யானை?' என்னும் நூலாக வந்துள்ளன. லெமன் பாடல்கள், 'கொக்கரக்கோ', 'சிப்பாய் வரார்' என்னும் இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன. 'கொக்கரக்கோ' இந்திய அரசினர் பரிசு பெற்ற நூல்.

'லெமன்' தம் பாடல்களில் ஆங்கிலச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும் மிகவும் கலந்து எழுதுகிறார்; இவை அளவோடு அமையும்போது யாரும் குறையாக நினைப்பதில்லை; அளவை மீறும்போது, தமிழ்ப் பாடலாக அமையாமல், தமிழ் எழுத்தில் எழுதப்பட்ட பாடலாகத் திகழ்கிறது.

"ஜப்பான் பூட்ஸு ஸ்வீடன் வாட்சு
ஜாவா ஹாட்டு சைனா கோட்டு
சிப்பாய் பெல்ட்டு சிரியா சூட்டு
சிங்கள டான்ஸு ஸ்பானிஷ் பாட்டு"

"ராஜா வுக்கு ஜலதோஷம்
ராஜ்ய மெல்லாம் சந்தோஷம்
ரோஜா புஷ்பம் மலிவாச்சு
ரொம்ப பேர்க்கு எளிதாச்சு."

என்று பாடல் அமையும்போது, தமிழன்பர்கள் முகம் சுளிக்கவே செய்கின்றனர். லெமன் நல்ல தமிழில் சுவை மிகப்பாடுவதில் வல்லவர் என்பதையும் மறத்தற்கில்லை.

லெமனைப் போல எழுதுகிறவர்கள் இன்னும் சிலர் உண்டு. 'மணிப்பிரவாள நடை' தலைவிரித்தாடியதாலே ஒரு மறைமலை அடிகள் தோன்றினார். நான்கு வரியில், 16 சொற்களில், ஒரே ஒரு தமிழ்ச் சொல்லோடு வரும் பாடல்களின் எண்ணிக்கை கூடினால், 'சிறுவர் இலக்கியத்திலும் ஒரு மறை

மலையடிகள் தோன்றுவார்: 'பிற மொழிச் சொல் ஒன்று கூடக் கலக்கக் கூடாது' என்று கிளர்ச்சியும் செய்வார். என் கணிப்பு மிகை என்று எண்ணவேண்டாம். இப்போதே அதற்கான அறிகுறி பிறந்து விட்டதையும் இங்கே காட்ட விழைகிறேன்.

பெருஞ்சித்திரன் என்னும் தனித்தமிழ்க் கவிஞர் 'தமிழ்ச் சிட்டு' என்னும் தனித்தமிழ்ச் சிறுவர் ஏடு நடத்துபவர். அவர் எழுதிய சிறுவர் பாடல்கள் 'பள்ளிப் பறவைகள்' எனும் தொகுதியாக வந்துள்ளன. அதில் உள்ள பாடல்கள் யாவும் தனித் தமிழ்க் சொற்களால் ஆனவை. உடுக்கள், ஓவம், கற்படிமம், கணக்காயர், பீழை, மாந்தன், பொத்தகம் போன்ற சொற்கள் பாடலில் இடம் பெற்றுள்ளன. இவை சிறுவர்க்கு அரிய சொற்களே! எனினும், இவர் பாடல்கள் குழந்தை உள்ளத்தைக் கவர்பவையாகவே உள்ளன. பெருஞ் சித்திரன் போலத் தனித் தமிழில் சிறுவர் பாடல் எழுதும் கவிஞர் வேறு சிலரும் உண்டு.

குழந்தைக் கவிஞருள் மகளிரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. காமாட்சி சீனிவாசன், ஜ்வாலா ஜெயராம், மதிஒளி, 'கவிதைக் கதம்பம்', திலகவதி ஜகதீசன், பாக்கியம் சங்கர் (பிள்ளைப் பாட்டு) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

பெண்பாற் குழந்தைக் கவிஞர்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவர் காமாட்சி சீனிவாசன். இவருடைய பாடல்கள் 'குழந்தைப் பாடல்கள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. இப்பெயரில் பல நூல்கள் வெளிதுள்ளன: எனினும், முதல் நூல் இவ்வம்மையாருடையதே. 'நோயுற்று நலியும் சிறுமி'யைச் சித்திரிக்கும் இவர் பாடல் நம் உள்ளத்தை உருக்குகிறது.

கவியழகு முற்றிலும் பொருந்தப் பாடும் திறமை பெற்றவர் ஜ்வாலா ஜெயராம். புகழ் வாய்ந்த குழந்தைக் கவிஞர் அய்யாசாமியின் புதல்வி இவர். 'மாம்பழம்' பற்றி இவர் எழுதிய குழந்தைப் பாடல், குழந்தை எழுத்தாளர்

சங்கம் நடத்திய சிறுவர் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது. இவருடைய சிறுவர் பாடல்களை 'முதல் மலர்' என்னும் இவரது கவிதைத் தொகுதியில் காணலாம்.

இனி, அயல் நாட்டுத் தமிழ்க் குழந்தைக் கவிஞர்களைப் பற்றிக் கூற வேண்டும். அதற்குமுன், திரைப்பட யுகமாக இக்காலம் இருப்பதால், திரையுலகின் குழந்தைப் பாடல்களைப் பற்றி ஓரளவு கூற விரும்புகிறேன்.

திரைப்படத்தில், அதன் தொடக்கக் காலந்தொட்டே குழந்தைப் பாத்திரங்கள் பாடுவனவாகவோ, குழந்தைப் பாத்திரங்களை நோக்கிப் பாடுவனவாகவோ சிறுவர்பாடல்கள் இடம் பெற்றுச் சிறப்புற்றன. "கண்ணே பாப்பா, மிட்டாய் வாங்கக் கடைக்குப் போகலாம்," "சொல்லு பாப்பா, நீ சொல்லு பாப்பா, சுகம் பெற வழியொன்று சொல்லு பாப்பா" ஆகிய பழங்காலப் பாடல்களும், அம்மாவும் "நீயே, அப்பாவும் நீயே, அன்புடனே ஆதரிக்கும் தெய்வமும் நீயே," போன்ற இடைக்காலப் பாடல்களும், "சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே," "நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே—நம் நாடு எனும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே" ஆகிய அண்மைக்காலப் பாடல்களும் பிரபலமானவை. பாபநாசம் சிவன், உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம், கண்ணதாசன், வாலி போன்றோர் திரையுலகில் சிறுவர் பாடல் எழுதிய திரைக்கவிஞர்களாவர்.

என்றாலும், இதுவரை வந்துள்ள திரைப்படச் சிறுவர் பாடல்களில் குழந்தை மனத்தைக் கொள்ளை கொண்டவையும் கற்பனையின்பம் மிக்கவையுமான பாடல்கள் மூன்று. ஒன்று, 'வள்ளியின் செல்வன்' என்னும் படத்திலே இடம் பெற்ற பாடல்.

"இன்ஜின் இன்ஜின் இன்ஜின்
ஏன்பெரு மூச்சு விடறே?"

"எத்தனை பாரத்தை இழுத்துக் கொண்டு
வருகிறேன் நான் தெரியுமா?
ஆனைக்குட்டி இரண்டு அல்சேஷியன் பன்னெண்டு
மந்திரிமார்கள் நாலு, மகாராஜாக்கள் எட்டு"

என்று இஞ்சின், குழந்தையின் கேள்விக்குப் பதிலைத் தரும் "குழந்தை ரயில் பாட்டு," சிறுவர் இலக்கியத்தில் சிறப்பிடம் பெறத்தக்க அருமையான பாடல்; நடிக்கவும் பாடவுமான நல்ல பாடல்! நாடகப் பாணியிலே அமைந்த இனிய பாடல்! இதனை எழுதியவர் கொத்தமங்கலம் சுப்பு. சுப்பு இதனைத் தவிர வேறு பல பாடல்களையும் எழுதியுள்ளார்.

சிறுவர் பாடலின் முழுச் சிறப்புப் பெற்ற இரண்டாம் பாடல்,

"பூப்பூவாய் பறந்து செல்லும் பட்டுப்பூச்சி அக்கா—நீ
பளபளன்னு போட்டிருப்பது யாரு கொடுத்த சொக்கா"

என்னும் பாடல். இது 'திக்குத் தெரியாத காட்டில்' எனும் படத்தில் இடம் பெற்றது; எழுதியவர், வாலி என்னும் கவிஞர். இப்பாட்டில் வரும் "பாவாடை போல் தோகை விரித்த......மயில்" எனும் உவமை அற்புதமானது. இதுவும் சிறுவர் பாடல் தொகுதியில் இடம்பெறத்தக்க சிறப்புமிக்கது.

சிறுவர் விரும்பும் திரைப்படப் பாடல் வரிசையில் மூன்றுவது பாடல்,

"கதைகதையாம் கதைகதையாம் காரணமாம்"

எனத் தொடங்கும் பாடல். நேருவை நினைவு கூறும் இப் பாடற்காட்சியைத் திரையிலே பார்த்தவர்களும், இசைத் தட்டில் கேட்டவர்களும் கண் கலங்குவர். நேருவின் இழப்பை நினைத்துக் கண்ணீர் விடும் ரோஜா மலரைத் தஞ்சைவாணன் இசை கொஞ்ச எழுதியிருந்தார். 'பொன்னுன வாழ்வு' படத்திலே இடம் பெற்ற இப்பாடல், சிறுவர் இலக்கியத்தில் நிலைத்து நிற்கத் தக்கது; நிற்க வேண்டியது.

திரைப்படப் பாடல் என்னும் துறையிலும், சிறுவர் கவிதை, அன்று முதல் இன்று வரை தொடர்ந்து இடம் பெறுவதும், புகழ் உறுவதும் சிறுவர் கவிதை வரலாற்றில் மறவாமல் குறிக்கத்தக்க மாண்புடையது.

இலங்கை, மலேசியா ஆகிய அயல் நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தமிழின் பல துறைகளுக்குத் தொண்டு செய்ததைப் போலச் சிறுவர் இலக்கியத்திற்கும் தொண்டு செய்துள்ளனர். இவர்கள் செய்த தொண்டின் பெருமையைக் காண்போம்.

சிறுவர் இலக்கியத்திற்காக முதல் முதலில் போட்டி நடத்திப் பரிசு கொடுத்த பெருமை இலங்கையைச் சாருகிறது. K. S. அருணந்தி என்னும் கல்வி அதிகாரி, சிறுவர் பாடல்களின் சிறப்பையும், அவற்றால் விளையும் பயனையும் உணர்ந்தார். எனினும் சிறுவர் பாடல்கள் இல்லாமையால், அவற்றைப் பெருக்கப் போட்டி அமைத்தார். சிறுவர்களுக்கான பாடல்களுக்கு மூன்று பரிசுகளும், அவர்களினும் சற்று மூத்த சிறுவர்களுக்கான பாடல்களுக்கு மூன்று பரிசுகளும் தனித்தனியே வழங்கப்பட்டன. இப்பிரிவு முறையே சிறந்தது. சிறுவர் இலக்கியப் போட்டி நடத்தும் இந்திய அரசு, தமிழ் நாடு அரசு, குழந்தை எழுத்தாளர் சங்கம் ஆகியன இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பரிசுக்குரிய பாடல்களைத் தேர்ந்தெடுத்தவர் யார் தெரியுமா? விபுலானந்த அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர், பண்டிதர் வே. மகாலிங்க சிவம், கவிஞர் நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகிய பேரறிஞர்கள் ஆவர். இளங்குழந்தைகளுக்கு ஏற்ற பாடல்கள் இயற்றி மா. பீதாம்பரம், சி. அகிலேச சர்மா, க. சோமசுந்தரப் புலவர் ஆகியோர் முறையே முதல், இரண்டாம், மூன்றும் பரிசுகள் பெற்றனர். சற்று மூத்த குழந்தைகளுக்கான பாடல்கள் இயற்றி, க. சோமசுந்தரப்புலவர், மா. பீதாம்பரம், S. தங்கசாமி ஐயர் ஆகியோர் முறையே முதல், இரண்டாம், மூன்றும் பரிசுகளைப் பெற்றனர்.

பரிசு பெற்ற பாடல்களையும், போட்டிக்கு வந்த பாடல்களில் சிறந்தவற்றையும் K. S. அருணந்தி தொகுத்து, 'பிள்ளைப் பாட்டு' என்னும் பெயரில் 1935-ல் வெளியிட்டார். குழந்தைக் கவிஞர் பலருடைய சிறந்த பாடல்களின் தொகுதியாக முதலில் வந்தது இப் பிள்ளைப் பாட்டே. இதுவே சிறுவர் பாடலின் முதல் தொகை நூல். இது வெளிவந்து 35 ஆண்டுகள் கழிந்த பின்னரே 1970-ல் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட தொகை நூலான 'முத்துக்குவியல்' வெளிவந்தது. இதுபற்றி முன்பே குறிப்பிடப்பட்டது. முத்துக் குவியலுக்கு முன்னர் கவிமணி காலத்தில் கவிமணி முதலிய மூவரின் கவிதைகள் அடங்கிய 'சிறுவர் மாலை' என்னும் ஒரு தொகுப்பு வெளிவந்தது. நூலும் சிறியது, கவிஞரும் மூவரே எனவே இது ஒரு தொகை நூல் எனும் சிறப்புப் பெறாது. அண்மையில் 27 கவிஞரின் பாடலைக் கொண்ட 'மழலைச் செல்வம்' என்னும் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

'பிள்ளைப் பாட்டில்' 12 குழந்தைக் கவிஞர்கள் இயற்றிய 74 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இளம் பிள்ளைகளுக்கான முதற்பரிசு பெற்ற கவிஞர் மா. பீதாம்பரத்தின் முழுப்பாடல் இது:

"ஆல மரம் ஆல மரம்
அழ கான ஆல மரம்
பாலர் நாங்கள் ஆடல் பாடல்
பழக நல்ல ஆல மரம்."

சற்று மூத்த பிள்ளைகளுக்கு ஏற்ற பாடலை எழுதி, முதற்பரிசு பெற்ற க. சோமசுந்தரப் புலவரின் மூன்று பாடல்கள் இதில் உள்ளன.

"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"

எனத் தொடங்கும் இவரது 'ஆடிப் பிறப்பு' பாடல் மிகச் சிறந்தது.

இக்கட்டுரையில் ஓரிடத்தில் சிறுவர் பாடலின் வளர்ச்சியில் எட்டாம் நிலைபற்றிக் குறிப்பிட்டுள்ளேன். எட்டாம் நிலை, சிறுவர் கவிதை நாடகம். சிறுவர் கவிதை நாடகத்தை முதலில் எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர் இச் சோம சுந்தரப் புலவரே. நான்கு காட்சிகள் கொண்ட, 'சிறுவர் சல்லாப நாடகம்' எனும் தலைப்புப் பெற்ற கவிதை நாடகத்தை இவர் இயற்றியுள்ளார். இந்நாடகப் பாடலும் பிள்ளைப்பாட்டு நூலில் உள்ளது. அண்மையில் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் 'பொய்யே நீ போய்விடு' என்னும் சிறுவர் கவிதை நாடகத்தை நூலாக வெளியிட்டார். கவிதை நாடகம் மட்டும் தனி நூலாக வருவது, இதுவே முதன் முறையாகும். அதிலிருந்து ஒரு பகுதி கீழே கொடுத்துள்ளேன்.

**கோமளம் :** என்னடி பூங்கொடி இத்தனை மகிழ்ச்சி?

**பூங்கொடி :** உன்னைப் போலவே அழுது வடியவோ ?

**கோகிலா :** செஞ்சிலுவைச் சங்கம் செழிக்க நெஞ்சம் மகிழ்ந்து நீ தருவதென்ன?

**கோமளம் :** என்னிடம் கொடுக்க ஏதும் இல்லையே, அம்மா காசே அளிக்கவில்லை.

குழந்தை இலக்கியம் போட்டியை முதலில் நடத்தியமை, குழந்தைப்பால் தொகைநூலை முதலில் வெளியிட்டமை, சிறுவர் கவிதை நாடகத்தை முதலில் எழுதியமை ஆகிய முப்பெறும் முதற்சிறப்புகளை இலங்கை பெறுகிறது.

அண்மைக் காலத்தில் வசன கவிதை, புதுக் கவிதை என்னும் பெயரில் செல்வாக்குப் பெற்று வருகிறது. இப் புதுக் கவிதைத் தொகுதிகள் பல பெரியவர்களுக்காக வெளிவந்துள்ளன. இப்புதுக் கவிதை, சிறுவர் இலக்கியத்திலும் இடம் பெற்றுவிட்டது. புதுக் கவிதையே, சிறுவர் பாடல் வளர்ச்சியில் பதினொன்றும் நிலையாக அமைகிறது.

சிறுவர் பாடலுக்கு ஓசையின்பம் இன்றியமையாதது. புதுக் கவிதை, ஓசையைக்கூடப் பொருட்படுத்தாமல்

எழுதப் படுவதுதான். என்றாலும், சிறுவர்க்குப் புதுக்கவிதை எழுத முனைபவரும் இந்த ஓசையின்பத்தை விட்டுவிடவில்லை என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. ஷண்முக சுப்பையாவின் 25 சிறுவர் புதுக் கவிதைகள் 'கண்ணன் என் தம்பி' (1972) என்னும் நூலாக வந்துள்ளன. இதுவே சிறுவர் புதுக் கவிதையின் முதல் தொகுதி என்பதும் சொல்லாமல் விளங்கும்.

''கண்ணன் என் தம்பி
காலையில் எழுவான்;
ஓவென அழுவான்.
அப்பா எழுந்து
ஏனெனக் கேட்பார்.
அம்மா வந்து
அப்பம் கொடுப்பாள்,
அப்பமும் தின்று
கையையும் கடித்து
அழுவான் மீண்டும்
கண்ணன் என் தம்பி''

என்பது, நூலின் தலைப்புக்குரிய சிறுவர் புதுக் கவிதை. அரிய கருத்துக்களை மிக எளிய முறையில் கூறும் வித்தியாசம், செடி, அழகு ஆகிய பாடல்களும் இந்நூலில் உள்ளன.

இலங்கைக் குழந்தைக் கவிஞர்களில், எம். வி. எம். ஸுபைர் (மலரும் மணம்), கோகுதா (பாலர் பாடல்), சாரணா கையூம் (குழந்தை இலக்கியம்), நா. மகேசன் (பாட்டும் கதையும்), திமிலைத்துமிலன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்.

மலேசியக் குழந்தைக் கவிஞர்களில் சி. வேலுசாமி சிறப்பு மிக்கவர். 'தேனீயைப் பார்', 'பாட்டுப் பாடலாம்' ஆகியவை இவர் தம் சிறுவர் கவிதைத் தொகுதிகள். இவர் எழுதிய 'பூங்காராயா' எனும் மலேசிய மலரை அறிமுகப்படுத்தும் பாடலும், மலாய்ச் சொற்கள் சிலவற்றுக்குப் பொருள் கூறும்

பாடல்களும், 'இளந்தளிர்' எனும் நூலளித்த முரசு நெடுமாறன் எனும் மலேசியக் குழந்தைக் கவிஞர் ரப்பர் மரத்தைப் பற்றியும், டுரியான் பழத்தைப் பற்றியும் பாடும் பாடல்களும் தமிழ்ச் சிறுவர்களுக்குப் புதுமையானவை. மலேசியாவில் பணிபுரியச் சென்று, அங்கே தற்போது தங்கி 'மலரும் மலர்' என்னும் தம் சிறுவர் பாடல் தொகுதியை வெளியிட்டுள்ள டாக்டர் இரா. தண்டாயுதத்தையும் மலேசியக் குழந்தைக் கவிஞர் குழுவில் சேர்த்துக்கொள்ளலாம்.

சிறுவர் இலக்கியப் போட்டிகளை இந்திய அரசும் தமிழ் நாடு அரசும் நடத்துகின்றன. இலக்கியத்தின் எல்லாத் துறைக்கும் சேர்த்து நடத்தும் இப்போட்டிகளில் கவிதை, பரிசு பெறுவது அரிது என்று நினைப்போம். ஆனால், இந்திய அரசு இதுவரை (1980) 25 நூல்களுக்குப் பரிசளித்துள்ளது. இவற்றுள் கவிதை நூல்கள் ஏழு. தமிழ்நாடு அரசு இதுவரை 34 நூல்களுக்குப் பரிசளித்துள்ளது. இவற்றுள் கவிதை நூல்கள் 5. பரிசு பெற்ற கவிதை நூல்கள் கட்டுரையில் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன. அங்கே குறிப்பிடப்படாத பரிசு பெற்ற கவிதை நூல்கள்; பு.ஆ. முத்துக்கிருஷ்ணன் இயற்றிய "குழந்தைப் பாக்கள்", மீனவனின் "கொஞ்சும் குழந்தை", பூவண்ணன் இயற்றிய "பாட்டுத் தோட்டம்" ஆகியவையாகும். கவிதைக்காகக் குழந்தை எழுத்தாளர் சங்கம் அளித்த ஏ. வி. எம். தங்கப் பதக்கத்தை எ. ந. கணபதியின் "பிஞ்சு நெஞ்சம்" பி. வி. கிரியின் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" ஆகிய இரண்டும் பெற்றன. வெள்ளிப் பதக்கத்தை அழகணரின் "பட்டம்" பொன்ராசனின் "பாப்பாப் பாட்டு" ஆகிய இரண்டும் பெற்றன. மயிலை "முத்தெழில்'னும் கவிதைக்காக இத் தங்கப்பதக்கப் பரிசு பெற்றுள்ளார்.

இதுவரை வெளிவந்துள்ள குழந்தைப் பாடல் நூல்கள் சுமார் 300 இருக்கும். இடமின்மையால் அவை எல்லா

வற்றைப் பற்றியும் குறிப்பிட இயலவில்லை. எனினும், தனித் தன்மை பெற்ற சில பாடல் நூல்களைக் கீழே காணலாம்.

நா. ரா. நாச்சியப்பனின் 'சான்றோர்' எனும் நூல் 28 சான்றோர்களைப் பற்றிய பாடல்களைக் கொண்டது. இவரது 'சிறுவர் பாட்டு' 12 உயிர் எழுத்துக்களையும், ஆய்த எழுத்தையும், 'க' முதல் 'ன' வரையான 18 உயிர்மெய் யெழுத்தையும் விளக்கும் 31 தமிழ்ச் சொற்களைப் பற்றிய 31 பாடல்களையும், எண்களைப் பற்றிய ஒரு பாடலையும் கொண்டது.

ராஜம் சீதாராமனின் 'பாலர் இயற்கைப் பாடல்' எனும் நூல் அட்டையிலும் உள்ளேயும் புகைப்படங்களையே கொண்ட நூல். வே. இரா. சிவஞான வள்ளலின் 'திருக்குறள் பாட்டு' நூல், குறள் பாக்களை விளக்கும் பாடல்களைக் கொண்டது. இவரது 'குழந்தைகளுக்கு அண்ணா', அறிஞர் அண்ணாவின் புகழைச் சொல்லும் பாடல்களைக் கொண்டது. அரு. சோமசுந்தரத்தின் 'சிறுவர்க்கு விஞ்ஞானம்', அறிவியல் சிறப்புகள், கண்டுபிடிப்புகள் பற்றிய பாடல்களை மட்டும் கொண்டது. பிறையணிவோனின் 'அறிவுக் கேள்விகள்' எனும் நூல், 177 விடுவிடுக்களைப் (Quiz) பாடல்களாகத் தருகிறது. பு. ஆ. முத்துக்கிருஷ்ணனின் 'சிறுவர் உலகம்', கொச்சிச் சிறுவன், வங்காளச் சிறுவன், நீக்ரோச் சிறுவன், பாலஸ்தீனச் சிறுமி முதலிய இருபது உள்நாட்டு—வெளி நாட்டுச் சிறுவர் சிறுமியரைப் பற்றிக் கூறும் நில நூல் பாடல் களைக் கொண்டது. கே. எஸ். லெட்சுமணனின் 'பாப்பா வுக்கு மிருகங்கள்' 'பாப்பாவுக்குப் பறவைகள்' ஆகிய நூல்கள், முறையே மிருகங்களைப் பற்றியும் பறவைகளைப் பற்றியும் பாடல்களைக் கொண்டவை. கோசுதாவின் 'பாலர் பாடல்' நூல் ஷேக்ஸ்பியர், புஷ்கின், இங்கர்சால் போன்ற 55 மேனாட்டு அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறது. மதி ஒளியின் 'இளந்தளிர்கள்' நூல் ஆலிலை, வேப்பிலை முதலிய இலைகளைப் பற்றிய

பாடல்களைக் கொண்டது. நூலும் இலேவடிவத்தில் அமைந்துள்ளது. அ. அகமது பஷீரின் 'சிரி குழந்தாய் சிரி' நூலில் உள்ள படங்கள் யாவும் சின்னக் குழந்தைகள் வரைந்தவையே. இந்நூலின் பாடல்கள் சீர்திருத்த எழுத்து முறை கொண்டவை.

தனித் தன்மை பெற்ற சில பாடல் நூல்களை ஆங்காங்கே முன்னரே குறிப்பிட்டுள்ளதையும் நினைவு கொள்க.

புதிய பாடற் சந்தங்களையும் புதிய பாடற் பொருள் களையும் புகுத்திப் பாடல் எழுதுவதில் தம்பி சீனிவாசன் (சிவப்பு ரோஜாப்பூ), புவனை கலைச் செழியன் (பாட்டுப் புதையல்) திருச்சிவாசுதேவன் (பட்டுக்குடை) சொ. அடைக்கலம், நெற்குப்பை இராம சுப்ரமணியம், அரசுதாசன் என்னும் பெயரில் கவிதை எழுதும் பூவை அமுதன் (சிறுவர் பாடல்கள்) மகிழ்ச்சிக் கண்ணன் (எங்கள் கையிலே), ஈரோடு ஆற்றலரசு, இளையவன், மனசை ப.கீரன், செல்ல கணபதி(வண்டுகளே உங்களைத்தான்), ரா. பொன் ராசன் (பாப்பாப் பாட்டு) இன்ப வண்ணன் (பொம்மை வீடு) அழகனார் (கொக்கரக்கோ) சே. கனகசபை (நாளைய உலகம்) வ. சிவசங்கரன் (பாலர் பாமாலை) தமிழ்முடி (பிள்ளைக்கனி யமுது) திருச்சி பாரதன் (பாலர் பூங்கா) நாக. முத்தையா (சிறுவர் இலக்கியம்), மு. சிவம் முதலியோர் குறிக்கத் தக்கவர்.

இங்கு சிறுவர் பாடல்களின் யாப்பு முறையை ஓரளவு கூறுவது பொருந்தும். பெரியவர்கள் கவிதையில் உள்ள கண்ணி, சிந்து, விருத்தம் ஆகியவகைகளிலேயே சிறுவர் பாடல்கள் அமைகின்றன. சிறுவர் பாடலில் தளைக்கு இட மில்லை. ஒவ்வோர் அடியிலும் அளவொத்த சீர்கள் அமைய வேண்டும் என்பதே சிறுவர் பாடலின் பொதுவான யாப்பு முறை. வரிக்கு மூன்று சீர் கொண்ட நான்கு அடிகளால் வரிகளால் இயற்றப்படும் பாவகையும், வரிக்கு நான்கு சீர் கொண்ட நான்கு அடிகளால் இயற்றப்படும் பாவகையுமே குழந்தைக் கவிஞர்கள் மிகுதியாகப் பயன்படுத்துபவை.

பெரியோர்க்கு எழுதி, பிறகு சிறுவர்க்கு எழுத முனைகிறவர்களே புதுப் புதுச் சந்தங்களையும், புதுப்புது விருத்தங்களையும் புகுத்துகின்றனர். நேரடியாகக் குழந்தைக் கவிஞர்களாகிறவர்கள் பெரும்பாலும் கவிமணி, வள்ளியப்பா பாடல்களைப் பின்பற்றி எழுதிவிடுகின்றனர். சிறுவர் பாடல்களின் யாப்பு முறை தனியாக ஆயத்தக்கது.

தற்போது 300 சிறுவர் பாடல்நூல்கள் உள்ளன. இச் சிறுவர் பாடல்நூல்களை வெளியிடும் கவிஞர்கள் ஏற்கனவே வந்த தலைப்புகளில் நூல்களை வெளியிட்டுவிடுகிறார்கள். குழந்தைப் பாடல்கள் என்னும் ஒரே தலைப்பில் காமாட்சி சீனிவாசன், நா. க.முத்தையா, டாக்டர் மா. இராசமாணிக்கனார், சி.குருசாமி ஆகிய நால்வர் வெளியிட்டுள்ளனர். காமாட்சி சீனிவாசன் நூல் முந்தியது. 'சிறுவர் சோலை' என்னும் பெயரில் இன்பவண்ணன் ஒரு நூல் வெளியிட்டார். பிறகு இதே பெயரில் பரிதி வெங்கடேசன் ஒரு நூலைப் வெளியிட்டுள்ளார். 'பள்ளிப்பறவைகள்' என்னும் பெயரில் முதலில் பெருஞ்சித்திரனும் பிறகு ஆலந்தூர் கோ. மோகனரங்கனும் நூல் வெளியிட்டுள்ளனர். 'நல்ல நல்லபாட்டு, என்னும் ஒரே பெயரில் முதலில் பெ.தூரனும், பிறகு அரி. இல. தமிழடியானும் நூல் வெளியிட்டுள்ளனர். 'பாடு பாப்பா' என்னும் தலைப்பில் முன்னே தணிகை உலகநாதனும் பின்னே அழ. கிருஷ்ணமூர்த்தி (அழகி)யும் வெளியிட்டுள்ளனர். 'கொக்கரக்கோ' என்னும் பெயரில் அழகனார் நூல்வெளியிட்டார். அதற்குப்பல ஆண்டுகள் கழித்து லெமன் அதே பெயரில் நூலை வெளியிட்டார்.

இவர்கள் வேண்டுமென்றே இப்படி வெளியிடவில்லை. தாம் தேர்ந்தெடுத்தபெயரில் முன்னரே ஒரு நூல்வெளிவந்திருப்பதை அறியாமலே வெளியிடுகின்றனர். இனிமேல் கவிதைத்தொகுதி வெளியிடுவோர், தாம் தேர்ந்தெடுத்த தலைப்பில் முன்னரே நூல் வந்திருக்கிறதா என்பதை சிறுவர் இலக்கியம் வல்லவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு பின்னர் பெயரிடுவது நல்லது.

சிறுவர் கவிதை, பெரியோர் கவிதைக்கு எந்த வகையிலும் தாழ்ந்ததன்று. கபிலரையும் கம்பரையும் எத்தனை கோணத்தில் அலசுகிறோம்! எத்தனை அகலமாக ஆழமாக ஆய்கிறோம்! அதைப் போலவே, கவிமணியின் குழந்தைச் செல்வத்தை, மயிலை சிவமுத்துவின் முத்துப் பாடலை, பாரதிதாசனின் 'இளைஞர் இலக்கியத்'தை, வள்ளியப்பாவின் 'மலரும் உள்ளத்'தைஅய்யாசாமியின்'பால ராமாயணத்தை' இன்னும் உள்ள பல்வேறு சிறுவர் பாடல் நூல்களை அலசலாம்; அகலமாக, ஆழமாக ஆயலாம்! இலக்கியத் திறனாய்வுக்குச் சிறுவர் கவிதை நூல்கள் ஏற்ற களனாக அமையும்!

கான்ஸ்டான்டின் சிமோனோ. (Konstantin Simonov) என்னும் ரஷ்ய எழுத்தாளர், அக்னியா பார்ட்டோ (Agnia Barto) என்னும் சோவியத் குழந்தைக் கவிஞரான அம்மையாரைப் பற்றி எழுதும்போது, "அம்மையாரின் சிறுவர் கவிதைகளைக் குழந்தைகளாகக் குழந்தைக் கண்ணோட்டத்தில் படித்தவர்கள் இன்று பெரியவர்களாக—பெற்றோர்களாக பெற்றோர் கண்ணோட்டத்தில் படித்து மகிழ்கிறார்கள்" என்று கூறிவிட்டு, "ஓர் உண்மையான குழந்தைப்பாடல்' பெரியவர்களுக்கும் உகந்தபாடலாகிறது" ("Any real poetry for children is at the same time poetry for adults"—soviet Literature, December, 1970) என்று கூறுகிறார். ஆம்! சிறுவர்கவிதை, பெரியோர் படிப்பதற்கும் பாடுவதற்கும் ஆய்வதற்கும் ஏற்றது! அதனால், கவிதையின் எந்தக் கோணத்தைப் பற்றி எழுதுபவர்களும் பேசுபவர்களும் சிறுவர் கவிதையையும் சேர்த்து எழுதவேண்டும், பேசவேண்டும்! 'கவிதையில் உவமை' 'கவிதையில் இயற்கை' என்பன போன்ற தலைப்பில் ஆய்ந்தால், சிறுவர் கவிதையில் அமைந்த உவமைகளையும் இயற்கையையும் சேர்த்தே ஆயவேண்டும். சிறுவர் கவிதை, சொல்லால் எளிமையானது. சிறப்பால் பெரியோர் கவிதைக்கு இணையானது!

சாகித்ய அக்காதெமி பரிசுக்கான நூல்களைத் தொகுத்து ஆயும்போது, சிறுவர் நூல்களையும் சேர்க்க வேண்டும். ஒரு வேளை, சிறுவர் பாடல் தொகுதி, பெரியோர் பாடல் தொகுதியோடு போட்டியிட்டுப் பரிசு பெற்றாலும் பெற லாமே!

சிறுவர் கவிதைத் திறனாய்வு பற்றித் தனி நூல்கள் பல வரவேண்டும். 'குழந்தைக் கவிஞர்கள் மனத்தைப் பறி கொடுப்பது விலங்குகளிடமா பறவைகளிடமா?' 'மயிலை சிவமுத்துவின் பாடலில் விஞ்சி நிற்பது கருத்துச் சிறப்பா, காட்சிச் சிறப்பா?' என்பன போன்ற தலைப்புகளில் பட்டி மன்றங்கள் நடைபெற வேண்டும். இவ்வாறு நடக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

4

# சிறுவர் கதைகள்

சிறுவர்கள் பேசக் கற்றுக்கொண்டவுடனே, "பாட்டி, எனக்கு ஒரு கதை சொல்லு பாட்டி" என்று ஆசையோடு கேட்கிறார்கள்.

பாட்டி, "ஒரு காலத்தில் ஒரே ஒரு இளவரசன் இருந்தான். அவனுடைய நண்பன், மந்திரியின் மகன்......" என்று தொடங்குகிறாள்.

ஆனால், பாட்டி பள்ளி ஆசிரியரால் தடைசெய்யப் படுகிறாள். ஆசிரியர், "மூந்நான்கு பன்னிரண்டு" என்று பெருக்கல் வாய்பாடு கூறுகிறார்.

சிறுவர்களின் நலன் விரும்பும் அவர்கள், "மூந்நான்கு பன்னிரண்டு; இது உண்மை. ஆனால் அந்த இளவரசன் கற்பனை; உண்மை அன்று. ஆகையால்..." என்று சிறுவர்களின் செவிகளைத் துளைக்கின்றனர்.

இது சிறுவரைக் கவர்வதில்லை. ஏனெனில், அவர் உள்ளம், பூதத்தைக் கொல்லும் இளவரசன் உள்ள—தேசப் படத்தில் இடம்பெறாத—இடத்தை நோக்கிப் பறக்கிறது, எந்தக் கணிதத்திற்கும் அந்த இடத்திற்குப் பறந்து செல்லும் சிறகுகள் இல்லை.

நலன் விரும்பிகளோ, "கெட்டுவிட்டது; முழுவதும் கெட்டுவிட்டது, இதைப் போக்க ஒரே வழி பிரம்புதான்" என்று தலையை ஆட்டி ஆட்டிக் கூறுகின்றனர்.

பாட்டி, பள்ளி ஆசிரியரால் தடுத்து நிறுத்தப்பட்டு மௌனமாக்கப்பட்டாள். ஆனால் ஒரு கதை சொல்பவர் இடத்தை மற்றொருவர் நிரப்புகின்றார். அவர்களுக்கு முடிவு என்பதே இல்லை. நலன் விரும்பிகள், "அந்தக் கதைகள், வரலாற்றில் இடம் பெறவில்லை. அவை பொய்யானவை" என்று வீணாக மீண்டும் கூறுகின்றனர்.

சிறுவரைத் திருத்தும் இந்த முயற்சி தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கும், உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்குமாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால், "ஒரு கதை சொல்லு" என்னும் சிறுவரின் வேண்டுதலை எதுவும் தடுத்துவிட முடியாது.

மேலே கண்டது கவியரசர் தாகூரின் கருத்துரை. சிறுவரையும் தின்பண்டத்தையும் பிரித்துவிடலாம். சிறுவரையும் விளையாட்டையும் பிரித்துவிடலாம் ஆனால் சிறுவரையும் கதையையும் பிரிக்கவே முடியாது.

பள்ளிப் புத்தகத்தைத் தொட்டுப் பார்க்கும் முன்பே சிறுவர்கள் கதைகளை விரும்புகிறார்கள். அவர்தம் பிஞ்சு உள்ளங்கள் கதாசிரியர்கள் அமைக்கும் கற்பனைக் கோட்டையில் நுழைந்து வீரச் செயல்களைக் கண்டு வியக்கும் இயல்பு படைத்தவை. அதனால்தான் ஆசிரியர்கள் பெறாத மதிப்பை, கதை சொல்லும் பாட்டிகள் பெறுகின்றனர்.

கதைகள் சிறுவர்களின் பொழுது போக்கிற்கு மட்டும் பயன்படுவதில்லை! இளம் வயதில் பளிங்கு உள்ளங்களில் கதைகளில்உள்ள வீரமும் தியாகமும் அன்பும் அறிவும் படிகின்றன. சிவாஜி எவ்வாறு பெரும் வீரனாக விளங்கினார்? அதற்கு முக்கிய காரணம் சின்ன வயதில் அன்னை ஜீஜீபாய் சொன்ன வீரக் கதைகள்தாம். அந்தக் கதைகள் வீரம்

என்னும் விதையை சிவாஜியின் உள்ளத்தில் விதைத்தன. அது விருட்சமாகி மொகலாயப் பேரரசை வீழ்த்தியது.

சிறுவர்கள் கேட்கும் கதைகள் அவர்களை மகிழ்விக்கின்றன; அவர்களுடைய பிஞ்சு உள்ளங்களில் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்த எண்ணங்களை விதைக்கின்றன; அவர்களின் கற்பனையைத் தூண்டிவிடுகின்றன; எவரும் அணுகாத கற்பனை உலகிற்குச் சிறகடித்துப் பறந்து செல்லச் செய்கின்றன.

இலக்கியத்தின் பல வடிவுகளில் கதை சிறப்பு வாய்ந்ததாகும். கதை எதையும் எளிதில் புரியவைக்கும்; அதை அறிந்துகொள்ள நுண்ணறிவு தேவையில்லை.

''பொய் சொல்லக்கூடாது. உண்மையே பேசவேண்டும்'' என்ற நீதியைக் கட்டுரையாக்கித் தந்தால் சிறுவர்க்குக் கசக்கும். ஆனால், அரிச்சந்திரனின் கதையைக் கூறிப் பாருங்கள்; ''இதனால் பொய் சொல்லக்கூடாது என்பதும், உண்மையே பேசவேண்டும் என்பதும் புலனாகின்றன'' என்ற நீதியைப் புலப்படுத்தும் 'முடிவுரை' இல்லாமலே சொல்லிப் பாருங்கள். அந்தக் கதையுடன் 'உண்மை பேசுதலே சிறந்தது' என்ற நீதியும் கலந்து சிறுவரின் உள்ளத்தில் தங்கி விடுகிறது.

கதை என்ற உடனே எந்தச் சிறுவரும் உற்சாகத்துடன் கேட்கத் தயாராவதை எங்கும் காணலாம். சிறுவர்கள் ஒரு புறம் இருக்கட்டும், கல்லூரி மாணவர்கள்கூட என்றுவந்து ஆசிரியர், 'ஒரு கதை சொல்லப்போகிறேன்' என்றதும் ஆவலோடு நிமிர்ந்து உட்கார்ந்து அக்கறையோடு கேட்கத் தயாராகி விடுகின்றனர்.

சிறுவர் இலக்கியத்தில் கதை தனிச் சிறப்பைப் பெற்றுவிட்டது; இன்று நேற்றல்ல; பண்டைக்காலம் முதலே.

சிறுவர் கதையைப் பற்றி முதலில் நமக்குக் கிடைக்கும் குறிப்புத் தொல்காப்பியம் கூறும் 'பொருள் மரபில்லாப்

பொய்ம் மொழி' என்னும் கற்பனைக்கதை. இது வாய்மொழி யிலக்கியமாகத் திகழ்ந்தது. இதுவே பின்னாளில் நாடோடிக் கதைகள் என வழங்கப்பட்டன. நாடோடிக் கதைகளைப் பெரும்பாலும் பாட்டிகளே தம் பேரக் குழந்தைகளுக்குச் சொல்லி வந்தனர். அதனால் இவை 'பாட்டிக்கதைகள்' எனவும் வழங்கின.

நாடோடிக்கதைகளைப் போலவே இராமாயணம், பாரதம் ஆகிய இருபெரும் இதிகாசங்களின் கதைகளைச் சிறுவர்க்குக் கூறினர். பிறகு பஞ்சதந்திரக் கதைகள், புத்தர் ஜாதகக் கதைகள், விக்கிரமாதித்தியன் கதைகள், தெனாலிராமன் கதைகள், மரியாதை ராமன் கதைகள் முதலானவற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லி மகிழ்ந்தனர்.

அச்சிலே வந்த முதல் சிறுவர் கதை நூல் என்னும் பெருமை 'பரமார்த்த குரு கதை'க்கு உண்டு. கி பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியவரான பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் (கி.பி. 1680-1747) இதை எழுதி வெளியிட்டார். இவர் இக்கதையைச் சிறுவர்களை நினைத்து எழுதவில்லை. ஆயினும் இதில் வரும் மட்டி, மடையன், பேதை முதலிய மண்டுச் சீடர்களின் அறிவற்ற செயல்களும், அவர்களுக்குப் பொருத்தமான ஆசிரியராக விளங்கும் பரமார்த்த குருவின் பேதைமைச் செயல்களும் படிப்போரைக் குலுங்க நகைக்க வைக்கும். இதன் நடையும் ஓரளவு எளிமை யாக இருந்தமையால் பெரியோர்க்காக எழுதப்பட்ட பரமார்த்த குருகதை, சிறுவர் கதை நூலாக நிலைத்து விட்டது. வித்துவான் பண்டார நம்பியார், "அந்நூல் ஒன்றே (பரமார்த்தகுரு கதை) பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரையில் தமிழ்நாட்டுச் சிறுவர்கள் படித்து இன்புறத் தக்க நூலாய் இருந்தது" என்று கூறுகிறார். பலர் வீரமா முனிவரின் தமிழ்நடையை மாற்றி இக்காலச் சிறுவர்க்கேற்ற நடையில் இக்கதையை வெளியிட்டுள்ளனர். இது அன்றும் இன்றும் என்றும் சிறுவர் மனத்தைக் கவரும் நூலாக விளங்கும் பெருமை பெற்றுள்ளது.

டாக்டர் ஜி.யு. போப்பும், டாக்டர் எல்.டி. பார்னெட்டும் தொகுத்தளித்த, பிரிட்டீஷ் பொருட்காட்சிச் சாலையிலுள்ள தமிழ்ப் புத்தகங்களின் பட்டியல் 1900 ஆம் ஆண்டுக்கு முற் பட்ட அச்சிட்ட நூல்களின் விவரங்களைத் தருகிறது[1]. இப் பட்டியல் 'தமிழ் பாஷையிற் சிறுபிள்ளைக் கதை' என்னும் நூலைக் குறிப்பிடுகிறது. இதை பிரோன்ஸ்வெல்ட் (Bronsveld) என்பவர் தொகுத்து வெளியிட்டுள்ளார். இது 1788 ஆம் ஆண்டு கொழும்பு நகரில் வெளியிடப்பட்ட நூல். இந்நூல் சிறுவர்க்கான தமிழ்க் கதைகளின் தொகுப்பு என்பது தெரிகிறது. இந்நூல் ஏற்கனவே வழங்கிய கதை களைத் தொகுத்தளித்தது. 'பரமார்த்த குருகதை'யோ வீரமாமுனிவர் சொந்தமாக எழுதியது. அதனால் அக்கதை நூலின் சிறப்பு மிகுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் 'கதா மஞ்சரி' என்ற நூலைத் தாண்டவராய முதலியார் தொகுத்து வெளி யிட்டார். இது 54 பக்கங்களைக் கொண்டது விலை மூன்றணா. 'கதா சிந்தாமணி' என்னும் மற்றொரு நூலும் அதே காலத்தில் வெளிவந்துள்ளது. இதன் விலை இரண்டரை அணா. இது 99 பக்கங்களைக் கொண்டது. இவ்விவரங்களை டாக்டர் ஜான் மூர்டாக் தாம் தொகுத்த தமிழ் நூற் பட்டியலில் தருகிறார். அதோடு, கதா சிந்தாமணி நல்ல நடையில் எழுதப்பட்ட தென்றும், சாலமன் அரசன் தீர்ப் பளிக்கிற முறையில் நுண்ணறிவால் வழங்கும் முடிவுகளைக் கொண்ட கதைகள் உள்ளன என்றும், ராயர் அப்பாஜி கதைகள் உள்ளன என்றும் கூறி, எடுத்துக்காட்டுக்கு ஒரு கதையையும் தருகிறார். இவையிரண்டும் சிறுவர்க்கான கதைநூல் களாகவே தோன்றுகின்றன. இதே நூற்றாண்டில் நாலு மந்திரி கதை, பன்னிரண்டு மந்திரி கதை என்று இருநூல்கள்

---

1 Tamil Printed books up to 1900 A. D. Tound in British Museum catalogue-compiled by Dr L. D. Barnett and Dr. G. U. Pope.

வந்துள்ளன. 1853ல், ஈசாப்புக் கதைகளை ஏ. திருவேங்கடம் பிள்ளை மொழி பெயர்த்து 'கட்டுக்கதைகள்' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இதே நூல் கூவமாநகரம் ராஜா சுப்பராய முதலியாரால் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டது.

பழம் பெரும் நாவலாசிரியர்களில் ஒருவரான பண்ருட்டி சி. கோவிந்தசாமி ராஜா (1870-1918) சிறுவர்களிடம் அன்பும் அக்கறையும் கொண்டவர். சிறுவரைத் திருத்திப் பண்புள்ள வராக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு பள்ளிக்கூடங் களில் சென்று சிறுவர்க்குச் சொற்பொழிவு ஆற்றினர். சிறுவர்களைத் திருத்துவதற்காக "அன்பான பொற்சபை" என்னும் சபையைப் பலவூர்களில் நிறுவினர். இச்சபையின் குறிக்கோள், "சிறுவர் உண்மை பேச வேண்டும்; பெரியோ ரிடம் அன்பு செலுத்த வேண்டும்; நாடோறும் ஒரு நற் காரியம் செய்ய வேண்டும்" என்பதாம். இவர் சிறுவர் களுக்காகப் பல சிறுகதைகளை எழுதி, அப்போது தமிழ் நாட்டில் வெளிவந்த சிறுவர் பத்திரிக்கைகளில் வெளியிட் டார். இக்கதைகளும், அன்பான பொற் சபையின் குறிக் கோளை வற்புறுத்துவதாகவே அமைந்திருக்கும் என்பதில் ஐய மேது? கோவிந்தசாமி ராஜா தாம் எழுதிய சிறுவர் கதை களைத் தொகுத்து, 1889-இல் "சிறுவர்க்கான கதைகள்" என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இவர் சிறுவர்க்கும் சிறுவரிலக்கியத்திற்கும் செய்த சேவை இன்னும் போற்றிப் புகழத் தக்கது.[1]

கோவிந்தசாமி ராஜாவைப் போல, மற்றொரு பிரபல நாவலாசிரியரான அ. மாதவய்யா அவர்களும் சிறுவர்க்கான கதைகள் எழுதினர். 1917-ல் வெளிவந்த 'தமிழர் நேசன்' பத்திரிகையில் மாதவய்யாவின் சிறுவர்கதைகள் வெளி வந்தன. இவை பின்னர் 'பால விநோதக்கதைகள்' என்னும்

---

1 பார்க்க : ப. சி. கோவிந்தசாமி ராஜா (ப. கோ. குலசேகரம் எழுதிய கட்டுரை) கலைமகள், நவம்பர் 1979.

தலைப்பில் நூலாக வந்தன. இவை தமிழ் நாட்டின் நாடோடிக் கதைகள் எனத் தெரிகிறது.

1823ல் பிறந்தவர் வள்ளலார் எனச் சிறப்பிக்கப்படும் இராமலிங்க அடிகள். இவர் வரலாற்றில் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

"காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார் என்பவர் சுவாமிகளின் (இராமலிங்க அடிகள்) ஆற்றலை நன்கு அறிந்தவராதலால், 'அவர் திருவாக்கால் ஓர் உரை நடை வெளிவர வேண்டும்' என்னும் எண்ணங்கொண்டு, சிறுவர்கள் படித்தற்கு, அரியதொரு நூலை ஆக்கிக் கொடுக்க வேண்டுமென வேண்ட, அவரின் வேண்டுகோட் கிணங்கி, நம் அருட்பிள்ளையாரும், பெரியபுராணத்துள்ள மனுவென்னும் வேந்தனுடைய அருமைச் சரித்திரத்தை 'மனுமுறைகண்ட வாசகம்' என்னும் பெயரோடு[1] எழுதினாராம்.

'மனுமுறை கண்ட வாசகம்' மிக நீண்ட சொற்றொடர் களோடு கூடியது. இது சிறுவர்க்கேற்ற நூலாகத் தெரியவில்லை. எனினும் சிற்சில பகுதிகள் சிறிய வாக்கியங்களால் எளிய நடையில் அமைந்துள்ளது. எடுத்துக் காட்டுக்காகப் பின்வரும் பகுதியைக் காண்க.

"இந்தக் கன்று எங்கே பிறந்ததோ? எங்கே வளர்ந்ததோ! எங்கே போக எண்ணியதோ! இங்கே வந்து இறக்க நேரிட்டதே! சுந்தரமுள்ள இக்கன்று இறந்ததைக் கண்ட எனக்கே இவ்வளவு துக்கமுண்டாயிருக்கின்றதே! இதை ஈன்ற தாய்ப்பசு கண்டால் ஏதாய் முடியுமோ! இச்சேதியை என் பிதாவானவர் கேட்பாரானால் ஏதாய் முடியுமோ!"

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, இதே மனுநீதிச் சோழனின் வரலாற்றைக் கூறும் "தேர் கொண்ட வாசகம்" என்னும் வேறொரு நூலும் வெளிவந்துள்ளது.

---

1 திருவருட்பா ஐந்து திருமுறைகள். (இரண்டாம் பதிப்பு) அருட்பெருஞ்சோதி பதிப்பு—பார்க்க பக்கம் 20.

மனுநீதிச் சோழனின் கதையைப் போலவே, பிரகலாதன், இராமதாசர், ஞானசம்பந்தர் போன்ற புராணப் பெரு மக்களின் வரலாற்றைக் கதைவடிவில் எழுதிப் பல புலவர்கள் வெளியிட்டனர். இவை பத்தொன்பதாம் நூற்றுண்டு நூல்கள். சிறுவர் பத்திரிகைகள் தோன்றிய பிறகே சிறுவர் கதைகள் செழித்து வளர்ந்தன. அவற்றை சிறுகதை நாவல், சித்திரக்கதை என்று முப்பிரிவுகளாகப் பிரித்து இம் பகுதியில் ஆய்வோம்.

## சிறுவர் சிறுகதைகள்

சிறுவர்க்கான பழைய சிறுகதைகள் நாடோடிக் கதை களே. 'நானே படிக்கும் புத்தகம்' என்பது பாடப்புத்தகத்திற் காக வெளியிடப்பட்டதுதான். என்றாலும் சுவையான நாடோடிக் கதைகளைக் கொண்ட நூல். சைவ சித்தாந்தக் கழகம் இத்தகைய கதைகளைத் தொகுத்து, 'கழகக் கதைக் கொத்து' 'இன்சுவைக் கதைகள்' முதலிய தலைப்புகளில் பல தொகுதிகளாக வெளியிட்டது. 'அணில்' பத்திரிகை நடத் திய வை. கோவிந்தன் நாடோடிக் கதைகளைத் தொகுத்து 'தமிழ் நாட்டுப் பழங்கதைகள்' என்னும் பெயரில் வெளியிட் டார். ஈசாப்புக் கதைகளைப் பலர் பல்வேறு தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். தி. ஜ. ர. வின் 'ரோஜாப்பெண்' தம்பி சீனிவாசனின் 'எட்டுத் திக்குச் கதைகள்' ராஜம் தொகுத்த 'புத்தர் ஜாதகக் கதைகள்', கல்வி கோபால கிருஷ்ணனின் 'பாலர் கதைக் களஞ்சியம்' வாண்டுமாமா வின் 'உலகக் கதைகள்' ஆகியன உள்நாட்டு—வெளிநாட்டு நாடோடிக் கதைத் தொகுதிகளில் சில.

பெ. தூரன், வாண்டுமாமா ஆகியோர் நாடோடிக்கதை பாணியில் புதிய கதைகளைப் படைக்கும் திறமை பெற்ற வர்கள். இவர்கள் தம் நூல்களில் எது சொந்தக்கதை, எது தழுவல்கதை என்ற தகவல் தராமல் விட்டு விடுவது பெருங் குறை. இனி வரும் நூல்களிலாவது இக்குறையில்லாமல்

பார்த்துக் கொள்ளவேண்டும் பெ. தூரனின் 'நிலாப் பாட்டி' 'தம்பியின் திறமை' 'நாட்டிய ராணி' 'ஓலைக்கிளி' ஆகியனவும் வாண்டுமாமாவின் 'தங்கத் தீவு' 'மந்திரக்குளம்' ஆகியனவும், முல்லை தங்கராசனின் 'வேடிக்கைக் கதைகள்' என்னும் நூலும், இவ்வகையில் சிறந்த நூல்களாகும். கலைமகள் சிறுவர் பகுதியில் எழுதிவந்த ராஜா சூடாமணியும், கல்கியில் 'பாப்பா மலர்' என்னும் சிறுவர் பகுதியில் நீண்ட காலம் எழுதிவந்த 'ராஜி'யும் ஆனந்த விகடனில் 'பாலர் மலர்' பகுதியில் 'முத்து' என்னும் பெயரில் எழுதிவந்த எஸ். எஸ். கோபாலகிருஷ்ணனும், நாடோடிக்கதைகள் பாணியிலும் விலங்கு—பறவைகள் பேசும் பாணியிலும் நிறையக் கதைகள் எழுதியுள்ளனர். மகிழ்ச்சிக் கண்ணனின் 'தங்கமீன்' 'காட்டிலே கல்யாணம்' ஆகிய இரு நூல்களும் இத்தகையனவே.

இன்றும் இத்தகைய நாடோடிக் கதைகளுக்கு தேவதைக் கதைகளுக்குச் சிறுவரிடம் மிகுந்த செல்வாக்கிருக்கிறது. அதனால்தான் பல நல்ல சிறுவர் பத்திரிகைகள் நின்று போக இத்தகைய கதைகளைமட்டுமே வெளியிடும் அம்புலிமாமா பாலமித்திரன், பொம்மைவீடு, ரத்னபலா ஆகிய பத்திரிகைகள் தொடர்ந்து வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இனிச் சமூகச் சிறுகதைகளைப் பற்றி ஆராய்வோம்.

சிறுவர் பத்திரிகைகள் காலணா விலைக்கும் (ஒன்றரைக்காசு) அரையணாவிலைக்கும் (மூன்றுகாசு) கையகல அளவில் வெளிவந்ததால் அரை நிமிஷத்தில் படித்து விடும் கதைகளையே முதலில் எழுத்தாளர்கள் எழுதினர். பிறகு ஓரணா (6காசு) இரண்டணா (12காசு) விலையில் சிறுசிறுகதை நூல்களை எழுதி வெளியிட்டனர். இக்கதை நூல் ஒவ்வொன்றும் ஒரு சிறு கதை என்று கூறுவதே பொருந்தும்.

குறைந்த விலைக்கான சிறுவர் பத்திரிகைகள் வெளிவந்த காலத்தில் எந்தப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தாலும் அதில் தூத்துக்குடி கே. கண்ணுசாமி, திருவாரூர் கே. சொர்ணவேலு, சேலம் ரா. மாரிமுத்து, சென்னை

ஜெ. எத்திராஜன் ஆகியோரின் கதைகளைக் காணலாம். இவர்கள் அக்காலத்தில் சிறுகதைகள் எழுதிக் குவித்தனர்.

அந்தக் காலத்தில் பாலர் மலர் நடத்திய சிறுகதைப் போட்டியிலும், ரா கி. ரங்கராஜனை ஆசிரியராகக் கொண்ட 'வானரசேனை' நடத்திய சிறுகதைப் போட்டியிலும் முதற் பரிசு பெற்றவர் தூத்துக்குடி கே கண்ணுசாமி. இவருடைய சிறந்த சிறுகதைகளை 'அப்பாவுக்குப் பரிசு' என்னும் கதைத் தொகுதியில் காணலாம்.

திருவாரூர் கே. சொர்ணவேலு பின்னர் முரசொலி சொர்ணம் என்ற பெயரில் எழுதினார். இவர் இன்று திரைப்பட டைரக்டராகத் திகழ்கிறார். 'ஜிப்ஸி' 'கிலுகிலுப்பை' என்னும் இவருடைய சிறந்த சிறுகதைகள் சிறுசிறு நூலாக வெளிவந்தன. கலைஞர் மு. கருணாநிதி நடத்திய 'முரசொலி' என்னும் திராவிட இயக்க வார இதழின் துணையாசிரியராகப் பணியாற்றியபோது, அதில் 'பிறைவானம்' என்னும் பெயரில் சிறுவர் பகுதியைத் தொடங்கினார். பிறைவானத்தில் சொர்ணம் பகுத்தறிவுச் சிறுகதைகளைத் தொடர்ந்து தந்தார். இவர் கதைகளை, 'புத்தர் பொம்மை' 'ஒரே ஒரு ஊரிலே' ஆகிய இரு தொகுதிகளில், காணலாம். இவர் 'சந்திரிகா' என்னும் புனைபெயரிலும் சிறுகதைகள் வழங்கியுள்ளார்.

சேலம் ரா. மாரிமுத்து, தமது சொந்தப் பெயரிலும், பின்னர் 'மேகலை' என்னும் புனைபெயரிலும் பல சிறுவர் பத்திரிகையில் கதைகள் எழுதியுள்ளார். 'தாராவும் மீராவும்' என்பதுஇவரது சிறந்த கதைகளில் ஒன்று. இவர் கதைகள் புத்தகமாக வராதது பெருங் குறை.

சென்னை ஜெ. எத்திராஜன் 'பாலர் மலர்' காலத்திலிருந்து 'கரும்பு' காலம் வரை தொடர்ந்து நிறைய எழுதியவர். 'தைரியசாலி', 'மல்லிகா' என்னும் இரண்டு சிறுகதைகளும் இரண்டு சிறு நூல்களாக வெளிவந்துள்ளன. 'காந்தி பொம்மை' என்றும் சிறுகதைத் தொகுதி ஓர் அருமையான படைப்பு. இதில் கன்றே தன் கதையைச் சொல்லும்

'நொண்டிக் கன்று' கதையும், கடிதங்கள் மூலம் கதை சொல்லும் உத்தியைக் கொண்ட 'பிறந்த நாள்பரிசு' என்னும் கதையும் உள்ளன. 'காந்தி பொம்மை' என்னும் முதல் கதை இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தும் இனிய கதை. இவர் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறு கதைப் போட்டியில் பரிசு பெற்றுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நால்வரும் மாணவர்களாக இருந்த போதே சிறுவர்க்குக் கதை யெழுதிப் பெரும் புகழ் பெற்ற வர்கள்.

நெ. சி. தெய்வசிகாமணியின் 'பாசம்' 'குருவியின் சாபம்' ஆகியன சிறுநூல் வடிவில் வந்த சிறுகதைகள் சாதி வேற்றுமை கூடாது என்பதை விளக்கும் சிறந்த கதை 'பாசம்.' பின்னே இப்பொருள் பற்றி நிறையக் கதைகள் வந்திருந்தாலும், இதுவே சிறந்த கதை. 'ஒரு வண்டிநெல்', 'பச்சைக்கிளி', ஆகியன இவருடைய தரமான சிறுகதைத் தொகுதிகளாகும்.

சிறுவர் சிறுகதைத் தொகுதிகளை மிகுதியாக வெளி யிட்டவர் என்ற பெருமை தங்கமணிக்கு உரியது. மணிக் கதைகள் (நான்கு தொகுதி), செம்பவளம், புயலும் விளக்கும் என்பன அவைகளில் சில.

'மானும் மயிலும்' என்னும் இவரது சிறுகதை, ஒரு கவிதை எனத்தகும் சிறப்புப் பெற்றது. இக்கதை, இவரது, அறிவு வளர்ச்சிக் கதைகள்' என்னும் தொகுதியில் இடம் பெற்றுள்ளது. இன்னும் இவர் சிறுகதைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறார். 1979 ஆம் ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கி இவரைச் சிறப்பித் துள்ளது.

தென்னார்க்காட்டு மாவட்டத்தில் தலைமை ஆசிரியராகப் பணிபுரியும் புவனை கலைச்செழியன் நூற்றுக்கு மேற்பட்ட கதைகள் எழுதியுள்ளார். குருவிக்கூடு, சித்ராவின் ஜிம்மி,

ஆடும் பொம்மை, வெல்வட் பை, இரவல்பேனா, ஒரு நாள் கோபம் ஆகியன இவருடைய சிறுகதைத் தொகுதிகள்.

அழ. வள்ளியப்பாவின் சிறுகதைகளான பாட்டிக்குப் போட்டி, நல்ல நண்பர்கள், குதிரைச்சவாரி ஆகியன சிறு சிறு நூல்களாக வெளிவந்து பெரும்புகழ் பெற்றன. இம் மூன்றும் பின்னர் பெரிய அளவில் வண்ணப்படங்களுடன் தனித்தனி நூலாக வெளிவந்தன. அப்போது பாட்டிக்குப் போட்டி என்பது மட்டும் 'எங்கள் பாட்டி' என்னும் புதிய தலைப்புப் பெற்றது. பெரிய அளவில் வந்த 'நல்ல நண்பர்கள்' தமிழக அரசின் பரிசு பெற்றது. ரோஜாச் செடி, அம்மாவும் அத்தையும் என்னும் கதைகளும் பெரிய அளவில் நூலாக வெளிவந்துள்ளன. 'ரோஜாச் செடி' நாடகமாக்கப்பட்டு அரங்கேறி ஆயிரக்கணக்கான சிறுவர்களை மகிழ்வித்துள்ளது.

ரத்னம் சிறுவர்களுக்கு எழுதும் சிறந்த எழுத்தாளரில் ஒருவர். 'காந்திமதி' என்னும் சிறு நூலான சிறுகதை இவர்க்குப் பெரும்புகழ் பெற்றுத் தந்தது. ஜப்பான் பொம்மை, சில சொன்னக்கதை ஆகியன இவருடைய சிறு கதைத் தொகுதிகள். இவரது 'பூனையார்' என்னும் சிறுகதை நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது. இது பல வண்ண அச்சில் பூனையின் வடிவத்தில் அமைந்த புத்தகம்.

வானதி பதிப்பக உரிமையாளர் ஏ. திருநாவுக்கரசு சிறுவர் கதைகள் எழுதுவதில் வல்லவர். தனது ஜில்ஜில், மிட்டாய் பத்திரிகைகளில் கதைகள் எழுதியுள்ளார். இவர் கதைகள் என்கதைகள், சிறுவர்கதைகள் என இரு தொகுதிகளாக வெளிவந்தன. தற்போதும் சிறுவர் கதைகளை இவர் படைத்து வருகிறார். கல்கி தீபாவளி மலர் கடந்த இரண்டாண்டுகளும் இவர் எழுதிய கதைகளை வெளியிட்டுள்ளது.

ரேவதி பல்லாண்டுகளாக நூற்றுக்கு மேற்பட்ட சிறு கதைகள் எழுதியுள்ளார். இவருடைய 'சத்தியம் காத்தவன்'

என்னும் கதைத் தொகுதியில் உள்ளவையாவும் சரித்திரச் சிறு கதைகள்.

சௌந்தர் சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னரே தம் சிறுகதைகளை, ராஜாமணி, சூரத்தம்பி, புதையல், நடிகராஜ் ஆகிய சிறுசிறு நூல்களாக வெளியிட்டுப் புகழுடைந்தவர். ஆறு சிறுகதைகள் கொண்ட 'நல்ல கைகள்' என்னும் இவரது நூல் ஏ. வி. எம். அறக்கட்டளையின் தங்கப்பதக்கம் பரிசு பெற்றது. பின்னர் இதே நூல் இந்திய அரசினரின் பரிசும் பெற்றது. இந்திய அரசினரின் சிறுவர் இலக்கியப் பரிசு பெற்ற தமிழ்ச் சிறுகதைத் தொகுதி, இதுவரை, இதுஒன்றே.

தமிழ் வாணன் தொடக்கத்தில் சிறு நூல்களாக வெளியிட்ட ஓடாதே, அல்வாத்துண்டு, ஆகியனவும் குறிப்பிடத் தக்கவையாகும்.

பெரியவர்களுக்காக எழுதுவோரும் சிறுவர் கதைகள் எழுதியுள்ளனர். அகிலனின் 'சிகப்பு விளக்கு' 'கண்ணான கண்ணன்', ராஜாஜியின் 'கற்பனைக் காடு', கு. அழகிரிசாமியின் 'காளிவரம்', கி. வா. ஜகந்நாதனின் 'அதிசயப் பெண்' எல்லார்வியின், 'கோமதியின் ஆசை', அரு. இராமநாதனின் 'நான்கு மேதாவிகள்' ஆகியன சிறந்த தொகுதிகளாம்.

பெண் எழுத்தாளர்களில் ஜோதிர்லதாகிரிஜா, அவருடைய தங்கை கிருஷ்ணகுமாரி, வீ. பாகீரதி, கே. ஜெயலட்சுமி, வத்சலா கோபாலகிருஷ்ணன், பாலப்ரியா, ரா. லட்சுமி, திலகவதி ஜெகதீசன், ராஜலட்சுமி, பொன்னம்மாள், சரஸ்வதி ராம்னாத் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். கே. ஜெயலட்சுமி கதைகள் 'சிந்தனைக் கதைகள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. வத்சலா கோபால கிருஷ்ணன், தான் எழுதிய 'புத்தியுள்ள அமுதா' 'ரவியின் யுக்தி' ஆகிய இரு சிறுகதைகளை ஜீ. வத்சலாதேவி என்னும் பெயரில் இரு சிறு நூல்களாக வெளியிட்டுள்ளார். விஜயலட்சுமி (குந்தவை)யும், பொன்னம்மாளும் சிறுகதைக்காக ஏவி. எம். அறக்கட்டளையின் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளனர். சரஸ்வதி

ராம்ஜுத்தின் கதைத் தொகுதியின் பெயர் 'பச்சை மிளகாய் இளவரசி.' இவர் பாரதக் கதைகளைப் பல நூல்களாக வெளியிட்டுள்ளார்.

இங்கே குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு பெண் எழுத்தாளர் ப. க. குஞ்சிதம். இவர் ஜலகண்டபுரம் ப. கண்ணனின் மகள். தந்தையார் நடத்திய 'பகுத்தறிவு' என்னும் பத்திரிகையில் சீர்திருத்தச் சிந்தனை வளர்க்கும் சிறு கதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'பைங்கிளி', 'ஆலமரத்துப் பேய்' ஆகிய இரண்டு சிறுகதைகள் இரு சிறு நூலாக வெளிவந்தன. இவை மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசும் காடு மணக்கச் செய்யும் கற்பூரக் கதைகளாம்.

பூவண்ணனின் 'புள்ளிமான்', தணிகை உலக நாதனின் 'நல்ல கதைகள்' ஆகிய இரண்டும் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்ற கதைத் தொகுதிகள்.

ப. ரா. வின் 'பகை தீர்ந்தது', ஈ. ஸ்ரீ. யின் 'மஞ்சள் நாய்க்குட்டி', நா. ஜகந்நாதனின் 'வீரவாள்', மாயூரனின் 'அன்னையின் குரல்', பூவை அமுதனின், 'அறிவூட்டும் கதைகள்', இளம் பாரியின் 'பாப்'பாக் கதைகள், ஆகிய சிறுவர் சிறுகதைத் தொகுதிகள் இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பன.

ஜான் துரைராஜ், பூரம், குளிகன், தமிழரசன், நா. வயிரவன், கி. மா. பக்தவத்சலன், எஸ். வி. ரமணி, ராசு, சுறுமீன், கே. பி. நீலமணி, புவிவேந்தன், மகிழ்ச்சிக் கண்ணன், அழகு பழனிச்சாமி, செ. சு. பாலகுருநாதன், ச. ய. சுப்ரமண்யன், வே. சபாநாயகம் (சபா) பூதலூர் முத்து மணிமொழி, அரி. இல. தமிழடியான், களிவளன், ஆலந்தூர் கோ. மோகனரங்கன், மாயன், பி. இ. பால கிருஷ்ணன் மெய்யடியான், இனியவன், ஜே. எம். சாலி, ஜி. அமுதா, ரமணியன் இளயவன், பூ. குருசாமி, துருவன், நாக. சண்முகம், வி. வேல்முருகன், திருச்சியண்ணு முதலிய

நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் சிறுகதைகள் எழுதிக் குவித்து வருகிறார்கள்.

சிறுவர் கதைகளில் நல்ல நீதி இருக்க வேண்டும் என்பதற்காக பலர் நீதி நூல்களின் அறிவுரைகளையொட்டியே கதைகள் எழுதியுள்ளனர். திருக்குறள் கருத்தை விளக்கும் கதை நூல்களை பூவண்ணன், சொர்ணம், கல்வி கோபால கிருஷ்ணன், சேது சுப்ரமணியன் ஆகியோர் எழுதியுள்ளனர். பூவண்ணன் 'திருக்குறள் கதைகள்' என்னும் தலைப்பில் நான்கு தொகுதிகள் எழுதியுள்ளார். இப்படியே ஆத்திச் சூடிக் கதைகள், புதிய ஆத்திச்சூடிக் கதைகள், நல்வழிக் கதைகள், நன்னெறிக் கதைகள், பொன்மொழிக் கதைகள், காந்திமொழிக் கதைகள் முதலிய தொகுதிகள் வெளிவந் துள்ளன.

இராமாயணக் கதைகள்' பாரதக் கதைகள் திருவிளை யாடற் புராணக் கதைகள், கந்தபுராணக் கதைகள், பைபிள் கதைகள், இசுலாமியக் கதைகள் என்னும் நூல்களும் வெளி வந்துள்ளன. வெளிநாட்டுக் கதைகளின் மொழிபெயர்ப்பாக வேட்டைநாய் (அழவள்ளியப்பா), ஷேக் செல்லி கதைகள் (ர. அய்யாசாமி) முயல் குட்டி முத்து (ரத்னம்) முதலிய கதை நூல்கள் வெளிவந்துள்ளன.

சிறுகதைக்கு முதலில் வித்திட்டவை கையகலத்தில் வெளியான நூல்களே. ஜில்ஜில் பதிப்பகம், குழந்தைப் பதிப்பகம், கலை பிரசுரம் ஆகியன இத்தகைய நூல்களை வெளியிட்ட புகழ்பெற்ற பதிப்பகங்களாகும். இவற்றுள் குழந்தைப் பதிப்பகத்தை பழனியப்பா பிரதர்ஸ் நடத்தினர், இதன் பதிப்பாசிரியராகத் தொண்டு செய்தவர் அழ. வள்ளியப்பா. இரண்டணா (12காசு) விலையில் இப் பதிப்பகம் இருபது நூல்கள் வெளியிட்டது. இவற்றுள் ஒன்றே ஒன்று தான் பாடல்நூல். மீதமுள்ள 19ம் கதைநூல்கள். இவ்வாறு சிறு நூலாக வந்தவற்றுள் பெரும்பாலானவை பின்னர் பெரிய அளவு நூலாக வந்தன என்பதும், அவற்றுள் இரண்டு

(வள்ளியப்பாவின் நல்ல நண்பர்கள், அகிலனின் கண்ணுக்கு கண்ணன்) தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றன என்பதும், இக் கதைகள் வெளிவந்தபோதே தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டன என்பதும் குழந்தைப் பதிப்பக நூல்களின் சிறப்பை உணர்த்தும் உண்மைகள்.

சில தனித்தன்மை வாய்ந்த சிறுகதைகள் நூலாக வந்துள்ளன. ராஜம் (பி. ஆர். கிருஷ்ணன்) எழுதிய 'எண்ணியது நடக்கவில்லை' என்னும் சிறுகதைத் தொகுதியில் மூன்றே கதைகள் உள்ளன. மூன்றும் எண்ணியது நடக்க வில்லை என்னும் ஒரே தலைப்பைக் கொண்டவை. பூவண்ணனின் 'புதிர்க் கதைகள்' புதிரோடு முடியும் கதை களைக் கொண்டவை. நூலின் முடிவில் புதிருக்கான விடை கள் உள்ளன. பூவண்ணனின் 'வேடிக்கைக் கதைகள்' இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சரித்திரச் சிறு கதைகளை மட்டுமே கொண்ட தொகுப்பு ஒன்று பற்றி முன்னர்க் கூறப்பட்டது. நெ. சி. தெய்வசிகாமணியின் 'சரித்திரக்கதை மலர்கள்' ஒரு சிறந்த கதைத்தொகுதி. புலவர் காவேரிச் செல்வன் எழுதிய 'சிறையிருந்த மன்னன்' நூலும் சரித்திரச் சிறுகதைத் தொகுதியே. இந்நூலில் கதை யம்சம் குறைந்து, சரித்திரத்தன்மை மேலோங்கி நிற்கிறது.

பல எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடும் தொகை நூல் முயற்சியும் நடை பெற்றுள்ளது. பாலர் கதைகள், நிமிஷக்கதைகள், பறவைகள் மாநாடு ஆகிய மூன்றையும் புதுக்கோட்டைத் தமிழ் நிலையம் வெளியிட்டது. இவற்றுள் பறவைகள் மாநாட்டைத் தொகுத்தவர் ரத்னம். மற்ற இருநூல்களின் தொகுப்புக்கு அழ. வள்ளியப்பா துணை செய்துள்ளார். ரமணியன் முயற்சி யில் வெளி வந்த 'வானவில்', எஸ். விசுவநாதன் தொகுத் தளித்த 'ஒருகிளைப் பறவைகள்' ஆகிய இரண்டும் தரமான தொகை நூல்களாகும். எனினும் பெரிய அளவில் சிறுவர் சிறுகதைகளின் தொகைநூல் ஒன்று இன்றளவும் வெளிவர

வில்லை. இக்குறை ஒன்றைத் தவிர சிறுவர் சிறுகதை இலக்கியத்திற்கு வேறு குறையில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

## சிறுவர் நாவல்கள்

சிறுவர்களுக்குச் சிறுகதைகளைப் படிப்பதில் விருப்பம் அதிகம் என்பதை முன்னரே கண்டோம். கொஞ்சம் வய்து வந்த சிறுவர்களுக்குச் (12—14வயதினர்) சிறுகதைகளை விட நாவல்கள் படிப்பதிலே நாட்டம் அதிகம்.

தொடக்கத்தில் சிறுவர்க்கென்று தனியாக நாவல்களை யாரும் எழுதவில்லை. பெரியோர் பத்திரிகையில் வெளிவந்த சிறுவர் பகுதியில் சிறுவர்க்காகத் தொடர்கதைகளை எழுதினுர்கள். பின்னர்ச் சிறுவர் பத்திரிகைகளில் தொடர் கதைகளை வெளியிட்டனர். இவையே சிறுவர்க்காக முதலில் தோன்றிய நாவல்களாகும்.

ஆனந்த விகடனில் சிறுவர் பகுதியில் ஆர். கே. நாராயணனின் 'சாமியும் சிநேகிதர்களும்' என்னும் நாவல் தொடர் கதையாக வெளிவந்தது. 'பாலர்மலர்' சிறுவர் இதழில் காழி. சுதன் எழுதிய 'கள்வர் தலைவன்' தொடர்கதை புகழ்பெற்றது. டமாரம் வார இதழில் ரத்னம் வழங்கிய 'சங்கனும் ரங்கனும்' தொடர்கதை சிறுவர்க்கு விருந்தானது. அணில் வார இதழில் வந்த தமிழ்வாணனின் ,பயம்மா இருக்கே' தொடர்கதை பெரும் பரபரப்பை உண்டாக்கியது. இவற்றைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான தொடர் கதைகள் தோன்றிச் சிறுவர் நாவல் இலக்கியத்தை வளப் படுத்தின. மேலே குறிப்பிட்ட தொடர் கதைகளில், 'கள்வர் தலைவன்' தவிர பிற நூல் வடிவமும் பெற்றன.

சிறுவர் நாவல்கள் பெரும்பாலும் சுமார் 100பக்கங்களைக் கொண்டதாகவே அமைந்தன. எளிய சொற்கள், சிறிய சொற்றொடர்கள், இனிய நடையுடன் அமைந்தன. சிறுவர்

நாவலின் முக்கிய கதாபாத்திரம் சிறுவராகவே இருப்பர். சிறுவரின் வீரம், நேர்மை, துணிவு, துப்பறியும் திறமை, இன்னலை ஏற்கும் மனபக்குவம், சாதி சமய வேற்றுமைகளைக் கடந்த அன்பு, உழைப்பினால் உயர்தல், விடாமுயற்சியினால் வெற்றிமேல் வெற்றி பெறுதல், தாயின் பொறுப்போடு தம்பியை அல்லது தங்கையை அல்லது தாயைக் காத்தல், மானம் பெரிதெனப் போற்றும் மாண்பு, தீமையை வெறுக்கும்—எதிர்க்கும் துணிவு, நாட்டுப்பற்று மொழிப்பற்று—இப்படிப் பற்பல நற்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் நாவல்கள் பிறந்துள்ளன.

தொடக்க காலத்தில் சிறுவர் நாவல் எழுதித் தன் எளிய நடையாலும், விறுவிறுப்பாகக் கதை சொல்லும் முறையாலும் பெயர் பெற்றவர் தமிழ்வாணன். முன்னே குறிப்பிட்ட 'பயம்மா இருக்கே' கல்கண்டில் தொடராக வந்த 'கண்ணம்மா', குமுதம் இதழில் தொடராக வந்த 'பலே ஜோர்' ஆகியன சிறந்த நாவல்கள். பின்னர் இவர் துப்பாக்கிக் கதைகளையும் துப்பறியும் கதைகளையும் எழுதத் தொடங்கினார். அதன் பிறகு சிறுவர்களுக்கு எழுதுவதை விட்டு விட்டுப் பெரியவர்களுக்காகவே எழுதுவதை மேற்கொண்டார். இவர் படைத்த சங்கர்லால் என்னும் துப்பறியும் நிபுணர் சிறுவர் நாவல்களில் தோன்றியவர் என்பது குறிக்கத்தக்கது.

தங்கமணி சிறுவர் நாவல்களின் எல்லா வகைகளையும் எழுதி வெற்றி பெற்றவர். 'அமுத நாட்டுக்குமுதா' ஒரு வீரதீர நாவல் 'கல்யாணி' என்ற புனை பெயரில் எழுதிய 'வண்ணாத்திப்பூச்சி' அறிவூட்டும் நாவல். பைபிளில் வரும் ஒரு சிறு குறிப்பை—ஒரு சிறுவன் துப்பட்டியை வீசிவிட்டு நிர்வாணமாக ஓடினான் என்னும் குறிப்பைக் கொண்டு 'ஒரு பூ மலருகிறது' என்னும் நாவலை - ஏசு நாதரின் அருமை பெருமைகளை அழகாகக் கூறும் நாவலை. எழுதியுள்ளார். யோவான் என்னும் சிறுவன் ஏசுவை நேசித்து அவரால்

இரட்சிக்கப் பட்டுத் தன் நோய் நீங்கிக் குணமடைகிருன். ஏசுவை கைது செய்தார்கள் என்பதை அறிந்து துடித்துப் போய் அவர் காவலில் இருக்கும் இடத்துக்கு ஓடி, காவலர்க்குப் பயந்து ஆடையின்றி நிர்வாணமாகத் தப்பி யோடுவதைக் கூறுகிறது இந்த நாவல்.

இதைப் படிக்கும் எந்தச் சிறுவரின் உள்ளத்திலும் இரட்சகர் ஏசு குடிகொண்டு விடுவார். 'கல்கி' அவர்கள் 'சோலைமலை இளவரசி' என்று ஒரு நாவலை எழுதினுர். அதில் ராஜா கதை ஒன்றும், சமூகக் கதை ஒன்றும் மாறி-மாறிப் பின்னிப் பிணைந்து கலைவயூட்டின. தங்கமணி அதே பாணி யில் இரு கதைகளை இணைத்து 'ராஜா ராணி' என்னும் பெயரில் 'பொன்னி' இதழின் சிறுவர் பகுதியில் தொடர் கதையாக எழுதினுர். இந்த நாவல் 'ஆசை ராஜா' என்னும் பெயரில் நூலாக வந்துள்ளது. தங்கமணியின் நடை தென்றலின் இனிமையும் புயலின் வேகமும் கலந்த விறுவிறுப் பான தமிழ் நடை. தங்கமணிக்குத் தமிழ்ப் பற்று அதிகம். ஆர். கே. நாராயணன்தன் கதைகளுக்கு 'மால் குடி' என்னும் கற்பனையூரைப் படைத்துக் கொண்டது போல இவர் 'தமிழோங்கி புரம்' என்னும் ஊரைப் படைத்துக் கொண்டார். இவருடைய பல சிறு கதைகளிலும், நாவலிலும் தமிழோங்கிபுரத்தைக் காணலாம்.

நெ. சி. தெய்வசிகாமணி மொத்தம் இரண்டே இரண்டு நாவல்களை எழுதியுள்ளார். 'பளிங்கு மண்டபம்' நாவல் பூஞ்சோலையில் தொடர் கதையாக வெளிவந்தது. இரு சிறுவர்கள் உழைப்பால் உயர்வதை உரைக்கும் அருமை யான நாவல் இது. 'பரமன் அருள்' என்னும் நாவல் வானெலியின் சிறுவர் நிகழ்ச்சியில் தொடர்கதையாக வெளி வந்தது. தீய குணமுள்ள ஒரு சிறுவன் ஆசிரியரின் அன்பாலும், அறிவுரையாலும் திருந்தித் தூயவனுவதைக் கூறுகிறது இது.

ஆர்வி பெரியவர்களுக்கான நல்ல நாவல்களை எழுதி வெற்றி பெற்றவர். கண்ணனின் ஆசிரியராகப் பொறுப்

பெற்ற பிறகு புதிய முகம், சைஞ சு-கு, ஜக்கு, ஜஞ என்ற புனை பெயரில் எழுதிய 'சந்திரகிரிக் கோட்டை' ஆகிய சிறந்த நாவல்களைக் கொடுத்துச் சிறுவர் நாவல் இலக்கியத்தைச் செழிக்கச் செய்தார். இவற்றுள் 'சந்திரகிரிக் கோட்டை' தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டைப் பெற்றது.

பூவை அமுதன் ஒரு பள்ளி ஆசிரியர். தமிழிலக்கியத்தில் தோய்ந்தவர். இவர் நாவல்களில் தமிழ்ப்பற்றை – தமிழரின் உயர்ந்த பண்புகளைப் பார்க்கலாம். தம்பியின் பெருமை, பலே சந்துரு, மன்னனை மாற்றிய சின்னத் தம்பி ஆகியன இவர் நாவல்கள். பம்பாயில் வளர்ந்த சந்துரு என்னும் தமிழ்ச் சிறுவன், சிவசேஞ வெறியர்களின் தாக்குதலுக்குப் பெற்றோரை இழந்து அஞதையாகிறான். அவன் மற்றொரு அஞதையிடம் அன்பு காட்டி ஆதரிப்பதையும், ரயில்திருடனை வீரம் காட்டிப் பிடித்துக் கொடுப்பதையும் சுவையாகக் கூறுகிறது, 'பலே சந்துரு.' ''தமிழ்நாடு அமைதிக்குப் பேர் பெற்றது. அறிவுக்கு முதலிடம் தருவது. ஒற்றுமைக்காக உறுதியோடு உழைப்பது'' என்று சந்துருவின் தந்தை கூறுகிறார். தமிழரின் பண்பாட்டை தமிழ் நாட்டின் சிறப்பை இவ்வாறு பல இடங்களில் ஆசிரியர் சுருக்கமாக விளக்கிச் செல்வது சிறுவர் அறிவுக்குப் பெருவிருந்தாக அமைகிறது.

ஜோதிர்லதா கிரிஜா பூஞ்சோலை காலத்திலேயே புகழ் பெற்ற எழுத்தாளர். இவரது 'வனஜாவின் அண்ணன்' நாவல் பூஞ்சோலையில் வெளிவந்தது. இது துப்பறியும் பாணியில் அமைந்தது. 'சுவடிகள் சொன்னதில்லை' என்னும் நாவல் சரித்திர நாவல் பாணியில் அமைந்தது. இது கண்ணன் தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்றது.

ரேவதி (ஈ. எஸ். ஹரிஹரன்) சிறுவர்களுக்காக எழுதிய நாவல்களில் சிறந்தது 'கொடி காட்ட வந்தவன்.' 24-1-1934 காந்தி அடிகள் குற்றாலத்துக்கு வந்தார். குற்றால அருவியில் குளிக்கும் உரிமை தீண்டாதவர்களுக்கு இல்லை. அதனால்,

"''என்று என்னுடைய அரிஜன சகோதரர்கள் இந்த அருவியில் நீராட அனுமதிக்கப் படுகிறார்களோ அன்றுதான் நானும் இதில் நீராடுவேன்'' என்று கூறிக் குற்றால அருவியில் குளிக்காமல் சென்று விட்டார். இந்த உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது இந்த நாவல். இவ்வாறு காந்தி அடிகள் நீராடாமல் சென்றதும், ''உலகத்தையே உய்விக்க வந்த தேவன் என்னிடத்தில் நீராடி என்னைப் புனிதப் படுத்தப்போகிறான் என்று பெருமையோடு காத்திருந்தேனே! மனிதர்கள் புரிந்த கொடுமையால் எனக்கு அந்தப் பேறு கிடைக்காமலேயே போய் விட்டதே'' என்று அருவி அரற்றிக் கண்ணீர் விடுதவதாகக் கதையை முடிப்பது நம் நெஞ்சை நெகிழச் செய்கிறது. இக்கதையில் மோகன் மூலம் மதுவிலக்கு, அந்நியத் துணிகளை விலக்குதல், கதரின் முக்யத்துவம், காந்தி அடிகளின் வரலாறு முதலியவற்றையும் விளக்குகிறார், ஆசிரியர்.

ரேவதி சரித்திர நாவல் எழுதுவதிலும் வல்லவர். 'பகையை வென்ற பல்லவன்', 'கார்வண்ணன் கண்ட கனவு', 'பாண்டிய பரதன்' ஆகிய மூன்று சரித்திர நாவல்கள் எழுதியுள்ளார். முதல் நாவல் கண்ணன் தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்றது. பிற இரு நாவல்களும் குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு பெற்றவை. இரண்டாம் தமிழ்ச் சங்கம் கடல்கோளால் அழிந்தபோது 'தொல்காப்பியம்' என்னும் இலக்கணத்தை அழியாமல் காத்து அடுத்த தலைமுறையினர்க்கு அளித்தான் பாண்டியன் முடத்திருமாறன் என்று இலக்கியம் கூறும். அதைப் பற்றிய நாவலான 'கார்வண்ணன் கண்ட கனவு' திடீர் திருப்பங்களுடன் கூடிய சுவைமிகுந்த நாவல்.

செல்லத் தம்பி, காக்கும் கரங்கள், இரு நண்பர்கள் (கண்ணன் தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்றது) நடேசன் என் நண்பன் (தமிழ் நாடு அரசின் பரிசு பெற்றது) அன்பு தோற்காது, ஆகிய நாவல்களை புவனை கலைச்செழியன்

எழுதியுள்ளார். இவர் நாவல்களில் தென்னூர்க்காட்டின் மண்மணத்தை நுகரலாம்; இவர் நாவல்களில் வருணனையும், இடஇயல்பு விளக்கங்களும் (Topography) சிறப்பாக இருக்கும்.

பெ. தூரன் வானொலியில் தொடர்கதை கூறிப் புகழ் பெற்றவர். இவரது 'மாயக் கள்ளன்', ஒரு கதைக்குள்ளே பல கதைகள் அடக்கித் திகழும் நாவல். இவர் 'சூரப்புலி', 'கொல்லிமலைக் குள்ளன்' ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார்.

அழ. வள்ளிப்பா சிறுவர் நாவல் இலக்கியத்திலும் சிறப்பிடம் பெறுகிறார். கல்கியில் தொடர்கதையாக வந்த 'பர்மா ரமணி', தினமணி கதிரில் தொடர்கதையாக வந்த 'மணிக்கு மணி', கோகுலத்தில் தொடர்கதையாக வந்த 'நீலா-மாலா' ஆகிய மூன்றும் முக்கனி போல இனிக்கும் நாவல்களாகும்.

'ஆனந்த விகடன்' துணை ஆசிரியராகப் பணியாற்றிய எஸ். எஸ் கோபால கிருஷ்ணன் 'முத்து' என்ற பெயரில் விகனிடன் சிறுவர் பகுதியில் பல அருமையான நாவல்களைத் தொடர் கதையாக எழுதினார். அவற்றில் 'ராஜகுமாரி மனோரமா', 'இரு குழந்தைகள்' ஆகியன புகழ் பெற்றன. 'ராஜகுமாரி மனோரமா' தொடராக வந்த போது, அதைப் படிப்பதற்காகவே விகடனை வாங்கியவர்கள் உண்டு. இந்நாவல்கள் நூலாக வெளிவராதது, சிறுவர் இலக்கியத்துக்குப் பேரிழப்பாகும்.

பூவண்ணன், சிறுவர் நாவலில் புகழ் பெற்றவர். காவேரியின் அன்பு, புலவர் மகன் ஆகிய இரண்டும் மத்திய அரசின் பரிசுபெற்றவை. மத்திய அரசின் பரிசை நாவலுக்காகப் பெற்றவர் இதுவரை, இவர் ஒருவரே. 'மரகதக்கண்ணன்' நாவல் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது. புலவர் மகன், பல்லவ மல்லன், ஆளப் பிறந்தவன் ஆகிய மூன்றும் சரித்திர நாவல்கள். கதா பாத்திரங்கள் மாறிமாறிக்

கதை சொல்லும் பாணியில் 'பாண்டி முத்து' நாவலைப் படைத்துள்ளார். மகன் புகழ், நச்சுமலைக் காடு, ராஜாவும் ரோஜாவும், எரிமலை அரக்கன், ராஜாமணி ஆகியனவும் இவர் நாவல்களே. இவருடைய 'ஆலம் விழுது' நாவல் கன்னடத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இவர் நாவல்கள் திரைப் படமாகிப் புகழ் பெற்றுள்ளன.

கே. ஜெயலட்சுமி சிறுவர் நாவல் எழுதுவதில் பெரும் புகழ்பெற்ற பெண் எழுத்தாளர். இவரது 'அன்பின் வலிமை' கண்ணன் தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்றது. 'அன்புச் சுரங்கம்', குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பரிசு பெற்றது. 'இளவரசி சுகுமாரி' என்பது சிறுவர்க்கு வியப்பும் சுவையும் தரும் மாயஜால நாவலாகும்.

மேலே சமூக நாவல்களையும், சரித்திர நாவல்களையும் கண்டோம். சிறுவர்களுக்குத் துப்பறியும் நாவல்களில் அதிக மோகம் உண்டு. கண்ணன் துப்பறியும் நாவல்கள் பல வற்றைத் தொடர்கதையாக வெளியிட்டது. துமிலனின் 'சி. ஐ. டி. சிறுவர்கள்', பூரத்தின் 'கறுப்புக் கண்ணாடி' சந்தனுவின் 'துப்பறியும் ராமு' மணா. அரங்கசாமியின் 'சி. ஐ. டி. சிங்காரம்', கி. ஐயராமின் 'மஞ்சள் பங்களா' ப. கி. மூர்த்தியின் 'ஆயிரத்தில் இருவர்' விஜயனின் 'சின்னத் தம்பி' முல்லை தங்கராசனின் 'பிசாசுத்திடல் மர்மம்' ஆகியன துப்பறியும் நாவல்களில் சில. தமிழ்வாணன் 'மாயக் கள்ளன்' 'ரகசியம்' முதலிய துப்பறியும் நாவல்களை எழுதியுள்ளார்.

மாயாஜாலக் கதைகளைச் சிறுவர் இன்றும் விரும்பு கிறார்கள். இவ்வகையான கதைகளை எழுதுவதில் புகழ் பெற்றவர் முல்லை தங்கராசன். தங்கமயில் தேவதை, தங்க மலை மோகினி, அதிசயக் குதிரையும் அற்புதவல்லியும், மந்திரவாதியின் மகள் ஆகியன இவர் படைத்த சுவையூட்டும் மாயா ஜாலக் கதைகள். மகேந்திரன் என்னும் எழுத்தாளர், தன் சொந்தப் பெயரிலும், 'இளைய ராஜா' என்னும் புனை பெயரிலும் நூற்றுக்கு மேற்பட்ட மாயா ஜாலக் கதைகளை

எழுதிக் குவித்துள்ளார். 'அணில் மாமா' பத்திரிகையின் ஆசிரியரான புவிவேந்தனும் இத்தகைய நாவல்களை எழுதுவதில் வல்லவர். இவரும் மிருக அரக்கன், பச்சைப்பூதமும் பயங்கரத் தேவதையும், தங்கக் கூண்டு இளவரசி முதலிய நாவல்களை எழுதியுள்ளார். இங்கே குறிப்பிட்ட மூவரும் இவ்வகைக் கதைகள் எழுதுவதில் கை தேர்ந்தவர்கள். பிற வகை நாவல்களைப் படைக்கும் எழுத்தாளரும் மாயா ஜாலக் கதை எழுதுவதுண்டு. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

நாகை. தருமனின், 'மாயாபுரி மன்னன்', ராஜியின் 'தங்க மாம்பழம்', பூவண்ணனின் 'எரிமலை அரக்கன்', ஆலந்தூர் கோ. மோரனரங்கனின், 'சந்திர மண்டலத்தில் மந்திரவாதி', சந்தனுவின் 'வேதாள உலகில் விச்சு.'

நகைச்சுவை நாவல்கள் மிகுதியாகத் தோன்றவில்லை தமிழ்வாணனின் 'சிரிக்காதே' தங்கமணியின் 'குண்டுமணி' ஆர்வியின் 'அசட்டுப்பிச்சு' பூவண்ணனின் 'பரமார்த்த சீடர்கள்' இவ்வகையில் சிறந்தவையாகும்.

வெ. மல்லப்பிள்ளையின் 'மாணிக்கம்' நா. ஜெயசீலனின் 'ஒரு ரயில் புறப்படுகிறது' கி. வெங்கடசாமியின் 'கல்லும் மலராகும்' ஆகியன ஏ. வி. எம். அறக்கட்டளைப்பரிசு பெற்ற நாவல்கள்.

ஜெ. எத்திராஜனின், 'நீலமலைமேலே' கே.கண்ணுசாமியின் 'அண்ணனும் தங்கையும்' எம். எஸ். பெருமாளின் 'வயிரமுடைய நெஞ்சம்' அகிலனின் 'தங்க நகரம்' விமலா ரமணியின் 'மர்ம மாளிகை' ஜே. எம். சாலியின் 'இருகண்கள்' இனியவனின் 'என்மனம்' செ. சு. பாலகுருநாதனின், 'குலநிதி' 'குகைவழியே' திருச்சி பாரதனின் 'குறிஞ்சி பாபு' வாசவனின் 'காட்டு மாளிகை' கி. ரா. வின் 'பவழமல்லி', மாயூரனின் 'கெட்டிக்காரர்கள்' சுகி. சுப்ரமணியத்தின், 'திருச்சி உலகநாதன்' பூவை. எஸ். ஆறுமுகத்தின் 'தங்கப்

பதக்கம்' முதலியன குறிப்பிடத்தக்க சிறுவர் நாவல்களில் சிலவாகும்.

முன்னே சிறுகதைப் பகுதியில் குறிக்கப்பட்ட எழுத் தாளர்களில் பெரும்பாலோர் சிறுவர் நாவல்களும் எழுதி யுள்ளனர் என்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ்க் காப்பியங்களின் கதைகளை நாவல் போலச் சிறுவர்க்குத் தந்தவர்களும் உண்டு.

பூவை அமுதன், மனோன்மணீயம் கவிதை நாடகத்தை 'இரகசியவழி' என்றும், 'குசேலோபாக்கியானம்', 'அரிச் சந்திர புராணம்' ஆகிய சிறுகாப்பியங்களை முறையே 'குசேலர் கதை' 'வாய்மையே வெல்லும்' என்னும் நாவல் பாணியில் கொடுத்திருக்கிறார். இவ்வாறே க. அ. இராம சாமிப் புலவரும், நளன் கதை, அரிச்சந்திரன் கதை, குசேலர் கதை, இராமாயணக்கதை, பாரதக்கதை முதலியவற்றைக் கொடுத்திருக்கிறார்.

பிறமொழி நாவல்களைச் சிறுவர்க்கேற்ற முறையில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். ஸர்.வால்டர் ஸ்காட், சார்லஸ் டிக்கன்ஸ், ஸ்டீவென்ஸன் முதலியோரின் நாவல்களை கு. பரமசிவன், இரா. முத்துக்குமாரசாமி போன் றோரைக் கொண்டு மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறது. சைவ சித்தாந்தக் கழகம். Alice in wonderland ஐ. தி. ஜ. ர 'அலமுவின் அதிசய உலகம்' என்றும், ஆர். பத்மநாபன் 'கமலாவின் கனவு' என்றும், கா. அப்பாதுரை, 'குழந்தைகள் உலகம்' என்றும், தமிழில் எழுதியுள்ளனர். Prince and the pauper நாவலை தம்பி சீனிவாசன் 'பிச்சைக்கார இளவரசன்' என்ற பெயரிலும், நெ. சி. தெய்வசிகாமணி. 'ஏழை இளவரசன்' என்ற பெயரிலும் வெளியிட்டுள்ளார். ஜெர்மன் நாட்டு மன்ராசன் கதைகளை, 'திருவாளர் அளப்பு மன்னன்' என்ற பெயரில் ஜி. அமுதா மொழிபெயர்த்துள்ளார். விக்டர் ஹ்யூகோவின் 'லே மிஸ்ரபிள்' நாவலை 'ஏழைப் பங்காளன்'

என்ற பெயரில் மீ. லி. சபரிராஜன் தமிழ்ப் படுத்தியுள்ளார். அலாவுத்தீன், அலிபாபா, சிந்துபாத் ஆகியோரைப் பற்றிய அரபுக்கதைகளும் கலிவரின் கடற்பயணச் கதைகளும், இவ்வாறே பலரால் மொழிபெயர்த்தும் தழுவியும் எழுதப் பட்டுள்ளன.

பிற இந்திய மொழிச் சிறுவர் நாவல்களும் தமிழில் வெளிவந்துள்ளன. 'சுட்டிராமன்' என்ற மலையாளநாவலும், 'விஷமக் கோபுவின் விசித்திர யாத்திரை' என்னும் தெலுங்கு நாவலும், 'மறைந்த நால்வர்' என்னும் மராத்தி நாவலும், 'பால முரளி' என்னும் கன்னட நாவலும் குறிப் பிடத்தக்கன.

சிறுவர் நாவல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தது, கண்ணன் பத்திரிகை நடத்திய தொடர்கதைப் போட்டி. அதன் மூலம் இளம் எழுத்தாளர்கள் புகழ் பெற்றார்கள். புதிய நாவல்கள் தோன்றின. குழந்தை எழுத்தாளர் சங்கம், மூன்றாண்டுக்கு ஒருமுறை நாவல் போட்டி நடத்தி ஏ.வி. எம். மின் அறக்கட்டளைப் பரிசாக ஒரு தங்கப் பதக்கத்தையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், தந்து வருகிறது. சிறுவர் பத்திரிகைகள் போதுமான அளவு இல்லாத போதும் நல்ல நாவல்கள் தோற்றுவதற்கு இப்பரிசு துணை செய்கிறது.

## சித்திரக் கதை

சிறுவர் நூல்கள் என்றால், அவற்றில் நிச்சயம் ஓவியங்கள் இருக்க வேண்டும்; வண்ண ஓவியங்கள் இருப்பது இன்னும் சிறப்பு. சிறுவர்கள் ஓவியங்களில் உள்ளத்தைப் பறிகொடுக்கும் இயல்பு பெற்றவர்கள். இப்படிப் பட்டவர்களுக்கு முழுக்க முழுக்கப் படங்களைக் கொண்டு, சில சொற்களால் பேச்சை விளக்கித் தயாரிக்கப்படும் சித்திரக் கதைகளைக் கொடுத் தால், அவற்றை இனிப்புப் பண்டங்களை விரும்புவதைப் போல விரும்பிப் படிக்கிறார்கள். இத்தகைய சித்திரக்

கதைகளை ஆங்கிலத்தில் 'காமிக்ஸ்' (Comics) என்று கூறுகின்றனர்.

நம் நாட்டவருக்குக் காமிக்ஸ் முற்றிலும் புதுமையானவை என்று கூறுவதற்கில்லை. பேளூர், ஹளபேடு ஆகிய ஊர்களில் (கர்நாடகமா நிலம்) உள்ள கோயில்களில் இதிகாசக் கதையின் நிகழ்ச்சிகள் ஒன்றின்பின் ஒன்ருக வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்த்துக் கொண்டே வந்தால் கதை புரிந்துவிடும். இதில் சொல்லுக்கு வேலையே இல்லை. காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலிலும், இரண்டாம் நந்திவர்மன் ஆட்சிக்கு வரும் வரலாற்றை இப்படிச் சிற்பங்களாக உருவாக்கியிருக்கிருர்கள். இவை சிற்பக் கதைகள். இவற்றைப் போலச் சித்திரக்கதைகளும் 2 கண்டு. 'காமிக்ஸ்' என்பதோ கதாபாத்திரங்களின் செயலைப் படம்பிடிப்பதோடு, பேச்சையும் எழுதிக்காட்டுகிறது. சிறுவர்கள் சிறுகதையைவிட நாவலைவிட இக்காமிக்ஸை அதிகம் விரும்புகிருர்கள்.

ஆங்கிலத்தில் வெளிவந்த 'Illustrated Classics', அம்மொழியின் இலக்கியத்தரம் வாய்ந்த நாவல்களைச் சித்திரக் கதையாகக் கொடுத்தது. வேதாளம் காமிக்ஸ் (Phantam Comics) டின் – டின் காமிக்ஸ் (Tin Tin Comics) டார்ஜான் காமிஸ் (Tarzan Comics) ஆகியன நம் நாட்டிலும் பிரபலமடைந்து விட்டன.

தமிழ்ச் சிறுவர்கள் காமிக்ஸை பேராவலுடன் படிப்பதை அறிந்து அவர்களுக்குக்காகத் தனியே புதிய சித்திரக்கதைகளை எழுதியவர்கள் பலருள் முதல்வர், வாண்டுமாமா.

வாண்டுமாமா, (கௌசிகன்) சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தாம் நடத்திய 'வானவில்' சிறுவர் பத்திரிகையில் சித்திரக்கதைக்கு முக்யத்துவம் கொடுத்தார். சித்திரக்கதையை முதலில் வெளியிட்ட பெருமை வானவில்லுக்கும், வாண்டுமாமாவுக்குமே உரியது. வாண்டுமாமா சிறந்த ஓவியருங்கூட, 'வாசுகி' என்ற பெயரில் ஓவியமும்

வரைந்தார். 'வானவில்' காலத்திலேயே சித்திரக்கதையைத் தனி நூலாக வெளியிட்டார். அது முதல் தொடர்ந்து ஏராளமான சித்திரக்கதைகளை அளித்து வருகிறார். அவர் பணியாற்றிய 'கோகுலம்' இதழிலும், துணையாசிரியராக இருந்த 'கல்கி' இதழிலும் சிறுவர்களைக் கவரும் சித்திரக்கதைகளை வழங்கியுள்ளார். அவர் தயாரித்தளித்த 'கனவா நிஜமா' என்னும் சித்திரக்கதை அவர் படைப்புகளில் சிறந்தது எனக் கூறலாம்.

சித்திரக்கதையைச் சிறப்பாக எழுதித்தயாரிக்கும் திறமை கைவரப் பெற்றவர் முல்லை தங்கராசன். சிறுவர் இலக்கியத்தில் ஆப்செட் அச்சுமுறையின் வனப்பையும் வண்ணங்களையும் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குரியதே. இவர் நூல்கள் வெளிவந்த பிறகே, சித்திரக்கதையையும் சிறுவர் நூலையும், அச்சிட சிவகாசிக்குப் பிறர் ஓடினர். சித்திர ராமாயணம், (ஓவியர் வினு) சித்திர வேங்கடேச புராணம், (ஓவியர் கணேசன்) சித்திரக் கந்த புராணம் (ஓவியர் வினு) சித்திர ஐயப்பன் (ஓவியர் கணேசன்) ஆகிய இவருடைய நூல்கள் காவியச் சிறப்பு, ஓவியச் சிறப்பு, அச்சுக்கலைச் சிறப்பு, ஆகிய மூன்றையும் வெளிப்படுத்தின. இவை பல மொழியிலும் வந்துள்ளன. பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனை ஆயின. இவற்றைப் பக்தி நூலாகக் கருதிப் பக்தர்கள் மிகுதியாக வாங்குகிறார்கள் என்பது உண்மை; எனினும் இவை சிறுவரை ஈர்த்தன. சிறுவர்க்கு பரவசத்தையும் பக்தியையும் கொடுத்தன என்பதும் பேருண்மையாகும்.

மேல்நாட்டு காமிக்ஸ் போலச் சித்திரக் கதையைப் பத்திரிகையாக நடத்திய முதல்வர் முல்லை தங்கராசன். 'கண்மணி காமிக்ஸ்', முத்துக் காமிக்ஸ் ஆகியவற்றை ஆரம்பித்து அவற்றின் ஆசிரியராகவும் திகழ்ந்தார். முத்துக் காமிக்ஸ் விற்பனையில் புது சாதனையை நிகழ்த்தியது. இது வெளிநாட்டு காமிக்ஸின் தமிழ்ப்பதிப்பாகவே இருந்தது. இவர் தொடங்கிய முத்துக் காமிக்ஸ் இன்றும் தொடர்ந்து

வெளி வருகிறது. பின்னர் 'மாயாவி காமிக்ஸ்' என்பதைத் தொடங்கி, அதில் சொந்தக் கதையைச் சித்திரக்கதையாக வெளியிட்டார். 'விரல் மனிதர்கள்' முதலிய இச்சித்திரக் கதைகளை ஓவியர் செல்லம் சிறப்பாக வரைந்து புகழ் கொண்டார். இதே போல் ஓவியர் விஜயாவும் சில சித்திரக்கதைகளை வரைந்துள்ளார். தற்போது 'மதி காமிக்ஸ்' வரிசையைத் தொடங்கிச் சில சித்திரக்கதைகளை வெளியிட்டுள்ளார். இவற்றுள் 'இரும்புக்கை மாயா மாயவன்' சிறுவர்களின் இதயத்தைப் பெரிதும் கவர்ந்ததாகும்.

ஒரு பக்கம் படம், எதிர் பக்கம் கதை என்ற முறையில் வெளிவந்த கதைகளையும் சித்திரக்கதைகள் என்று சொல்வதே பொருந்தும். முல்லை தங்கராசன், இவ்வமைப்பில் பரமார்த்த குருகதை, இராமகிருஷ்ணர் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். ரத்னத்தின் 'பூனையார்' நூலையும் இதில் சேர்க்கலாம்.

எஸ். ஏ. ரஹீம் இதே அமைப்பில் (ஒருபக்கம் படம்-ஒருபக்கம் கதை) வழிகாட்டிய உத்தமர், புத்தர் அடிச்சுவட்டில், இந்தியா என் வீடு முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவற்றின் ஓவியங்களை ரெஸாக் மிகச் சிறப்பாக வரைந்திருந்தார். இவற்றுள் சில பிறமொழிகளிலும் வெளிவந்தன. 'வழி காட்டிய உத்தமர்' என்னும் நூல் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது. இதே நூலின் இந்தி மொழிபெயர்ப்பு, இந்திய அரசின் பரிசு பெற்றது.

பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட 'பாப்பாவுக்குப் பாரதி', 'பாப்பாவுக்குக் காந்தி' ஆகிய இருநூல்கள் சித்திரக் கதை நூல்களே. ஒருபக்கத்தில், மேல் அரைப்பகுதியில் ஓவியமும் கீழ் அரைப்பகுதியில் கதையுமாக இவை அச்சிடப்பட்டன. முதல் நூலுக்கு ரெஸாக்கும், இரண்டாம் நூலுக்கு ஸாகரும் ஓவியம் வரைந்து அழகு செய்தனர்.

இரண்டையும் தி. ஜ. ர. எழுதினர். இவற்றுள் 'பாப்பாவுக்குப் பாரதி' தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது.

பூவண்ணன் எழுதிய 'இரட்டை வால் இரண்டு' சித்திரக் கதை, ஜெயராஜின் ஓவியங்களோடு 'குமுதம்' பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. இது புத்தகமாக வெளிவரவில்லை.

இப்போது வேதாளம் காமிக்ஸ், டார்ஜான் காமிக்ஸ் ஆகியன தமிழில் வெளிவருகின்றன. அமர் சித்ரகதா வரிசையின் சித்திரக் கதைகளும் தமிழில் வெளி வருகின்றன. வேறு புதிய சித்திரக் கதைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சிறுவர்கள் இவற்றில் கொண்ட விருப்பமும் அதிகரித்த வண்ணமிருக்கிறது.

## கதை சொல்லும் கருத்து

கதைகள்-சிறுகதைகளாக இருந்தாலும், நாவல்களாக இருந்தாலும்-ஏதாவது ஒரு வகையில் படிக்கும் சிறுவரின் உள்ளத்தில் நல்ல கருத்துகளைப் பதிய வைக்க வேண்டும். தீய கருத்துக்களைப் பரப்பும் கதைகள் சிறுவரிலக்கியத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவை.

1945-52இல் ஏராளமான சிறுவர் பத்திரிகைகள் தோன்றின. அப்போது ஒரு பத்திரிகை கொலையையும் கொள்ளையையும் மிகைப்படுத்திச் சுவை ததும்ப எழுதித் தன் விற்பனையைப் பெருக்கிக் கொண்டது. அதைப் படிக்கும் சிறுவரின் மனம் பாழ்படும் என்பதால் குழந்தை எழுத்தாளர்கள் சிலர் அதனை வன்மையாகக் கண்டித்துப் போர்க்கொடி உயர்த்தினர். அதனல் குழந்தை எழுத்தாளரிடையே ஒரு வகையான பிளவும் தோன்றியது. சிலர் குழந்தை எழுத்தாளர் சங்கத்துக்கு எதிராக 'முற்போக்கு குழந்தை எழுத்தாளர் சங்கம்' என்ற ஒன்றையும் நிறுவினர். இப்போட்டிச்

சங்கம் தோன்றிய வேகத்தில் மறைந்தது. அதைப்போலவே கொலை கொள்ளைகளை விளக்கும் பயங்கரக் கதைகளும் குறைந்து மறைந்தன. இப்போது சிறுவர் உள்ளத்தில் தீமையைப் புகுத்தும் கதைகளை யாரும் எழுதுவதில்லை கூறலாம் என்றே துப்பறியும் கதைகள் எழுதுவோர் கூட, ஏனிட்பிளேட்டன் எழுதிய 'Secret seoren' கதைகளின் பாணியில் தரமான நாவல்களைப் படைக்கிறார்கள். 'தருமம் மறுபடியும் வென்றுள்ளது', என்பது சிறுவரிடம் அக்கறை கொண்டோர் எண்ணி மகிழத்தக்கது.

5

# சிறுவர் கட்டுரைகள்

எங்கோ யாரோ பேசுகிறார்கள்; பாடுகிறார்கள். அதை நாம் வீட்டிலிருந்தே வானொலி மூலம் கேட்டு மகிழ்கிறோம். அந்த வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? அது எப்படி வேலை செய்கிறது?

இமயத்திலே வில்லைப் பொறித்தான் சேரன் செங்குட்டுவன் என்று கேள்விப் படுகிறோம். யார் அவன்? ஏன் இமயம் சென்றான்? வில்லை ஏன் பொறித்தான்?

'கப்பலோட்டிய தமிழன்' என்று வ. உ. சிதம்பரனாரை மக்கள் போற்றுகிறார்கள். அவர் ஏன் கப்பல் ஓட்டினார்? எப்போது எங்கே ஓட்டினார்?

'செயற்கைச் சந்திரன்' என்று செய்தித் தாளில் வருகிறதே, அதன் உண்மை என்ன? எந்தெந்த நாடுகள் அதை அனுப்பியிருக்கின்றன?

இவை பெரியவர்களிலேயும் பலருக்குத் தெரியாதவை. அவர்களைப்போலவே வளர்ந்துவரும் இளையவர் சமுதாயமும் இருந்து விட்டால், எதிர் காலம் இருண்ட காலமாகத்தானே திகழும்! உலகில் அறிவியல் வினாடிக்கு வினாடி வேகமாக வளர்ந்து வருகிறது. அதையெல்லாம் அறிந்து கொள்ள,

பெரியவர்களுக்கு ஓய்வு இல்லை என்பார்கள். ஆனால் அதைத் தம் மக்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

தமிழ்நாட்டிலே பிறந்த சிறுவர், தமிழின் தொன்மையையும் சிறப்பையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதில் உள்ள இலக்கியத் தேனை உண்டு மகிழ வாய்ப்பு வேண்டும். தமிழக வரலாற்றையும் பிற நாட்டு வரலாற்றையும் ஓரளவு அறிந்து கொள்ள வேண்டும். அறிவியலின் ஆற்றலையும், அது ஆற்றியுள்ள பணிகளையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இது அறிவு பெருகி, உலகம் குறுகிவரும் நூற்றாண்டு. ஐந்தாவது படிக்கும் மாணவனும் ஆஸ்திரேலியாவைப் பற்றியும், ஐக்கியநாடு சபையைப் பற்றியும், அண்ணல் காந்தி நடத்திய அறப்போரைப் பற்றியும் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே அறிவியல், மொழியியல், வரலாறு, நிலநூல், உயிர்நூல், பொறி இயல் போன்று வளர்ந்து வரும் வகை வகையான கலைகளைச் சின்னஞ் சிறுவர்களுக் கேற்ற முறையில் சொல்ல வேண்டும்.

மேலே கண்ட கலைகளைக் கூற ஏற்றது எது? கதையா? பாட்டா? இரண்டின் மூலமும் இவற்றைக் கூறலாம். ஆனால், அது எளிதன்று; கதை, பாட்டு இவற்றின் மூலம் சொல்ல வேண்டிய உண்மைகள் அனைத்தையும் சொல்ல முடியாது. சொல்ல வேண்டிய அனைத்தையும் சொன்னால், கதையின் சுவை குறையும்; பாட்டின் இன்பம் மறையும். எனவே இத் தகைய உண்மைகளைக் கூற ஏற்றது கட்டுரை ஒன்றே.

கட்டுரை ஏற்றதுதான். ஆனால் பெரியவர்களுக்காக எழுதும் கட்டுரையைப் போலவே சிறுவர்களுக்கும் எழுதக் கூடாது. பெரியவர்கள் பொறுமை மிக்கவர்கள்: எதையும் எளிதில் புரிந்துகொள்ளும் இயல்பும் பெற்றவர்கள்; அடுக்கடுக்காக வரும் வெறும் புள்ளிவிவரங்களைப் படித்தாலும் சிலருக்கு அலுப்பு ஏற்படுவதில்லை.

சிறுவர்கள் அத்தகைய குணங்களைப் பெருதவர்கள். அவர்களுக்கு எதுவும் இன்பம் தர வேண்டும்; எளிதில் புரிய வேண்டும்.

அதனுல் கட்டுரையைப் பட்டியலாகத் தருவதைத் தவிர்க்க வேண்டும். அதைக் கதை போலச் சொல்வதே சிறுவர்க்கு ஏற்ற முறை. உண்மைகளை எடுத்து நேரடியாகச் சொல்லக்கூடாது. சிறுவர்களுக்குப் பாடம் நடத்தும் ஆசிரியர் முதலில் அப் பாடத்தைப் பற்றிச் சிறுவர்கள் விரும்புமாறு, 'ஆயத்தம் செய்தல்' (Motivation) வேண்டும் என்று கூறுவர். அதே முறையைச் சிறுவர் கட்டுரையில் கையாளலாம்.

''வானெலியை மார்க்கோனி என்பவர் கண்டுபிடித்தார். ஒலி அலைகளை மின் அலைகளாக மாற்றி வான் வழி செலுத்தி, அவற்றை வானெலி பெற்று மீண்டும் ஒலி அலைகளாக்கி விடுகிறது'' என்று சொன்னுல், இதில் உண்மை இருக்கிறது. ஆனுல் சுவை...? நூற்றில் ஒன்றிரண்டு சிறுவர்கூட இதை ஆர்வத்தோடு கேட்பார்களா என்பது ஐயத்திற்குரியதே!

இதையே சுவையாகக் கூறலாம்.

அப்பாவும் மகனும் கடற்கரைக்குப் போகின்றனர். அங்கே வானெலியில், ''இப்போது சீர்காழிகோவிந்தராசன் பாடுவார்'' என்று அறிவுறுத்தப் படுகிறது. உடனே சீர்காழியின் தங்கக் குரல் கணீரென்று கடற்கரை எங்கும் இசை வெள்ளத்தைப் பரப்புகிறது.

மகன், 'அப்பா, சீர்காழி கோவிந்தராசன் எங்கே பாடுகிருர்?' என்று கேட்கிருன். தந்தை பதில் கூறுகிருர். மகன், 'எங்கோ ஓர் இடத்தில் சிறு அறையில் பாடுவது இங்கெல்லாம் எப்படிக் கேட்கிறது?' என்று கேட்கிருன். தந்தை மகனுக்கு வானெலி எப்படி வேலை செய்கிறது என்பதை விளக்குகிருர்.

இப்படிக் கட்டுரையைத் தொடங்கி எழுதலாம். இது தான், 'ஆயத்தம் செய்தலாகும்'. இதைச் சிறுவர்கள் ஆர்வத்தோடு படிப்பார்கள். இது கதையைப் போல இருக்கிறது அல்லவா? கதை என்று எண்ணிப் படிக்கத்தொடங்கும் பலருள் சிலராவது அதைத் தொடர்ந்து படித்து முடிப்பர்.

கட்டுரை நூல்கள் இங்கு குறைவு. கதைகளே அதிகம். இங்கிலாந்தில் குழந்தைகளுக்கான அறிவியல் பற்றிய நூல்களே மிகுதி. தற்போது பல பதிப்பகத்தாருக்குச் சிறுவர் கட்டுரை நூல்களை வெளியிடும் ஆர்வம் பிறந்துள்ளது. அதனால் பல நல்ல கட்டுரை நூல்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல வெளிவர வேண்டும்.

கட்டுரைகள் கதைகளைப் போல இருக்க வேண்டுமே தவிர வெறுங் கதைகளாகவே இருக்கக் கூடாது. சிலர் கதைகளைப் போலவே கட்டுரைகளில் கற்பனையையும் சேர்த்து எழுதிவிடுகிறார்கள்! இது ஆபத்தானது.

நூல்கள் எழுதுவோர் எழுதும் பொருளை முதலில் பிழையற உணர்ந்து கொள்ள வேண்டும். நிலநூல் அறிந்தவரே அதைப் பற்றி எழுதலாம்; உயிர்நூல் அறிந்தவரே அதைப் பற்றி எழுதலாம். வெறும் மொழி பெயர்ப்பு அறிவை மட்டும் வைத்துக்கொண்டு இத்தகைய நூல்களை எழுத முன்வருதல் விரும்பத்தக்கதன்று.

சிறுவர் நூல்களில் தாமே சரிவரப் புரிந்து கொள்ளாமல், மூலத்தை ஏதோ ஒரு வழியாய் மொழி பெயர்த்து வெளியிட்ட பகுதிகள் சிலவும் தவறாகப் புரிந்து கொண்டு எழுதிய பகுதிகள் சிலவும் இடம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். நன்கு அறியாத பொருளைப் பற்றி ஒருவர் எழுதாமல் இருப்பதே சிறுவர் இலக்கியத்திற்கு ஒரு சேவையாகும்.

அறிவியல் நூல்களைச் சிறுவர்க்குத் தரும் அரிய பணியைப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து செய்துவருபவர்

கள் மூவர். அவர்கள், வைத்தண்ணு, என். கே. வேலன், கல்வி கோபாலகிருஷ்ணன்.

'வைத்தண்ணு' என்னும் பெயரில் சிறுவர்க்கு எழுதிவரும் சி. ந. வைத்தீஸ்வரன், சிறுவர் மனவியலை நன்கு அறிந்தவர். கல்விப் பேரறிஞரான மாண்டிசோரி அம்மையாருடன் பழகும் பேறு பெற்றவர். தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர்: இவர் சிறுவர்க்கு எதையும் எளிமையும் தெளிவும் இணைய எழுதுவார்: இவர் எழுதிய 'பூச்சி வாழ்க்கை', 'விநோதக் குருவிகள்' ஆகிய இரண்டும் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றவை. 'சான்றுடன் குட்டிப் பரிசோதனைகள்' என்பது குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு பெற்றது. 'பீங்கானின் கதை' முதியோர் கல்விப் பரிசு பெற்றது. 'பாக்குக்காரன்', 'வாத்தியக்கார வடிவேலு' ஆகிய நூல்களில் கிராமத்து மக்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அண்மையில் (1980ல்) மறைந்த என். கே. வேலன் ஐம்பதுக்கு மேற்பட்ட அறிவியல் நூல்களை எழுதியுள்ளார். 'காற்றின் கதை' 'மின்சாரத்தின் கதை', 'நிலவைச் சுற்றிய கதை' ஆகியன தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றுள்ளன. 'மாமாவின் ஆராய்ச்சிகள்' குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு பெற்றுள்ளது.

'கல்வி' கோபாலகிருஷ்ணன், சிறுவர்க்கான அறிவியல் நூல்கள் மிகுதியாக எழுதியவர். இவர் எழுதிய எல்லாவகையான நூல்களின் மொத்த எண்ணிக்கை 60. இவருடைய பறக்கும் பாப்பா, மந்திரவாதியின் மகன், பண்டைய உலகில் பறக்கும் பாப்பா, கானகக் கன்னி ஆகிய நான்கும் இந்திய அரசின் பரிசு பெற்றவை. 'மணி என்ன' என்பது தென்மொழிப் புத்தக டிரஸ்டின் பரிசு பெற்றது. இந்நூல் அலாரம் கடிகாரத்தின் வடிவத்திலேயே அமைந்தது. இதுவும் பறக்கும் பாப்பாவும் தென்னிந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன.

இவர்களைத் தவிர அறிவியல் நூல்கள் எழுதுவோரில் நா. கி. நாகராசன் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவர். இந்திய அரசினரின் சிறுவர் இலக்கியப் பரிசை 'ராமுவும் நானும்' நூலுக்காக, முதன் முதலில் பெற்றவர் இவரே. இவருடைய 'கஸ்தூரியின் பிறந்த நாள்' நூலும் இந்திய அரசின் பரிசு பெற்றது.

இனி, பரிசுபெற்ற அறிவியல் நூல்களைக் காண்போம்.

ப. நா. பாலசுப்ரமணியத்தின் 'சூ ம்ந்திரக்காளி' குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசு பெற்றது. பொ. திரிகூட சுந்தரம் எழுதிய, 'குழந்தை எப்படிப் பிறக்கிறது?', 'அப்பா வும் மகனும்' தி. ஜ. ர.வின் 'வண்ணாத்திப் பூச்சி', ப. குண சேகரின் 'பூமி அன்னை', பத்மா ராஜகோபாலின், 'பூச்சிகள்' ம. இராஜாராமின் 'எரிகற்கள்' ஆகியன தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றவை. எம். எல். சபரிராஜனின், 'மந்திரவித்தை' எம். பி. குருசாமியின் 'பார்க்கும் பறவை' ஆகியன தென் மொழிப் புத்தக டிரஸ்டின் பரிசு பெற்றவை. ஆழி. வே. இராமசாமியின் 'தம்பிக்குத் திரைப்படம்', 'காந்தத்தின் கதை' ரா. பா. சாரதியின் 'காட்சி கண்காட்சியே' ஆகியன ஏ. வி. எம். மின் அறக்கட்டளைப் பரிசு பெற்றவை. க. வை. துரைசாமி முதலியாரின் 'அழகான ஆலமரம்' எஸ். சுப்பிர மணியத்தின் 'ஹெலிகாப்டரின் கதை' நா. வானமாமலையும் எஸ். தோத்தாத்திரியும் எழுதிய 'அப்பரின் கதை' இந்திய அரிசின் பரிசு பெற்றது.

அறிவியல் நூல்களில் குறிப்பிடத் தகுந்த சில நூல்கள் வருமாறு:

ரப்பரின் கதை (கே. எஸ். லட்சுமணன்), தண்ணீர் (எஸ். நாகராஜன்), நல்ல நீர் (கு. ராஜராம்) காகிதத்தின் கதை (நா. வானமாமலை) காகிதம் (வாண்டுமாமா) தாளின் கதை (என். கே. வேலன்) இரும்பின் கதை (மா. பா. குரு சாமி) எண்ணெயின் சக்தி (எஸ். எஸ். ராமசாமி), வானத்தைப் பாப்போம் (பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி.

மாணிக்கம்), திங்களோ திங்கள் (ப. குணசேகர்) கோள்களின் கதை (கே. எஸ். மகாதேவன்) முடிவுற்ற பயணம் (எஸ். சுப்பிரமணியம்), மாயக் குழாய்கள் (அ. நடராஜன்) மின்விளக்கு (நெ. து. சுந்தரவடிவேலு), 'ஹலோ 999' (ராஜ்குமார்) இரயிலின் கதை (பிறையணிவோன்) 'இளைஞர் வானொலி' (ந. சுப்புரெட்டியார்), 'பறக்கும் மனிதன்' (பெ. தூரன்) கடல் அன்னை (நாக முத்தையா) மலைகளின் கதை (வ. இராமதாசன்) இடியும் மின்னலும் (எஸ். ராமச்சந்திரன்) உங்கள் ஆரோக்கியம் (ச. கு. கணபதிஐயர்), மீன் (கு. ராஜாராம்) சமர்த்து மைனா (தி. ஜ. ர.) பாப்பாவும் பாம்பும் (எம். வி. இராசேந்திரன்) கடலின் குழந்தைகள் (ரமணியன்) வேடந்தாங்கல் (இனியவன்) விலங்குகளின் கதை, (கி. மா. பக்தவத்சலன்) எங்கள் கதையைக் கேளுங்கள் (அழ. வள்ளியப்பா). வானம்பாடி (அநுத்தமா) எறும்பு உலகம் (வாண்டுமாமா) கத்தரிக்காய்க் குடும்பம், அவரைக்காய்க் குடும்பம், வெள்ளரிக்காய்க் குடும்பம் (மூன்றும், ச. ய. சுப்பிரமணியன்,) மரங்களின் கதை (நா. முத்தையா)

அறிவியல் தவிர பிற துறைகளிலும் சிறந்த நூல்கள் வெளிவந்துள்ளன.

அஞ்சல் முறை (வ. சுப்பையா), ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (நவராஜ் செல்லையா), தபால் தலையின் கதை (கி. மா. பக்கதவத்சலன்), புட்டிப்பால் (வைத்தண்ணா), நாலாவது தேவை—இன்ஷ்யூரன்ஸ்பற்றிய நூல் (நாகமுத்தையா), பத்திரிகையின் கதை (தம்பி சீனிவாசன்), புகைப்படம் எடுக்கலாம் (என். ராமகிருஷ்ணா), 'திருவிழாவாம் திருவிழா' (க. ஜெயங்கொண்டான்) பொம்மை பழைய பொம்மை (இரா. நாகசாமி) அம்பிக்கு அரசியல் (நா, ஜகந்நாதன்) நில் கவனி புறப்படு (பி. வி. கிரி) உலக அதிசயங்கள் (டி. ஜே இன்பராஜ்)

டாக்டர் மு. வரதராசனார் எழுதிய எழுத்தின் கதை சொல்லின் கதை, மொழியின் கதை ஆகிய மூன்றும்,

மொழியியல் பற்றியது. பூவண்ணனின் 'யானைக்காய்ப் பொரியல்' நூல் சொற்பொருள் இயல் (Semantics) பற்றியது இவரது 'பொற்கால வாழ்க்கை', சங்ககாலப் பண்பாட்டின் வரலாற்றைக் கூறுகிறது; 'தமிழ் வரலாறு' தமிழ் இலக்கிய வரலாற்றை எளிய முறையில் கூறுகிறது.

கோவி. மணிசேகரனின் 'தமிழக வரலாறு', விக்கிரமனின் 'பொற்காலத்தின் கதை', பூவண்ணனின் 'மூவேந்தர் கதை', 'இராசராசன் கதை' 'அக்பர் கதைகள்' 'சிவாஜி கதைகள்' நாட்டு வரலாற்றைக் கூறும் நூல்களில் சில.

ஜெயகாந்தன் எழுதிய 'பாரதி பாடம்' நூல் பாரதியாரின் பாப்பாப்பாட்டு, முரசு ஆகியவை உணர்த்தும் கருத்துகளை விளக்கும் சிறந்த சிறுவர் நூல். ஒரு கவிஞரின் இலக்கியத்தைச் சிறுவர்க்கு விளக்கிக் கூறும் பா நலன் நூலாக இது அமைந்துள்ளது. இதிலுள்ள 13 கட்டுரைகளை 13 பாடங்கள் எனக் கூறுகிறார். ஆசிரியர் அதற்கேற்ப ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும், பாடநூலில் இருப்பது போல வினாக்களையும் பயிற்சியையும் கொடுத்துள்ளார்.

சிறுவர்க்குப் பயண நூல் எழுதுவதில் எழுத்தாளர்கள் அக்கறை காட்டவில்லை என்று தோன்றுகிறது. காஷ்மீரத்தையும், கல்கத்தாவையும், இலங்கையையும், இங்கிலாந்தையும் காணும் பேறு பெரும்பாலோர்க்குக் கிடைப்பதில்லை. அந்த இடங்களுக்குச் சென்று வருபவர் சிறுவர்களுக்கேற்ற வகையில் அவற்றைப் பற்றிச் சுவையான பயண நூல்கள் எழுதவேண்டும். நேரில் அந்த இடங்களைக் காணும் வாய்ப்புப் பெறுதவர்கள், எழுத்திலாவது அவற்றைக் கண்டு இன்பம் அடையலாம்.

பலவருடங்களுக்கு முன்பு, 'சாரநாத்' என்று ஒரு சிறு நூல் வந்தது. விலை மூன்றணு. அரு. வீரப்பன் என்பவர், புத்தமதச் சின்னங்கள் நிறைந்த 'சாரநாத்' என்ற இடத்திற்குச் சென்று வந்ததை மிக நல்ல முறையில் எழுதியிருந்தார். இதைத்தவிர வேறு பயண நூல் பல்லாண்டுகள் வரை வெளிவரவில்லை.

1979ஆம் ஆண்டுதான் குயிலி ராஜேசுவரி. 'நாங்கள் காணும் இந்தியா—தமிழகம்' 'நாங்கள் காணும் இந்தியா—கேரளம்' ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளார். சிறுவர்க்குப் பயண நூல்கள் மிகுதியாக வெளிவர வேண்டும்.

வாழ்க்கை வரலாறு என்பதும் கட்டுரைகளில் அடங்கும். நாளைய பெரியோரான சிறுவர்களுக்கு நேற்றைய சான்றோர்களின், இன்றைய சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு வழிகாட்டியாகத் திகழும். சிலரது வாழ்க்கை வரலாறு, நாவல்களைக் காட்டிலும் வியப்பூட்டுபவை; சுவை சேர்ப்பவை; பயன் நல்குபவை. எனவே சிறுவர்க்கு எழுதுவோர் வாழ்க்கை வரலாறுகளை நிறைய எழுதியிருப்பதில் வியப்பேதும் இல்லை.

'பாலர் மலர்' பத்திரிகை முதலில் இரண்டு பக்கத்தில் சான்றோரின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிட்டது. பின்னர், காந்தித் தாத்தா (சீதா எழுதியது), 'நேதாஜியின் கதை' (பூவண்ணன் எழுதியது) ஆகியவற்றைத் தொடராக வெளியிட்டது. பூஞ்சோலை, கரும்பு முதலிய பத்திரிகைகள் பெரியோர் சிறுவராக இருந்தபோது அவர்கள் வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்களைத் தொகுத்துக் கொடுத்தன.

ராமுலுசன்ஸ் என்னும் புத்தகநிறுவனம் ஓரணா விலையில் நூற்றுக்கு மேற்பட்ட சான்றோர்களின் வரலாற்றை வெளியிட்டது. இவற்றில் பெரும்பாலானவற்றை நாரண. துரைக்கண்ணன் எழுதினார். பின்னர் இப்படிப்பட்ட முயற்சியை பழனியப்பா பிரதர்ஸ் மேற்கொண்டது. நாட்டுக்குழைத்த நல்லவர் என்னும் வரிசையிலும், அறிவியல் அறிஞர் என்னும் வரிசையிலும் நிறைய நூல்கள் வெளியிட்டுள்ளனர். இவற்றில் சில இந்திய அரசின் பரிசு, தமிழ்நாடு அரசின்பரிசு, ஏவி. எம். அறக்கட்டளைப் பரிசு ஆகியவற்றைப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவற்றை தி. சு. கவியபெருமாளும், எம். வி. வெங்கட்ராமும் எழுதியுள்ளனர். வானதி பதிப்பகமும் வாழ்க்கை வரலாற்று நூல்களைத் தொடர்ந்து வெளி

யிட்டு வருகிறது. வானதி திருநாவுக்கரசு 25 ஆண்டுகளுக்கு முன்னர் நடத்திய ஜில்ஜில் பதிப்பகத்தின் மூலம் நாலணு விலைக்கு வெளியிட்ட 'நேருஜி' என்னும் கையடக்க நூல் இங்கே குறிப்பிடத் தகுந்தது. இந்நூலில் சின்னஞ் சிறு சொற்றொடர் களால் நேருவின் வாழ்வையும் பண்பு நலனையும் படம் பிடித்துக் காட்டினர், தமிழ் வாணன்.

வாழ்க்கை வரலாற்று நூல்களில் பரிசுபெற்ற நூல்களைக் கீழே காண்க. அடைப்புக் குறியில் ஆசிரியர் பெயர் அளிக்கப் பட்டுள்ளது.

**இந்திய அரசினரின் பரிசு பெற்றவை:** கௌதம புத்தர் (ஆர். வஜ்ரேஸ்வரி) தாகூரின் வாழ்விலே (ஏ. திலகவதி) நேருவின் கதை (வை. சுப்ரமணியன்) வீரமாமுனிவர் (பூவண்ணன்) வீரமாமுனிவர் ஏவி.எம் அறக்கட்டளைப் பரிசும் பெற்றது. நாடுகாத்த நல்லவர்கள் (தி. சு. கலியபெருமாள்).

**தமிழ நாடு அரசு பரிசு பெற்றவை:** ஜவகர் கதை (பொ. திரிகூடசுந்தரம்) சத்தியவேட்கை[1] (மி. லி. சபரி ராஜன்) சின்னஞ் சிறு வயதிலே, பெரியோர் வாழ்விலே முதல் தொகுதி (அழ. வள்ளியப்பா) வழிகாட்டிய உத்தமர்[1] (எஸ். ஏ. ரஹிம்) பாப்பாவுக்கு பாரதி (தி. ஜ. ர) நேருமாமா (மா. சண்முகசுப்ரமணியம்), பாரதி வாழ்விலே (தி. சு. கலிய பெருமாள்), சரோஜினிதேவி, இந்திரகாந்தி (எம் வி. வெங்கட்ராம்), அன்பு வழி நடந்த அண்ணல்[1] (எம். வேலுச் சாமி) குழந்தைகளுக்குக் கவிதை சொன்னவர் கதை (அ. அப்துல்கரீம்)

**ஏவி. எம் அரக்கட்டளைப் பரிசு பெற்றவை:** சர். சி. வி. ராமன் (தி. சு. கலியபெருமாள்), டாக்டர் ஹாப்கின்ஸ் (வைத்தண்ணு), இசை வளர்த்த தியாகராசர் (அழ. வே.

---

1 இக்குறியிட்டவை காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறு நூல்கள்.

இராமசாமி) அன்னை தெரசா(கே. பி. நீலமணி) தமிழறிஞர் திரு. வி. க. (ராஜலட்சுமி)

இவற்றைத்தவிர ஏராளமான வாழ்க்கை வரலாறு நூல்கள் உள்ளன. நெ. து. சுந்தரவடிவேலு எழுதிய 'நஞ்சுண்டவர்' சிலுவையில் மாண்டவர், விளக்குப்பாவை, வானொலி வழங்கியவர் ஆகிய நூல்கள் வினாவிடைமுறையில் எழுதப்பட்டவை மேலே கண்ட நூல்களில் 'நேருமாமா' உரையாடல் வடிவில் எழுதப்பட்ட நூல்.

நேஷனல் புக்டிரஸ்டின் நேரு பால புத்தக வரிசையில் வண்ணப் படங்களுடன், பெரிய அளவில் பல வாழ்க்கை வரலாறு நூல்களை வெளியிட்டுள்ளது.

புதியன கண்டவர் (வே. தில்லைநாயகம்) கண்டு பிடித்தவர் கதை (கி. மா. பக்தவத்சலன்) கதை சொன்னவர் கதை-மூன்று தொகுதி (அழ.வள்ளியப்பா) ராஜாஜியின் கதை (ரமணீயன்)மாவீரன் நெப்போலியன் (பூவை அமுதன்) அருள் பெற்ற கவிஞர்கள் (ஆர்வி), விளையும்பயிர் (கி. வா. ஜகந்நாதன்), ஆகியனவும் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்த நூல்கள்.

கட்டுரை நூல்களில் மிகப்பெரும்பாலான நூல்கள், ஆங்கில மொழி நூல்களின் தழுவலாக, அல்லது பல நூல்களில் திரட்டி எடுத்துத் தமது தமிழ்நடையில் கொடுத்தவையாக உள்ளன. என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

கட்டுரை நூல்களின் சிகரமாகத் திகழ்பவை 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' தொகுதிகள். தமிழ் வளர்ச்சிக் கழகம் இதைப் பல வண்ண அச்சில், கெட்டியான தாளில் பத்துத் தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. பெ. தூரன் பிரதம ஆசிரியராக அமைந்து இதனைத் தயாரித்துக் கொடுத்துள்ளார். தமிழ்ச் சிறுவர்களுக்கு இக் கலைக்களஞ்சியம் பெறற்கரும் செல்வமாகும். தமிழ்ச் சிறுவர் இலக்கியத்திற்கு இத் தொகுதிகள் தனிப் பெருமையைப் பெற்றுத் தருகின்றன என்பது பொருந்தும்.

6

# சிறுவர் நாடகங்கள்

"என்னோடு போர் புரிய நிற்கிறாயே! நீயார்? எந்தக் குலத்தைச் சார்ந்தவன்? உன் பெற்றோர் யார்? என்முன் நிற்க உனக்கு என்ன தகுதி உள்ளது?" என்று கேட்டான் அர்ச்சுனன்.

அவன் எதிரே நின்ற கர்ணன் கலங்கவில்லை. தான் இழி குலத்தவன், தேரோட்டியின் மகன் என்பதைத்தான் அர்ச்சுனன் சுட்டிக் காட்டுகிறான் என்பதை அவன் அறிவான். என்றாலும் ஆத்திரம் கொள்ளவில்லை. அமைதியாகவே பதில் சொன்னான்.

"கங்கையைப் புனித நதி என்று சொல்கிறோம். ஆனால், அந்த நதி எங்கே தோன்றியது? எப்படித் தோன்றியது? தோன்றியபோது இருந்த நிலை என்ன? இவற்றை நாம் ஆராய்வதில்லை. நாம் காணும் நதியின் தன்மையையே எண்ணிப் பார்க்கிறோம். அர்ச்சுனா, நான் யார்? எங்கே பிறந்தேன்? எப்படிப் பிறந்தேன் என்று ஆராய வேண்டாம். இப்போது என் நிலை என்ன? தகுதி என்ன? இவற்றை மட்டுமே எண்ணிப் பார்."

கர்ணன் இந்தப் பதிலை அர்ச்சுனன் மனத்தில் பதியுமாறு சொன்னான்.

இது பல ஆண்டுகளுக்கு முன் நடந்த நாடகத்திலே ஒரு காட்சி. இதைக்கண்ட வங்காளச் சிறுவன் ஒருவன் மனத்தில் கர்ணன் கூறிய பதில் ஆழப் பதிந்துவிட்டது.

அரிச்சந்திரனை எப்படியாவது பொய் பேசவைக்க முயல்கிறார் விசுவாமித்திரர். அரச போகங்களை இழந்த அரிச்சந்திரன், தன் ஒரே மகனை இழந்து தன் மனைவியையும் தன் கைகளாலே கொல்ல வேண்டிய நிலையிலும், பொய்பேச மறுக்கிறான்.

இந்த நாடகத்தைக் கண்ட ஒரு குஜராத்திச் சிறுவனின் பளிங்கு உள்ளத்தில் அரிச்சந்திரனின் வாய்மை பதிந்துவிடுகிறது.

o o o

பாரதக் கதையை நாடகத்தில் கண்ட வங்கச் சிறுவன் பெரியவனான பிறகும் அன்று கர்ணன் கூறிய பதிலை மறக்கவேயில்லை; சாதிபேதத்திற்கு என்றும் இடம் கொடுக்கவில்லை. இந்த வங்கச் சிறுவன்தான் ஜகதீச சந்திரபோஸ்!

அரிச்சந்திரனின் நாடகத்தைக் கண்ட குஜராத்திச் சிறுவன் பிற்காலத்திலும் அதை மறக்கவில்லை. உண்மையைத் தமது உயிரெனக் கருதிய உத்தமர் காந்தியடிகள்தான் அந்தச் சிறுவன்!

போஸும் காந்தியும் இளமையில் நாடகத்தில் கண்டவற்றை மறக்கவேயில்லை. அவை அவர்களுடைய வாழ்வைச் செம்மையாக்கிச் சிறப்புறச் செய்தன. அதே கருத்துகளை அவர்கள் படித்திருந்தால், கேட்டிருந்தால் அவை அவ்வளவு வன்மையோடு நிற்குமா என்பது ஐயந்தான். நாடகத்தின் உண்மையான சக்தி இதுதான். காட்சியாகக் காண்பது எளிதில் மனத்தை விட்டு அகலுவதில்லை.

சிறுவர்கள் படித்துத் தெரிந்து கொள்வதைக் காட்டிலும், கேட்டுத் தெரிந்து கொள்வதைக் காட்டிலும் பார்த்துத் தெரிந்து கொள்வது எளிது. நாடகத்தில் காண்பது கல்மேல் எழுத்தாக மனத்தில் பதிந்துவிடுகிறது.

சங்க காலத்தில் சிறுவர்க்கான பாடல் 'பிசி' என்னும் பெயரிலும், சிறுவர்க்கான கதை, 'பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி' என்னும் பெயரிலும் வழங்கின. பாடலை இசைத் தமிழாகக் கொள்ளலாம். கதையை இயற்றமிழாகக் கொள்ளலாம். முத்தமிழில் இசைத் தமிழும் இயற்றமிழும் சங்ககாலச் சிறுவர் இலக்கியத்தில் இருந்தன. நாடகத் தமிழ் மட்டும் இல்லை. சங்ககாலத்துக்குப் பின்னரும் சிறுவர்க்கான நாடகங்கள் தோன்றியதாகத் தெரியவில்லை.

காலம் மாறியது. வெள்ளைக் காரர்கள் நம் நாட்டுக்கு வந்தனர். அதனால் மேனாட்டு இலக்கியக் கூறுகளை நாமும் கற்றுச் சிறந்தோம். அவர்கள் சிறுவர் இலக்கியத்துக்குத் தனிச் சிறப்பளிப்பதைக் கண்டு, நாமும் அத்துறையில் நுழைந்தோம். சிறுவர் நாடகங்களை எழுதியதும், மேடையேற்றியதும் கூட அவர்களைப் பின்பற்றித்தான்.

சிறுவர் நாடகங்கள் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும். அப்போதும் பத்திரிகைகளும் புத்தகங்களும் சிறுவர் நாடகத்தை ஆதரிக்கவில்லை. பள்ளிக்கூடங்களே இச்செயலைச் செய்தன. பள்ளிக்கூடத்தில் நடக்கும் விழாக்களில், பள்ளி ஆசிரியர்கள் தாம் எழுதிய நாடகங்களை மாணவர்களைக் கொண்டு மேடையேற்றினர். இந்நாடகங்களும் நூலாக வெளியடப்படவில்லை. 1940க்கு முன்னே சிறுவர் நாடகநூல் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. பாடப்புத்தகங்களில் சிறு நாடகங்கள் சில இடம் பெற்றன. அவ்வளவே!

இந்திய விடுதலைக்கு முன், தமிழ் நாட்டில் சிறுவர்களை முக்கிய நடிகர்களாகக் கொண்ட நாடகக்குழுக்கள் இருந்தன. மதுரை பால விநோதசங்கீதசபா, முத்துகிருஷ்ணன் பாய்ஸ்

கம்பெனி, புளியமாநகர் கிருஷ்ணு ரெட்டியார் பாய்ஸ் கம்பெனி முதலியன சிறுவர்களைக் கொண்டு நாடகங்களை அரங்கேற்றின. அவை பெரியவர்களுக்கான நாடகங்கள்; சிறுவர்கள் இந்நாடகங்களில் பெரியவர்கள் வேடமேற்று நடித்தனர். இவை சிறுவர் நடித்த நாடகங்களே தவிர, சிறுவர்க்கு உரிய நாடகங்கள் அல்ல.

சிறுவர் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தவை பள்ளிக்கூடங்களே. அவை துருவன், பிரகலாதன், கண்ணன் ஆகிய சிறுவரைப் பற்றிய புராண நாடகங்களை மேடையேற்றின. அசோகன் துறவு, அலெக்சாண்டர்—புருசோத்தமன் சந்திப்பு முதலான வரலாற்று நாடகங்களும் நடத்தப்பட்டன. சமூக நாடகங்கள் அரிதாகவே மேடையேறின.

சிறுவர் பத்திரிகைகள் பெருகிய காலத்தில்கூடப் பத்திரிகைகள் நாடகங்களை வெளியிடுவதில் அக்கறை காட்டவில்லை.

சிறுவர் நாடகத்திற்கு ஊக்கமளித்து உயரச்செய்தது சென்னை வானொலி நிலையமே: வாரத்திற்கு இரண்டு சிறுவர் நிகழ்ச்சிகள்; ஒவ்வொன்றிலும் ஒரு சிறுவர் நாடகம் நிச்சயம் இருக்கும். அதனால் ஆண்டுக்குச் சுமார் 100 நாடகங்களை உருவாக்கியது. வானொலி குழந்தைகள் தினமான நவம்பர் 14ஆம் நாளில், சிறுவர் கலைநிகழ்ச்சியை சிறுவர் முன்னிலையில் மேடையில் நடத்தியது. 'வானொலி அண்ணா' எனப் புகழப்பட்ட ர. அய்யாசாமி சென்னை வானொலியின் சிறுவர் நிகழ்ச்சிப் பொறுப்பாளராக இருந்து செய்த சேவை பெரிது. அவர்தான் வானொலியில் சிறுவர் தொடர் நாடகங்களை முதன்முதலில் ஒலிபரப்பினார். பெரியோர்க்கு நாடக விழாவை வானொலி நடத்துவது போல, சிறுவர் நாடகவிழா நடத்தினார். வானொலி சிறுவர் சங்கங்களைச் சென்னை நகரங்களிலும், சுற்றுப்புற ஊர்களிலும் அமைத்தார். இச்சங்கம் ஒவ்வொன்றும், ஒரு சிறுவர் நாடகக் குழுவிற்குச் சமமானது. இச்சங்கங்களையிணைத்து சென்னை வானொலிச் சிறுவர் சங்கப்

பேரவை அமைத்தார். இப்பேரவையும் அவ்வப்போது சிறுவர் நாடகங்களை மேடையேற்றியது. இந்த அளவு இல்லையென்றாலும் திருச்சி வானொலி நிலையமும் புதுவை வானொலி நிலையமும் கூடச்சிறுவர் நாடகங்களை ஒலிப்பரப்பின.

குழந்தை எழுத்தாளர் சங்கமும் சிறுவர் நாடகத்துக்குத் தொண்டாற்றியது. 1955ல், ஒரு மணிநேரச் சிறுவர் நாடகப் போட்டியை ஏற்படுத்தியது. இதில் பூவண்ணனின் 'உப்பில்லாதபண்டம்' நாடகம் பரிசு பெற்றது அதே ஆண்டில் ஒரு சிறுவர் நாடக விழாவையும் சங்கம் நடத்தியது. மூன்று நாள் நடந்த விழாவில் ஆறுநாடகங்கள் அரங்கேறின. அவற்றுள் கூத்தபிரானின் 'அன்னை சொல் அமிர்தம்' பரிசு பெற்றது. இவ்விழாவில் அரங்கேறிய தம்பி சீனிவாசனின் 'தங்கக் குழந்தைகள்' நாடகம் பின் நூலாக வந்து, இந்திய அரசினர் பரிசும் பெற்றது. இதுவரை அரசினர் பரிசு பெற்ற சிறுவர் நாடகநூல் இது ஒன்றே.

ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு நாடகங்களை எழுதவும் மேடை யேற்றவும் வாய்ப்பு அதிகமுண்டு. சாந்தலட்சுமி அம்மையார் பல நாடகங்களை எழுதி அரங்கேற்றினார். இவர் நாடகங்களில் இசைக்கும் நடனத்துக்கும் முக்கியத்துவம் இருந்தது. இவரது நாடகங்களில் 'பிச்சைக்கார ராஜா' பல முறை நடிக்கப்பட்ட சிறப்புப் பெற்றது. ஆசிரியராகப் பணியாற்றும் கி. மா. பக்தவத்சலன், ஏராளமான நாடகங்களை எழுதி மேடையேற்றினார். அசோகன், ராணிமங்கம்மா, ராணிபத்மினி ஆகிய நாடகங்கள் நூல் வடிவமும் பெற்றன. இவர் நாடகங்களில் வசனம் சிறப்பிடம் பெற்றது.

தணிகை உலகநாதன் ஆசிரியராகவும் வானொலிச் சிறுவர் சங்கப் பேரவைத் தலைவராகவும் இருப்பவர். இவர் மேடையேற்றும் நாடகங்களில், நாடக மாந்தர் நிறைய பேர் இருப்பார்கள். பத்துநிமிட நாடகமானாலும் அதில் பத்துக்கு மேற்பட்டவர்கள் நடிப்பார்கள். உண்மையான பூமாட்டையே மேடைக்குக்கொண்டு வந்து சிறுவர்களை வியக்கச் செய்தவர்.

களிக்கச் செய்தவர். இவர் நாடகங்கள், 'வளநாடும் இளங் கன்றும்' 'சிறுவர் நாடக விருந்து' 'எலி வேட்டை' என்னும் நூல்களாக வெளிவந்துள்ளன. 'The pied piper' என்னும் ஆங்கிலக் கதைப் பாடலைத் தழுவி எழுதப் பட்டதே 'எலி வேட்டை' நாடகம். இவர் நாடகங்களில் நல்ல தமிழைக் கேட்கலாம்.

சிறுவர் நாடகங்கள் எழுதுவதில் புகழ் பெற்ற மற்றொருவர் கூத்தபிரான். இவர் இருநூறுக்கு மேற்பட்ட சிறுநாடகங்கள் எழுதியுள்ளார். 'அச்சு பிச்சு', 'சுருக்குப் பை', 'சொப்பனக் குழந்தை' ஆகியன இவர் வழங்கிய தொடர் நாடகங்கள். இவருடைய சிறு நாடகங்கள் 'சின்னக் குருவி'. 'நாலும் நாலு விதம்' 'சிக்குடு கிச்சுடு' ஆகிய நூல்களாக வெளி வந்துள்ளன. 'சிக்குடு கிச்சுடு' நாடக நூல், நாடகக் காட்சிகளின் புகைப் படங்களோடு அழகாக வெளி யிடப்பட்டுள்ளது. இவர் தற்போது சென்னை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றுகிறார். இவர் நாடகங்கள் நகைச்சுவை மிக்கவை. பார்க்கும் சிறுவரைக் குலுங்கக்குலுங்க சிரிக்க வைப்பவை.

இதுவரை சிறுவர் நாடக நூல்கள் அதிகமாக வெளியிட் டிருப்பவர் பூவண்ணன். உப்பில்லாத பண்டம், அன்பின் நிலையம், ஊன்றுகோல், பெயர் தந்த பெருமை ஆகிய நான்கும் முழுநீள நாடகங்கள். என்ன காரணம், பொம்மைத் தேர், உண்மைக்குவெற்றி, கண்ணன் மண்டபம், அழகுக்கு அழகு ஆகியன சிறு நாடகங்களின் தொகுப்பு நூல் கள். 'அன்பின் நிலையம்' என்னும் நாடகமே சிறுவர்களால் சிறுவர்க்காக அரங்கேற்றப் பட்ட முதல் முழுநேர சிறுவர் நாடகம் (2½ மணிநேர நாடகம்). இது பலமுறை அரங்கேற்றப் பட்ட பெருமையுடையது 'உப்பில்லாத பண்டம்' தமிழ் நாட்டின் பல்வேறு ஊர்களில் பள்ளிமாணவர்களால் நடிக்கப் பட்டது. 'எழுத்து மாறாட்டம்' (பொம்மைத் தேர் தொகுதியில் உள்ளது) என்னும் நகைச்சுவை நாடகம் நூறு

முறைக்கு மேல் அறங்கேறிய புகழ் மிக்கது. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இடம் பெற்றது.

சௌந்தர் தனது செல்வழத்து வானொலிச் சிறுவர் சங்கம் மூலம் தன் நாடகங்களை மேடையேற்றியுள்ளார். வானொலியிலும் ஒலிபரப்பியுள்ளார். மாயமோதிரம், செங்கரும்பு ஆகியன இவருடைய நாடகத் தொகுதிகளாகும். இவருடைய 'எல்லோரும் வாழ்க' என்னும் நாடகம் ஏவி. எம். அறக் கட்டளைப் பரிசு பெற்றது.

ஆலந்தூர் மோகனரங்கனின் கவிதை நாடகம் பற்றி முன்னர் குறிக்கப்பட்டது. இவருடைய 'பொன்னம்மாள் ஒரு புதுமைப் பெண்' என்னும் நாடகம் ஏவி. எம். அறக் கட்டளையின் தங்கப் பதக்கம் பரிசு பெற்றது, 'வெற்றி எங்கள் கையிலே' 'நாங்கள் நல்லவர்கள்' ஆகியனவும் இவருடைய நாடகங்களே.

கி. பானுமதியின் 'பண்பும் பாசமும்', எஸ். வஜ்ரவேலு வின் 'கண்ணன் எங்கள் சேவகன்' பூதலூர் முத்துவின் 'நல்லவன்' மாமூலன் எழுதிய 'நீலா நீலா ஓடிவா' ஆகியன வும் ஏவி. எம். அறக்கட்டளைப் பரிசு பெற்ற நாடகங்களாகும்.

வைத்தண்ணா நாடக அரங்கேற்றத்தில் ஒரு புதுமையைச் செய்தார். குழந்தை எழுத்தாளர் சங்கம் அப்போது கதை சொல்லும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண் டிருந்தது. அதன் பொதுச் செயலாளராகவிருந்த நான் வைத்தண்ணாவைக் கதை சொல்ல அழைத்தேன். வைத்தண்ணா வந்தார். கையில் ஒரு கனத்த நோட்டுப் புத்தகத்துடன் எழுந்தார். 'நான் கதை சொல்லப் போவ தில்லை நாடகம் சொல்லப் போகிறேன்' என்று கூறி ஒரு நாடகத்தைப் பல குரலில் பேசி-நடித்துக் காட்டினார். ஐரோப்பியர் இந்தியாவிற்கு வந்ததிலிருந்து இந்தியா விடுதலை பெற்றது வரையுள்ள வரலாற்றை நாடக நிகழ்ச்சி கள் சுவையாகக் கூறின. நாடகத்தின் பெயர், 'இன்குலாப் ஜிந்தாபாத்'. வைத்தண்ணா ஒருவராக நின்று படித்தும்

நடித்தும் காட்டிய அந் நிகழ்ச்சியைச் சிறுவர்கள் பெரிதும் ரசித்து மகிழ்ந்தார்கள். இந் நாடகம் இதுவரை நூலாக வெளி வரவில்லை. இது போன்ற புது முயற்சிகளால் சிறுவர் நாடகக் கலை செழித்து வளரும்.

பாணனின் 'சமர்த்து மீனு', ஆர்வியின் 'கறுப்பு ராஜ குமாரி', ர. லட்சுமியின் 'சிறுவர் நாடகக் கதைகள்' நெ. சி. தெய்வசிகாமணியின் 'ஒரு நாள் அரசன்', ரேவதியின் 'புல்லாங்குழல்' ந. வே. இளங்கோவின் 'பிஞ்சு மனம்' ராஜத்தின் 'நல்ல மனிதர்' ஆகியனவும் குறிப்பிடத் தகுந்த நாடக நூல்கள். இராஜபாளையத்து மு. சிவம் பல சிறுவர் நாடகங்களை எழுதி அரங்கேற்றியுள்ளார்.

அண்மைக் காலத்தில் தோன்றிய தொலைக் காட்சி வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் 'கண்மணிப் பூங்கா' என்னும் பெயரில் அரைமணி நேர சிறுவர் நிகழ்ச்சியைத் தரு கிறது. இதுவும் நல்ல நாடகங்களைச் சிறப்பான முறையில் ஒளிபரப்புகிறது. தொடக்கத்தில் வெ. நல்ல தம்பி இதன் பொறுப்பாளராகத் திகழ்ந்தார். இவர் நாடகங்கள் எழுது வதில் வல்லவர். சென்னை வானொலி நிலையத்திலும் பல் லாண்டுகள் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகத் தொண்டு செய்தவர்.

தரமான நாடகங்களைத் தமிழ் மணம் வீச அரங்கேற்றும் டி. கே. எஸ். சகோதரர்கள் சிறுவர் நாடகத்திற்குச் செய்த தொண்டு மறக்க முடியாதது. 1965 ஆம் ஆண்டு, 'அப்பா வின் ஆசை' என்னும் சிறுவர் நாடகத்தை அரங்கேற்றினர். இந்தியாவிலேயே தொழில் முறைநடிகர்களால் அரங்கேற்றப் பட்டமுதல் முழுநீளச்சிறுவர் நாடகம்இதுவே. 1967ல்,'பலாப் பழம்' என்னும் மற்ெறாரு முழுநீளச் சிறுவர் நாடகத்தை நடத் தினர். இரண்டும், தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றத்தின் மானிய உதவிப் போட்டியில் பரிசு பெற்றவை. இவ்விரு நாடகங்களையும், நாடகத்தின் பாடல்களையும் திறமிக்க எழுத் தாளர் திருச்சி பாரதன் தேன் தமிழில் எழுதினர். இவை நூல்களாக வெளிவந்துள்ளன.

டி.கே.எஸ். சகோதரர்கள் தொடங்கிய நற்பணியை மற்றத் தொழில் முறை நாடகக் குழுவினர் தொடராதது பெருங்குறையாகும். மனோகரின் நாடகக் குழு, சகஸ்ர நாமத்தின் நாடகக்குழு, இன்னும் உள்ள பிற குழுக்கள் தலா ஒரு சிறுவர் நாடகத்தை அளித்திருந்தாலும் எத்தனையோ சிறுவர் முழுநீள நாடகங்கள் தோன்றியிருக்கும். மேற்கண்ட தொழில் முறை நாடகக் குழுவினர் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது ஒரு சிறுவர் நாடகத்தைத் தயாரிக்க முன் வர வேண்டும். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தினர் சிறுவர் நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றுபவர்க்கு மானியம் அளித்து ஊக்குவிக்க வேண்டும்.

சென்னை மவுண்ட்ரோடிலிருந்த சட்ட மன்றம் மீண்டும் கோட்டைக்கே சென்ற போது, மவுண்ட்ரோடு சட்ட மன்றக் கட்டடம் "பாலர் அரங்க"மாக மாற்றப்பட்டது. அங்கே, வெள்ளி, சனி, ஞாயிறுகளில் சிறுவர் திரைப்படம் காட்டினர். ஒரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் சிறுவர் நாடகங்களை அரங்கேற்றினர். இப்போது பாலர் அரங்கம் கலைவாணர் அரங்கமாக மாறி, சிறுவர்களை முற்றிலும் மறந்து விட்டது. இக்கலைவாணர் அரங்கம் வாரத்தில் ஒரு நாளாவது சிறுவர் நாடகத்தை அரங்கேற்ற தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேல் நாடுகளில் சிறுவர் நாடகங்கள் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளன. அதற்குக் காரணம், அங்கே சிறுவர் நாடகங்களை அரங்கேற்றுவதற்கென்று தனி அரங்குகள் உள்ளன. கிழக்கு ஜெர்மனியில் லிச்டன்பர்க் (Lichten berg) மாவட்டத்தில் சிறுவர் நாடக அரங்கு ஒன்று உள்ளது. அங்கே ஒவ்வொரு நாளும் சிறுவர் நாடகம் நடைபெறுகிறது. இதுபோல முழுக்க முழுக்கச் சிறுவர் நாடகங்களையே அரகேற்றும் அரங்குகள் அந்நாடு முழுவதிலும் பல உள்ளன. இதைத் தவிர அந்நாட்டில் உள்ள நாடக அரங்கு ஒவ்வொன்றும் ஆண்டுக்குக்

குறைந்தது இரண்டு சிறுவர் நாடகங்களையாவது அரங்கேற்றுகிறது.

நம் நாட்டில் நாடக அரங்குகளுக்குக் குறைவில்லை. நாடகம், நடனம் முதலியவற்றைத் தம் உறுப்பினர்களுக்கு வழங்கும் சபாக்களுக்கும் குறைவில்லை. நாடகங்களை மேடையேற்றும் தொழில்முறைக் குழுக்களுக்கும் அமைச்சூர்க் குழுக்களுக்கும் குறைவில்லை. அரங்குகளின் உரிமையாளர்களோ, நாடகம் நடிக்கும் குழுவினரோ, நிகழ்ச்சிகளை வழங்கும் சபாவினரோ சிறுவர்களை எண்ணிப் பார்ப்பதில்லை. பெரியவர்களோ தாம் பார்க்கும் நாடகங்களையே தம் பிள்ளைகளும் பார்பதில் திருப்தியடைந்துவிடுகிறார்கள். இந்நிலை மாற வேண்டும்.

திரைப்பட கொட்டகைகள் ஓர் ஆண்டில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு தமிழ்த் திரைப்படத்தைத் திரையிட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இதுபோல நாடக அரங்குகள் வாரத்தில் ஒரு நாள் நிச்சயம் சிறுவர் நாடகத்தை நடத்த வேண்டும் என்றும், நாடகக் குழுவினர் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை சிறுவர் நாடகம் ஒன்றை அரங்கேற்ற வேண்டும் என்றும், சபாக்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை சிறுவர் நாடகத்தை தம் உறுப்பினர்க்கு வழங்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்க வேண்டும். இத்தகைய ஆணை சிறுவர் நாடகப் பயிரைச் செழிக்கச் செய்யும்.

சிறுவர்கள் விரும்புவது நாடகத்தையே! குழந்தை எழுத்தாளரின் படைப்புத் திறனையும், பாலர்களின் நடிப்புத் திறனையும் ஒன்றாக வெளிப்படுத்துவது சிறுவர் நாடக மேடையே! சிறுவர் உள்ளத்தில் நல்ல விதைகளை விதைத்து, அவர்களைப் பண்படுத்த வல்லது சிறுவர் நாடகம். இதை வளர்ப்பது நாட்டுக்கும் மொழிக்கும் செய்யும் நல்ல தொண்டுக்கு நிகரானது.

7

# சிறுவர் பத்திரிகைகள்

அறிஞர்தம் இதய ஓடை
    ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
    செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
    குவலயம் ஓங்கச் செய்வாய்!
நறுமண இதழ்ப்பெண் ணேஉன்
    நலம்காணார் ஞாலம் காணார்.

இது பத்திரிகையைப் பெண்ணாக உருவகித்துப் பாரதிதாசன் அதற்குச் சூடும் புகழ்மாலை. பத்திரிகையைப் பார்க்காதவர் பாரினைப் பார்க்காதவர் என்று கவிஞர் கூறும் கருத்து அனைவரும் ஒருமுகமாக ஏற்றுக் கொண்ட ஒன்றாகும்.

பத்திரிகையை எல்லோரும் படிக்கவேண்டும். உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேற்றுமையின்றி, ஏழை செல்வர் என்ற பேதமின்றி அனைவரும் படிக்கவேண்டும்.

"தெருப்பெருக் கிடுவோ ருக்கும்
    செகம்காக்கும் பெரியோர்க் கும்ஒரு
இருப்பிற் பத்திரிகை நாளும்
    இருந்திடல் வேண்டும்!"

என்று தொடர்கிறார் பாரதிதாசன். தோட்டி முதல் தொண்டைமான் வரை அனைவர்க்கும் பத்திரிகை வேண்டும். ஆனால் சிறுவர்கள்? அவர்களுக்குப் பத்திரிகை வேண்டாமா? கவிஞர் அவர்களை மறந்து விடாமல்,

மண்ணில்
கருப்பெற் றுருப்பெற் றிளநடை
பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை வாசித்தல்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!

என்று கூறுகிறார்.

கவிஞர் கூறுவது என்ன? ஐந்து வயதுச் சிறுவர்களும் பத்திரிகையைப் படித்தால்தான் நல்ல வாழ்க்கை பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள், எந்தப் பத்திரிகையைப் படித்தல் வேண்டும்? பெரியவர்களுக்கான பத்திரிகைகளையா? அவற்றைச் சிறுவர் படிக்க முடியுமா? படித்தால்தான் பொருள் புரியுமா? ஐந்து வயதுச் சிறுவர்கள் படிக்கச் சிறுவர் பத்திரிகைகள் வரவேண்டும். அவற்றைச் சிறுவர்கள் படித்துப் பயன் பெற வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

சிறுவர்களுக்குப் பத்திரிகை தேவை; சிறு குழந்தைகளும் அத்தகைய பத்திரிகைகளைப் படித்தல் வேண்டும். இதை சுமார் நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்னேயே இந் நாட்டுக்கு வந்த கிறித்தவர்கள் உணர்ந்தனர். தமிழ் மொழிக்குப் பல்வகையிலும் தொண்டாற்றிய அப்பெரு மக்கள் சிறுவர் பத்திரிகையினையும் தோற்றுவித்தனர்.

தமிழில் முதன் முதலாக 1831ஆம் ஆண்டில்தான் பத்திரிகை தோன்றியது. இதன் பெயர் 'தமிழ்ப்பத்திரிகை' (Tamil magazine). முதல் தமிழ்ச்சிறுவர் பத்திரிகை எப்போது தோன்றியது?

1840-இல்!

முதல் தமிழ்ப் பத்திரிகை தோன்றிய ஒன்பதாண்டுகளுக்குப் பின்னர் தமிழில் முதல் சிறுவர் பத்திரிகை தோன்றி விட்டது. பெயர் 'பால தீபிகை' (Children's Lamp) இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவந்த முத்திங்களிதழ். இது நாகர் கோயிலிலிருந்து வெளி வந்தது. இந்த அரிய தகவலை ஜான் முர்டாக் தருகிறார்.[1] இந்தப் பத்திரிகை பல ஆண்டுகள் தொடர்ந்து வெளி வந்ததாகத் தெரிகிறது. தம்மிடமுள்ள 'பாலதீபிகை' இதழ்களில் கடைசியாக இருப்பது, 1852 இல் அச்சிட்டது என்று குறிப்பிடுகிறார், ஜான் முர்டாக். இதன்படி பாலதீபகை குறைந்தது. பதின்மூன்று ஆண்டுகள் வெளிவந்துள்ளது. அதற்குப் பின்னரும் கூட வெளிவந்திருக்கலாம். இந்தக் காலத்தில்கூட ஒரு சிறுவர் பத்திரிகையை 13 ஆண்டுகள் நடத்துவது மிகவும் அரிய செயல்.

1849-ல் 'சிறுபிள்ளைகளின் நேசத் தோழன்' (Childern's Friend) என்னும் மற்றொரு முத்திங்கள் இதழ் பாளையங்கோட்டையிலிருந்து வெளிவந்தது. இதுவும் பல ஆண்டுகள் தொடர்ந்து வந்தது.

1858ல், தென்னிந்திய கிறித்தவ பள்ளிக்கூடப் புத்தகச் சங்கத்தார் 'மிஷன் பள்ளிப் பத்திரிகை' (The mission school magazine) என்னும் பத்திரிகையை வெளியிட்டனர்.

1859—இல் இலங்கையின் யாழ்ப்பாணத்திலிருந்து 'பாலியர் நேசன்' என்னும் பத்திரிகை வெளி வந்தது. இது பெரிய தாளை மடித்து நான்கு பக்கங்களைக் கொண்ட பத்திரிகையாக அமைந்தது. இதை ரெவரண்ட் ஈ. பி.

---

1 A quarterly Magazine for the young, 'Pala Tipikai (Children's Lamp) was commenced at Nagercoil about 1840 and was continued for a number of years The last in possession of compiler was printed in 1852-classified catalogue of Tamil printed Books-compiled by John Murdoch (1819-1904)

ஹேஸ்டிங்ஸ் (Rev. E. P. Hastings) என்பவர் நடத்தினர். இதன் ஆண்டுச் சந்தா எட்டணு (50காசு).

மேலே கண்ட சிறுவர் பத்திரிகைகளைப் பற்றிய தகவல்களைத் தொகுத்தளித்த ஜான் முர்டாக் அவர்களைச் சிறுவர் இலக்கியவுலகம் நன்றியுடன் நினைத்துப் போற்ற வேண்டும்.

மேற்கண்ட சிறுவர் பத்திரிகைகளை நடத்தியவர்கள் அனைவரும் கிறித்தவர்கள். அவர்கள் சிறுவர் இலக்கியத்திற்குச் செய்த சேவையும் போற்றத்தக்கது.

சிறுவர் பத்திரிகை வரலாறு நல்ல தொடக்கத்தைப் பெற்றுள்ளது. ஆனால் தொடக்கத்துக்குத் தக்க வளர்ச்சியில்லை. இன்றைக்கு 140 ஆண்டுகளுக்கு முன்னரே சிறுவர் பத்திரிகை தோன்றியது என்னும் பழமைக்குத் தகுந்த வளர்ச்சியை-இடையருத தொடர்ச்சியை சிறுவர் பத்திரிகைகள் பெறவில்லை என்பது பெருங்குறையே.

'பாலியர் நேசன்' தோன்றியதற்குப் பின் அறுபதாண்டுகள் வரை வேறு சிறுவர் பத்திரிகை தோன்றியதாகத் தெரியவில்லை.

சிறுவர்க்கென்று தனியே பத்திரிகை நடத்தப்படாவிடினும், பெரியோர் பத்திரிகையில் சிறுவர் பகுதி இடம் பெற்றது. 1891-இல் பெரியோர் பத்திரிகையான, 'விவேக சிந்தாமணி'யில், சி. வி. சுவாமிநாதய்யர், சிறுவர் பகுதி ஒன்றைத் தொடங்கினர். 1917-ஆம் ஆண்டில் தொடங்கிய 'தமிழர் நேசன்' பத்திரிகையிலும் பாலர் பகுதி இடம் பெற்றது. பிரபல நாவலாசிரியர் அ. மாதவய்யா அப்பகுதியில் சிறுவர் கதைகள் எழுதி வந்தார்.

பிற்காலத்தில் கலைமகள், ஆனந்தவிகடன், கல்கி போன்ற பத்திரிகைகளும் பாலர் பகுதியை வெளியிட்டுச் சிறுவர் இலக்கியத்திற்குச் சேவை செய்தன.

'பாலியர் நேசன்' தொடங்கிய அறுபதாண்டுகளுக்குப் பிறகு 1918-ஆம் ஆண்டில், மீண்டும் சிறுவர் பத்திரிகை தலை

காட்டியது. 'பால விநோதினி' என்னும் பத்திரிகை வரகவி அ. சுப்பிரமணிய பாரதியாரால் வெளியிடப்பட்டது. இது சுமார் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடந்து வந்ததாகத் தெரிகிறது.

1924-இல் கிறித்துவ இலக்கியக் கழகத்தினர் (C. L. S.) 'பொக்கிஷ பரணி' என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் தொடங்கினர். சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த பி. ஆர். ராஜ சூடாமணி இதன் ஆசிரியராகப் பணியாற்றினார். இவரே, 'பாப்பா', 'அம்புலிமாமா' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

'பொக்கிஷ பரணி'யின் பெயர் பின்னர் 'வித்யா தனம்' என்று மாற்றப்பட்டது. இது இப்போதும் வெளிவருகிறது.

1942 ஆம் ஆண்டு நாட்டு வரலாற்றில் ஒரு புரட்சி யாண்டு. அது போலவே சிறுவர் இலக்கிய வரலாற்றிலும் இது ஒரு புரட்சி யாண்டு. அந்த ஆண்டில்தான், சிறுவர் உள்ளத்துக்கேற்ற, அவர்தம் உலகைப் படைத்துக் காட்டும், உன்னத பத்திரிகையான 'பாப்பா மலர்' தோன்றியது. புதுக் கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இராயவரம் என்னும் ஊரிலிருந்து இதனை முத்து நாராயணன் வெளியிட்டார். இது பின்னே வந்த சிறுவர் பத்திரிகைகளுக்கு வழிகாட்டி யாக விளங்கியது.

1944-இல் புதுக்கோட்டையிலிருந்து வெ. சுப. நடேசன், 'பாலர் மலர்' என்னும் மாதமிரு முறை பத்திரிகை தொடங்கினார். இதன் விலை ஓரணா. (6காசு) இன்றைய 'Pocket Book' அளவில் 16 பக்கங்களில் வெளிவந்தது. இவரே பின்னர் 'டமாரம்' என்னும் பெயரில் அரையணா விலையில் ஒரு வார இதழும், 'சங்கு' என்னும் பெயரில் காலணா விலையில் வாரமிருமுறை (சனியும் புதனும் வெளிவந்தது) இதழும் வெளியிட்டார்.

புதுக்கோட்டையிலிருந்து பாப்பா, என்னும் மற்றொரு இதழ் வெளிவந்தது. அதே நேரத்தில் 'சிறுவர் அறிவுக் கதிர்' என்னும் வேறொரு பத்திரிகையும் வெளிவந்தது.

1947ல் சென்னையிலிருந்து 'அணில்' வாரப்பத்திரிகையை வை, கோவிந்தன் வெளியிட்டார்.

இப் பத்திரிகைகளின் விற்பனை இருபதாயிரம், இருபத்தைந்தாயிரம் என்று பெருகியது. அதனால் சிறுவர் பத்திரிகைகள் மளமளவென்று தோன்றின. சுமார் 100 பத்திரிகைள் 1947-52 என்னும் ஐந்தாண்டுக்குள்ளே தோன்றித் தமிழகத்தின் கடைகளை நிரப்பின.

**அணில், முயல், மயில், கிளி.........**
**சங்கு, டமாரம், டிங்டாங்.............**
**பாலர்மலர், பாலர்சோலை, பாலர்பூங்கா......**
**சிறுவர்மலர், சிறுவர்சோலை, சிறுவர்உலகம்...**
**சிறுமி, தம்பி, அம்பி, பாட்டி.........**

இப்படிப் புற்றீசல் போலப் பத்திரிகைகள் புறப்பட்டன. புதிதாகச் சிறுவர் பத்திரிகை தொடங்க விரும்புவோர் என்ன பெயர் வைப்பது என்பது தெரியாமல் திண்டாடினர். தமிழ் நாட்டின் முக்கிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு சிறுவர் பத்திரிகையாவது வெளிவந்தது.

அப்போது பெரியோர் பத்திரிகைகளில் ஜோக் வெளியிடுவதற்கு பிரதான விஷயமாக இச் சிறுவர் பத்திரிகைகள் திகழ்ந்தன.

ஒரு காக்கை மரத்தில் உட்கார்ந்திருக்கிறது. அதன் அலகில் ஒரு பத்திரிகை இருக்கிறது. அதன் பெயர் 'வடை'. காக்கை வடைக்குப் பதில், வடை பத்திரிகையைக் கொண்டு வந்து விட்டதாம்.

ஒரு சிறுவன் பையுடன் நிற்கிறான். பெரியவர் ஒருவர் அவனிடம் 'பையில் தன்ன இருக்கிறது;' என்று கேட்கிறார்.

'லட்டு' என்கிறான் பையன். 'எனக்கில்லையா?' என்று பெரியவர் கைநீட்டுகிறார். அதில் 'லட்டு' என்னும் சிறுவர் பத்திரிகையைத் திணிக்கிறான், பையன்.

இப்படிப் பல ஜோக்குகள். சிறுவர் பத்திரிகைகள் சிறப்புக் கிடமாக இருப்பதற்குப் பதில் சிரிப்புக்கிடமாகி விட்டன. சிறுவர் பத்திரிகை அலைவீசிய இக்காலத்தில் தோன்றிய பத்திரிகைகள் தோன்றிய வேகத்தில் மறைந்தன.

ஏன்?

சிறுவர் பத்திரிகை நடத்தும் தகுதியும் திறமையும் முதலீடும் அற்றவர்கள் பலர் பத்திரிகைகள் நடத்தினர். போதுமான பணம் இல்லாமல் நூறு ரூபாய் இரு நூறு ரூபாயைக் கொண்டு பத்திரிகை நடத்தியவர்கள் உண்டு. தாம் விற்பனை செய்யும் பத்திரிகைகளின் விற்பனையைக் கண்டு ஏஜெண்டுகளில் பலர் சிறுவர் பத்திரிகை தொடங்கினார்கள்.

இவ்வளவு ஏன்! உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சிலரும் தம்மிடமுள்ள சொற்பத் தொகையைக் கொண்டு சிறுவர் பத்திரிகை நடத்தினார்கள்.

இவை குறுகிய காலத்தில் மறைந்துபோனதில் வியப் பில்லை.

இக்காலத்தே தோன்றிய பத்திரிகைகளில் சிறுவர் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் தகுதி பெற்ற பத்திரிகைகளும் பல இருந்தன. அவற்றை இங்கே அறிந்து கொள்வோம்.

## தம்பிடிப் பத்திரிகை

மேற்குறித்த காலக்கட்டத்தில் குறைந்த விலை பத்தி ரிகைகளே மிகுதியாக வெளி வந்தன. அவைகளுள் மிகவும் விலை குறைந்த பத்திரிகை 'மாமா'. இதன் விலை ஒரு தம்பிடி. அப்போது ஒரு ரூபாய்க்கு 192 தம்பிடிகள். இப்போதைய

மதிப்பைச் சொன்னல் விலை சுமார் அரைக் காசு. இதன் அளவு, கையகலம். (விகடனில் பாதி அளவு.) மொத்தம் நான்கு பக்கங்கள் மிட்டாயைக் காட்டிலும் மலிவாக இருந்த இந்தப் பத்திரிகைக்கு வரவேற்பிருந்தது. இதன் கடைசிப் பக்கத்தில் ஆனந்த விகடனின் பகுத்தறிவுப் போட்டியின் பாணியில் ஒரு போட்டியைக் கூப்பனுடன் வெளியிட்டிருந்தனர். இக்கூப்பனுக்காக ஒருவரே ஒரிதழின் பல பிரதிகளை வாங்குவதுண்டு.

### காலணுப் பத்திரிகை

டெம்மி 1க்கு 32 சைஸ் அளவில் (விகடனில் பாதி அளவு) எட்டுப் பக்கங்கள் கொண்ட பத்திரிகைகள் நிறைய வெளி வந்தன. விலை காலணு (ஒன்றரைக் காசு) இவ்வாறு காலணு விலையில் வெளிவந்த இருபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுவர் பத்திரிகைகளைத் திரட்டி, 'குழந்தைப் புத்தகக் காட்சி'யில் வைத்தனர், குழந்தை இலக்கியக் கழகத்தினர்.

இவற்றுள் சிறப்பானவை சங்கு, யுவன், மான், மயில்.

'சங்கு', பாலர்மலர் நிறுவனத்தைச் சார்ந்தது. இது தான் சிறுவர்க்காக வந்த ஒரே ஒரு வாரம் இருமுறை இதழ். மற்ற காலணுப் பத்திரிகைகள் வார இதழ்களாக வெளி வந்தன. 'அரைக்காசில் ஒரு கல்யாணம், அதிலே ஒரு வாணவேடிக்கை' என்பது போல, எட்டுக் குட்டிப் பக்கங் களில் ஒரு தொடர் கதையும் இருந்தது. சங்கு 25 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனை ஆனது.

'யுவன்', நவீனனை ஆசிரியராகக்கொண்டு பல நல்ல பகுதிகளுடன் வெளிவந்தது. 'மான்' ஆசிரியர் கலைவாணன் ஒரு பள்ளிமாணவர். அதன் துணையாசிரியர் செங்கோலன் (ஜெ. எத்திராஜன்) ஒரு பள்ளிமாணவரே. 'மயில்' பத்திரிகை பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்தது. இதில் கவியோகி சுத்தானந்த பாரதியாரின் எழுத்தோவியங்கள் இடம் பெற்றன.

## அரையணா பத்திரிகை

காலணாப் பத்திரிகையின் அளவில் இரு மடங்கு பெரியவை, அரையணா (மூன்று காசு) விலையில் வெளிவந்த பத்திரிகைகள். விகடன் அளவில் எட்டுப் பக்கங்கள் கொண்டவை, இவை. ரேடியோ, டமாரம், முத்து, டிங்டாங் ஆகியன இவ்விலையில் வந்த பத்திரிகைகளில் குறிப்பிடத் தக்கன.

அக்காலத்தின் புகழ் பெற்ற ஒருசில சிறுவர் இதழ்களில் 'ரேடியோ'வும் ஒன்று. அன்றைய சிறுவர் 'ரேடியோ' என்றவுடன் 'வானொலி'யை நினைக்காமல், தாம் வாங்கும் பத்திரிகையான ரேடியோவையே நினைப்பார்கள். இதன் ஆசிரியரும் வெளியிடுபவருமான எஸ். சௌந்திரராஜன் (சௌந்தர்) பத்தாம் வகுப்பு மாணவர். இவரது ரேடியோவின் விற்பனை பத்தாயிரம் பிரதியைக் கடந்தது. அனுபவம் அற்ற காரணத்தாலும், ஏஜண்டுகள் இவரை ஏமாற்றியதாலும் ரேடியோ நீண்ட ஆயுளைப் பெறவில்லை.

'பாலர் மலர்' நிறுவனத்தைச் சார்ந்தது டமாரம். இதன் சிறப்பே இருபக்கங்களில் வெளிவந்த தொடர்கதை. டமாரம் நான்கணா (25 காசு) விலையில் வெளியிட்ட பொங்கல் மலர் தனிச் சிறப்புடன் விளங்கியது. டமாரத்தின் விற்பனை 20 ஆயிரத்தைத் தாண்டியது.

புகழ் பெற்ற 'பொன்னி' பத்திரிகையினர் நடத்திய சிறுவர் இதழ் 'முத்து'. இதன் ஆசிரியராகப் பணியாற்றியவர் நாரா. நாச்சியப்பன் பன் மொழிப் புலவர் கா. அப்பாத்துரை, அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் முதலிய பேரறிஞர்கள் எழுதியவை இதில் இடம் பெற்றன. பாரதிதாசன் வழங்கிய 'குறள் சினிமா' ஒரு புதுமையான பகுதியாக அமைந்தது.

பிற்காலத்தில் (52 க்குப் பின்னே) தோன்றியது டிங்டாங்' பத்திரிகை. குழந்தை எழுத்தாளர்கள் தாங்கள்

எழுத்தாளரான கதையை 'எழுத்தாளன் ஆனேன்' என்னும் பகுதியில் தொடர்ந்து எழுதிவந்தனர்.

### ஒரணாப் பத்திரிகைகள்

ஒரணாவிலைப் பத்திரிகைகள், அவ்வளவு அதிகமாக இல்லை. இவற்றுள் பெரும் புகழ் பெற்றவை பாலர்மலர், அணில், அம்பி ஆகியன.

'பாலர் மலர்' பல வருடங்கள் தன்னிகரற்ற சிறுவர் இதழாகத் திகழ்ந்தது. இப் பாலர் மலருக்கும், இந் நிறுவனத்தின் பிற பத்திரிகைகளான டமாரம், சங்கு ஆகிய வற்றுக்கும் உண்மையில் பொறுப்பாசிரியராக இருந்தவர் அழ. வள்ளியப்பா. இவர் பத்திரிகையில் பொறுப்பாசிரியர் என்று விளம்பரப் படுத்திக் கொள்ளாமல் தொண்டாற்றி னார். மூன்று பத்திரிகைகளும் புதுக்கோட்டையில் அச்சாகி வெளிவந்தன. அவற்றுக்கான விஷயங்களையும் பிளாக்கு களையும் சென்னையிலிருந்து அனுப்பி வந்தார் வள்ளியப்பா. இந் நிலையிலும் குறித்த நாள் தவறாமல் மூன்றும் வெளி வந்தன. பாலர்மலரின் விற்பனை 17 ஆயிரம் அளவு உயர்ந் தது. இதில் இடம் பெற்ற கதைகளே 'நிமிஷக் கதைகள்', பாலர்கதைகள் என்னும் தொகுப்புகளாக வெளி வந்தன. பாலர் மலர் எட்டணா (50காசு) விலையில் வெளியிட்ட தீபாவளி மலர் கதைக் களஞ்சியமாகத் திகழ்ந்தது.

'அணில்' வார இதழாகத் தொடங்கியபோது அதன் கூட்டாசிரியராக இருந்தவர் தமிழ்வாணன். பின் அவர் விலகிக் கொண்டார். 'அணில்' பத்திரிகைதான், சிறுவர் களிடம் பத்திரிகை வாங்கும் வெறியை உண்டாக்கிவிட்டது 'அணில்' பலமுறை நின்று நின்று வெவ்வேறு விலையில், வடிவில் வந்து இறுதியில் நிரந்தரமாக மறைந்து விட்டது.

ஜீவோதயம் அச்சகத்தினர் நடத்திய மாதம் இருமுறை பத்திரிகை 'அம்பி'. இதன் ஆசிரியர் நெ. சி. தெய்வசிகாமணி.

பெரியோர் பத்திரிகையான கலைமகள் சிறுகதைகளில் செய்த புதுமைகளை அம்பி உடனுக்குடன் நிறைவேற்றியது. ஒரே தலைப்பில் மூன்று எழுத்தாளர் மூன்று கதைகள் எழுதுவது, சிறுகதையின் முதல்வரி ஒன்றாக இருக்க, அதைத் தொடர்ந்து மூவர் மூன்று கதைகளைத் தருவது, பழைய பாவாடை-புது வேட்டி, புலி பாய்ந்தது-பூனை பதுங்கியது என்பன போன்ற முரண் தலைப்புகளில் கதைகளைத் தருவது-இப்படிப் பல்வகை புதுமைகளைச் செய்து சிறுவர் சிறுகதை இலக்கியத்தை வளப் படுத்திய பெருமை 'அம்பி'க்கு உரியது.

பெரியோர் பத்திரிகைகளில் பெண்கள் பத்திரிகை இருப்பதைப் போலச் சிறுவர் பத்திரிகைகளில் சிறுமிகளுக் காகவே ஒரு பத்திரிகை இருந்தது. பெயர் 'சிறுமி'. இதுவும் ஓரணா வார இதழ்.

'குஞ்சு' என்று ஒரு வார இதழ். ஓரணாவிலை. பின்னர் இது மாதமிரு முறையாக மாறியது. இதனை, பால சுப்ரமணியம் என்பவர் சென்னை சூளையிலிருந்து நடத்தினார். இது திராவிடக்கழகத்துக் கொள்கைகளைத் தாங்கி வந்த சிறுவர் இதழ்.

## இரண்டணாப் பத்திரிகை

விகடன் அளவில் முப்பத்திரண்டு பக்கங்களுடன் இரண்டணா விலையில் (பன்னிரண்டரை காசு) சிறுவர் பத்திரிகைகள் தோன்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. கல்கண்டு, வானர சேனை, சித்திரக் குள்ளன், ஜிங்லி, கரும்பு.

குமுதம் நிறுவனம் 'கல்கண்டு' இதழை மாதமிருமுறை யாகத் தொடங்கிப் பிறகு வார இதழாக மாற்றியது. இதன் ஆசிரியர் தமிழ் வாணன். நல்ல கதைகளைப் படைக்கும் வல்லமை பெற்றிருந்தும் கொலை-கொள்ளைக் கதைகளை எழுதி கல்கண்டின் விற்பனையைப் பெருக்கினார். கொலை கொள்ளைக் கதைகளையும், சினிமாச் செய்திகளையும்

சிறுவர் பத்திரிகைகளில் புகுத்தியர் இவரே. இவரது வெற்றியினால்தான் பிறகு 'துப்பாக்கி', 'டுமீல்' என்ற பெயர்களிலெல்லாம் சிறுவர் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. தமிழ்வாணன் சில ஆண்டுகளில் சிறுவர் பத்திரிகையான கல்கண்டை இளைஞர் பத்திரிகை என்று மாற்றிக் கொண்டார்.

'வானர சேனை'க்கு ஆசிரியர் ரா. கி. ரங்கராஜன். குமுதம் நிறுவனம் 'ஜிங்லி' என்னும் சிறுவர் வார இதழைத் தொடங்கியபோது அதன் ஆசிரியரானார். தங்கமணியும், ஐ. ரா. சுந்தரேசனும் ஜிங்லியின் துணையாசிரியர்களானார்கள். 'ஜிங்லி' வெற்றி பெறவில்லை.

'சித்திரக் குள்ளன்' பத்திரிகையை கார்ட்டூனிஸ்ட் 'சந்தனு' நடத்தினார். சிறுவர் பத்திரிகையில் இது ஓர் ஆனந்த விகடன் என்று சொல்லும்படி இருந்தது. பத்திரிகை நடத்தியதில் எனக்கு நஷ்டம் இல்லை என்று கூறிய சிறுவர் பத்திரிகையாளர் சந்தனு ஒருவர்தான்.

பால்வண்ணனை ஆசிரியராகக் கொண்ட 'கலைமன்றம்' வார இதழையும், கலைச் செல்வனை ஆசிரியராகக் கொண்ட 'கலை அரங்கம்' மாத இதழையும் வெளியிட்ட ஸ்ரீமகள் கம்பெனி, 'கரும்பு' சிறுவர் இதழை 1954-இல் வெளியிட்டது. இதன் ஆசிரியர், பூவண்ணன். தொடக்கம் முதலே வார இதழாக வெளிவந்து, சிறுவர் உலகில் பெரும் புகழ் பெற்றது. பாரதியார், பாரதிதாசன், கவிமணி, வள்ளியப்பா ஆகியோரின் சிறுவர் பாடல்களுக்கு விளக்கமாக அட்டைப்பட ஓவியங்களை அமைத்தது. 'எனக்குப் பிடித்த கதை' எனும் தலைப்பில் குழந்தை எழுத்தாளர்கள் தமக்குப் பிடித்த சிறுவர் கதைகளைப் பற்றி எழுதினர். பெரியோர் எழுதிய சிறுவர் கதைகள் எனும் தலைப்பில் மறைமலை அடிகள், அறிஞர் அண்ணா, முதலியவர்களின் கதைகளைக் கொடுத்தது. வள்ளியப்பாவின் 'பாட்டிலே காந்தி கதை' இதில்தான் தொடர்கதைப் பாடலாக வெளிவந்தது.

**நாலணாப் பத்திரிகைகள்**

நாலணு (25 காசு) விலையில் வந்த சிறுவர்பத்திரிகைகள் குறைவு. அவை பாப்பா, நவயுவன், பூஞ்சோலை, ரவி, ஜில்ஜில், கண்ணன் ஆகியவை.

'பாப்பா'வுக்கு தி. ஜ. ர. ஆசிரியர். பாப்பாவின் தீபாவளி மலர் சிறப்புமிக்கது. இதில் தி. ஜ. ர.வின் கதை சொன்னவர் கதை, சித்திர ராமாயணம் ஆகியவை இடம் பெற்றன.

'யுவன்' காலணாப் பத்திரிகை ஆசிரியர் நவீனன் அவர்களே 'நவயுவன்' பத்திரிகையை நடத்தினர். சாந்த லட்சுமி அம்மையார் 'ரவி' பத்திரிகையை வெளியிட்டார்.

'ஜில்ஜில்' பத்திரிகையை வெளியிட்டவர் வானதி திருநாவுக்கரசு. இது ஒரு நகைச்சுவை இதழாக வெளி வந்தது. பின்னர் இது இரண்டணு விலையில் மாதமிரு முறையாக வெளிவந்தது. இதன்பின் இரண்டணு விலையில் 'மிட்டாய்' என்னும் இதழையும் ஓரணுவிலையில் 'கோமாளி' என்னும் இதழையும் நடத்தினர். சிறுவர் பத்திரிகை வரலாற்றில் வானதி திருநாவுக்கரசுக்கு ஒரு சிறந்த இடம் உண்டு.

அச்சுக்குப் புகழ் பெற்ற சாந்தி பிரஸ்ஸினர் 'பூஞ்சோலை' சிறுவர் மாத இதழை 1951-இல் தொடங்கினர். இதன் கௌரவ ஆசிரயராகப் பணியாற்றினர், வள்ளியப்பா. இது ஓர் இலட்சியப் பத்திரிகை. இப்பத்திரிகையில் தொடர்கதை ஆரம்பமாவதை பெரிய போஸ்டர் அடித்து விளம்பரம் செய் தனர். பேரறிஞர்கள் நான் சிறுவனுக இருந்த போது......' என்ற தலைப்பில் தம் இளமைப் பருவத்தை நினைவு கூர்ந் தார்கள். அறிவியல் கட்டுரைகள், அயல் நாட்டுக் கதைகள், முதலியன இடம் பெற்றன. குழந்தை எழுத்தாளர்களைப் புகைப்படத்துடன் அறிமுகப் படுத்தியது. பூஞ்சோலை ஒரு ரூபாய் விலையில் பொங்கல் மலர்கள் வெளியிட்டது. மூன்றும் மூன்று கலைக் களஞ்சியங்கள். இவ்வளவு சிறப்

பிருந்தும் இது எட்டாயிரம் பிரதி விற்பனையைத் தாண்ட முடியவில்லை. அதனால் இரண்டணா விலையில் மாதமிருமுறை யாக்கினர். வடிவத்தை மாற்றினர். என்றாலும் மூன்றரை ஆண்டில் இது விலைமாறி, உருமாறி தடுமாறி வீழ்ந்தது.

'கலைமகள்' நிறுவனம் 1950-இல் 'கண்ணன்' என்னும் பத்திரிகையை மாத இதழாகத் தொடங்கியது. பின் இரண்டணா விலையில் மாதமிரு முறையாக நடத்தினார்கள். இதன் ஆசிரியர் ஆர்வி. கண்ணன் புதுப்புது எழுத்தாளர், களுக்கு ஆதரவு அளித்துப் புகழ் பெறச் செய்தது. கவிதைக்கு தனிச் சிறப்புச் கொடுத்தது. கண்ணன் தொடர்கதைப் போட்டி, பெரியோர்க்கான நாராயண சாமி ஐயர் நினைவு நாவல் போட்டி போலப் புகழ் வாய்ந்தது. சிறுவர் நாவல் இலக்கியத்துக்குக் கண்ணன் ஆற்றிய தொண்டு பெரிது. 1955-க்குப் பிறகு சிறுவர்க்கு விருந்தாக அமைந்தது, இந்தப் பத்திரிகை ஒன்றே. இது 1971ஆம் ஆண்டின் இறுதிவரை வெளி வந்தது. 22 வருடங்கள் சேவை செய்த கண்ணனையும் அதன் ஆசிரியர் 'ஆர்வி'யையும் சிறுவர் இலக்கியம் மறக்க முடியாது. இத்தனை ஆண்டுகள் ஒரு சிறுவர் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை ஆர்வியைத் தவிர வேறுயாருக்குமில்லை, கண்ணன் முதல் இதழ் முதல் இறுதி இதழ் வரை தொகுத்துப் பார்த்தால் 1950-71 வரையுள்ள சிறுவர் இலக்கிய வரலாற்றைத் தெளி வாகத் தெரிந்து கொள்ளலாம்.

### ஆறணாப் பத்திரிகை

அம்புலிமாமாவும் பாலபாரதியும் ஆறணாப் (முப்பத்தேழரை காசு) பத்திரிகைகள். பி. நாகிரெட்டியும் சக்ரபாணியும் 1947-இல் 'அம்புலிமாமா' இதழைத் தொடங் கினார்கள். இதன் அப்போதைய விலை ஆறணா. நாடோடிக் கதைகளுக்கு மட்டுமே முக்யத்துவம் கொடுக்கப்பட்டதால் பாலர் முதல் பாட்டன் பாட்டிவரை அனைவரும் விரும்பிப் படித்தனர். இது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்,

சிந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி, பஞ்சாபி, ஒரியா, ஆங்கிலம், சிங்களம் ஆகிய பன்னிரண்டு மொழிகளில் வெளிவரும் பெருமையுடையது. இப் பதிப்புகளுக்கு அடிப்படை தெலுங்குப் பதிப்பே. அதனால் தமிழ் அம்புலிமாமாவில் தமிழ் எழுத்தாளர்களுக்கு இடமில்லாமல் போயிற்று. வெகு அரிதாக ஒன்றிரண்டு தமிழ்க் கதைகள் ஏற்கப்படுவதுண்டு. எல்லாப் பதிப்புக்கும் சக்ரபாணி அவர்களே (அவர்கள் மறையும் வரை) ஆசிரியராக இருந்ததால் ஒவ்வொரு பதிப்புக்கும் ஒரு மொழிபெயர்ப்பாளர் ஆசிரியராக இருப்பார். அம்புலிமாமா அன்று முதல் இன்று வரை வெற்றி நடைபோடுகிறது. இதன் வெற்றியைக் கண்டு இதே பாணியில்—அளவில்—அமைப்பில்—சிலபத்திரிகைகள் தோன்றின. பாலமித்ரன், பொம்மை வீடு—இரண்டும் இத்தகைய பத்திரிகைகளே. இவையும் சிறப்பாக வெளிவந்து தமிழ்ச் சிறுவர்களிடம் நிலைத்த இடத்தைப் பெற்றுக் கொண்டன. இன்று அம்புலிமாமாவின் விலை ஒன்றரை ரூபாய்.

'பேசும் படம்' நிறுவனம், சிறுவர்களுக்காக பால பாரதியைத் தொடங்கியது. முதலில் எட்டணு (50 காசு) விலையிருந்தது. அதை ஆறணுவாகக் குறைத்தார்கள்; என்றாலும் எதிர்பார்த்த விற்பனை கிடைக்க வில்லை. இதன் பொறுப்பாசிரியராகப் பணியாற்றியவர் அண்மையில் மறைந்த ச. ய. சுப்ரமணியன்.

சிறுவர் பத்திரிகை அலை 1947-52 வரை இருந்தது. 52-54 க்குள் ஒரு வீழ்ச்சிப் புயல். அதில் பெரும்பாலானவை விழுந்தன. இதற்குத் தப்பித் தொடர்ந்து வெளிவந்தவை கண்ணன், அம்புலிமாமா ஆகிய இரண்டுமே. கண்ணன் பின்னே நிறுத்தப்பட்டதைப் பற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளேன்.

1954க்குப் பிறகும் சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட பலர் அவ்வப்போது சிறுவர் பத்திரிகைகளைத் தொடங்கினர்கள்.

'பாலர் பூங்கா'வை நெ. சி. தெய்வசிகாமணி தொடங்கினர். அம்புலிமாமா நிறுவனம், 'பொன்மலர்' 'பால்கன்' என்னும் மாதம் இருமுறை இதழ்களை வெளியிட்டது. இரண்டும் முறையே 'Golden book' 'Falcon' என்னும் ஆங்கிலப் பத்திரிகைகளின் தமிழ்ப் பதிப்பாக வெளிவந்தன. இவை வண்ணப் படங்கள் நிறைந்து கண்ணுக்கு விருந்தாக அமைந்தும், தமிழ்ச் சிறுவரைக் கவரவில்லை. எஸ். வஜ்ர வேலு, 'பூந்தோட்டம்' என்னும் சிறுவர் மாத இதழைத் தொடங்கினர். சௌந்தர் 'கண்ணுமூச்சி' என்னும் மாத மிருமுறையை வெளியிட்டார்.

1972-இல் மீண்டும் 'அணில்' வந்தது. பழைய பெயரில் புதிதாக இதனை நடத்தியவர், புவிவேந்தன். இதைப் பாண்டிச்சேரியிலிருந்து நடத்தினர். பல்லாயிரக்கணக்கில் விற்பனை வளர்ந்தது. அதனுல் அலுவலகத்தைச் சென்னைக்கு மாற்றினர். சென்னையிலிருந்து வெற்றிகரமாக நடந்த இப் பத்திரிகை அண்மையில் நிறுத்தப்பட்டது. என்ருலும் புவிவேந்தன் தற்போது 'அணில் மாமா' என்ற மாத இதழின் ஆசிரியராக இருக்கிருர். பெரியவர்களுக்கான 'மாதம் ஒரு நாவல்' பாணியில் இது வெளிவருகிறது.

மகிழ்ச்சிக் கண்ணன், 'மத்தாப்பு' பத்திரிகையை மாத மிருமுறையாகவும், பின் வார இதழாகவும் நடத்தினர். 'மத்தாப்பு' பாதி கரும்பு—கண்ணன் பாணியிலும், பாதி அம்புலிமாமா பாணியிலும் வெளிவந்து சிறுவர்களைக் கவர்ந்தது. மகிழ்ச்சிக் கண்ணன் பெரியவர்களுக்காக 'கிண்டல்' என்று ஒரு பத்திரிகையும் தொடங்கினர். அதனேடு சேர்ந்து மத்தாப்பும் மறைந்தது

'கல்கி' நிறுவனம் 'கோகுலம்' என்னும் அருமையான சிறுவர் மாதமிருமுறை இதழை 1972இல் தொடங்கியது. வாரியார் கட்டுரைகளுக்கும் வாண்டுமாமாவின் கதைகளுக்கும் சிறப்பிடமளித்த கோகுலம் மாபெரும் வெற்றி பெற்றதென்றே சொல்லவேண்டும். அறுபதாயிரம் பிரதி

விற்பனையை மிக எளிதில் குறுகிய காலத்தில் எட்டிப் பிடித்தது. அம்புலிமாமாவைத் தவிர இந்த விற்பனையளவை வேறு சிறுவர் பத்திரிகைகள் எட்டியதில்லை. பின்னர், கல்கி, சுராஜ்யா, கோகுலம் மூன்றும் நிறுத்தப்பட்டன. கல்கி மீண்டும் வெளிவந்த போது சுராஜ்யாவுடன் கோகுலமும் புத்துயிர் பெற்றது. இம்முறை அதன் விற்பனை இருபதாயிரமாகக் குறைந்ததாலே 1978-இல் கோகுலம் நிறுத்தப்பட்டது.

'பாப்பா'வுக்கு ஆசிரியராக இருந்த தி. ஜ. ர. இறுதியில் 'தியாகபாரதி' என்னும் சிறுவர் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். பெரிய அளவில், நிறையப் படங்களுடன் வெளிவந்த இதனை இசைமேதை சடகோபன் வெளியிட்டு வந்தார். இது இசைக்கு முக்யத்வம் கொடுத்தது. இதைச் சிறுவர் உலகின் இசைப்பத்திரிகை என்றும் கூறலாம்.

அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டான 1979-இல் 'ரத்னபாலா' என்னும் புதிய சிறுவர் இதழ் தோன்றியது. 'பாலர் மாதவண்ண மலர்' என்று கூறிக்கொள்வதற்கேற்ற முறையில் 96 பக்கங்களையும் வண்ணத்தில் தோய்த்தாற் போலக் கண்ணுக்கு விருந்தாய், வெளிவருகிறது. சிவகாசியிலுள்ள ஓரியண்ட்லித்தோ பிரஸ் உரிமையாளர்கள் இதை வெளியிடுகிறார்கள். ஓராண்டு இதன் ஆசிரியராக முல்லை தங்கராசன் இருந்தார். பின்பு கே. ஆர். வாசுதேவன் ஆசிரியர் பொறுப்பேற்றுச் சிறப்புற நடத்திவருகிறார். தமிழக மாவட்ட மலர்களை ரத்னபாலா வெளியிட்டு வருகிறது. இது இதற்குமுன் வேறு சிறுவர் இதழ் செய்திராத புதுமைச் சாதனை!

'ரத்னபாலா'வுக்குப் பிறகு சிவகாசியிலுள்ள லித்தோ அச்சகத்தாரின் கவனம் சிறுவர் பத்திரிகைப் பக்கம் திரும்பியுள்ளதாகத் தெரிகிறது. 'அணில் லித்தோ கிராபிங்' என்னும் சிவகாசி அச்சகத்தினர் 1980 பொங்கல் முதல் 'மணிப்

பாப்பா' என்னும் சிறுவர் வண்ணயாத மலரை வெளியிட்டு வருகிறது. இப்படியே ஒவ்வொரு புகழ்பெற்ற அச்சகத்தாரும் சேவை மனப்பான்மையுடன் ஒரு சிறுவர் பத்திரிகை வெளியிட்டால், சிறுவர் இலக்கியம் வளம்பெறும்; சிறுவர் உலகம் நலம் பெறும்.

தனித்தமிழ் இயக்கத்தின் தனிப்பெரும் ஏடாக விளங்கும் 'தென்மொழி'யின் வெளியீட்டாளரின் கவனம் சிறுவர் இலக்கியத்தின் பக்கம் திரும்பியது. 1966-இல் 'தமிழ்ச் சிட்டு' என்னும் சிறுவர் மாதஇதழைத் தொடங்கினர். இதன் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன். இதில் தூய தமிழில் கதை, கட்டுரை, கவிதைகளைக் காணலாம். இது தொடர்ந்து வெளிவருகிறது.

இலங்கைத் தமிழர்கள் சிறுவர் இலக்கியத்துக்குச் செய்த சேவை பற்றிச் சிறுவர் கவிதைப் பகுதியில் விளக்கப்பட்டது. இலங்கையிலிருந்து 'பாலியர் நேசன்' என்ற சிறுவர் பத்திரிகை, 1859 இல் வெளிவந்தது என்பதையும் இப்பகுதியின் தொடக்கத்தில் கண்டோம். பாலியர் நேசனுக்குப் பிறகு இலங்கையிலிருந்து சிறுவர் பத்திரிகைகள் பல வெளிவந்திருக்கும் என்பதில் ஐயமில்லை, எனினும் அப்பத்திரிகைகளைப் பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

1975-இல் 'கண்மணி' என்னும் சிறுவர் பத்திரிகை வந்ததாகத் தெரிகிறது[1]. இதனை, 'சிரித்திரன்' என்னும் நகைச்சுவை இதழை வெளியிடும் நிறுவனம் வெளியிடுகிறது. அதே ஆண்டில் 'மதனன்' என்னும் பெயரின் மற்றொரு சிறுவர் இதழ் தோன்றியது.[2] 'மாணிக்கம்' என்னும் பெரியோர் மாத இதழின் வெளியீட்டாளர்களே இச்சிறுவர் இதழை வெளியிட்டுள்ளனர்.

---

1 பார்க்க : தீபம் ஜனவரி 1975 இதழ்.
2 பார்க்க : தீபம் ஜூலை 1975 இதழ்

இத்தகவல் நமக்குக் கிடைக்கிறது. இவற்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இவ்விரண்டைத் தவிர வேறு சிறுவர் பத்திரிகைகளும் இலங்கையிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

தோன்றி மறைந்த பத்திரிகைகளின் பட்டியல் நீண்டது. இந்நூலில் குறிப்பிடப்பட்ட பத்திரிகைகளைப் போல பன்மடங்கு பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. இன்று வெளிவருபவை அம்புலிமாமா, பாலமித்திரன், பொம்மை வீடு, ரத்னபாலா, அணில்மாமா, நேருமாமா (அண்மையில் தோன்றியது) மணிப்பாப்பா இவையாவும் பெரும்பாலும் அம்புலிமாமாவின் பொருளடக்கத்தைப் பெற்றவையே. பாலர்மலர், பூஞ்சோலை, கரும்பு, கண்ணன், போன்ற அமைப்பில் இன்று ஒரு சிறுவர் பத்திரிகைகூட இல்லை என்பது வருந்தத்தக்கது.

சிறுவர் பத்திரிகைகள் வெற்றி பெறுததால் அவற்றின் ஆசிரியராக இருந்த குழந்தை எழுத்தாளர்கள் பெரியோர் பத்திரிகைக்குத் தாவிவிட்டார்கள். 'வானர சேனை'யின் ஆசிரியர் ரா. கி. ரங்கராஜன் இன்று 'குமுதம்' பத்திரிகையின் இணை ஆசிரியர். யுவன், நவயுவன் பத்திரிகைகளின் ஆசிரியர் நவீனன், இன்று சினிமா எக்ஸ்பிரஸின் ஆசிரியர். 'வானவில்' பத்திரிகையின் ஆசிரியர் வாண்டுமாமா (கௌசிகன்) இன்று தினமணிக்கதிரின் துணை ஆசிரியர். 'மத்தாப்பு' பத்திரிகையின் ஆசிரியர் மகிழ்ச்சிக் கண்ணன் (அனந்த்) இன்று 'விசிட்டர் லென்ஸ்' இதழின் ஆசிரியர்.

இப்படிக் குழந்தை எழுத்தாளர்கள் சிறுவர் இலக்கியத் துறவு பூண்டு, பெரியோர் இலக்கிய வுறவு கொள்வதும் நாட்டுக்கு நன்மை தரும் நிகழ்ச்சியன்று.

இன்று பெரியவர்களிடம் பத்திரிகை வாங்கும் பழக்கம் வேரூன்றிவிட்டது. வாரப்பத்திரிகை ஒன்றின் விலை 75

காசாக இருந்தாலும் 90 காசாக இருந்தாலும் வாங்கிவிடு கிறார்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகளையும் வாங்குகிறார்கள். இப்படி வாங்குவோரில் எத்தனை பேர் தம் பிள்ளைகளுக்காக ஒரு சிறுவர் பத்திரிகை வாங்குகிறார்கள்? எண்ணிப்பாருங்கள்.

ஒரு தந்தை தமக்கு உடை வாங்கும் போது, அதையே தன் மகன் அணிய வேண்டும் என்று எண்ணுவதில்லை. மகனின் உருவத்திற்கும் பருவத்திற்கும் உகந்த ஆடையை அக்கறையோடு தேர்ந்தெடுத்து வாங்கித்தருகிறார். அவரே தாம் சாப்பிடும் உணவு சற்று வேகாதிருந்தால், 'இதைக் குழந்தைக்குக் கொடுக்காதே. ஜீரணமாகாது' என்று பணிவிக்குக் கட்டளையிட்டு, தம் மகனுக்கேற்ற உணவு தரச் சொல்கிறார். தம் மகனுக்கு உடல் நலமில்லை என்றால், தமக்கு வைத்தியம் செய்யும் டாக்டரிடம் அழைத்துப் போவதைவிட, குழந்தை மருத்துவ நிபுணரான வேறொரு டாக்டரிடம் அழைத்துச் செல்ல விரும்புகிறார். ஆனால், பத்திரிகையைப் பொறுத்தவரை, தாம் படிக்கும் பத்திரிகையினையே தம் மகனும் படிக்கட்டும் என்று விட்டு விடுவது கொடுமை அல்லவா? மகனின் உடல் நலத்தைப் பேணும் தந்தை மகனின் உள்ள நலத்தைக் கவனிக்க வேண்டாமா?

இன்று பெரியோர்க்காக வெளிவரும் பத்திரிகைகளின் தரம் எப்படியிருக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. சினிமாவும் செக்ஸும் போட்டியிடும் பத்திரிகைகள் சிறுவர் கள் படிப்பதற்கோ பார்ப்பதற்கோ ஏற்றவையா? இவற்றை எண்ணிப் பார்த்துப் பெற்றோர் ஒவ்வொருவரும் தம் குழந்தைகளுக்கு அவர்களுக்குரிய பத்திரிகைகளை வாங்கித்தர வேண்டும். இவ்வாறு செய்தால், சிறுவர் பத்திரிகையும் லட்சக்கணக்கில் விற்பனையாகும். விற்பனை பெருகினால்,

பெரியோர் பத்திரிகை ஒவ்வொன்றும் ஒரு சிறுவர் பத்திரிகை நடத்தப் போட்டிப் போட்டுக்கொண்டு முன்வரும், அதனுல் பெற்ருேர்கள் சிறுவர் பத்திரிகை வாங்கித் தம் குழந்தைகளுக்குத் தருவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

சிறுவர் பத்திரிகைகள் பெருகும் காலமே சிறுவர் இலக்கியத்துக்குப் பொற்காலம்; சிறுவருக்கு நற்காலமாகும்.

8

# சிறுவர் திரைப்படங்கள்

திரைப்படம் பார்க்கும் ஆவல் இன்று மக்களிடையே மிகுந்துள்ளது. 'குடு குடு' கிழவரும் கொளுத்தும் வெய்யிலில் கொட்டகை முன்பு, 'க்யூ'வில் நிற்பதைக் காண்கிறோம். பெண்களோ, மூன்று மணிக் காட்சிக்கு 'டிக்கெட்' கிடைக்கா விட்டால் வீட்டுக்குச் செல்லாமல், அடுத்த காட்சியைக் காண அங்கேயே உட்கார்ந்து விடுகிறார்கள். இவர்களுக்கு எத்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்ல சிறுவர்கள்.

சிறுவர்கள் திரைப்படம் காண, பாடத்தையும் பள்ளி யையும்கூட மறந்து, துறந்து விரைகின்றனர். சின்னஞ்சிறு குழந்தைகூட, திரைப்படப் பாடலின் ஒன்றிரண்டு வரிகளை ஓயாமல் உரக்கப் பாடி மகிழ்வதைப் பார்க்கிறோம். நடிக, நடிகையர்களின் பட்டியல், நம்மைவிட ஆடித்திரியும் குழந்தைகளுக்கு மிக நன்றாகத் தெரியும்.

இந்த நிலை நமது நாட்டில் மட்டுமல்ல; ஏறக்குறைய எங்கும் இத்தகைய நிலையே நிலவியுள்ளது.

ராச்போர்ட் என்ற பதினைந்து வயதுள்ள பிரிட்டிஷ் சிறுவன் ஒருவனுக்கு, ஆங்கிலப்பட நடிகர் கேரிகூப்பர் என்பவரைக் காணவேண்டுமென்ற பேராசை. அவன் உடல்

நலம் மெல்லக் குறைந்தது. அவன் கேரிகூப்பரைக் கண்டால் ஒருவேளை உடல் நலமுறும் என்று அவனுடைய பெற்ருேர் நம்பினர். கேரிகூப்பர் லண்டன் வந்தபோது ராச்போர்ட் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்தனர். அவன் தான் காண விரும்பிய நடிகரைக் கண்டு மகிழ்ந்தான். பிறகு அவன் உடல் நலமடைந்தான்.

கேரளத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் நடிகர் ஜெமினி கணேசனை நேரில் பார்க்கவேண்டும் என்னும் ஆசையில் பெற்ருேருக்குத் தெரியாமல் சென்னைக்கு வந்து சுற்றித் திரிந்தான். அவன் போலீஸாரிடம் சிக்கி, இளம் குற்றவாளி களை விசாரிக்கும் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டான். கோர்ட்டிலிருந்த திருமதி ராஜம்மாள் அனந்தராமன் சிறுவ னின் ஆவலை அறிந்துகொண்டார். அவனைத் தனது காரில் ஏற்றிக்கொண்டு ஜெமினிகணேசன் நடிக்கும் ஸ்டுடியோ விற்கு அழைத்துச் சென்ருர். சிறுவன் நடிகரைக் கண்டு மகிழ்ந்தான். ஜெமினிகணேசன் அந்தச் சிறுவனுக்கு அறிவுரை கூறிஞர். அதன் பின் சிறுவன் தன் ஊருக்குத் திரும்பிச் சென்ருன்.[1]

ராச்போர்ட் போன்றும் கேரளச் சிறுவன் போன்றும் பலர் சினிமாவிஞலும் சினிமா நடிகர்களிஞலும் கவரப்படு கின்றனர். அதஞல்தான் சில சிறுவர் பத்திரிகையாளர்கள் சினிமாவைப் பற்றியும் சினிமா நடிகர்களைப் பற்றியும் விரிவாகப் பத்திரிகைகளில் எழுதி விற்பனையைப் பெருக்க முயன்றனர்.

இளம் உள்ளங்களை இழுக்கும் சினிமாவிலிருந்து சிறுவரைப் பிரித்துவிட முடியாது அதற்காகப் பெரியவர் கள் கண்டு மகிழும் ஆபாசமும், கொலை கொள்ளை குடி முதலி யனவும் நிறைந்த படங்களைப் பார்க்க அனுமதிக்கவும் முடியாது.

---

1. திருமதி ராஜம்மாள் அனந்தராமன் பேட்டி குமுதம், மார்ச்சு 29, 1962.

இதற்கு ஒரே வழி, அவர்களுடைய அறிவை வளர்க்கும் அரிய கருத்துக்கள் அமைந்த படங்களைத் தயாரிப்பதுதான். பிற நாடுகளில் இத்தகைய படங்களைத் தயாரித்தனர். அவை எதிர்பார்த்த பலனைத் தந்தன. சிறுவர் அந்தப் படங்களை ஆவலுடன் கண்டனர்; ஆனந்தம் கொண்டனர். ஒவ்வொரு நாடும் சிறுவர்களுக்கென்று சிறந்த படங்களைத் தயாரிக்கின்றன. அவை உலகப் புகழையும் பெறுகின்றன.

நமது நாட்டில் சிறுவர்க்கேற்ற திரைப் படங்களின் நிலை எவ்வாறு உள்ளது என்று பார்ப்போம்.

1956-ஆம் ஆண்டும் மார்ச் மாதத்தில் 'சிறுவர் திரைப் படவிழா' ஒன்று சென்னையில் நடந்தது. அவ்விழாவில் பல நாடுகள் தயாரித்த சிறுவர் படங்களைத் திரையிட்டனர். நாடுகளின் பெயர்ப் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றிருந்தது. விழா நடந்த ஏழு நாட்களில் நான்கு நாட்கள் நான் தொடர்ந்து சென்று விழாவைக் கண்டேன். அமெரிக்காவும், இங்கிலாந்தும், ரஷ்யாவும், சீனாவும் அதியற்புதமான திரைச் சித்திரங்களைத் தயாரித்திருந்தன. ஆனால் இந்தியா...? இந்தியாவின் பங்கிற்குச் செய்தித் துணுக்குகளை (News Review) ஒன்று சேர்த்து உருவாக்கிய படங்களையும், செய்திப் படங்களையும் (Documentary films) காட்டினர். இது நமது நாட்டின் சிறுவர் திரைப்பட நிலையை விளக்கப் போதுமானதாகும்.

தற்போதும் இந்த நிலை முற்றும் மாறிவிடவில்லை.

இந்த நிலைக்குக் காரணம் என்ன?

திரைப் படங்களைத் தயாரிக்கும் பட முதலாளிகள் சிறுவர் திரைப் படங்களைத் தயாரிப்பதில்லை; தயாரிக்க முயல்வதுமில்லை. அவர்கள், 'பெரியவர்களுக்குத் தயாரிக்கப்படும் படங்களைச் சிறுவர்களும் விரும்பிப் பார்க்கின்றனர். ஆனால், சிறுவர்க்கென்று தயாரிக்கப்படும் படங்களைப் பெரியவர்கள் விரும்ப மாட்டார்கள். அவர்களுக்குத் தேவையான

காதல், கொலை, கொள்ளை முதலியன இல்லையெனில் அவர்கள் எவ்வாறு பார்ப்பார்கள்? அதனால் சிறுவர்க்கேற்ற திரைப்படங்களுக்கு வசூல் குறையும்; நஷ்டம் ஏற்படும்" என்று நினைக்கிறார்கள்.

இந்த எண்ணம் ஏற்கத்தக்கது அன்று. சிறுவர்கள் விரும்பும் முறையில், அவர்களுக்கேற்ற கதையைச் சிறுவர்களையே கொண்டு பிற நாட்டில் தயாரித்துள்ளனர். அவை தரத்தில் சிறந்த படங்கள் மட்டுமல்ல; வசூலிலும் சிறந்த படங்களாகும்.

வால்ட் டிஸ்னியின், 'Snow White and Seven Dwarfs', 'Cinderella', 'Peter Pan' முதலிய கார்ட்டூன் படங்களைச் சிறுவர்கள் மட்டுமா பார்த்தனர்? அவை நல்ல வருமானத்தைத் தரவில்லையா? ஒரு சிலர், 'டிஸ்னியின் கார்ட்டூனுக்காக வசூலானது' என்று கூறலாம். அது உண்மையல்ல என்பதை அவர் தயாரித்த, "Littlest out-law" என்ற படத்தின்மூலம் அறியலாம். இது கார்ட்டூன் படம் அன்று. ஒரு சிறுவனுக்குக் குதிரைமீது உள்ள அன்பைச் சித்திரிக்கும் அற்புதப்படம். இப்படம் நல்ல வசூலைத் தந்தது. இதைப் போன்றே காளை ஒன்றின்மீது சிறுவனுக்கிருந்த அன்பை அடிப்படையாகக் கொண்ட, 'The Brave One' என்னும் படமும் ஒரு வெற்றிப்படமாகும்.

வால்ட் டிஸ்னியின் 'Toby Taylor', Perry, Shaggy dog ஆகிய படங்களும், பிறர் தயாரித்த The little fugitive, Escapade in Japan, Chitty Chitty Bang Bang, Gentle-gaint, Never take no of an answer, Oliver, Melowdy, Cowboys, Tigers bay முதலிய படங்களும் சிறுவர் படங்கள்தாம், இவையாவும் மாபெரும் வெற்றி பெற்றன.

இவை மேல்நாட்டுப் படங்கள். நம் நாட்டில் தயாரிக்கும் சிறுவர்க்கேற்ற திரைப்படங்கள் வசூலில் வெற்றியடையுமா என்ற ஐயம் எழலாம்.

வடநாட்டில் ராஜ்கபூர், "பூட்பாலிஷ்" என்ற படம் ஒன்றைத் தயாரித்தார். அது, 'பிஞ்சுக் கரங்களைப் படைத்தது பிச்சை எடுப்பதற்காக அல்ல' என்ற உயர்ந்த கருத்தை விளக்கும் அருமையான படம். பேசும் பொற் சித்திரங்கள் ஆடி மகிழ வேண்டிய வயதில் பிச்சை எடுக்கும் அவல நிலையை விளக்கி, அதனை அகற்றத் தூண்டியது அப்படம். அது ஒரு வெற்றிப்படம்.

பிலிம்ஸ்தானின் 'ஜாக்ரிதி'யும் சிறுவர் படமே. அதுவும் தமிழ் 'அண்ணி'யும் வெற்றி பெறவில்லையா?

சிறுவர்களுக்கேற்ற முறையில் சிறந்த படங்களைத் தயாரித்தால் அவை வெற்றியடையும் என்பதில் ஐயமே இல்லை. இதனைக் கருத்தில் இருத்தி, படமுதலாளிகள், 'பூட் பாலிஷ்' போலவும், 'ஜாக்ரிதி' போலவும் படங்கள் எடுக்க முன்வர வேண்டும்.

இத்தகைய முழுநீளப் படங்களை எடுக்காவிட்டாலும் 1000 அல்லது 2000 அடிகளில் துண்டுப் படங்களையாவது தயாரித்து, முழுநீளப் படங்களுடன் காட்டலாம். இது நம் படங்களின் நீளம் குறைந்தாலன்றி நிறைவேற முடியாது.

தனிப்பட்டவர்கள் ஈடுபடாத துறைகளில், ஈடுபட அஞ்சும் துறைகளில், அரசாங்கம் ஈடுபட்டு வழிகாட்ட வேண்டும். இது பொது நியதி. பிறர் தயாரிக்க அஞ்சும் சிறுவர் படங்களை அரசியலாரே முதலில் தயாரிக்க வேண்டும். இந்திய அரசியலாரும் சிறுவர் படங்களுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கியுள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

ராஷ்டிரபதியின் பரிசுபெற எந்தச் சிறுவர் படமும் தகுதி வாய்ந்ததாக இல்லை என்று அடிக்கடி கூறுகின்றனர். ஏவி. எம். மின் 'ஹம் பஞ்சி ஏக் டால் கே' என்னும் இந்திப் படம் 1957-இல் ராஷ்டிரபதியின் பரிசு பெற்றது. அது புகழைப் பெற்றதே தவிர பொருளைப் பெறவில்லை. அதனால்

தான் போலும் அது தமிழில் வெளி வரவில்லை. இந்தப்படம் பொருள் தராமைக்குரிய பலகாரணங்களில் ஒன்று, படத்தின் கதையில் வன்மையில்லாததாகும். வேகமும் விறுவிறுப்பும் உள்ள வகையில், சிறுவர் விரும்பும் நல்ல நிகழ்ச்சிகள் நிறைந்த சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து உயர்ந்த முறையில் படமாக்க வேண்டும்.

'தோ பூல்' (இருமலர்கள்), பாம்பூஷ் (செந்தாமரை), அப் டில்லி தூர் நஹி (இப்போது டில்லி தொலைவில் இல்லை) அனுராக் (அன்பு) ஆகிய இந்திப் படங்கள் சிறுவர் படங்கள் தாம். இவை பரிசு பெறாவிடினும், மக்களின் ஆதரவைப் பெற்றன. பொருளும் பெற்றன. சிறுவர் திரைப்படம் தயாரிப்பவர்கள் இதை உணர வேண்டும்.

இப்போது புகழ் பெற்ற டைரக்டர்களான சத்யஜித்ரே, தபன் சின்ஹா முதலியோரின் கவனம் சிறுவர் திரைப்படத்தின் பக்கம் திரும்பியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. 1979 இல் சிறுவர் படத்துக்கான தங்கப்பதக்கத்தை தபன் சின்ஹா தயாரித்த 'சபேத் ஹாதி' (வெள்ளையானை) பெற்றிருக்கிறது. இங்கே இந்தியாவில் முதலில் தயாரிக்கப்பட்ட சிறுவர் திரைப்படம் 'கேலாகர்' என்னும் வங்காளிப் படம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இனித் தமிழ்ச் சிறுவர் திரைப் படத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

நடிகை ஜி. வரலட்சுமி தயாரித்த 'அண்ணி' சிறுவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. பெரியோரும் விரும்பிப் பார்த்தனர். 1956-இல் நடந்த சிறுவர் திரைப்பட விழாவில் 'அண்ணி' யும் இடம் பெற்றது. பி. ஆர். பந்தலு 1960இல் 'குழந்தைகள் கண்ட குடியரசு' என்னும் படத்தைத் தயாரித்தார். குழந்தைகளுக்கு முக்யத்வம் இருந்தது. படம் வெற்றி பெறவில்லை. 1969-இல் ஏ. பி. நாகராஜன் 'வா ராஜா வா' என்ற படத்தைத் தயாரித்தார். இதைச் சிறுவர் படமாகக் கருதலாம்.

என்றாலும் இளம் பெண்கள் அரை குறை ஆடையுடன் கூத்தடிப்பது, குடும்பக் கட்டுப்பாடு பற்றிக் கூறுவது போன்றவை இடம் பெற்றிருந்தன. இது நூறு நாள் ஓடிய வெற்றிப்படம். ஏ. வி. எம். அளித்த 'குழந்தையும் தெய்வ மும்' ஒரு நல்ல சிறுவர் படமே. இது வால்ட் டிஸ்னி எடுத்து, புகழ்பெற்ற சிறுவர் நட்சத்திரமான ஹெய்லிமில்ஸ் (Haily Mils) என்னும் சிறுமி நடித்த The parent trap என்னும் ஆங்கிலப் படத்தைத் தழுவியது. குழந்தைக்காக, திக்குத் தெரியாத காட்டில், சிங்கக்குட்டி 1-2-3, பூந்தளிர் ஆகியனவும் வெற்றி பெற்ற சிறுவர் படங்கள். இதில் பூந்தளிர் என்னும் படம், 'யூகிவாரிசு' என்னும் ஜப்பானிய படத்தைத் தழுவியது.

1968-இல் பூவண்ணன் 'ஆனந்த விகட'னில் ஒரு சிறுவர் நாவல் எழுதினார். அதை நடிகர் வாதிராஜ் கன்னடத்தில் 'நம்ம மக்களு' என்னும் பெயரில் திரைப்படமாக்கினார். அது 200 நாள் ஓடிய முதல் கன்னடப்படம் என்னும் சிறப்புப் பெற்றது. படம் வரிவிலக்கும் பெற்றது. இந்தியில் இதே கதையை, 'கர் கர்கி கஹானி' என்னும் பெயரில் பி. நாகி ரெட்டி வண்ணப்படமாகத் தயாரித்து வெளியிட்டார். பல மாநிலங்களில் இது வரி விலக்குப் பெற்றது. எல்லா இடங் களிலும் நூறு நாள் ஓடியது. தமிழில் 'நம்ம குழந்தைகள்' என்னும் பெயரில் விஜயா—சுரேஷ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வெளியிட்டது. தமிழ் நாட்டில் வரிவிலக்குக் கிடைக்கவில்லை. சென்னையில் தொடர்ச்சியாக நூறு நாள் ஓடியது என்றாலும் தயாரிப்பாளர் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

'நம்ம குழந்தைகள்' சிறுவர் படம், மற்றப் பெரியோர் படங்களுடன் சேர்ந்து போட்டிக்குச் சென்றது. 1970-இல் மூன்றாவது சிறந்த திரைப்படம் என்ற பரிசைத் தயாரிப் பாளர்க்குப் பெற்றுத் தந்தது. அவ்வருடத்தின் சிறந்த திரைப்படக் கதாசிரியர்க்குரிய பரிசை இப்படம் பூவண்ண னுக்குப் பெற்றுத் தந்தது.

பூவண்ணனின் 'காவேரியின் அன்பு' என்னும் சிறுவர் நாவல் இந்திய அரசின் சிறுவர் இலக்கியப் பரிசு பெற்றதாகும். இதை 1978-இல் சில்வர் ஸ்கிரீன் எண்டர்பிரைஸஸ் என்னும் படநிறுவனம் 'அன்பின் அலைகள்' என்னும் பெயரில் படமாகத் தயாரித்தது. இதற்கு முன்னே குறிப்பிடப்பட்ட தமிழ்ச் சிறுவர் படங்களில் பெரியோரைக் கவரவும் ஏதேனும் ஒரு சில அம்சங்களைச் சேர்த்திருப்பார்கள். ஆனால் முழுக்க முழுக்கச் சிறுவர்களுக்காகவே தயாரிக்கப்பட்ட முதல் படம் 'அன்பின் அலைகள்' தான். 1979-இல் இப்படத்துக்காக இதன் தயாரிப்பாளர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கியது, தமிழ் நாடு அரசு. சிறந்த குழந்தைப்படக் கதாசிரியர் என்று பூவண்ணனைத் தேர்ந்தெடுத்து, அவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கியது.

இவை போதுமா? சிறுவர்களுக்காகச் சிரத்தையோடு படம் தயாரிக்கும் மனப்பக்குவம் நம் படாதிபதிகளுக்கும் இன்றும் வரவில்லை. அண்மைக் காலத்தில் வரும் என்றும் தோன்றவில்லை. அதனால் அரசு முன் வந்து சிறந்த திரைப் படங்களை உருவாக்க வேண்டும்.

இந்தியச் சிறுவர் திரைப்படக் கழகம் (Children's Film Society India) என்னும் அமைப்பு பம்பாயில் உள்ளது. இந்திய அரசின் நிதி உதவி பெற்றுச் செயல்படும் இந் நிறுவனம் சிறந்த சிறுவர் திரைப்படங்களை இந்திய மொழி களில் உருவாக்கும் பணியை மேற்கொண்டது. இருபதாண்டு களுக்கு மேலாக இயங்கி வரும் இந் நிறுவனம் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க சிறுவர் படங்களைத் தயாரிக்காதது பெருங் குறை.

ரஷ்யப் படம் ஒன்றை இந் நிறுவனம் 'சிட்டியும் சுட்டி யும்' என்று தமிழ்ப் படுத்தி வெளியிட்டது. இதைச் சிறுவர் விரும்பிப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார்கள். இதே தரத்தில் இந் நிறுவனம் ஒரே ஒரு படத்தைத்கூடத் தயாரிக்க முடியாதது ஏன்?

பல ஆண்டுகளுக்கு முன்னர் இந் நிறுவனம் தயாரித்த 'ஏகலைவன்' என்னும் படத்தில் ஏகலைவனின் தாயாரை ஆபாசமாக மார்பகங்கள் தெரியக் காட்டினர். அப்போது சென்னையிலிருந்து வெளிவந்த 'நவ இந்தியா' நாளேடு, 'அடல்ட்ஸ் ஒன்லி' என்று போட வேண்டிய படம் இது என்று விமர்சனம் எழுதியது. அதன் பின்னர்தான் இந் நிறுவனம் முதல் தரமான படங்களைத் தராவிட்டாலும் ஓரளவுசுமாராகப் படங்களைக் கொடுத்தது.

இந் நிறுவனம் இந்தியில் படங்களைத் தயாரித்து, பிற மொழிகளில் 'டப்' செய்து வெளியிட்டு வருகின்றது. இவ்வாறு வெளியிடப்பட்ட படங்களில் சில இவை: கலங்கரை விளக்கம், மீனுவின் கடிதம், பிள்ளையின் பரிசு, சத்யமே வெல்லும், மோதி என் தோழன்.

அண்மையில் இச்சிறுவர் திரைப்படக் கழகத்துக்குப் புகழ்பெற்ற டைரக்டர் சாந்தாராம் தலைவராக்கப்பட்டுள்ளார். சாந்தாராம் வந்தபிறகு ஊழல்கள் குறைந்தன என்றும், நிறுவனம் தன் நீண்ட உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டதென்றும் கூறுகிறார்கள். 1979 ஆம் ஆண்டு அனைத்துலகச் சிறுவர் ஆண்டல்லவா! அதையொட்டி இந் நிறுவனம் பல மா நிலங்களில் சிறுவர் திரைப்பட விழாவை நடத்தியது. தமிழ் நாட்டிலும் இத்தகைய விழாவைச் சிறப்பாக நடத்தியது. விழாவில் இத் திரைப்படக் கழகம் தயாரித்த படங்களில் இரண்டு படங்களை நானும் பார்த்தேன்.

ஒரு படம் 'வினையும் பயிர்'. இது 'அன்மோல் தஸ்வீர்' என்னும் இந்திப் படத்தின் தமிழ்ப்பதிப்பு. ஒரு சிறுவன் அருமையாக ஓவியம் வரையும் கலையைத் தன் பாட்டியிடமிருந்து கற்கிறான். அவன் படத்தைத் தற்செயலாகப் பார்க்கும் ஒரு பணக்காரர், அதற்கு ஆயிரக்கணக்கில் பணம் தருகிறார். அந்தச் சிறுவனைக் கண்டு பிடிக்க பலர் முயல்கின்றனர். இறுதியில் பணக்காரர் சிறுவனைக் கண்டு அவனுக்குஆதரவு தருகிறார். இச்சிறுவன் பெயர் பட்டு-

பட்டுவாக மாஸ்டர் பாப்பு சக்ளா அற்புதமாக நடிக்கிறன். பணக்காரராகப் பண்பட்ட நடிகர் அசோக்குமார் வருகிறர். இப்படத்தை சத்யன் போஸ் என்னும் சிறந்த டைரக்டர் இயக்கியுள்ளார். இந்த வண்ணப்படத்தைச் சிறுவர்கள் சுவைக்கிறர்கள்.

மற்ெருரு படம் ஜாங்கோ. இது 'ஜாங்கோவும் ஜின் ஜின் பாரும்' என்னும் இந்திப்படத்தின் தமிழ்ப்பதிப்பு. நேபாளத்தில் நடக்கும் கதை இது. இதை நேபாளத்தின் இயற்கைச் சூழலில் கண்ணைக் கவரும் வண்ணத்தில் தயாரித்துள்ளனர். இது சாமிரான் கானுவின் (Samiran kanu) நாவலைத் தழுவியது. ஜாங்கோ எனும் நேபாளச் சிறுவன் ஜிங் ஜிங் பார் என்னும் பெயரையுடைய தன் நாயுடன் செய்யும் வீரதீரச் செயல்களை விளக்குகிறது. தன் குடும்பத்துக்குரிய விலையுயர்ந்த நவமணிகளை விற்க காட்மாண்டு செல்கிறர், ஜாங்கோவின் தந்தை. அங்கே திருட்டுக் கூட்டத்தாரிடம் சிக்கிக்கொள்கிறர். தந்தை திரும்பாததால், மகன் ஜாங்கோ தன் நாயுடன் காட்மாண்டு சென்று தந்தையை மீட்டு வருவதை விளக்குகிறது படம். இதை காந்திலால் ராதோட் என்பவர் இயக்கியிருந்தார்.

இவை சாந்தாராமின் வருகைக்குப் பிறகு இந்தியத் திரைப்படக் கழகம் தயாரித்தவை. சாந்தாராம் நம் பாராட்டுக் குரியவரே. இந்தியில் எல்லாப் படங்களையும் எடுத்து மொழிமாற்றம் செய்வதற்குப் பதில் மாநில மொழிகளில் சில கதைகளைத் தேர்ந்தெடுத்து அவ்வம் மாநிலத்தில், அம் மாநில மொழியிலேயே சில படங்களைத் தயாரிக்கவும் சாந்தாராம் முடிவு செய்திருக்கிறர். அதன்படி தமிழில் 'தங்கராஜ் எங்கே' என்ற சிறுவர் படம் தயாரிக்கப்பட்டு, பிறமொழிகளில், 'டப்' செய்யப்பட்டது.

அனைத்துலகச் சிறுவராண்டை யொட்டி, 1979ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் 7 முதல் 16ஆம் தேதிவரை இந்தியச்

சிறுவர் திரைப்படக் கழகம், பம்பாயில் உலகச் சிறுவர் திரைப்பட விழா நடத்தியது. இதற்கு முன் நடந்த உலகச் சிறுவர் திரைப்பட விழாக்களிலிருந்து இது மாறுபட்டது. போட்டி அடிப்படையில் நடைபெற்ற விழா இது (India's first international competition children's film festival). இதில் 25 நாடுகள் கலந்து கொண்டன. டைரக்டர் சத்ய ஜித்ரே தலைமையிலான நடுவர் குழு சிறந்த படங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கியது. இவ்விழா இந்தியச் சிறுவர் திரைப்படக் கழகத்துக்குப் புத்துணர்வு நல்கியிருக் கிறதாம். அதன் விளைவாக இந்திய மொழிகளில் தலைசிறந்த சிறுவர் திரைப்படங்கள் உருவாகும் என்று எதிர்பார்க் கிறோம்.

சிறுவர் திரைப் படங்களை வெளியிட திரை அரங்குகள் (தியேட்டர்) கிடைப்பது அரிதாக இருக்கிறது. 'அன்பின் அலைகள்' தயாரிப்பாளர்கள் தம் படத்தைத் திரையிடக் கொட்டகை கிடைக்காமல் மிகவும் துன்பப் பட்டனர். இன்றும் சிலநகரங்களில் இப்படத்தைத் திரையிட முடியாமல் தவிக்கின்றனர். இந்தத் தொல்லையை இந்தியச் சிறுவர் திரைப்படக் கழகமும் அனுபவித்திருக்கிறது. அதனுல் தலைவர் சாந்தாராம், பிரிட்டானியா பிஸ்கட் தயாரிக்கும் Britania Industries Ltd என்னும் நிறுவனத்தின் உதவியோடு தாம் தயாரிக்கும் சிறுவர் படங்களைப் பல மாநிலங்களில் வெளியிட்டு வருகிறார். சிறந்த திரைப்பட அரங்கில் உயர்ந்த டிக்கட் நான்கு ரூபாயாக இருக்கும். ஆனாலும் இச் சிறுவர் படங்களைத் திரையிடும் போது சிறுவர்க்குக் கட்டணம் ஒரு ரூபாய் என்றும், சிறுவரோடு செல்லும் பெரியவர்க்குக் கட்டணம் இரண்டு ரூபாய் என்றும் குறைத்திருக்கிறார்கள். பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனத்தின் பொருளுதவியால் இவ்வாறு செய்ய முடிகிறது. சென்னையில் ஈகா, அலங்கார் தியேட்டர்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் காலைக் காட்சி இவ்வாறு சிறுவர் திரைப்படக் காட்சியாக நடைபெறுகிறது. இதில் இந்தியச் சிறுவர் திரைப் படக் கழகம், தான் தயாரித்த

படங்களையும் வெளிநாட்டுச் சிறுவர் படங்களையும் வெளியிட்டு வருகிறது. இத்தொண்டும் பாராட்டத் தக்கது.

தமிழ்நாடு அரசு Film Finance Corporation of India என்னும் அமைப்புப் போலத் தமிழ்ப் படங்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. அத்தகைய அமைப்பு உருவாகுமானால், அதில் சிறுவர் படத் தயாரிப்புக்கென்று தனியே நிதி ஒதுக்க வேண்டும். அதனால் நல்ல தமிழ்ச் சிறுவர் திரைப்படங்கள் உருவாகும்.

தமிழ் நாட்டிலுள்ள திரையரங்குகள் ஆண்டில் குறிப்பிட்ட நாள்களில் தமிழ்ப் படத்தைத் திரையிட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. ஆங்கிலப்படமே திரையிடும் ஒரு கொட்டகை இவ்வுத்தரவினால் தமிழ்ப் படங்களைக் குறிப்பிட்ட நாட்களுக்குத் திரையிடும். இதுபோலவே, ஒவ்வொரு திரை அரங்கும் ஞாயிற்றுக் கிழமையில் காலைக் காட்சியாகச் சிறுவர் திரைப் படத்தைத் திரையிட்டேயாக வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும். இந்த ஆணை, சிறுவர் படங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யும்.

மேலே குறிப்பிட்ட இரு கோரிக்கைகளும் நிறைவேறினால் தரமான சிறுவர் திரைப்படங்கள் நிறைய உருவாகும் என்பதில் ஐயமேது?

9

# சிறுவர் நூல்கள்

குழந்தைக்கு மிகவும் பிடித்தது, விளையாட்டுக்கருவி. விளையாட்டுக் கருவிகள் பல; அவற்றுள் ஒன்று புத்தகம்; விளையாட்டுக் கருவி குழந்தைக்கு வேடிக்கை காட்டும், மகிழ்ச்சிதரும்; புத்தகம் அவற்றோடு விவேகத்தையும் வளர்க்கும்.

படிக்கத் தெரியாத குழந்தை, புத்தகத்தை வைத்துக் கொண்டு விளையாடத் தொடங்கும். உடனே, 'அப்படிச் செய்யக்கூடாது' என்று சிலர் தடுப்பதுண்டு. அது தேவையன்று. குழந்தைகளைப் புத்தகங்களுடன் விளையாட விட வேண்டும். முதலில் விளையாடும் குழந்தைதான் பிறகு விரும்பிப் படிக்கும். படிக்கும் பழக்கம் ஏற்படக் குழந்தைகளைப் புத்தகங்களுடன் பழக விடவேண்டும்.

குழந்தைகள் விளையாடி மகிழ்ந்தால் புத்தகம் உருப்படுமா? அவை கிழியாதா? என்றெல்லாம் கேட்கலாம். அவை கிழியாமல் இருக்குமாறு புத்தகங்களை வெளியிட வேண்டும். கனத்த அட்டையில் கிழியாதவாறு புத்தகங்கள் ஆங்கில மொழியில் வெளி வந்துள்ளன; கிழியாத துணியில் தயாரித்த புத்தகங்கள் சில உள்ளன. அவை அழுக்கடைந்தால் சோப்புப் போட்டுத் துவைத்துப் புதியதாக்கிக்

கொள்ளலாம்; வண்ணம் மறையாது. இத்தகைய புத்தகங்களைக் குழந்தைகளுக்கு வாங்கித்தரல் வேண்டும்.

தமிழில் இத்தகைய புத்தகங்கள் இல்லை. எம். ஆர். அப்பாதுரை, பல ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட 'கதைச் செல்வம்' என்ற புத்தகம் கனத்த அட்டையால் ஆன புத்தகம். அதைக் குழந்தைகள் கிழிக்க முடியாது; பார்த்துப் பரவசமடையலாம். இத்தகைய புத்தகங்கள் பெருகினால் சின்னக் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உண்டாக்கி விடலாம்.

சிறுவர்க்கு விருப்பமான ஒன்று, பலவிதமான ஒலிகளைக் கேட்பது; மற்றொன்று பலவிதமான படங்களைப் பார்ப்பது. இதைச் சிறுவர் புத்தகம் தயாரிப்போர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த வயதுச் சிறுவர்க்கான புத்தகமானாலும், அது கதை, கட்டுரை, கவிதை போன்ற எந்த நூலாக இருந்தாலும், அதில் படங்கள் நிச்சயம் இடம் பெற வேண்டும். வயதில் குறைந்த குழந்தைகளுக் கேற்ற புத்தகத்தில் படங்கள் நிறைய இருக்க வேண்டும்; பல வண்ணப் படங்களையும் வெளியிடல் வேண்டும். இதனால் புத்தகத்தின் விலை ஓரளவு அதிகமாக இருக்கும். இதைத் தவிர்ப்பதற்கில்லை. நாட்டவர் யாவரும் சிறுவர் புத்தகங்களை வாங்கும் பழக்கம் மேற்கொண்டால் — புத்தகம் ஐயாயிரம் பத்தாயிரம் என்று விற்பனையானால்-விலை தானாகக் குறைந்துவிடும்.

சிறுவர் புத்தகத்தில் கூடியவரை அடிக்குறிப்பும் அரும் பதவுரையும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுதல் நலம். அரிய பதங்களைப் பயன்படுத்திவிட்டு, அதற்குப் பொருள் எழுதவேண்டாம் என்று கூறவில்லை. மாறாக அரிய பதங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றுதான் கூறுகிறேன்.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே சிறுவர்களுக்குப் பல நல்ல புத்தகங்கள் வெளி வந்ததாகத் தெரிகிறது. ஒரு தம்பிடிப் புத்தகங்கள் பலவும் அந்தக் காலத்தில் வெளி வந்தன.

"சமீபத்தில் ஒரு பழைய புத்தகத்தைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்புத்தகத்தின் பெயர், 'ஒரு யானையின் சரித்திரம்' என்றிருந்தது. அது எந்த ஆண்டில் வெளியானது என்று பார்த்தேன். 1887-ஆம் ஆண்டு அது வெளி வந்திருக்கிறது. உடனே உள்ளே புரட்டிப் பார்த்தேன். அற்புதமாகப் பல படங்கள் போடப்பட்டிருந்தன. நடையும் எளிமையாக இருந்தது. கதை போல யானையின் வாழ்க்கை மிகவும் அழகாக வர்ணிக்கப்பட்டிருந்தது. அது சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டது என்று அறிந்ததும் ஆச்சரியமாயிருந்தது. அத்துடன் வருத்தமாகவும் இருந்தது. சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே இப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட்ட நம் தமிழ் நாட்டில், இன்னும் அது போன்ற சிறந்த புத்தகங்கள் வெளிவரவில்லையே என்பதுதான் வருத்தத்திற்குக் காரணம்" என்று வானொலிப் பேச்சு ஒன்றில் அழ. வள்ளியப்பா குறிப்பிட்டிருந்தார்.

அவர் குறிப்பிட்ட அந்தப் புத்தகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அதில் உள்ள படங்கள் மிகச் சிறந்தவை. அத்தகைய புத்தகங்கள் பல அந்தக் காலத்தில் வெளிவந்தன என்பது பெருமைக்குரியதே.

அந்தக் காலத்தில், சென்னை பள்ளிக்கூடப் புத்தகச் சங்கத்தார் சிறு சிறு புத்தகங்கள் பல வெளியிட்டனர். 'சந்நியாசி கதை', 'நியாயாதிகாரியின் கதை' போன்ற கதைகளும், 'மரத்தின் பழம் ஏன் கீழே விழுகிறது?', 'வரி போடுவது ஏன்?' 'ஒரு ரூபாய் சொல்லிய தன் வரலாறு' போன்ற அறிவிற்கு விருந்தளிக்கும் புத்தகங்களும், ஷேக்ஸ்பியர் கதைகளும் வெளிவந்தன. 'தக்காணத்துப் பூர்வ கதைகள்' என்னும் நூலும் அப்போது வந்ததுதான்.[1]

இத்தகைய புத்தகங்கள் மூலம் நல்ல முறையில் தோன்றிய சிறுவர்கள் இலக்கியம், தோற்றத்திற்குத் தக்க வளர்ச்சி பெறவில்லை.

---

1 குழந்தை இலக்கிய மலர், 1957.

பத்து ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புத்தகங்கள் தரத்திலும் அளவிலும் சிறியவை. ஒரு சில பக்கங்கள் கொண்ட புத்தகங்களையே குறைந்த விலையில் சிறுவர்களுக்காக வெளியிட்டனர்.

அவை கையகலப் புத்தகங்கள்; அவற்றிலும் சிறிய புத்தகங்கள் பலவும் வெளிவந்தன; ஏறக்குறைய தீப்பெட்டி அளவுள்ள புத்தகங்களும் வந்தன. அரையணு விலையிலிருந்து அரை ரூபாய் விலை வரையிலிருந்தன. அந்த விலைக்கு மேற்பட்ட புத்தகங்களைக் காண்பது அப்போது அரிது.

இந்நிலையில் குழந்தைப் பதிப்பகம் தோன்றியது. அதன் முதல் புத்தகம் நான்கணு (25காசு) விலைக்கே விற்கப்பட்டது. ஆனால் 32 பக்கங்கள், இரு வண்ணப் படங்கள் கொண்ட அப்புத்தகத்தின் விலை அதிகம் என்று அவர்கள் கருதி, அடுத்த புத்தகத்திலிருந்து இரண்டணு (பன்னிரெண்டரை காசு) என விலை வைத்தனர். இது சிறுவர் புத்தக உலகில் பெரும் மாறுதல் செய்தது. சிறுவர்கள் குறைத்த விலையைக் கண்டு மகிழ்ந்தனர்; குழந்தைப் பதிப்பக வெளியீடுகளின் விற்பனை பெருகியது.

குழந்தைப் பதிப்பகம் இருபது சிறந்த நூல்களை வெளியிட்டது; அவற்றில் பல தெலுங்கிலும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. கலைப் பிரசும், ஜில் ஜில் பதிப்பகம் போன்றவையும் இந்த அளவில் சில நல்ல புத்தகங்களை வெளியிட்டன.

சிறுவர் புத்தகங்கள் சிறிய அளவில் இரண்டணு மூன்றணு விலையில் வந்ததற்குக் காரணம் பெற்றோர்களே. அவர்கள் தம் சிறுவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கித் தருவதில்லை. குழந்தைகள் தங்கள் கையில் உள்ள பணத்தைக் கொண்டு வாங்கவேண்டும். அவர்கள் அரைரூபாய் ஒரு ரூபாய்க்கு எங்கே செல்வார்கள்? இதை உணர்ந்தே சிறுவர் நூல் வெளியிடுவோரும் விலை குறைந்த சிறிய புத்தகங்களையே வெளியிட்டு வந்தனர்.

1950-ஆம் ஆண்டு முதலாவது குழந்தைப் புத்தகக் காட்சி சென்னையில் நடந்தது. அதில் சுமார் முந்நூறு தமிழ்ப் புத்தகங்கள் இடம் பெற்றன. அவற்றுள் பெரும் பாலானவை அளவில் சிறியவை; விலையில் குறைந்தவை. அவற்றையும், அவற்றோடு வைத்திருந்த ஆங்கிலப் புத்தகங் களையும் கண்டனர் பெற்றோரும் பதிப்பாளரும்; தமிழ்ப் புத்தகத்தின் குறையை நிவர்த்திக்க முன் வந்தனர். அதன் விளைவால் இந்த நிலை சிறிது சிறிதாக மாறியது.

எட்டாவது குழந்தைப் புத்தகக் காட்சியில் பெரிய அளவுள்ள குழந்தைப் புத்தகங்கள் மட்டும் சுமார் முந்நூறு இருந்தன. அவற்றுள் சில இருவண்ணத்தில் பல படங் களுடன் அச்சிடப் பெற்றவை. இது மகிழ்ச்சிக்குரியது.

குழந்தைப் புத்தகங்களின் நிலை உயர்ந்துள்ளது. ஒரு காலத்தில் அரையணாப் புத்தகம் வெளியிட்டுவந்த தமிழகம் இன்று பத்து ரூபாய்ப் புத்தகத்தையும் வெளியிடுகிறது! எனினும் ஆங்கிலப் புத்தகங்களின் அருகிலேகூட நாம் செல்ல வில்லை என்று சொல்லலாம். நீளம், அகலம், உயரம் ஆகிய முப்பரிமாணங்களையும் காட்டும் புத்தககள் ஆங்கில மொழி யில் வெளி வந்துள்ளன; அரண்மனையின் படம் என்றால் உண்மையில் அரண்மனையே தம் எதிரில் இருப்பது போல் இருக்கும்; முயலைப் பற்றிய புத்தகம் என்றால் அது முயலின் வடிவத்திலேயே இருக்கும்; அது மட்டுமா? அந்த முயல் தன் கண்களையும் உருட்டிப் பார்க்கும்; இப்படி வியத்தகு முறை யில் புத்தகங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. அத்தகைய புத்தகங் கள் தமிழில் என்று வெளிவருமோ என்று ஏங்கியவர்களின் ஏக்கத்தை ஓரளவு குறைக்கும் முயற்சிகளும் தமிழகத்தில் அவ்வப்போது மேற்கொள்ளப் படுகின்றன.

தென் மொழிப் புத்தக டிரஸ்ட் (S. L. B. T.) கல்வி கோபால கிருஷ்ணன் எழுதிய 'மணி என்ன' என்னும் நூலை அலாரம் கடிகாரத்தின் வடிவிலே வெளியிட்டது. பழனியப்பா பிரதர்ஸ், 'ரத்னம்' எழுதிய 'பூனையார்' நூலை, பூனையின்

வடிவத்தில் பல வண்ண நூலாக வெளியிட்டனர். மதிஒளி என்னும் பெண் கவிஞர் பல்வகைப்பட்ட இலைகளைப் பற்றிய தம் பாடல்களின் தொகுதியான 'இளந்தளிர்கள்' நூலை இலையின் வடிவத்தில் அருமையாக வெளியிட்டுள்ளார். இத்தகைய நூல்கள் சிறுவர்களின் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

மேல் நாடுகளில் சிறுவர் நூல் வெளியிடுவதில் தனிக் கவனம் செலுத்துகிறார்கள். சிறுவர் நூல்களின் தயாரிப்பைக் கவனிப்பதற்கென்றே தனியே பதிப்பாசிரியரை (Editor) நியமிக்கின்றனர். பிரிட்டனில் சிறுவர் நூல்கள் ஆண்டுக்காண்டு அதிகமாக வெளிவருகின்றனவாம்.

சோவியத் நாட்டிலே சிறுவர் நூல்களின் தேவையை அறிந்து, ஆண்டுதோறும் புத்தம் புதிய நூல்களை வெளியிடுகின்றனர். 1933 ஆம் ஆண்டில் மாஸ்கோ நகரில் சிறுவர் நூல்களை வெளியிட ஒரு பெரிய பதிப்பகம் நிறுவப்பட்டது. இதை நிறுவியர் ஒரு குழந்தை எழுத்தாளர் அல்ல. சோவியத் நாட்டின் புகழ் பெற்ற எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி இதை நிறுவினார். நம் நாட்டில் உள்ள பெரியோர்க்கு எழுதும் எழுத்தாளர்கள் இதைக் கவனிக்க வேண்டும். சிறுவர் நூல்களுக்கும் தமக்கும் தொடர்பே இல்லை என்ற நிலையில் நடந்து கொள்ளும் தவறான இயல்பைப் பெற்றவர்கள், நம் நாட்டு எழுத்தாளர்களில் பலர். அவர்கள் கார்க்கி சிறுவர் இலக்கியத்துக்குச் செய்த சேவையை அறிந்து தம் குறுகிய மனப்போக்கை மாற்றிக்கொண்டு, சிறுவர் இலக்கியத்துக்குச் சேவை செய்ய வேண்டும். தம் எழுத்தால் சேவை செய்யாவிட்டாலும், சொல்லால், செயலால் செய்ய வேண்டும். தாம் தொடர்பு கொண்டுள்ள பத்திரிகைகளின் மூலம், தாம் பங்கு கொள்ளும் நிறுவனங்கள் மூலம் சிறுவர் இலக்கியத்துக்குச் சேவை செய்ய வேண்டும்.

மாக்ஸிம் கார்க்கி சிறுவர் நூல் பதிப்பகத்தைத் தொடங்குவதற்கு முன், தத்தமக்குப் பிடித்தமான கதை

வகைகளைப் பற்றித் தமக்குச் சிறுவர்கள் எழுத வேண்டும் என்று விளம்பரத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு இரண்டாயிரம் சிறுவர்கள் பதில் எழுதினார்கள். கார்க்கி அவற்றைப் படித்து, அவர்களின் விருப்பத்துக்குத் தகுந்தபடி நூல்களை வெளியிட்டார். இன்னும் இப்பதிப்பகம் நூற்றுக்கணக்கான சிறுவர் நூல்களை வெளியிட்டு வருகிறது. மகாபாரதம், இராமாயணம், பஞ்சதந்திரக் கதைகள் முதலிய இந்தியக் கதைகளை அழகிய ஓவியங்களுடன் வெளியிட்டுள்ளது.

லெனின் கிராடில் ஒரு சிறுவர் நூல் பதிப்பகம் இருக்கிறது. இது செய்யும் சேவைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இப் பதிப்பகம் சிறுவர்களுக்காக ஒரு பெரிய நூலகம் நடத்துகிறது. சிறுவர் புத்தகக் காட்சி ஒன்றை இது நிரந்தரமாக அமைத்துள்ளது. குழந்தை எழுத்தாளர்களை வரவழைத்துக் கூட்டங்கள் நடத்துகிறது. அக் கூட்டங்களில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்கள் எழுத்தாளர்களிடம் கேள்விகள் கேட்டுத் தம் ஐயங்களைப் போக்கிக் கொள்கிறார்கள். எழுத்தாளர்கள் சிறுவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் எத்தகைய நூல்களை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து கொள்கிறார்கள். [1]

நம் நாட்டுப் பதிப்பாளர்கள், சோவியத் பதிப்பாளர்களைப் போலப் பேரளவு இல்லாவிட்டாலும் ஓரளவு செயல்பட வேண்டும்.

அமெரிக்காவில் 1979 ஆம் ஆண்டில் மொத்தம் 35000 நூல்கள் வெளிவந்தன. அவற்றில் 3000 நூல்கள் சிறுவர்க்கான நூல்கள். 1960-இல் ஆண்டுக்கு 1500 சிறுவர் நூல்களை வெளியிட்ட அமெரிக்கா பத்தே ஆண்டுகளில் அதை இரட்டிக்கச் செய்துவிட்டது. சிறுவர் நூல்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும் தரத்தை உயர்த்தவும்,

1 சோவியத் நாட்டில் நான் கண்டதும், கேட்டதும்— சு. ந. சொக்கலிங்கம்.

அமெரிக்க நூலகச் சங்கம் (American Library Association) பெரிதும் பாடுபடுகிறது. 1972 ஆம் ஆண்டே இச்சங்கம் சிறந்த சிறுவர் நூலுக்கு ஜான் நியூபெரி (John Newbery) பரிசு (பதக்கம்) அளிப்பதைத் தொடங்கியது. ஜான் நியூபெரி என்பவர், பதினெட்டாம் நூற்றாண்டில், அமெரிக்காவில் சிறுவர் நூல்களைச் சிறந்த முறையில் வெளியிட்டு அமெரிக்கச் சிறுவர் இலக்கியத்தை வளப்படுத்தியவர். 1928 ஆம் ஆண்டில் தன் கோபால் முகர்ஜி (Dhan Gopal Mukerji) என்னும் இந்தியர், 'Gay Neck' என்னும் சிறுவர் கதை நூலுக்கு இப்பரிசைப் பெற்றார் என்பதும், இக்கதை இமாலயப் பகுதியில் தபால் சேவை செய்யும் புறா ஒன்றைப் பற்றியது என்பதும் அறிந்து இன்புறத் தக்க சிறந்த செய்திகளாகும்.[1]

இப்பரிசினால் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்கள் சிறந்த நூல்களை எழுதுகிறார்கள். பரிசு பெறும் நூல்கள் ஏராளமாக விற்பதால், பதிப்பாளர் சிறப்பான முறையில் தரமான நூல்களை வெளியிடப் போட்டி போட்டுக் கொண்டு முன் வருகிறார்கள். 1938 ஆம் ஆண்டு முதல் இச் சங்கம் சிறுவர் நூல்களின் சிறந்த ஓவியர்க்கும் பரிசளித்து வருகிறது. அமெரிக்க வாசகக்குழு (American Reading Council) என்னும் அமைப்பு சிறுவர் நூல்களை அருமையாக வெளியிட்டு லாப நோக்கமில்லாமல், அடக்க விலைக்கே விற்று வருகிறது. எனவே அமெரிக்கா பத்தாண்டில் தன் சிறுவர் நூல்களின் எண்ணிக்கையை இரட்டித்துக் கொண்டதில் வியப்பில்லை.

இனி இந்தியாவில் சிறுவர் நூல்களின் நிலையைப் பார்ப்போம்.

இந்தியாவில் விகாஸ் பப்ளிஷிங் ஹவுஸ் (Vikas Publishing House) என்னும் பதிப்பகம் சிறுவர் நூல்களை மட்டும் வெளியிட ஒரு தனிப் பிரிவை (Special Department) அமைத்-

---

1. Growing up with Books By Jacquein Singh— SPAN, November 1979.

துள்ளது. அதன்மூலம் நல்ல சிறுவர் நூல்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடுகிறது. ரோலி புக்ஸ் இன்டர்நேஷனல் (Roli Books International) என்னும் அமைப்பு சிங்கப்பூர் பதிப்பகம் ஒன்றின் துணையோடு இந்தியாவில் சிறுவர் நூல்கள் வெளியிடுகின்றது. லோக் மிலாப் டிரஸ்ட் (The Lok Milap Trust) என்னும் அமைப்பு 'நட்புறவு நற்பயணம்' (Journey to Friendship) என்னும் வரிசையில் 100க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. கார்ட்டூனிஸ்ட் சங்கம் தொடங்கிய சிறுவர் புத்தக டிரஸ்ட் (Children's Book Trust) இதுவரை 320 நூல்கள் சிறுவர்க்காக வெளியிட்டுள்ளது. இவற்றில் சில தமிழிலும் வெளிவந்துள்ளன. நேஷனல் புக் டிரஸ்ட் (National Book Trust) என்னும் அரசு உதவி பெற்ற பதிப்பகம், 'நேரு பால புத்தகாலயம்' என்னும் வரிசையில் இதுவரை (1979 முடிய) 508 சிறுவர் நூல்களைத் தமிழ் உள்ளிட்ட பன்னிரண்டு இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது [1]

பொதுவாக இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 2400 சிறுவர் நூல்கள் வெளிவருகின்றன. இவற்றுள் 55% நூல்கள் கதை நூல்கள். இக் கதை நூல்களில் 90% நூல்கள், நாடோடிக் கதைகளும், புராண இதிகாசக் கதைகளும் கொண்டவை. அறிவியல் நூல்கள் 12%. பயண நூல்கள், உண்மையான வீர தீரச் செயல்களைப் பற்றிய நூல்கள் (Real adventure) இல்லை என்றே கூறலாம் என்கிறார் மோகினிராவ் அவர்கள் [2]

இதுவரை இந்தியாவில் எல்லா மொழிகளிலும் வெளியாகியுள்ள சிறுவர் நூல்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 20,000. இந்திய மொழிகளில் இந்தியில்தான் அதிக நூல்கள்

---

1 The Bright New world of Children's books in India By = J. Singh—SPAN, November 1979.

2. Children Books in India By Mohini Rao-Illustrated weekly of India, 14-11-71.

வெளிவந்துள்ளன. மொத்த எண்ணிக்கையில் 40% நூல்கள் இந்தி நூல்கள்.

இந்தியாவில் 12 வயதுக் குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 97 மிலியன். இந்தியாவில் உள்ள தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை ஐந்து லட்சத்துப் பதினாறாயிரம். (இவை 1971 இன் புள்ளி விவரம்). இந்தியாவில் வெளிவரும் சிறுவர் நூல்களின் எண்ணிக்கை, இச் சிறுவர்களின்–பள்ளிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது மிக அற்பமானதாகும். குறைந்தது ஆண்டுக்குப் பத்தாயிரம் சிறுவர் நூல்களாவது வெளிவரும்போதுதான், இந்தியச் சிறுவர் இலக்கியம் உரிய வளர்ச்சியை ஓரளவு பெற்றுள்ளது என்று கூறமுடியும்.

தமிழ்நாட்டில் இதுவரை வெளி வந்துள்ள தமிழ்ச் சிறுவர் நூல்களின் மொத்த எண்ணிக்கை 2000ம் தான்! ஆண்டு தோறும் சுமார் 100 சிறுவர் நூல்களே வெளிவருகின்றன. ஒவ்வொரு நூலையும் ஒரு பதிப்புக்கு ஆயிரம் பிரதிகளே அச்சிடுகின்றனர். இந்த ஆயிரம் நூல்கள் விற்பனை ஆவதற்குக் குறைந்தது மூன்றாண்டுகள் ஆகும். பெரும்பாலான சிறுவர் நூல்களின் பதிப்பு நிலை இது. இவற்றில் 80% நூல்கள் மறுபதிப்பைப் பார்ப்பதே இல்லை.

இந்த நிலையில் சிறுவர் இலக்கியம் எவ்வாறு வளம் பெறும்? குழந்தை எழுத்தாளர்கள் எவ்வாறு தொடர்ந்து தொண்டாற்றுவர்? சுமார் 35000 பள்ளிகளைக் கொண்ட தமிழ் நாட்டில் ஆயிரம் பிரதிகள் விற்க மூன்றாண்டுக் காலம் ஆவது வெட்கப்படத் தக்க உண்மையாகும். இந்நிலை மாற அரசு உதவி செய்ய வேண்டும்.

1. தமிழ்ச் சிறுவர் நூல்களில் நேஷனல் புக்டிரஸ்ட் வெளியிடும் நூல்களே, அவற்றின் அமைப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிக மலிவான விலை கொண்டவை இத்தகைய நூல்களை வெளியிட தமிழ்நாடு அரசு ஒரு சிறுவர் புத்தக டிரஸ்ட் நிறுவவேண்டும் என்று குழந்தை எழுத்தாளர்

சங்கம் பல்லாண்டுகளாக வற்புறுத்தி வருகிறது. அரசு இதை உடனே செய்ய வேண்டும்.

2. பள்ளி நூலகங்கள் சிறுவர் நூல்களையே வாங்க வேண்டும்.

3. பெற்றோர்கள் தம் குழந்தைகளின் பிறந்த நாளின் போதும் தீபாவளி, பொங்கல் போன்ற திருவிழா நாள்களிலும் சிறுவர் புத்தகங்களை வாங்கிப் பரிசளிக்க வேண்டும். சோவியத் நாட்டில் சிறுவர்களின் பிறந்த நாளில் பெரும்பாலும் சிறுவர் புத்தகங்களையே பரிசளிக்கிறார்கள் என்பதை இங்கு நினைவுகொள்வோமாக.

மேற் குறிப்பிட்ட மூன்று கோரிக்கைகளும் நிறைவேறினால், தமிழ்நாட்டில் ஆண்டுக்கு ஆயிரம் சிறுவர் நூல்கள், ஒரு பதிப்புக்குப் பத்தாயிரம் பிரதிகளாய் வெளிவந்து தமிழ்ச் சிறுவர் இலக்கியத்தில் ஒரு பொற்காலம் தோன்றிவிடும்.

10

# சிறுவர் நூலகங்கள்

"புத்தகங்கள் ஞானப் பெட்டகத்தைத் திறக்கும் சாவிகள்; இன்பப் பூங்காக்களில் புகும் நுழைவாயில்கள்; உங்களை உயர்த்துவிக்கும் வழிகள்; நல்ல நண்பர்கள்! வாருங்கள் படிப்போம்" என்று அழைக்கிறார் அமிலி பௌல்சன் என்னும் அறிஞர்.

சிறுவர் புத்தகங்களுக்கும் இவ்வுரை பொருந்தும். ஒருவர் தம் மக்களுக்குச் சில புத்தகங்களை வாங்கித் தரலாம். பணக்காரராக இருந்தால் பல புத்தகங்களைவாங்கித் தரலாம். வெளிவரும் எல்லாச் சிறுவர் நூல்களையும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வாங்கித் தரமுடியாது. பெரியோரின் எல்லா நூல்களையும் எளிதாகப் பெற்றுப் படிக்கத் துணை செய்வது பொது நூலகம். அது போலச் சிறுவர் நூல்கள் யாவற்றையும் சேகரித்துத் தருவது சிறுவர் நூலகம்.

பொது நூலக இயக்கம் உலகெங்கும் பரவியது. ஒவ்வொரு நாடும் பொது நூலகங்களைப் பெருக்கின. சிறுவர் நூல்கள் தோன்றியபோது பொது நூலகங்களிலேயே அவற்றையும் இடம் பெறச்செய்தனர். சிறுவர் நூல்களைப் படிப்பதற்காகப் பொது நூலகங்களுக்குச் செல்லும் சிறுவர்கள், பெரியோர்க்கான சில மோசமான—ஆபாசமான புத்தகங்களைப்

பார்த்துப் படித்துக் கெட்டுவிடும் சூழ்நிலை ஏற்படுவதைத் தடுக்க நூலக இயக்கத்தினர் விரும்பினர். அதனால் பொது நூலகங்களிலே, சிறுவர் நூல்களுக்காக ஒரு தனி அறையை ஒதுக்கினர். (Nottingham opened a separate chiidren's room in 1882 in an attempt to counteract the mischievous influence of cheap and noxious fiction and to extend the library facilities to children of 7 or 8 to 15years of age- Encyclopaedia of librarianship, edited by Thomas Landau). 1882 இல் நாத்திங்ஹாமில் பொது நூலகங்களில் சிறுவர் நூல் அறை அமைத்தனர். 1885 இல் நியூயார்க்கில் சிறுவர்க்காகத் தனி நூலகம் தொடங்கினர்கள். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் அடுத்த ஐந்தாண்டுகளில் சிறுவர் நூலகங்கள் தனியாகத் தொடங்கப் பட்டுவிட்டன.

இன்று ஒவ்வொரு நாட்டிலும் சிறுவர் நூலகங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. சோவியத் நாட்டில் லெனின் ஆட்சித் தலைவரானதுமே நூலகங்களை நாடுமுழுவதும் நிறுவ ஆணையிட்டார். 'நூலகம் இல்லாத ஊரும் ஓர் ஊரா?' என்று கர்ஜித்தார். அதன் விளைவு இன்று சோவியத் நாட்டில் சிறுவர்களுக்காக மட்டும் இரண்டு லட்சம் சிறுவர் நூலகங்கள் இருக்கின்றன.[1] அமெரிக்காவில் தொடக்கப்பள்ளிகளில் கூட நூலகங்கள் உள்ளன அந்நூலகங்களுக்கு, பயிற்சி பெற்ற நூலகர் உண்டு. அல்லது ஆசிரியர் ஒருவரே நூலகப்பயிற்சி பெற்று, நூலகத்தின் பொறுப்பை மேற்கொள்கிறார்.

இவ்வாறு முன்னேறிய நாடு ஒவ்வொன்றும் சிறுவர் நூலகங்களில் கவனம் செலுத்துகிறது.

தமிழ் நாட்டின் பதிப்பாளர்கள் இந்நாள் வரை பொது நூலகங்களை நம்பியே நூல்கள் வெளியிடுகிறார்கள். சிறுவர் நூல்களின் நிலையும் இதுவே. தமிழ் நாட்டின் பொது

---

1 ஆறாவது குழந்தை இலக்கிய மாநாடு-சிறப்பிதழ் 1979

2 Encyclopaedia of Brittanica

நூலகங்களில் சிறுவர் பகுதிகள் உண்டு. ஒரு சில சிறுவர் நூலகங்களும் உள்ளன. பொது நூலகங்களின் சிறுவர் பகுதிகள் யாவும் தனிச் சிறுவர் நூலகங்களாக மாறினால்தான் சிறுவர்களுக்குச் சிறுவர் நூல்கள் எளிதாகக் கிடைக்கும்.

தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் நூலகம் இருக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறது. பள்ளிகளும் நூலகத்திற்கென்று ஒதுக்கப்பட்ட பணத்தில் நூல்கள் வாங்குகின்றன. இப்பொறுப்பு தலைமை யாசிரியரிடம் உள்ளது. பொதுவாக இத்தலைமை ஆசிரியர்கள் பதிப்பாளர் களிடமிருந்து நூல்கள் வாங்கும் முறை திருப்தியாக இல்லை என்று கேள்விப்படுகிறேன். இத் தகவல் பொய்யாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இப்போதுள்ள தலைமை ஆசிரியர்கள் இவற்றைப் பொய்யாக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

பொது நூலகங்களைவிட இந்தப் பள்ளி நூலகங்கள் தாம் சிறுவர் நூல்களை ஆதரிக்க வேண்டும். இவை உண்மை யான அக்கறையோடு சிறுவர் நூல்கள் வாங்க ஒதுக்கப்பட்ட தொகைக்கு நல்ல - தரமான சிறுவர் நூல்களை வாங்கத் தொடங்கினால், போதும். சிறுவர் இலக்கியம் வளம் பெற்று விடும்.

பள்ளி நூலகங்களைத் தலைமை ஆசிரியரின் அறைக்குள்ளே அடக்கி வைக்காமல் தனி அறையில் அமைக்க வேண்டும். அதோடு ஒவ்வொரு பள்ளிக்கும் தனி நூலகரை நியமிக்க வேண்டும். அப்போதுதான் பள்ளி நூலகம், எதிர் பார்த்த பயனைக் கொடுக்கும்.

தமிழில் இதுவரை வெளி வந்த மொத்த சிறுவர் நூல்கள் 2000 என்ற குறிப்பு முன்னர் தரப்பட்டது. இவற்றுள் 5-8 வயதுக் குட்பட்ட சிறுவர்களுக்கான நூல்கள் சுமார் நூறுதான். இவ் வயதுச் சிறுவர்களுக்கான நூல்களை பலவண்ணத்தில் நிறைய ஓவியங்களுடன் வெளியிட

வேண்டும். இத்தகைய நூல்களை ஆயிரம் பிரதிகள் மட்டும் வெளியிட்டால் நட்டந்தான் ஏற்படும். இவ்வகை நூல்கள் வெளிவர வேண்டுமானால் தொடக்கப் பள்ளிகளிலும் நூலகம் அமைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். அப்போதுதான் பதிப்பாளர்கள் அதிக முதலீடு செய்து கண்ணைக் கவரும் வண்ணப் படங்களுடன் 5-8 வயதுச் சிறுவர்க்கேற்ற நூல்களை ஒரு பதிப்புக்குப் பத்தாயிரம் பிரதிகள் என்று அச்சிட முடியும். பிள்ளைகளும் கற்கத் தொடங்கும் போதே பொது நூல்களை நாடும் பழக்கம் பெறுவார்கள்.

சிறுவர் நூலகங்களை ஊருக்கு ஒன்றாய்த் தோற்றுவிக்கப் பொது நூலக இயக்கம் முன் வர வேண்டும். இவ்வாறு அமையும் சிறுவர் நூலகங்கள் வெறும் நூல்களை மட்டுமே கொண்டதாக அமைவது கூடாது. சிறுவர் நூலகத்தில் சிறுவர் விளையாட்டிற்கு இடம் இருக்க வேண்டும் சிறுவர்கள் பாட்டுப் பாட, ஆடல், நாடகம் நிகழ்த்த வசதியிருக்க வேண்டும். சிறுவர் திரைப் படங்களை அவ்வப்போது திரையிட்டுக் காட்டவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவை யனைத்தையும் செய்ய முடியாவிட்டாலும் நிச்சயம் கதை சொல்லும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இங்கிலாந்தில் கிராய்டன் பொது நூலகத்தில் சிறுவர் பகுதி ஒன்று உண்டு. அங்கே சிறுவர்களுக்கான எல்லா நூல்களும் உள்ளன. பொது நூலகத்தின் தலைமை நூலகராக பெர்விக் சேயர் என்பவர் பணியாற்றிய போது, அங்கே நூலகவியல் பேரறிஞரான டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் சென்றிருந்தார்.

நூலகர் பெர்விக் சேயர், நூலகத்தின் சிறுவர் பகுதியில் தினமும் சிறுவர்க்குக் கதை சொல்வார். வெறுங் கதைகளைச் சொல்வதுடன், வானொலியின் கதை, விமானத்தின் கதை, என்று அறிவியல் செய்திகளையும் கதை போலச் சுவையாகச்

சொல்வார். பெர்விக்சேயர் கதை சொல்லும் நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்த டாக்டர் ரங்கநாதன், "சிறுவர் நூலகம் இயங்கும் சரியான முறை இதுவே" என்று பாராட்டினர்[1]

எனவே சிறுவர் நூலகம் கதை சொல்லும் நிகழ்ச்சியைத் தவருமல் நடத்த வேண்டும். நூலகரே கதை சொல்லலாம். அல்லது சிறுவர்க்குக் கதை சொல்லும் திறம் பெற்ருேரை வரவழைத்துக் கதை சொல்லச் செய்யலாம். குழந்தை எழுத்தாளர்கள் தாம் எழுதப் போகும் கதைகளை இத்தகைய இடங்களில் சொல்லி, சிறுவர்கள் எவ்வாறு வரவேற்கிருர்கள், என்பதை அறிந்து, பின் தகுந்த மாற்றத்துடன் கதை எழுதலாம்.

சிறுவர் நூலகத்தின் பொறுப்பாளரான நூலகர் சிறுவரிடம் அன்பு கொண்டவராக இருக்கவேண்டும். சிறுவர்கள் எத்தனை கேள்விகள் கேட்டாலும் எரிந்து விழாமல், இன்முகம் காட்டி இனிய சொற்களால் பதில் சொல்ல வேண்டும். அதனுல் இயல்பாகவே சிறுவர்களிடம் பாசங் கொண்டுள்ள மகளிரையே சிறுவர் நூலகத்தின் நூலகராக நியமித்தல் வேண்டும்.

பொது நூலக இயக்ககம் நிறுவும் சிறுவர் நூலகங்களும் பள்ளிக் கூடத்து நூலகங்களும் மட்டும் போதுமானவை அல்ல. அறப்பணிகளுக்காக இருக்கும் அறக்கட்டளைகளும், பெருஞ் செல்வர்களும், ஊர்கள் தோறும் செயல்படும் இலக்கிய—பொதுநல மன்றங்களும்கூட சிறுவர் நூலகங்களை அமைக்க முன்வர வேண்டும். குக்கிராமங்களும் சிறுவர் நூலகங்களின் பயனைப் பெற, இயங்கும் சிறுவர் நூலகங்கள் (Mobile Children's Libraries) அமைய வேண்டும்,

தமிழ் நாட்டின் புத்தகப் பதிப்புத் தொழில் நூலகங்களை நம்பியிருக்கிறது என்று முன்னே கூறினேன். அதனுல்தான்,

---

1 குழந்தை இலக்கியம் - தொகுப்புநூல் - பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.

சிறுவர் நூல்கள் பெருகவும், சிறுவர் இலக்கியம், செழிக்கவும் சிறுவர் நூலகங்கள் லட்சக்கணக்கில் தோன்ற வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்துகிறேன்.

சிறுவர் நூலகங்கள் அறிவுக் கோயில்கள் சிறுவர் இலக்கியப் பயிருக்கு அவை உரங்கள். அவை வானத்து மீன்கள் போல எண்ணற்றவையாய் எழுக! என்றென்றும் நிலை பெற்று வாழ்க!

# 11

# குழந்தை எழுத்தாளர்கள்

'பெரியவர்களுக்கு எழுதுவது கஷ்டம். குழந்தைகளுக்கு எழுதுவது சுலபம்' என்று சிலர் நினைக்கலாம். ஏனென்றால், குழந்தைகள் பிழைகளைக் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்ற அபிப்பிராயமோ என்னவோ! ஆனால் குழந்தைகளுக்கு எழுதுவதுதான் கஷ்டம். —ராஜாஜி

குழந்தைகளுக்கு எழுதுவது மிகவும் கடினம். சொல்லும். கருத்தும் எளிமையாக இருக்க வேண்டும். உளநூல் அறிவும் இதற்குத் தேவை. —டாக்டர். மு. வரதராசனார்

குழந்தை இலக்கியம் எழுதுவதற்குச் சிறந்த தகுதி யாருக்கு உண்டு? ஒன்று வேண்டுமானால் நிச்சயமாகச் சொல்லலாம். குழந்தைகளுக்கு ஏற்ற இலக்கியம் உண்டாக்குவதற்கு வேண்டிய திறமை இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் வேறு எந்தப் பயிற்சியும், முயற்சியும் சிறந்த பயனை அளிக்கமுடியாது.

—பெ. தூரன்

சிறுவர் இலக்கியம் எப்போதும் தர்மத்தின் வெற்றியைக் காட்டுகிறது. பெரியோர் இலக்கியம்தான் அதர்மத்தின் வெற்றியைத் துதிபாடிக் கொண்டிருக்கிறது. சிறுவர்

களுக்கு எழுதுவது ஒரு 'மிரகல்' மாதிரி. சிறுவர் இலக்கியத்தில் மேலான மதிப்பு வைத்திருப்பதால்தான் நான் இன்னும் சிறுவர்க்கு எழுதத் தயங்குகிறேன். — ஜெயகாந்தன்

தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர் பெருமக்கள் நால்வர் தம் கருத்துகளைக் கண்டோம். சிறுவர்களுக்கு எழுதுவது எளிதன்று என்றும், அது இயல்பாகவே வரவேண்டிய திறமையென்றும் கூறுகின்றனர். குழந்தை எழுத்தாளர்களின் சிறப்பினையும் திறமையினையும் இவர்கள் நன்கு உணர்ந்து உரைத்துள்ளனர்.

சிறுவர்களுக்கு எழுதுவது கடினம். சிறுவர்கள் நிறைந்த அறிவு பெருதவர்கள். அவர்கள் அறிந்த சொற்கள் மிகக் குறைவே. அவர்கள் உள்ளமோ எதையும் நம்பும் இயல்புடையது. தீயவை நல்லவை என்று பகுத்தறிய முடியாதது. இவை அனைத்தையும் நினைவில் வைத்துக்கொண்டு சிறுவர்களுக்கு எழுத முன்வரவேண்டும்.

சிறுவர்களுக்காக எழுதப்படும் எந்த எழுத்தோவியமும் எளிமை, இனிமை என்ற இரண்டு குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். சிறுவர்களின் கல்வி அறிவு எத்தகையது என்பதை உணர்ந்து, அவர்களுக்கு ஏற்ற வகையில் எதையும் எழுத வேண்டும். எளிமையாக எழுதினால்மட்டும் போதாது; அதில் இனிமையும் இருக்க வேண்டும். விஷயத்தைச் சொல்லும் முறையில் ஒரு வேகமும் விறுவிறுப்பும் இருக்க வேண்டும். இதையே 'இனிமை' என்று குறிப்பிடுகின்றேன். படித்தால் சுவை தருவதும் எளிதில் புரியக்கூடியதுமான கதை, கட்டுரை, பாடல்களையே சிறுவர்களுக்காக எழுத வேண்டும்.

குழந்தை எழுத்தாளர், எளிமை, இனிமை என்ற இரண்டுடன் வேறு இரண்டினையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் சிறுவர் மனத்தைக் கெடுக்கத்தக்க—தீய செயல்களைச் செய்யத் தூண்டத்தக்க எதுவும் சிறுவர் இலக்கியத்தில் இடம் பெறக்கூடாது. இதுவே மிக மிக இன்றி

யமையாததாகும். இரண்டாவது, எழுதப்படும் விஷயம் ஏதாவது ஒரு முறையில் சிறுவர்களின் மனத்தைப் பண்படுத்தத்தக்கதாக இருக்க வேண்டும். இந்த இரண்டில் இரண்டாவதைத் தப்பித்தவறி மறந்துவிட்டாலும், முதலில் கூறியதை எந்தக் காரணம் கொண்டும் அலட்சியப்படுத்தக் கூடாது.

இன்றைய சிறுவர்கள் எதிர்காலக் குடிமக்கள். அவர்கள் தீய செயல்களைச் செய்ய இளமையிலேயே இடம் அளிக்கலாமா?

திரைப் படங்கள் சிலவற்றிற்கு ‘A’ சர்டிபிகேட் (பெரியவர்கள் மட்டும் பார்க்கத்தக்கது) தருகிறார்கள். இது ஆபாசம் நிறைந்த படங்களுக்கு மட்டுமே தரப்படுகிறது என்று பலர் கருதுகிறார்கள். அதே ‘A’ சர்டிபிகேட்டை கொலை-கொள்ளை முதலியவற்றை எப்படிச் செய்வது என்னும் வழி வகைகளைக் கூறும் படங்களுக்கும் தருகிறார்கள். ஏன்? சிறுவர்கள் அவற்றைக் கண்டால், நன்மை தீமையைப் புரிந்து கொள்ளாமல் அந்த வழிகளைக் கற்றுக் கொள்ள இடம் உண்டு.

சிந்த்ரல்லா’ (Cinderella) என்ற ஆங்கிலப் படம் வந்தது. அது சிறுவர்களுக்கேற்ற படம் என்றே கருதப்பட்டது. அதில் சிந்த்ரல்லாவைச் சிற்றன்னை கொடுமைப்படுத்துவதாகக் காட்டப் பெறுகிறது. அதைப் பார்க்கும் சிறுவர் மனத்தில் சிற்றன்னையைப் பற்றித் தவறான எண்ணமே இடம் பெறும் என்று கருதி, ஒரு நாடு அதைச் சிறுவர்கள் பார்க்கக் கூடாது என்று தடை செய்தது.

சிறுவர் உள்ளம் கெட்டுவிடுமோ என்று மக்கள் விழிப்போடு இருக்கவேண்டும். அவர்களைக் காட்டிலும் குழந்தை எழுதாளர்களே இத்தகைய விஷயங்களில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன், நான் மாணவனாக இருந்த போது, ‘குறுக்கு வழி’ என்ற ஒரு கதையை எழுதினேன்.

அப்போது 'பூஞ்சோலை'யின் ஆசிரியராக இருந்த அழ. வள்ளியப்பா அவர்களிடம் கொடுத்தேன். அதைப் படித்த ஆசிரியர் 'நன்றாக இருக்கிறது. 'பூஞ்சோ'லையில் வெளியிடு கிறேன்' என்றார். ஆனால் கதையில் இருந்த ஒரு சிறு நிகழ்ச்சியை நீக்கிவிடவேண்டும் என்றும் கூறினார்.

கதையில் வரும் சிறுவன் இரு படங்களை எழுதுகிறான். ஒன்று அவன் வகுப்பு ஆசிரியர் படம்; மற்றது ஒரு குரங்கின் படம். இந்தப் படங்களின் கீழே, 'வித்தியாசமில்லை' என்று எழுதுகிறான்.

இந்த நிகழ்ச்சியைத்தான் நீக்கிவிடவேண்டும் என்று கூறினார். "இதைப் படிக்கும் மாணவர் மனத்தில் இந்த நிகழ்ச்சி பதிந்துவிடும். வாய்ப்புக் கிடைக்கும் போது இதைப் போலச் செய்யவும் செய்யலாம். இதை யெல்லாம் கூடிய வரையில் நீக்கிவிடுவது நலம்" என்று விளக்கம் கூறினார். அதை யாராவது மறக்க முடியுமா? பிறகு அந்தக் கதை, 'வித்தியாசமில்லை' என்னும் சிறு நிகழ்ச்சியின்றியே வெளி வந்தது.

கதையானாலும் சரி, கார்ட்டூனானாலும் சரி, அதன் மூலம் தவறானவற்றைச் சிறுவர்கள் பற்றிக்கொள்ளும் முறையில் போதிக்கக் கூடாது.

"குழந்தைகளின் கதையிலே ஆண் பெண்களைக் கணவன் மனைவி என்பதைவிட அப்பா அம்மா என்று அறிமுகப் படுத்த வேண்டும். அவர்கள் எல்லா ஆண் பெண்களையும் அப்பா அம்மா என்றே பார்க்கின்றனர். வயது, உணர்ச்சிக்கேற்ற சொற்களையும் பொருள்களையும் பாத்திரங்களையும் வைத்தே எழுதவேண்டும்" என்று ஏழாவது குழந்தைப் புத்தகக் காட்சி யில் டாக்டர். மு. வரதராசனார் கூறினார். இது குழந்தை எழுத்தாளர்கள் என்றும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பொன் மொழியாகும்.

சிறுவர்களுக்காக எழுதுகிறோம் என்று திடீரெனச் சிலர் வருகின்றனர். வாய்ப்புக் கிடைக்கின்ற காரணத்தால் எதை

எதையோ எழுதித் தள்ளுகின்றனர். அவை சிறுவர்களுக்குப் புரியுமா என்பதைச் சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. சிறுவர்களுக்குப் புரியாது என்பதை யாராவது எடுத்துக் காட்டினாலோ, "ஏன் புரியாது? எல்லாம் புரியும். இதைக் கூடப் புரிந்து கொள்ளாவிட்டால் வேறு எதைத்தான் புரிந்து கொள்ளுவார்கள்" என்று வேறு கேட்கிறார்கள். இவர்கள், "குழந்தை உலகம் வேறு; அதன் உணர்ச்சிகளும் வேறு. குழந்தைகளை வயது வந்தோரின் சிறிய உருவங்களாகப் பாவித்து எழுதக் கூடாது என்பதை மனத்தில் நன்கு பதியவைத்துக் கொள்ள வேண்டும்" என்று பெ. தூரன் கூறியதைப் படித்துப் படித்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

சிறுவர்களுக்காகத் தலை சிறந்த எழுத்தாளர்கள் எல்லாம் எழுத வேண்டும்; ஆனால் எழுதியதை வெளியிடு முன், 'அது சிறுவர்க்கு ஏற்றதா? சிறுவர் புரிந்து கொள்ளக் கூடியதா?' என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தங்கள் வீட்டில் உள்ள சிறுவர்களுக்குப் படித்துக் காட்டலாம். அவர்களையே, தங்கள் எழுத்து சிறுவர் இலக்கியத்திற்கு ஏற்றதா, என்று எடை போட்டுக் கூறும் நீதிபதிகளாகவும் கொள்ளலாம்.

சிறுவர்களுக்கு எழுதுவது கடினம், கடினம் என்று பலரும் சொல்கின்றனர். சிறுவர்களுக்காக எழுதுவோரின் பணி சிறந்தது; பாராட்டத்தக்கது என்கின்றனர். ஆனால் உண்மையில் குழந்தை எழுத்தாளர்களின் நிலை என்ன?

குழந்தை எழுத்தாளர்களுக்குப் போதிய பொருள் கிடைப்பதில்லை. பொருள்தான் கிடைப்பதில்லையே புகழாவது கிடைக்கிறதா என்றால், அதுவும் கிடைப்பதில்லை.

சிறுவர் புத்தகங்களை வெளியிடப் பெரும்பாலான பதிப்பகத்தார் முன் வருவதில்லை. துணிந்து முன் வந்தாலும் குழந்தை எழுத்தாளருக்குப் பிறருக்குத் தருவது போலப்

பொருள் தர விரும்புவதில்லை. பத்திரிகைகளைப் பற்றியோ சொல்ல வேண்டிய தில்லை.

சிறுவர் பத்திரிகைகள் பல அதில் எழுதும் எழுத்தாளருக்குப் பணம் தருவதில்லை. பத்திரிகையில் படம் போடும் ஓவியருக்குப் பணம் தருகின்றனர்; பிளாக் செய்பவருக்குப் பணம் தருகின்றனர்; அச்சடிப்பவருக்குப் பணம் தருகின்றனர். ஆனால் பத்திரிகையின் உயிரான எழுத்தோவியத்தைப் புனைந்து தரும் எழுத்தாளருக்குப் பணம் தருவதில்லை. குழந்தை எழுத்தாளரின் புத்தகங்களுக்கு 'மதிப்புரை' எழுதும் பத்திரிகைகளும் போதிய மதிப்பு அளிப்பதில்லை.

பொருளும் புகழும் பெருத நிலையிலும் குழந்தை எழுத்தாளர்கள் தொடர்ந்து பல வருடங்களாகச் சிறுவர்களுக்காக எழுதி வருகின்றனர் என்பது வியப்பைத் தருவது இயல்பே. சிலர், இந்தச் சிறுவர் இலக்கியத்திற்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டுப் பெரியவர் இலக்கியத்தை நாடி ஓடுவதும் இயல்பே.

குழந்தை எழுத்தாளரின் நிலையுயர ஒரு வழிகாண வேண்டும் என்று பலரும் எண்ணினர். நெ. சி. தெய்வசிகாமணி, தங்கமணி ஆகிய குழந்தை எழுத்தாளர் இருவரும், 'குழந்தை எழுத்தாளர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஓர் எழுத்தாளர் சங்கம் உருவாக்கவேண்டும்' என்ற யோசனையை வள்ளியப்பாவிடம் கூறினர். அதன்படி வள்ளியப்பா 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி தமிழ்ப்புத்தாண்டு நாளில் குழந்தை எழுத்தாளர்களை ஒன்று கூட்டினர். அந்த நாள் சிறுவர் இலக்கிய வரலாற்றில் ஒரு பொன்னுள். அன்று தான் குழந்தை எழுத்தாளர் சங்கம் தோன்றியது.

'குழந்தை எழுத்தாளர் சங்கம் போல ஓர் அமைப்பு எங்கள் அமெரிக்காவில் இல்லை' என்று கூறினர், அமெரிக்காவின் புகழ் பெற்ற குழந்தை எழுத்தாளரான மன்ரோ லீப்-

தமிழ் நாட்டில் கடந்த முப்பதாண்டுக் காலம் தொடர்ந்து செயல் பட்டு வரும் எழுத்தாளர் சங்கம் இது ஒன்றுதான். இடையில் இச்சங்கத்தில் உள்ள சிலர் இதனைக் 'குழந்தை இலக்கியச் சங்கம்' என்று மாற்றிவிட வேண்டும் என்று ஆண்டுப் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்தனர். 'இது எழுத்தாளர் அமைப்பாகத்தான் இருக்க வேண்டும். வேறு வகையில் மாறக் கூடாது' என்று உறுதியோடு பேசி, தீர்மானத்தைக் கண்டித்து, 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' என்ற பெயரைக் காப்பாற்றிய பெருமை பூவண்ணனுக்கே உரியது. முப்பதாண்டு காலத்தில் இச் சங்கம் செய்த சாதனை கள் மிகப்பல.

தொடக்கத்தில் வை. கோவிந்தன் தலைவராக இருந்தார். 1954 இல் வள்ளியப்பா தலைவரானார். 1962 இல் நெ. சி. தெய்வசிகாமணி தலைவரானார். 1963-66 வரை ஆர்வி தலைவர். 1966-68 வரை கல்வி கோபால கிருஷ்ணன் தலைவர். 1968 இல் மீண்டும் வள்ளியப்பா தலைவரானார். இன்று வரை அவரே தலைமைப் பொறுப்பிலிருந்து சங்கத்தைக் கட்டிக் காத்து வருகிறார்.

இச் சங்கம் 1950 ஆம் ஆண்டு முதல் எட்டாண்டுகள் குழந்தைப் புத்தகக் காட்சி நடத்தியது. சிறுவர் புத்தகங் களை வெளியிடும் ஆர்வத்தைப் பதிப்பாளர்க்கும், வாங்கும் ஆர்வத்தைப் பெற்றோர்க்கும், படிக்கும் ஆர்வத்தைச் சிறுவர்க்கும் இக் காட்சிகள் உண்டாக்கின. அதன் பிறகு குழந்தை இலக்கிய மாநாடுகளிலும் சிறுவர் புத்தகக் காட்சியை அவ்வப்போது அமைத்து வருகிறார்கள். இக்காட்சிகளுக்குப் பெருந்துணை செய்தவர் ரத்னம் அவர்கள்.

குழந்தை எழுத்தாளர்க்குச் சிறுகதைப் போட்டி, நாவல் போட்டி, கவிதைப் போட்டி முதலானவற்றை நடத்தி இச் சங்கம் பரிசுகள் வழங்கியது. சிறுவர் நாடக

விழா ஒன்றை நடத்தியது. சிறுவர்க்குக் கதை சொல்லும் நிகழ்ச்சிகளையும் பல முறை நடத்தியுள்ளது.

குழந்தை எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளைப் பதிப்பாளர்க்கு அறிமுகம் செய்து அவை நூல்களாக வெளிவர இச் சங்கம் உதவியது. ஆண்டுதோறும் குழந்தைகள் தினத்தைச் சிறுவர் நூல் வெளியீட்டு விழாவாக இச் சங்கம் நடத்துகிறது. இச் சங்கத்தின் தூண்டுதலால் பதிப்பாளர்கள் சிறுவர் நூல்களை அத்தினத்தில் வெளியிட முன் வருகின்றனர். இதுவரை சுமார் 500 நூல்கள், இச் சங்கம் நடத்திய வெளியீட்டு விழாக்களில் வெளியிடப்பட்டுள்ளன.

1959 இல் சங்கம் முதல் குழந்தை இலக்கிய மாநாடு நடத்தியது. 1979 இல் ஆறுவது குழந்தை இலக்கிய மாநாட்டை நடத்தியது. சிறுவர் இலக்கியத்துக்குச் சேவை செய்த இலக்கிய முன்னோடிகளுக்கு இம் மாநாடுகளில் கேடயம் வழங்கிக் கௌரவித்தது. இதுவரை மயிலை சிவமுத்து, தி. ஜ. ர., பெ. நா. அப்புஸ்வாமி, பெ. தூரன், அழ. வள்ளியப்பா, ராஜி, வைத்தண்ணா. நெ. சி. தெய்வ சிகாமணி, பூவண்ணன், தங்கமணி ஆகிய பதின்மருக்கு இச் சங்கம் கேடயம் வழங்கியுள்ளது.

இது போலவே சிறுவர் நூல்களை வெளியிடும் பதிப்பாளர்களையும் கௌரவித்தது. கலைமகள் காரியாலயம், சைவ சித்தாந்தக் கழகம், பழனியப்பா பிரதர்ஸ், வானதி பதிப்பகம், அருணோதயம் ஆகிய பதிப்பகங்கள் இச் சிறப்பைப் பெற்றுள்ளன.

1961-இல் இச் சங்கம் 'குழந்தை எழுத்தாளர்—யார் எவர்? நூலை' வெளியிட்டது. இதைத் தொகுத்தவர் 'ரத்னம்' தமிழில் வெளிவந்த முதல் எழுத்தாளர் யார், எவர் நூல் இதுதான். இதையே போதிய மாறுதலுடன் புதுப்பித்து 1972இல் மீண்டும் வெளியிட்டது. சங்கம். இதில் 370 குழந்தை எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் உள்ளன. குழந்தை

எழுத்தாளர்களின் புகைப்படக் காட்சியையும் சங்கம் நடத்தியுள்ளது.

கருத்தரங்கம், கவியரங்கம், பாடலரங்கம், திரைப்படக் காட்சி, கலைநிகழ்ச்சி முதலியனவற்றையும் சங்கம் நடத்தியுள்ளது. தி. ஜ. ர. நினைவுச் சொற்பொழிவு மூலம் குழந்தை எழுத்தாளர்களின் படைப்புகளை ஆராய்கிறது.

1972ஆம் ஆண்டுமுதல் இச் சங்கம் கவிதை, வாழ்க்கை வரலாறு, கதை, நாடகம், நாவல், அறிவியல் ஆகிய ஆறு துறைகளில், ஆண்டுக்கு இரு துறைகளுக்குப் போட்டி நடத்து கிறது. ஒவ்வொரு துறைக்கும் முதல் பரிசாகத் தங்கப்பதக் கத்தையும், இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கத்தையும் அளிக்கிறது. இப்பதக்கங்களை ஏவி. எம். அறக்கட்டளை அளிக்கிறது. அதனால் இப்பரிசு, 'ஏவி. எம். அறக்கட்டளைப் பரிசு' என வழங்கப்படுகிறது. இப்பரிசுப் போட்டியினால் ஆண்டுதோறும் பல புதிய நூல்கள் உருவாகின்றன. குழந்தை எழுத்தாளர்கள் இப்பரிசு பெறுவதை ஒரு சிறப் பாகக் கருதிப் போற்றுகிறார்கள்.

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தொண்டு ஈடு இணை யற்றது. சிறுவர் இலக்கியம் இன்று பெற்றுள்ள சிறப்புக்கும், குழந்தை எழுத்தாளர்கள் இன்று பெற்றுள்ள மதிப்புக்கும் முக்கியக் காரணம் இச் சங்கமே என்பது மறுக்க முடியாத உண்மை.

குழந்தை எழுத்தாளரை ஊக்குவிக்க இந்திய அரசு N. C. E. R. T. மூலம் ஆண்டு தோறும் போட்டி நடத்திப் பரிசளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வி இயக்கம் மூலம் சிறந்த பத்து நூல்களுக்கு ரூ 500 வீதம் பரிசளிக்க ஆண்டு தோறும் போட்டி நடத்துகிறது. ஒரு முறைகூடப் பத்து நூல்களுக்குப் பரிசளிக்கவில்லை. சுமார் ஐந்து நூல்களுக்கே பரிசளித்து வந்தது. அதுவும் கடந்த நான்காண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கழகம் அளித்து வந்த

பரிசுகளை தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அளித்தது. சிறுவர் இலக்கியத்திற்கும் ரூ 2000, ரூ 1000 என்று இரு நூல்களுக்கு இரு பரிசுகள் அளித்த இந் நிறுவனம் கடந்த நான்காண்டு களாகப் பரிசளிப்பதை நிறுத்திவிட்டது. தமிழ் நாடு அரசு இவ்விரு பரிசுப் போட்டிகளையும் நிறுத்திவிட்டது மிகவும் வருந்தத் தக்கது. குழந்தை எழுத்தாளரை ஊக்குவிக்கும் இப் போட்டிகளை மீண்டும் தொடங்கிப் பரிசளித்து, சிறுவர் இலக்கியத்தை மேலும் வளர்க்க வேண்டும்.

பத்தாண்டுகளுக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் இன்று குழந்தை எழுத்தாளர்களின் நிலை ஓரளவு உயர்ந்திருக்கிறது. இதை மேலும் உயர்த்திக் கொள்ள ஒரேவழி அவர்கள் அற்புதமான சிறுவர் நூல்களைத் தொடர்ந்து அளித்துக் கொண்டிருப்பதுதான்.

# 12

# வளம் பெறுக !

**தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

தம் மக்கள் தம்மினும் அறிவுடையவரானல் அது உலகத்து உயிர்கட்கெல்லாம் இனிதாகும் என்று திருவள்ளுவர் கூறினர்.

தம்மைக் காட்டிலும் தம் மக்கள் அறிவுபெற வேண்டும் என்றே பெற்றேர் விரும்புவர். அத்தகைய அறிவோ அவர்களைக் காட்டிலும் இந்த உலக உயிர்களுக்கெல்லாம் இனிது என்கிறது தமிழ் மறை.

தம் மக்கள் அறிவு பெறவேண்டுமானல், அவர்களுக்குரிய இலக்கியம் வளர்ச்சியுற வேண்டும்; செம்மை பெற வேண்டும். இதனைப் பெற்றேர் மறக்கலாகாது.

சிறுவர் இலக்கியத்தை உண்டாக்குபவர்கள் எழுத்தாளர்கள்; அதற்குப் புத்தக உருவளிப்பவர்கள் பதிப்பாளர்கள்; அதனைப் படித்துப் பயனடைபவர்கள் சிறுவர்கள். ஆனல், அதற்கு வாழ்வு அளிப்பவர்கள் பெற்றேர்களே. பெற்றேர்கள் சிறுவர்களுக்கான புத்தகங்களை வாங்கிக் கொடுக்காவிடில் நூல்கள் எவ்வாறு விற்பனையாகும்? நூல்கள் விற்பனை யாகாவிடில் யாரே அவற்றை வெளியிடுவர்? வெளியிட எவரும் முன்வராவிடில் எந்த எழுத்தாளர் தொடர்ந்து எழுதுவார்? எனவே புத்தகங்களை வாங்கித்தரும் பெற்றேர்களே சிறுவர் இலக்கியத்தை வாழ்விப்பவர்கள்.

பெற்றேர்கள் தாம் சிறுவர்களாக இருந்தபோது பார்க்க முடியாத உயர்ந்த புத்தகங்கள், தங்கள் குழந்தைகளுக்குக் கிடைப்பதைக் கண்டு பூரிப்படைய வேண்டும். குறைந்தது மாதம் ஒரு புத்தகத்தையாவது தம் பிள்ளைக்கு வாங்கித் தர வேண்டும்.

பெற்றேர்களின் முழு ஆதரவு என்று கிடைக்கிறதோ அன்றுதான் சிறுவர் இலக்கியம் இலக்கிய அரங்கில் தன்

ளிகரற்றுத் திகழும்! பெற்றோர்களே வருங்காலக் குடிமக்களாக உங்கள் குழந்தைகளைப் பண்படுத்தும் சிறுவர் இலக்கியத்தை வளரச் செய்ய வேண்டும். சிறுவர்களின் பிறந்த நாள்களின் போதும் திருவிழாக்களின்போதும் அவர்களுக்குச் சிறுவர் புத்தகங்களை வாங்கித் தர வேண்டும்; சிறுவர் பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்த வேண்டும். இவற்றைப் பெற்றோர்கள் தம் கடமையாகக் கருத வேண்டும்.

ரஷ்ய மாது ஒருத்தி, "இதோ என் செல்வம்" என்று தன் குழந்தைகளைக் காட்டினாளாம். குழந்தைகள் செல்வங்களே!

"தம்பொருள் என்ப தம் மக்கள்"

என்று தமிழ் தெய்வமாம் வள்ளுவர் கூறுகிறார். ஒருவர் தம் செல்வம் அவர் பெற்ற குழந்தைகளே! வள்ளுவரின் இக் கூற்றுக்கு உரை கூறிய காளிங்கர், "குணச் செல்வம், குலச் செல்வம், பொருட் செல்வம், செவிச் செல்வம் என்றிவை முதலாக உலகத்து எண்ணி வருகின்ற செல்வங்கள் அனைத்தினும் இனிய செல்வமாவது அறிவுடைய புதல்வரைப் பெறுதல்" என்று கூறியுள்ளார்.

அறிவுடைய சிறுவர்கள் சிறந்த செல்வம்! 'செல்வமற்ற ஏழைகளின் செல்வம் குழந்தைகளே' (Children are poor men's riches.) என்று மேனாட்டுப் பழமொழியும் கூறுகிறது.

சிறுவரே சிறந்த செல்வம்! அவரே வீட்டின் செல்வம். நாட்டின் செல்வம்! அந்தச் செல்வம் சீரழியாமல் செழிக்க, செம்மைபெற, சிறுவர் இலக்கியம் பெரிதும் துணைபுரியும்! எனவே 'வரப்புயர' என்று ஔவைப் பாட்டி வாழ்த்தியதைப்போல 'சிறுவர் இலக்கியம் வளம் பெறுக' என்று வாழ்த்துவோம்.

சிறுவர் இலக்கியம் வளம் பெற்றால் சிறுவர்கள் வளமிக்கவராவர். சிறுவர்கள் வளம் பெற்றவராயின் சமுதாயம் வளம் பெறும். சமுதாயம் வளம் பெற்றால், அதனைப் பெற்றுள்ள நாடும் வளமிக்க நாடாகத் திகழும்.

**சிறுவர் இலக்கியம் வளம் பெறுக!**